# பொருளடக்கம்


| வ.எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | ஊராட்சி நிர்வாகம் | 14 |
| 3. | மாநில அரசுத் திட்டங்கள் | 68 |
| 4. | மத்திய அரசுத் திட்டங்கள் | 158 |
| 5. | ஊரக உள்கட்டமைப்பு | 234 |
| 6. | மனித வள மேம்பாடு | 263 |
| 7. | புதுவாழ்வுத் திட்டம் | 287 |
| 8. | தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | 303 |
| 9. | சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள் | 337 |
| 10. | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் | 344 |
| 11. | வரவு செலவுத் திட்டம் 2013–14 | 360 |
| 12. | முடிவுரை | 362 |

# 1. முன்னுரை

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2013–14

## 1. முன்னுரை

*கிராமமே, இந்திய ஜனநாயகத்தின் உண்மையான அலகாகும். ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்ற குடியரசாக மாறவேண்டும்.*

**– மகாத்மா காந்தி**

*"கிராமம் கிராமமாகச் சென்றிடுவீர்; மனிதகுலத்திற்கும், உலகிற்கும் நன்மை செய்திடுவீர்".*

**– சுவாமி விவேகானந்தர்**

*"நான் தமிழகத்தைப் பற்றி ஒரு மிகப்பெரிய கனவு அல்லது தொலைநோக்குப் பார்வை கொண்டுள்ளேன். அந்த கனவில், வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாத ஒரு தமிழகத்தை, வறுமை முற்றிலும் ஒழிக்கப்பட்ட ஒரு*



*தமிழகத்தை கல்வி, சுகாதாரம், குடிநீர் உள்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் அனைத்து மக்களும் பெற்றுள்ள ஒரு தமிழகத்தை, எல்லாவற்றுக்கும் மேலாக, அனைத்து மக்களும் செல்வச் செழிப்பாக, பாதுகாப்பாக, அமைதியுடன் வாழ்கின்ற ஒரு தமிழகத்தைப் பார்க்கிறேன். தமிழகம் அனைத்து சமூக, பொருளாதாரக் குறியீடுகளிலும் முதன்மையாகத் திகழ்ந்து இந்த புத்தாயிரமாவது ஆண்டில் அறிவுசார் பொருளாதாரமாக பரிணமிக்க வேண்டும் என்பதே எனது கனவு ஆகும்".*

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.03.2012 அன்று தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தை வெளியிட்டு ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதி.**

ஊரகப் பகுதிகளில் பெரும்பான்மையான மக்கள் வாழ்வதால் ஊரகப் பகுதிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியே இந்த அரசின் மிக முக்கிய குறிக்கோளாக உள்ளது. விரைந்து செயலாற்றும் திறனுடன் தொலைநோக்குப் பார்வை கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழக ஊரகப் பகுதிகள் சமூக,

பொருளாதார வளர்ச்சியில் என்றும் இல்லாத புரட்சிகரமான மாற்றங்களைக் கண்டுள்ளன.

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, இந்த அரசு தாய் திட்டம் (தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்) என்னும் புதிய முன்னோடித் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, **வளர்ச்சிக்கான கொள்கையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி, திட்டமிடுதல், நிதி ஒதுக்கீடு மற்றும் செயலாக்கத்தில் குக்கிராமங்களை அலகாகக் கொண்டு மாநிலத்திலுள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்துள்ளது.**

கிராமப்புற மக்களுக்கு உகந்த சுற்றுச் சூழல் கொண்ட குடியிருக்கத்தக்க பரந்த இட வசதியுடன், தேவையான அனைத்து வசதிகளுடன் சூரிய சக்தி விளக்குகளையும் கூடுதலாகக் கொண்ட கண்ணியமான வீடுகள் கிடைப்பதற்கு வழிவகை செய்ய அறிமுகப்படுத்தப்பட்டுள்ள **முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்,** நம் நாட்டின் வளர்ச்சித் திட்ட வரலாற்றின் போக்கினையே மாற்றி அமைக்கும் மற்றுமொரு முன்முயற்சியாகும். மேலும், இத்திட்டமானது கிராமப்பகுதிகளில் தூய்மையான சுற்றுச்சூழலில் மாசுபடுத்தாத மின்னாற்றலை சேமிப்பதற்கும் வழிகோலுகிறது.

தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023–ல், குப்பைகள் மற்றும் திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத



சுற்றுப்புற சூழலுடன் கூடிய பாதுகாப்பான சுகாதாரம் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வழிவகை செய்யப்படும் என கூறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்த அரசு **12,796** ஒருங்கிணைந்த மகளிர் மற்றும் குழந்தைகள் சுகாதார வளாகங்களைச் சீரமைத்து, அவற்றின் நீடித்த, நிலைத்த பயன்பாட்டினை உறுதி செய்வதுடன், தூய்மையான கிராம இயக்கத்திற்கும் புத்துயிர் அளித்துள்ளது. **அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து, அவர்களை மக்கள் இயக்கமாக மாற்றி திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை வேரோடு ஒழித்து, 2015ஆம் ஆண்டுக்குள் திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற தமிழ்நாட்டை உருவாக்கும் நோக்கத்துடன், பலமுனைப்புடன் கூடிய செயல் திட்டம் வகுக்க திட்டமிடப்பட்டுள்ளது.** ஊரகப் பகுதிகளில் திட/திரவக்கழிவு மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் பொதுவாகவும், வேளாண்மைத் துறையுடன் இணைந்த விற்பனை மையங்களை அணுகுதல் மற்றும் பால்பண்ணை பொருட்கள் உற்பத்தி பெருக்குதல் ஆகியவற்றில் குறிப்பாகவும் சிறப்பான முன்னேற்றத்தினை ஏற்படுத்திட இந்த அரசு அனைத்து பருவகாலத்திற்கும் ஏற்ற சாலைகளை எல்லா குக்கிராமங்களிலும் அமைத்திட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. **மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க சுற்றுச்சூழல் பாதிப்படைவதை குறைக்கவும்,**

**தார்ச்சாலைகளின் தரத்தினை மேம்படுத்தவும் அக்கறை கொண்டு பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி தார்ச்சாலைகள் அமைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது.**

குழந்தை நேயக் கழிவறையுடன் கூடிய புதிய அங்கன்வாடி மையங்களுக்கு கட்டடம் கட்டுவது மட்டுமல்லாது, ஏற்கனவே உள்ள அங்கன்வாடி மையங்களையும் புதுப்பித்து நவீன வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம், குழந்தைகளின் வளர்ச்சிக்கு, குறிப்பாக பள்ளி செல்லும் வயதை அடையாத குழந்தைகள் மேம்பாட்டிற்கு இத்துறை உறுதுணையாக உள்ளது.

அதுபோல, பள்ளிகளுக்கு புதிய கட்டடம், சமையல் அறை, குடிநீர் வசதி, கழிவறை வசதிகள் மற்றும் பழைய கட்டமைப்புகளைப் புதுப்பித்தல் போன்ற முக்கியமான வசதிகளை **ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர திட்டங்களின்** கீழ் ஒருங்கிணைத்து வழங்குவதன் மூலம், பள்ளி செல்லும் மாணவர்களுக்கு ஏற்ற சூழலை உறுதி செய்கிறது.

**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப, இத்துறை 2011–12 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்குள் 1 இலட்சம் சூரிய சக்தி தெரு விளக்குகளை, ரூ.300 கோடி மதிப்பீட்டில் அமைத்திட ஒரு மாபெரும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.**



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினைச் செயல்படுத்த இந்த அரசினால் எடுக்கப்பட்ட தீவிர முயற்சி மற்றும் நடவடிக்கைகளால் கிராம ஊராட்சிகளில் கூடுதல் எண்ணிக்கையிலான வேலைகள் எடுக்கப்பட்டு அதிக அளவிலான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் மூலம் கூடுதலான மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு அதிக எண்ணிக்கையிலான குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. **2012–13**ஆம் ஆண்டில் சோதனை முயற்சியாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினர், சிறு, குறு விவசாயிகள் ஆகியோர் நிலங்களில் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய குளங்களில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, **2013–14**ஆம் ஆண்டிலிருந்து தகுதிவாய்ந்த அனைத்து விவசாயிகளுக்கும் விரிவாக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் பயன்கள், மாற்றுத் திறனாளிகளுக்கும் கிடைப்பதை உறுதி செய்திட ஏதுவாக முன்னோடி நடவடிக்கையாக, அவர்களால் செய்ய இயலும் வேலைகளுக்கென தனி விலை விகிதப்பட்டியல் வெளியிடப்பட்டு வேலை வழங்கப்படுகிறது. இம்முயற்சியினை மத்திய அரசு பாராட்டியுள்ளதுடன் பிற மாநிலங்களும் இதனைப் பின்பற்ற வேண்டுமெனப் பரிந்துரைத்துள்ளது.

இந்த அரசு மேற்கொண்ட பல்வேறு புதிய நடவடிக்கைகளால், **2011–12**ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர்கள் முறையே,

வறட்சியால் ஏற்பட்ட துயரினை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் தீர்த்தல் மற்றும் குக்கிராமங்கள் அளவிலான திட்டமிடல் மற்றும் ஆவணங்கள் பராமரித்தல் என்ற அடிப்படையில் சிறந்த முறையில் பணியாற்றியமைக்காக உயரிய தேசிய அளவில் விருதினைப் பெற்றுள்ளனர். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்தியதற்காக கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள காடம்பாடி கிராம ஊராட்சித் தலைவர் விருதினைப் பெற்றுள்ளார். **தேசிய அளவில் வழங்கப்பட்ட மாவட்டங்களுக்கான ஏழு விருதுகளில் இரண்டு விருதுகளை தமிழகம் பெற்றுள்ளது மிகவும் பெருமைக்குரியதாகும்.**

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையிலான இந்த அரசு, வெள்ளம், ஆழிப்பேரலை, 'தானே' போன்ற புயல் மற்றும் பருவமழை பொய்த்ததால் தற்போது நிலவி வரும் வறட்சி போன்ற இயற்கைப் பேரழிவிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதில் எப்போதும் முன்னெச்சரிக்கை உணர்வுடன் செயல்பட்டு வருகிறது.**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளின், குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் துயர்களை உடனடியாகக் களைந்திடும் பொருட்டு, இத்துறை



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மும்முனை முயற்சியினை மேற்கொண்டுள்ளது.

i) 100 நாட்கள் வேலை முடித்த குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அதிகபட்ச வேலை நாட்கள் 100 என்பது 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ii) அதிக அளவில், உடனடியாக பணிகள் வழங்கப்படுவதன் அவசியத்தை முன்னிட்டு, தூர் வாருதல், கால்வாய் சீரமைத்தல் போன்ற பணிகள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

iii) விவசாயிகளுக்கு நிரந்தரமான தீர்வு காணும் பொருட்டு, விவசாய நிலங்களில் 15,000 பண்ணைக் குட்டைகள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு எடுத்த இம்முயற்சிகளின் மூலம், 8,50,874 குடும்பங்களைச் சார்ந்த 9,66,428 தொழிலாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு பெற்று பிப்ரவரி, 2013 மாதம் முதல் 13.03.2013 வரை ரூ.145 கோடி அதிகமாக ஊதியம் பெற்றுள்ளனர்.**

மாநிலத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிப் பிரதிநிதிகளின் செயல்திறனை மேம்படுத்தி, மக்களுக்கு சிறந்த முறையில் சேவை புரிந்திட இத்துறை பயிற்சித் திட்டங்களை நடத்தி வருகிறது.

வறுமை முழுவதும் நீக்கப்பட்டு, மிகவும் முன்னேறிய மாநிலமாக தமிழ்நாடு திகழவேண்டும் என்ற தமிழக அரசின்

தொலைநோக்கு பார்வைக்கிணங்க கிராமப்புறத்தில் நிலவும் வறுமையை ஒழித்து, ஏழை எளிய குடும்பங்களுக்கு அதிகாரப் பங்களிப்பு பெற்றுத்தந்து அவர்களுக்கான மக்கள் அமைப்புகளை வலுவடையச்செய்ய 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்ட புது வாழ்வுத் திட்டம் ஒரு முன்மாதிரியான திட்டம் என பெயர் பெற்றுள்ளது. ஏழை மற்றும் நலிவுற்ற பிரிவினர் நிலைத்த வாழ்வாதாரம் பெற்றிடும் வகையில் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கி, தேவையான நிறுவன இணைப்புகளைப் பெற்றுத்தந்து இவர்களுக்கு இத்திட்டம் துணை நிற்கின்றது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் பெண்களுக்கு உதவுவதிலும் பெண்களின் முன்னேற்றம் மற்றும் அதிகாரப்படுத்துதலுக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்துவதிலும் எப்போதும் முன்னிலையில் இருக்கிறார்கள்.** கல்வி பயிலும் ஏழைப் பெண் குழந்தைகள் பள்ளிக் கல்வியைக் தொடர்வதை உறுதி செய்ய நிதி உதவி, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டி, ஆதரவற்ற பெண்களுக்குப் பொருளாதார உதவி, மாற்றுத் திறனாளிகளுக்கு தனித்திட்டங்கள் போன்ற பல புரட்சிகரமான திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்



இத்தகைய பல புது முயற்சிகளுக்கு முன்னிலை வகிக்கின்றது. இந்நிறுவனத்தினால் முன்னோடியாக செயல்படுத்தப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் பெண்களின் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கை நிலையிலும் மாநிலத்தினுடைய சமூக, பொருளாதார நிலையிலும் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. தூய்மையான கிராம இயக்கம், பிளாஸ்டிக் கழிவுகளை சாலையிட இடு பொருளாகப் பயன்படுத்தும் வகையில் மறு சுழற்சி செய்தல், சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக அநீதிகளுக்கு எதிராகப் போராட்டம் என்று பல சமூக மாறுதல்களைக் கொண்டு வரும் சக்திகளாக சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்கள் ஈடுபடுகின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒத்த தொழில் தொகுப்புகள் அமைத்தல், சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களுக்கு வணிகக் குறியீடு மற்றும் வணிக சின்னம், அடையாள முத்திரையிடுதல், நவீன முறை பேக்கேஜிங், இணைய வணிகம், மாநில விற்பனை மற்றும் வழங்கல் சங்கத்தை தோற்றுவித்தல் மற்றும் மாவட்ட விற்பனை மற்றும் வழங்கல் சங்கங்களை சீரமைத்தல் ஆகியவை அரசின் முயற்சிகளில் சில ஆகும்.

**மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய சிந்தனையின்படி நீடித்த நிலையான வளர்ச்சி மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளை உருவாக்குதல், குக்கிராம அளவில் அனைத்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல்,**

சுகாதாரத்தை மேம்படுத்துதல், வறுமையினைக் குறைத்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நகர, ஊரக இடைவெளியைக் குறைத்து தமிழக மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டினை உறுதிப்படுத்துவதையே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.



## 2. ஊராட்சி நிர்வாகம்

## 2. ஊராட்சி நிர்வாகம்

தமிழ்நாட்டில் உள்ளூர் அரசமைப்புகள் சோழர் ஆட்சிக் காலத்தில் தேர்தல் விதிமுறைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் முறைகள் செயல்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரிலுள்ள கல்வெட்டுகள் மூலம் கண்டறியலாம். இத்தகைய மக்களாட்சி அமைப்பில் கிராமக்குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியக் 'குடவோலை' முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம அளவில் பொருளாதார மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுத்தி வந்தனர். கிராமக் குழுவின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகள் வகுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

ஆங்கிலேயர்களின் வருகைக்குப்பின் உள்ளூர் அரசமைப்பு முறை நலிவுற ஆரம்பித்ததோடு, உள்ளூர் அரசமைப்பின் அடித்தளமே சீர் குலைந்தது. எனினும், ஆங்கிலேயர்களால் அவர்களுக்கு ஏற்றவாறான உள்ளூர் அரசமைப்பு முறை கொண்டு வரப்பட்டது.

நாடு விடுதலை அடைந்த பின்னர், அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV, பிரிவு 40ல் கிராம ஊராட்சிகளை அமைத்து அவற்றுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு.பல்வந்த்ராய் மேத்தா அவர்கள்



தலைமையிலான குழு, மக்களாட்சி பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்திட பரிந்துரைத்து, 1957ஆம் ஆண்டு சனவரி மாதம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

மதராஸ் அரசு இயற்றிய, 1958–ஆம் ஆண்டு மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம் மற்றும் மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் ஆகியவற்றில் அடங்கிய முக்கிய அம்சங்களாவன:

1. வளர்ச்சி வட்டாரங்களுக்குப் பதிலாக, ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டு வருதல்
2. மாவட்ட போர்டுகளைக் கலைத்தல்.
3. ஆலோசனை வழங்கும் வகையில் மாவட்ட வளர்ச்சி மன்றங்களை ஏற்படுத்துதல்.
4. பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூக நலப்பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல். ஆயினும், நீதி வழங்கும் அதிகாரம் போன்ற சில குறிப்பிட்ட அதிகாரங்கள் கிராம ஊராட்சிகளிடமிருந்து எடுக்கப்பட்டன.

73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் 1993, ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 243 ஜி–ன்படி ஊராட்சி அமைப்புகளுக்குப் பல்வேறு பொருள்களில் திட்டங்களைச் செயல்படுத்தும் முழுமையான

அதிகாரங்களும், பொறுப்புகளும் கிடைப்பதற்கு அதிகமான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தில் 11–வது அட்டவணையில் 29 பொருள்கள் குறித்து வரையறுக்கப்பட்டுள்ளன. 74–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 'மாவட்ட திட்டக் குழு' உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

73–வது அரசியலமைப்புச் சட்டம், உள்ளாட்சி அமைப்பு முறையில் புதிய மற்றும் முக்கியமான பரிணாம மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதன்படி, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, 22.4.1994 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பல்வேறு முக்கியமான மாறுதல்கள் கொண்டு வரப்பட்டன.

- தமிழ்நாட்டில் மூன்றடுக்கு ஊராட்சி முறை நடைமுறைக்கு வந்தது.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் ஆகியோர், வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், மாவட்ட ஊராட்சியின் தலைவர்களும் முறையே ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.



- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக / தனித்தனியாக இயங்கக் கூடியவை. கிராம ஊராட்சியின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்கள் அல்லர்.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப, பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்றில் ஒரு பங்கு, பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழற்சிமுறையில் மாற்றம் செய்யப்படும்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் தலைவர்கள் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். காலியிடம் ஏற்பட்ட 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு பதவிகள் நிறைவு செய்யப்படும்.
- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- மாநில நிதி ஆணையம் ஐந்தாண்டுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு வருகிறது.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மாவட்டத் திட்டக் குழு ஏற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டக்குழு, ஊராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்ட அளவில் திட்டத்தினைத் தொகுத்திடும்.

## 2.1 கிராம சபை

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பு கிராம சபை ஆகும். குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் கிராம சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு கிராமசபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் சட்ட ரீதியாக கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். ஆயினும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக்கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக் கூட்டம் நடத்தலாம்.

கிராம சபை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றுகின்றது.

1. கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
2. கிராம ஊராட்சியின் வரவு-செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
3. தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குதல்



4. திட்டப்பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
5. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல்.
6. கிராமத்தில் உள்ள பல்வேறு இன மக்களிடையே சமுதாய மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

## 2.2 மாநிலத் தேர்தல் ஆணையம்

73–வது இந்திய அரசியலமைப்பு திருத்தச்சட்டம் மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 239ன் படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் சனநாயகத்தை வலுப்படுத்தும் விதமாக சுதந்திரமான மற்றும் சுய சார்புடைய அமைப்பாக 1994–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஊராட்சிகளில் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தலை நடத்துதல் ஆகிய பணிகளைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகள் ஆணையரைத் தலைமையாகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

**1994**–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **239** உட்பிரிவு **(3)**–ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு, ஆணையர் மற்றும் நிர்வாக பணியாளர்களும் நியமிக்கப்படுவார்கள். மாநில தேர்தல் ஆணையரின் பணி விதிகள், பதவிக்காலம் ஆகியவை குறித்த விதிகளை ஆளுநர் நிர்ணயிப்பார். ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். ஆனால் மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பதவிலிருந்து நீக்க முடியாது. அவ்வாறு நீக்குவதாக இருந்தால், உயர் நீதிமன்ற நீதிபதியை நீக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், மாநிலத் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்ட பின்னர் அவருடைய பணி விதிகள் தொடர்பான நிபந்தனைகள் எதுவும் அவரைப் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கக் கூடாது.

**2.3 உள்ளாட்சி தேர்தல் 2011**

**1994**–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் **1996**–ம் ஆண்டு நடத்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது சாதாரண அக்டோபர் **2001**–ம் ஆண்டும், அதேபோல மூன்றாவது சாதாரண தேர்தல் அக்டோபர் **2006**–ம் ஆண்டும் நடத்தி முடிக்கப்பட்டன. **உள்ளாட்சி அமைப்புகளுக்கான நான்காவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் மாதம் 2011–ம் ஆண்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.**



கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகியவற்றின் வார்டுகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர்கள் ஆகியோருக்கான நேரடி தேர்தல்கள் அக்டோபர் **2011**–ல் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. கிராம ஊராட்சியின் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகிய பதவியிடங்களுக்கான மறைமுகத் தேர்தல்கள் **2011**–ம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடத்தப்பட்டன. மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடத்தப்பட்டன. ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

**2011**ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

**பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள்**

| வ. எண். | பதவியிடம் குறித்த விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 99,333 |
| 2 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,471 |
| 3 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 655 |
| 4 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 |
| 5 | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 385 |
| 6 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 |
| | **மொத்தம்** | **1,19,399** |

## 2.4 ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறு சீரமைப்பு செய்தல் மற்றும் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டாக மாற்றியமைத்தல்

2006–ம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகளுக்கு ஓர் உறுப்பினர் வார்டுகள் அடிப்படையிலும், கிராம ஊராட்சிக்கு பல உறுப்பினர் கொண்ட வார்டுகள் அடிப்படையிலும் தேர்தல் நடைபெற்று வந்தது.

கிராம ஊராட்சியில் வழக்கத்திலிருந்த பல உறுப்பினர் வார்டு முறையினால் பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு கிராம ஊராட்சி வார்டுகளில் இட ஒதுக்கீடு செய்வதில் மிகுந்த சிரமங்கள் இருந்தன. மேலும் இந்த அமைப்பில் கிராமத்திலுள்ள



வாக்காளர்களுக்கு வாக்கு சீட்டுக்களில் குழப்பமும், எண்ணிக்கையின்போது அலுவலர்களுக்கு சிரமங்களும் ஏற்பட்டன. பல உறுப்பினர்களைக் கொண்ட வார்டுகளின் எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாததால் ஒவ்வொரு வார்டு உறுப்பினர்களுக்குரிய பகுதி தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, 2009–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த சட்டம்) (தமிழ்நாடு சட்டம் 20)–ன்படி, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 12–க்கு திருத்தம் செய்யப்பட்டது. ஆனால், சட்ட திருத்தத்திற்கு தொடர்பான விதி திருத்தம் வெளியிடப்படாததால் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டாக மாற்றி அமைக்கும் பணி நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசாணை எண்.63 ஊரக வளர்ச்சி (பரா 2) ஊராட்சித் துறை நாள்.14.9.2011–ன்படி, 2011ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் மற்றும் வார்டுகளை பிரித்தல்) விதிகள் 1995–ல் திருத்தம் கொண்டு வரப்பட்டு, கிராம ஊராட்சியில் ஒரு உறுப்பினர் வார்டு முறை கொண்டுவரப்பட்டது.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராம ஊராட்சியில், 40,879 பல உறுப்பினர் வார்டுகளில் 97,458 வார்டு உறுப்பினர்கள் இருந்தனர். எனவே, தேர்தல் நடைமுறைகள் தங்குதடையின்றி நடைபெறும் வகையிலும், கிராம ஊராட்சி வார்டுகளின் எல்லைகளை தெளிவாக வரையறை செய்யும்

பொருட்டும், கிராம ஊராட்சியில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. 2001ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக, கிராம ஊராட்சி பல உறுப்பினர் வார்டுகளில் இருந்த எண்ணிக்கைக்கு இணையாக தற்போது உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 99,333 ஆக அதிகரித்துள்ளது.

**2.5 ஊராட்சி ஒன்றிய வார்டுகளை மறுசீரமைப்பு செய்தல்**

பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றும் பணி மற்றும் 96 கிராம ஊராட்சிகளை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுடன் இணைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகளும் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் ஊராட்சி ஒன்றிய வார்டுகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டது.

**2.6 மாவட்ட ஊராட்சி வார்டுகளை மறுசீரமைப்பு செய்தல்.**

அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்தும், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்ட ஊராட்சி வார்டுகளை மறுசீரமைப்பு செய்யும் அவசியமும், 96 கிராம ஊராட்சிகள்



மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுடன் இணைக்கப்பட்டதால், தொடர்புடைய மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சி வார்டுகளும் மறுசீரமைப்பு செய்யப்படவேண்டியிருந்தது. எனவே, மேற்கண்ட மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சிகளின் வார்டுகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் உள்ளாட்சி தேர்தல் 2011ம் ஆண்டு அக்டோபரில் நடத்தி முடிக்கப்பட்டது.

**2.7 இரண்டு மாவட்ட ஊராட்சிகளைப் புதிதாக ஏற்படுத்துதல்**

அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இரண்டு புதிய மாவட்ட ஊராட்சிகள் முறையே, அரசாணை (நிலை) எண்.26 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா 2) துறை, நாள். 25.2.2011 மற்றும் அரசாணை (நிலை) எண். 49 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா 2) துறை நாள். 25.8.2011 வாயிலாக ஏற்படுத்தப்பட்டன. **இந்த இரண்டு மாவட்ட ஊராட்சிகளும் அக்டோபர் 2011–ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலுக்குப்பின் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.**

**2.8 ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு

வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243 D–ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஆதிதிராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். இதற்காக, **1994–**ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவுகள் **11, 20, 32, 57** மற்றும் **1995–**ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள் ஆகியவற்றில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு இடஒதுக்கீடு செய்வது குறித்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.



**2011–ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சித் தேர்தல் பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விபரம்**

| வ.எண் | இட ஒதுக்கீடு வகை | மொத்த பதவி இடங்கள் | மகளிருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு | ஆதிதிராவிடருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு | பழங்குடியினருக்கான ஒதுக்கீடு | விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 | 11 | 35 | 7 | 24 | 0 | 0 |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36 | 87 | 23 | 4 | 1 |
| 3 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 | 4,289 | 34 | 3,136 | 25 | 156 | 1 |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 655 | 228 | 35 | 154 | 24 | 8 | 1 |
| 5 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6,471 | 2,286 | 35 | 1,526 | 24 | 64 | 1 |
| 6 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 99,333 | 33,121 | 33 | 25,360 | 26 | 1,039 | 1 |

### 2.9. காதுகேளாத மற்றும் வாய் பேசாதவர்கள் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு இருந்த தடையை நீக்கம் செய்தல்

சட்டத்தின் முன்பு அனைவரும் சமம் என்ற அடிப்படைக் கோட்பாட்டினை **1994**ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் தெளிவாக விளக்குகிறது. தமிழ்நாட்டில்

மொத்த மக்கள் தொகையில் மாற்றுத் திறனாளிகள் 3 விழுக்காடு உள்ளனர். மாற்றுத் திறனாளிகளில் பெரும்பாலானோர் உயர்கல்வி கற்றவர்களாகவும், கருத்துப் பரிமாற்றத்தில் வல்லவர்களாகவும் உள்ளனர். காதுகேளாதவர்கள் மற்றும் வாய் பேசாதவர்கள் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட இதுவரை தகுதியில்லாதிருந்தனர். **எனவே, உள்ளாட்சித் தேர்தலில் காதுகேளாதோர் மற்றும் வாய் பேசாதவர்களும் போட்டியிட ஏதுவாக 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் பிரிவுகள் 37(3)(அ) மற்றும் 38(3)(அ) ஆகியவற்றிற்கு உரிய திருத்தத்தினை 16.11.2012ல் அரசு வெளியிட்டுள்ளது.**

### 2.10 2011ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுசீரமைப்பு செய்தல்

கிராம ஊராட்சி வார்டு எல்லைகள் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியவை 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்பட்டன. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான வார்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை அனைத்தும் 1991ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியே நிர்ணயிக்கப் பட்டிருந்தது. 2011ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் மேற்கண்ட வார்டு எல்லை மற்றும் எண்ணிக்கையின்



அடிப்படையிலேயே அமைந்தன. அதனால் 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் பிரிவு 28அஅ புதிதாக சேர்க்கப்பட்டு 2011ஆம் ஆண்டு உரிய சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவுகள் 8, 19 மற்றும் 28–ன்படி அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் அறிவிக்கைகளுக்கேற்ப, ஒவ்வொரு ஊராட்சி / ஊராட்சி ஒன்றியம் / மாவட்ட ஊராட்சி வார்டுகளும், இறுதியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தொடர்புடைய அவ்வூராட்சிப் பகுதியைச் சார்ந்த நபர்களை உள்ளடக்கியதாக அமையும்.

1995ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் மற்றும் வார்டுகள் பிரித்தல்) விதிகளின்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கும் அதன் வார்டுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, இயன்றவரை ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள மக்கள் தொகையில் 5,000–க்கு ஒரு உறுப்பினர் என்ற விகிதத்தில் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதேபோல ஒரு மாவட்ட ஊராட்சி வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, மாவட்ட ஊராட்சிப் பகுதியில் உள்ள மக்கள் தொகையில் 50,000–க்கு ஒரு உறுப்பினர் என்ற விகிதத்தில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

**தமிழ்நாட்டில் தற்போதுள்ள ஊராட்சி வார்டுகளின் எண்ணிக்கை பின்வருமாறு:**

i) 99,333 கிராம ஊராட்சி வார்டுகள்

ii) 6,471 ஊராட்சி ஒன்றிய வார்டுகள்

iii) 655 மாவட்ட ஊராட்சி வார்டுகள்

எனவே, 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் 1995ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் மற்றும் வார்டுகள் பிரித்தல்) விதிகளின்படி ஏற்கனவே வார்டுகளின் எல்லைகள் தற்போதைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மாற்றியமைக்கப்பட வேண்டும். 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊரக மக்கள் தொகை 3,62,62,735 ஆகும். ஆனால், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊரக மக்கள் தொகை 3,71,89,229 ஆகும். ஊராட்சி வாரியான 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் விவரம் மத்திய அரசின் மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரால் இதுவரை வெளியிடப்படவில்லை.

2011–ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் வார்டு எல்லைகளை மறுசீரமைப்பு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. எனினும், தற்போதுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் 2016–ம் ஆண்டு



நடைபெறும் சாதாரணத் தேர்தல் வரை எந்தவித பாதிப்பும் இன்றி தொடர்ந்து நீடிக்கும்.

## 2.11 மாநில நிதி ஆணையம்

73–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மற்றும் 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 198ன்படி, தமிழ்நாடு மாநில நிதி ஆணையம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொடர்ச்சியாக அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் எல்லைகள் மற்றும் வரையறைகளாவன:

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறை.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட முதல் மாநில நிதி ஆணையம், 1997–98 முதல் 2001–02 வரையான 5 ஆண்டு காலத்திற்கான பரிந்துரைகளை வழங்கியது. இரண்டாவது

மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக் காலம் 2002–03 முதல் 2006–2007 வரை ஆகும் என்பதுடன், மாநில அரசின் சொந்த வரி வருவாயில் 8 விழுக்காட்டினை உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்வு மானியமாகப் பரிந்துரை செய்தது.

மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக் காலம் 2007–08 முதல் 2011–12 வரையிலான 5 ஆண்டுகளாகும். மாநிலத்தின் சொந்த வருவாயிலிருந்து பகிர்வு மானியமாக ஏற்கனவே வழங்கப்பட்ட 8 விழுக்காட்டினை படிப்படியாக 10 விழுக்காடாக தமிழக அரசு உயர்த்தி வழங்கியது. அவ்வாறான பகிர்வு மானியம், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58 : 42 என்ற விகதத்தில் பிரித்தளிக்கப்பட்டது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான 58 விழுக்காடு பகிர்வு மானியம், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையே 2007–08 ஆம் ஆண்டு முதல் 60:32:8 என்ற விகிதத்தில் பங்கீடு செய்யப்படுகிறது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதி ஆணைய மானியம் 2009–10 முதல் 2012–13 வரை உயர்த்தி வழங்கப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு:



**ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதி ஆணைய மானிய விவரம்**

| ஆண்டு | மாநில நிதி ஆணைய மானியம் (ரூ. கோடியில்) | கடந்த ஆண்டினை விடக் கூடுதல் | |
|---|---|---|---|
| | | தொகை (ரூ. கோடியில்) | உயர்ந்த விழுக்காடு |
| 2009–10 | 1926.57 | 210.13 | 12 % |
| 2010–11 | 2814.88 | 888.31 | 46% |
| 2011–12 | 3332.47 | 517.59 | 18 % |
| 2012–13 | 4068.13 | 735.66 | 22% |

மாநில அரசால் அமைக்கப்பட்ட நான்காவது மாநில நிதி ஆணையம், 2012 முதல் 2017 வரையிலான ஐந்தாண்டுகளுக்கான பரிந்துரைகளை 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிக்கையாக அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 21.3.2013 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிதி நிலை அறிக்கையினை தாக்கல் செய்தபோது “**நான்காவது மாநில நிதியாணையம் பரிந்துரைத்தவாறே சொந்த நிதி வருவாயில் 10 சதவீதம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும். எனினும், கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே நிதி ஆதாரங்கள் 56:44 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என ஆணையம் பரிந்துரைத்துள்ளபோதிலும், கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டு,**

**தற்போது வழங்கப்படும் 58:42 என்ற விகிதத்திலேயே தொடர்ந்து நிதிப் பகிர்வு மேற்கொள்ளப்படும். இதன்படி 2013–14ஆம் ஆண்டு நிதிப் பகிர்வு மானியத்தின் மூலமாக கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் 4,887.69 கோடி ரூபாய் நிதியைப் பெறும்**" என அறிவித்துள்ளார்கள். நான்காவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான அறிக்கை சட்டப் பேரவையில் நடப்பு கூட்டத் தொடரில் வைக்கப்படும்.

## 2.12. மத்திய நிதி ஆணையம்

13–வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இரண்டு வகையான மான்யங்களை மாநிலத்தில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க மத்திய அரசு ஆணையிட்டுள்ளது.

### i) பொது அடிப்படை மானியம்

2010–11 முதல் 2014–15 வரையிலான காலத்திற்கான 5 ஆண்டு காலத்திற்கான 13–வது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியமாக ரூ. 2016.30 கோடி நிதியினை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கும் வகையில் மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அடிப்படை மான்யமாக 2010–11 ஆம் ஆண்டில் ரூ. 287.10 கோடி மற்றும் 2011–12 ஆம் ஆண்டில் ரூ.352.62 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. 2012–13ம் ஆண்டு 13–வது நிதி ஆணைய அடிப்படை மானியமாக ரூ.408.84 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அடிப்படைக்



கடமைகளான குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சுகாதாரம் ஆகியவற்றைப் பராமரித்தல், மின்கட்டணம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர்க் கட்டணம் ஆகியவற்றை கிராம ஊராட்சிகள் மேற்கொள்வதற்காக இம்மானியம் முழுவதும் கிராம ஊராட்சிகளுக்கே வழங்கப்படுகிறது.

### ii) பொது செயலாக்க மான்யம்

13–வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, 2011–12 முதல் 2014–15 வரை ஊராட்சி அமைப்புகளுக்கான பொது செயலாக்க மான்யமாக ரூ.1067.48 கோடி நிதி பெற மாநில அரசு தகுதியுடையதாகும். பொது செயலாக்க மான்யத்தை பெறுவதற்காக 13–வது நிதி ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை மத்திய அரசு பட்டியலிட்டுள்ளது.

26.9.2011 அன்று நடைபெற்ற உயர்நிலைக் கண்காணிப்புக்குழு கூட்டத்தில், பொது செயலாக்க மான்யத்தை பெறுவதற்காக, மத்திய அரசு விவரித்துள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1. ஊரக உள்ளாட்சிகள் மற்றும் நகர்புற உள்ளாட்சிக்களுக்கென்று தனித்தனியாக வரவு செலவு அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டும். ஊராட்சி அமைப்புகளின் கணக்கியல் மென்பொருள் (PRIA Soft) – மாதிரி கணக்கியல் முறை மற்றும் முதன்மைத் தணிக்கைத்

கணக்காயரால் தொகுக்கப்பட்ட 8 அடிப்படைப் படிவங்கள் ஆகியவற்றை செயல்முறைபடுத்துதல்.

2. முதன்மைத் தணிக்கைக் கணக்காயரால் ஒவ்வொரு ஊராட்சி அமைப்பினையும் தணிக்கை செய்வதற்கு தொழில்நுட்ப வழிமுறைகள் மற்றும் சேவை வழங்கப்பட வேண்டும். ஆண்டுவாரியான தொழில் நுட்ப ஆய்வு அறிக்கை, உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநரால் தயாரிக்கப்பட்டு மாநில சட்டப்பேரவையில் வைத்திட வேண்டும்.

3. மாவட்ட ஊராட்சிகளில் நடைபெறும் தவறான நிர்வாகம் மற்றும் முறைகேடுகள் குறித்து பெறப்படும் புகார்களை கவனித்திட உள்ளாட்சி அமைப்புக்கென சுதந்திரமான ஒரு குறைதீர்ப்பாளர் (Ombudsman) அமைப்பு கொண்டுவரப்பட வேண்டும்.

4. மத்திய அரசிடமிருந்து நிதி பெற்ற 5 நாட்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சென்றடையும் பொருட்டு மின்னனு பரிமாற்றம் செய்யப்பட வேண்டும். மின்னணு வசதி இல்லாத இடங்களில் 10 நாட்களில் நிதி சென்றடைய வேண்டும்.

5. மாநில நிதி ஆணையம்:– அரசியலமைப்பு சட்டப் பிரிவு 243 (1) (2)–ல் குறிப்பிட்டவாறு, மாநில நிதி ஆணைய உறுப்பினர்களுக்கான தகுதி வரையறை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.



6. சொத்து வரி விதிப்பதற்கான அதிகாரம் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

7. நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு உதவிடும் வகையில் மாநில அளவிலான சொத்து வரி வாரியம் மாநில அரசால் அமைக்கப்பட வேண்டும்.

8. உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படும் அத்தியாவசிய சேவைகளின் தரத்தினை அறியும் முறையினை மாநில அரசு படிப்படியாக நிறுவிட வேண்டும்.

9. 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 10 இலட்சம் மக்கள் தொகை உள்ள அனைத்து மாநகராட்சிகளும், தம் பகுதியில் நடைபெறும் தீ விபத்துக்களை எதிர்கொள்ளவும் அவற்றை குறைப்பதற்கான மேலாண்மைத் திட்டங்களைக் கொண்டிருக்கவும் வேண்டும்.

மேற்கண்ட அனைத்து நிபந்தனைகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான அறிக்கையினை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளதுடன் செயலாக்க மானியத்தை தமிழ்நாட்டுக்கு விடுவிக்கவும் கோரப்பட்டுள்ளது.

**2.13 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி , கேளிக்கை வரி ஆகியவற்றில் இருந்து பெறப்படும் வருவாய் நிதியினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சிகளுக்குப் பிரித்து வழங்க அரசு ஆணையிட்டுள்ளது (சமூகக் காடுகள்

வருவாய் மற்றும் கனிம வளங்களுக்கான குத்தகை நீங்கலாக).

**2010–11–ம்** ஆண்டில் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயில் **மூன்றில் இரண்டு** பங்கு நிதி, ஊரகப் பகுதிகளில் நடைபெறும் முன்னுரிமைப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, மீதியுள்ள **மூன்றில் ஒரு பங்கு** நிதி மட்டும் ஊராட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டது.

**ஆனால் 2011–12 மற்றும் 2012–13ஆம் ஆண்டுகளில் இந்த விகிதம் திருத்தியமைக்கப்பட்டு, மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட மொத்த நிதியில் மூன்றில் இரண்டு பங்கு நிதி, உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மூன்றில் ஒரு பங்கு நிதி, ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் முன்னுரிமைப் பணிகளுக்காவும்,** 'தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத்திட்டம்' (தாய்) திட்டத்திற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன்படி, **2012–13**ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியாக முத்திரைத்தாள் மீதான மேல்வரி மற்றும் கேளிக்கை வரியிலிருந்து ரூ. **667.58** கோடி நிதியினை அரசு அனுமதித்து கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளது.



(ரூ.கோடியில்)

| வ. எண். | வருவாய் | தொகை |
|---|---|---|
| 1 | முத்திரைத்தாள் மீதான மேல்வரி | 661.31 |
| 2 | கேளிக்கை வரி | 6.27 |
| | **மொத்தம்** | **667.58** |

மேற்கண்ட நிதியில் மூன்றில் இரண்டு பங்கு, அதாவது ரூ.**445.05** கோடி கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு **67:33** என்ற விகிதத்தில் **2001** மக்கள் தொகை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பிரித்தளித்துள்ளது.

**(ரூ.கோடியில்)**

| வருவாய் விபரம் | கிராம ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| முத்திரைத்தாள் மீதான மேல்வரி | 295.39 | 145.49 | 440.87 |
| கேளிக்கை வரி | 2.80 | 1.38 | 4.18 |
| **மொத்தம்** | **298.19** | **146.87** | **445.05** |

மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு நிதியான ரூ.**222.53** கோடி, 'ஊரகப் பகுதிகளுக்கான முன்னுரிமைத் திட்ட நிதி'க்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக பகுதிகளில் குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்துவதற்கும் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் (தாய்)

திட்டத்திற்கும் 50:50 என்ற விகிதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### 2.13.1 2012–13 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட நிதிக் கூறு

2012–13 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியில் ரூ.44.36 கோடி செலவில் 25 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடப் பணிகளும், ரூ.29.42 கோடி செலவில் 361 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடப் பணிகளும் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும், ரூ.36.36 கோடி செலவில் மொத்தம் 255.34 கி.மீ. நீளமுடைய 188 சாலைப் பணிகளும், ரூ.17.52 கோடி செலவில் 11 உயர் மட்டப் பாலங்களும், ரூ.2.88 கோடி செலவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை, குடிநீர் வழங்கல் பணிகள் போன்ற 122 அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளும் எடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டக் கூறு நிதி ஒதுக்கீட்டில் ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் பயன்பாட்டிற்காக வாகனங்கள் வாங்கிட வழி வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 2011–12 ஆம் ஆண்டில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி இயக்குநர்கள், உதவிச் செயற்பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் பழைய வாகனங்களை கழிவு



நீக்கம் செய்து ரூ.3.17 கோடி செலவில் 62 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, 2012–13 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்ட நிதியிலிருந்து ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் 24 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்ட நிதிக்கூறு நிதியில் இருந்து மொத்தம் ரூ.134.98 கோடி செலவில் 707 பணிகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் 86 வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

### 2.14 கிராம ஊராட்சி

கிராம ஊராட்சி என்பது, அதற்கென உள்ள கிராமங்களை உள்ளடக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். சிறந்த நிர்வாகம் என்ற அடிப்படையில் உரிய அறிவிக்கையின் வாயிலாக கிராம ஊராட்சிகளைப் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தலாம். கிராம ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை (தலைவர் நீங்கலாக) மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சிகளின் ஆய்வாளரால் அறிவிக்கை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப்பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும். ஆயினும், குறிப்பிட்ட

சூழ்நிலைகளில் ஊராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பினைக் கவனித்திட தனி அலுவலர்கள் நியமிக்கப்படுவர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் கீழ்க்கண்ட குழுக்களை அமைத்திட வேண்டும்.

1. நியமனக் குழு
2. வளர்ச்சிக் குழு
3. வேளாண்மை மற்றும் நீர்வடிப் பகுதி குழு
4. பணிகள் குழு
5. கல்விக் குழு

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 110–ன் படி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டியது கிராம ஊராட்சிகளின் முக்கியக் கடமையாகும்.

i) அனைத்து கிராமச்சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)

ii) பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.



iii) கழிவு நீர்க் வாய்க்கால் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 111–ன்படி பின்வரும் கடமைகளை ஊராட்சியின் தேவைக்கேற்பவும் நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும், நிறைவேற்றப்பட வேண்டும்.

i) கிராமத்திலுள்ள சாலைகளில் இருபக்கங்களிலும் மரங்கள் நட்டு பாதுகாத்தல்.

ii) தெருவிளக்குகள் அமைத்தல்

iii) சந்தைகள் ஏற்படுத்தி பராமரித்தல்

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை கட்டுப்படுத்துதல்

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடை தொழுவங்கள், இறைச்சிக்கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்தி நிர்வகித்தல் போன்றவையாகும்.

### 2.14.1 நிதி வருவாய்

கிராம ஊராட்சிகள் மட்டுமே தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பின்வரும் வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றை விதித்து வசூலிக்க அதிகாரம் பெற்றுள்ளன.

#### 2.14.1.1 வரி வருவாய்

i) வீட்டு வரி

ii) தொழில் வரி

iii) விளம்பர வரி

#### 2.14.1.2 வரியல்லாத வருவாய்

i) கட்டடங்கள் மற்றும் வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ii) அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமம்

iii) சந்தைக் கட்டணம்

iv) குடிநீர் கட்டணம்

v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி மரப்பட்டா

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்



x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை .

ஊராட்சி நிலங்களில் வைக்கப்பட்டுள்ள அலைபேசிக் கோபுரங்களுக்கான கட்டணம், கிராம ஊராட்சிச் சாலைகளில் கண்ணாடிக் கம்பி இழை பதித்தலுக்கான கட்டணம், நிலங்களை வகைப்படுத்தல் மற்றும் இதர கட்டணங்களை வசூலித்தல் மூலம் கூடுதல் வருவாயினை ஏற்படுத்தலாம்.

### 2.14.2 வீட்டுவரியை மாற்றியமைத்தல்

5 ஆண்டுக்கு ஒருமுறை கிராம ஊராட்சியின் செயல் அலுவலரால் வீட்டுவரி மறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

### 2.14.3 அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமக்கட்டணம்

அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமங்களை அளிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சிகளிடம் உள்ளது. 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 159–ல் விவரிக்கப்பட்டபடி அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க புதிய தொழில் ஆரம்பிக்கவோ அல்லது புதுப்பிக்கவோ உள்ள விண்ணப்பதாரர், தொடர்புடைய கிராம ஊராட்சிகளில் விண்ணப்பித்தல் வேண்டும். 2012–13 ஆம் ஆண்டில் மாவட்ட அளவில், ஊரகப் பகுதிகளில் உள்ள புதிய தொழில்களை கண்டறிந்ததுடன் ஏற்கனவே உள்ள

தொழில்களின் பட்டியலை நாளது தேதி வரை இறுதி செய்து அனைத்து தொழில்களுக்கான உரிமக் கட்டணங்களைத் திருத்தியமைத்து மாவட்ட ஆட்சியர்களால் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுள்ளது.

### 2.14.4 சுயநிதிக் கல்வி நிறுவனங்களிடமிருந்து வீட்டு வரி/சொத்து வரி வசூல் செய்தல்

**1994**ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு **172** மற்றும் அரசாணை எண். 255, ஊரக வளர்ச்சித் துறை, நாள் **13.12.1999–**ன்படி ஊரக பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டுவரி/சொத்துவரி, தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்தப்படவேண்டும். இக்கட்டடங்களில் அரசு உதவிபெறும் அல்லது உள்ளாட்சி நிறுவனங்களால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் நூல் நிலையங்கள், கைவிடப்பட்டவர்கள் அல்லது விலங்குகள் ஆகிய தர்ம காரியங்களுக்காக கட்டப்பட்ட கட்டடங்களுக்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்படும் வகையில் அரசு உரிய திருத்தத்தினை வெளியிட்டுள்ளது. மேலும், அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறாமல் சுய நிதியிலிருந்து பாடத் திட்டத்தினைச் செயல்படுத்தும் போது அக்கட்டடங்களுக்கு சொத்து வரி விதிக்கப்படும். அதனடிப்படையில், **2008–09** ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளால் சுயநிதிக்கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி நிர்ணயித்து வசூலிக்கப்பபட்டு வருகிறது. **2008–09–**ம் ஆண்டு முதல் மேற்கண்டவாறு விதிக்கப்பட்ட சொத்துவரி கேட்பு மற்றும் வசூல் விவரம் பின்வருமாறு:



**( ரூ. கோடியில்)**

| ஆண்டு | சுயநிதி கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை | வரி கேட்பு | வரி வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 2008–09 | 3081 | 10.13 | 9.74 | 0.39 |
| 2009–10 | 3251 | 11.09 | 10.62 | 0.47 |
| 2010–11 | 3777 | 18.10 | 17.02 | 1.08 |
| 2011–12 | 3788 | 18.18 | 16.93 | 1.25 |
| 2012–13 | 3951 | 20.05 | 16.09 | 3.96 |

### 2.14.5 ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்களான முத்திரைத்தாள் மீதான வரி மற்றும் கேளிக்கை வரி ஆகியவற்றின் ஒரு பகுதி வருவாய் கிராம ஊராட்சிகள் பெறத் தகுதியுடையனவாகும். மேலும், ஒப்படைக்கப்பட்ட வருவாயானது மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 60:32:8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

### 2.14.6 மானியம்

1. **மத்திய நிதி ஆணைய மானியம்:** தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மத்திய நிதி ஆணைய மானியம்

முழுவதும் குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளுக்காக கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2. **மாநில நிதி ஆணைய மானியம்:** ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் இருந்து ஒதுக்கப்படும் 10 விழுக்காடு நிதியில் ஒதுக்கீடு செய்யப்படும் 58 விழுக்காடு நிதியில், 60 விழுக்காடு கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது. அதில் குறைந்தபட்ச நிதியாக (Floor amount) ஒரு ஊராட்சிக்கு ரூ. 3 இலட்சம் வீதம் விடுவிக்கப்பட்டுத் தனியாகக் கணக்கு பராமரிக்கப்பட்டு, தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் வழங்கல் தொடர்பான மின்கட்டணம் செலுத்த வழி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை, மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேற்காணும் 60 விழுக்காடு நிதியில் 5 விழுக்காடு கிராமங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ஏதுவாக, அடிப்படைக் கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்கான நிதியாக (Infrastructure Gap Filling Fund) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.



3. மத்திய அரசு மற்றும் மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களுக்காக விடுவிக்கப்படும் வளர்ச்சி நிதி.

### 2.14.7 கிராம ஊராட்சிகளின் வருவாய் வரம்பு

தமிழ்நாட்டில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. வருவாய் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| வருவாய் வரம்பு | ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ரூ. 3–5 லட்சம் | 1,268 |
| ரூ.5–7 லட்சம் | 1,455 |
| ரூ..7–10 லட்சம் | 2,351 |
| ரூ.10–20 லட்சம் | 4,563 |
| ரூ.20–50 லட்சம் | 2,524 |
| ரூ.50 லட்சம் – 1 கோடி | 293 |
| ரூ. 1 கோடிக்கு மேல் | 70 |
| **மொத்தம்** | **12,524** |

### 2.14.8 தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கிராம ஊராட்சிகள் செலுத்த வேண்டிய மின்கட்டணத்தினைச் செலுத்துதல்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின்கட்டணம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தவேண்டிய குடிநீர்க் கட்டணம் ஆகியவற்றை கிராம ஊராட்சிகள் செலுத்துவதற்கு ஏதுவாக மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து ஒரு பகுதியும், பதிமூன்றாவது நிதி ஆணைய அடிப்படை மானியம் முழுவதும், கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டு

அதற்கென உள்ள வங்கிக் கணக்கில் பராமரிக்கப்படுகிறது. சில கிராம ஊராட்சிகள், மேற்கண்ட நிலுவைத் தொகையினை ஊராட்சிகளில் உள்ள நிதியினைக் கொண்டு முழுமையாக செலுத்த இயலாத நிலையிருந்தது. **எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர்களின் அறிக்கையினைப் பெற்று மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்து ரூ.21.84 கோடி நிதியினை மின் கட்டணம் செலுத்துவதற்காக ஊராட்சிகளுக்கு வழங்கி 19.11.2012ல் அரசு ஆணையிட்டதன் மூலம் நீண்ட நாள் நிலுவையினை சிறப்பினமாக ஒரு முறை செலுத்த வழிவகை செய்யப்பட்டது.**

## 2.15 கிராம ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தை அதிகரிக்கும் பொருட்டு சிறப்புக் குழு அமைத்தல்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் கிராம ஊராட்சிகளின் நிதி ஆதாரங்களை அதிகரிப்பது குறித்து சிறப்புக்குழுவினை அமைத்து அரசாணை எண். **98** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை(ப.ரா.**1**) நாள்.**2.12.2011**–ன்படி அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழு **10** அலுவலக உறுப்பினர்களையும், ஊராட்சி கணக்கியல் முறைகளில் வல்லுனர் இருவரை உள்ளடக்கிய **11** அலுவல் சாா்பற்ற உறுப்பினர்களையும் கொண்டதாகும்.

இந்த சிறப்புக்குழு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் பணியாற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் கலந்துரையாடல் நடத்தி,



கிராம ஊராட்சிகளின் தற்போதுள்ள நிதிநிலையை ஆய்வு செய்ததுடன், எந்தெந்த வகையில் கூடுதல் வருவாய் கிடைத்திட வாய்ப்புள்ளது என்பதையும் ஆய்வு செய்துள்ளது. கிராம ஊராட்சியின் நிதிநிலையை உயர்த்துவதற்குத் தேவையான அனைத்து வழிகளையும் கண்டறிவதற்கான ஆய்வினை இக்குழு மேற்கொண்டு அரசுக்கு அறிக்கையினை விரைவில் அளிக்கும்.

## 2.16 ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டத்தின் கீழ் விருது

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளிப்பதுடன் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்த ஏதுவாக மாநில அரசுகளுக்கு உறுதுணையாக, ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டத்தின் கீழ் விருதினை மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் ஏற்படுத்தியுள்ளது.

**2011–12ஆம் ஆண்டில் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், சிறந்த கிராம ஊராட்சிக்கு ரூ. 9.00 இலட்சம் மற்றும் சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 15.00 இலட்சம் வீதம் தமிழ்நாட்டில் உள்ள 6 கிராம ஊராட்சிகள் மற்றும் 2 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரொக்கப் பரிசுடன் விருது வழங்கி மொத்தம் ரூ.84.00 லட்சத்தினை விடுவித்துள்ளது.**

விருது பெற்ற ஊராட்சி / ஊராட்சி ஒன்றியங்கள் பின்வருமாறு:

**2011–12ம் ஆண்டு விருதுகள் பெற்ற கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் விவரம்**

| வ.எண் | விருதுகள் பெற்ற கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | எடப்பாடி ஊராட்சி ஒன்றியம் | சேலம் |
| 2 | குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியம் | கன்னியாகுமரி |
| 3 | பேரட்டி கிராம ஊராட்சி | நீலகிரி |
| 4 | கருங்கல் கிராம ஊராட்சி | திண்டுக்கல் |
| 5 | நாலுகோட்டை கிராம ஊராட்சி | சிவகங்கை |
| 6 | மைக்கேல்பட்டினம் கிராம ஊராட்சி | இராமநாதபுரம் |
| 7 | கீழவெள்ளக்கால் கிராம ஊராட்சி | திருநெல்வேலி |
| 8 | லீபுரம் கிராம ஊராட்சி | கன்னியாகுமரி |

**2012–13ம்** ஆண்டுக்கான விருதினைப் பெற பின்வரும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சியினை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.



**2012–13ம் ஆண்டுக்கான விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி அமைப்புகள் விபரம்**

| வ. எண் | விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியம்/மாவட்ட ஊராட்சி | மாவட்டம் |
|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சி | திருச்சிராப்பள்ளி |
| 2 | அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் | கடலூர் |
| 3 | செய்யாறு ஊராட்சி ஒன்றியம் | திருவண்ணாமலை |
| 4 | பாப்பரம்பாக்கம் கிராம ஊராட்சி | திருவள்ளூர் |
| 5 | நாட்டார்மங்கலம் கிராம ஊராட்சி | கடலூர் |
| 6 | திண்டமங்கலம் கிராம ஊராட்சி | சேலம் |
| 7 | ஈசனத்தம் கிராம ஊராட்சி | கரூர் |
| 8 | ஜி.கல்லுப்பட்டி கிராம ஊராட்சி | தேனி |
| 9 | பெத்துரெட்டிப்பட்டி கிராம ஊராட்சி | விருதுநகர் |

மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் சிறந்த கிராம ஊராட்சிக்கு ரூ. 7 இலட்சம், சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.20 இலட்சம் மற்றும் சிறந்த மாவட்ட ஊராட்சிக்கு ரூ.40 இலட்சம் என மொத்தம் ரூ.1.22 கோடி ரொக்கப் பரிசினையும் விருதுகளையும் 2013, ஏப்ரல் 24ம் நாளன்று வழங்க உள்ளது.

**2.17 ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது**

வலுவான கிராம சபையின் மூலம் சிறப்பான சாதனைகள் புரியும் கிராம ஊராட்சிகளை அங்கீகரிக்கவும், ஊக்கமளிக்கவும் ஏதுவாக 2012– ஆம் ஆண்டு முதல்

மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருதினை ஏற்படுத்தியுள்ளது. 2011–12ம் ஆண்டிற்கான விருது மற்றும் ரூ.5 இலட்சத்திற்கான ரொக்கப் பரிசு, இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேதலோடை கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டது. அதேபோல **2012–13ம் ஆண்டிற்கான விருதிற்கு திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நெடுங்குணம் கிராம ஊராட்சியினை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது. 2013ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24–ஆம் நாளன்று மத்திய அரசால் இவ்விருது வழங்கப்படும்.**

### 2.18 கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல் மற்றும் அமர்வுப்படி உயர்த்தி வழங்குதல்

கிராம ஊராட்சித் தலைவர்கள், கிராம ஊராட்சிகளின் செயல் அலுவலராகவும் உள்ளனர். கிராம ஊராட்சிகள், மற்ற இரண்டு ஊராட்சி அமைப்புகளைக் காட்டிலும், அதிக பொறுப்புகளைக் கொண்டுள்ளன. பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கியப் பொறுப்பினை கிராம ஊராட்சி வகிக்கிறது. **2011 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் ஊராட்சித் தலைவர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ரூ.1000/– வழங்க அனுமதித்து தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், கிராம ஊராட்சித் தலைவர்கள்**



**மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அமர்வுப்படியினை முறையே ரூ.50ல் இருந்து ரூ.100/– ஆகவும், ரூ.25/– ல் இருந்து ரூ.50/– ஆகவும் உயர்த்தி ஆணையிட்டுள்ளது.**

### 2.19 தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளின் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல்

தமிழக அரசு வெளியிட்ட ஆணைப்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து 1,19,399 ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் அடையாள அட்டை 2012–ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

### 2.20 ஊராட்சி ஒன்றியம்

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், 5000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் நேரடியாக தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுவார்.

| ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10– மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 11–20 | 80 |
| 21–30 | 80 |
| 31–40 | 83 |
| 41–50 | 65 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 54 |
| மொத்தம் | **385** |

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள பணியாளர்கள் இருப்பார்கள். 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 112–ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமான சில பணிகளின் விவரம் பின்வருமாறு:

1. மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
2. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.



4. தொற்றுநோய் பரவாமல் இருக்கத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்
5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.
6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளையும் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

### 2.20.1 நிதி

1. ஊராட்சி ஒன்றியக் குழு வரிகள் ஏதும் விதிக்க இயலாது.
2. ஊராட்சி ஒன்றியத்திற்கான வருவாய் இனங்களாவன: வரியல்லாத வருவாய், ஒப்பளிக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இனத்தில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டத்தொகை, அரசு மானியங்களான மாநில நிதி ஆணைய மானியம், தாய் சேய் நல விடுதிக்கான மானியம், ஊரக மருந்தக மானியம், சமூகக் கல்வி மானியம், மகளிர் மற்றும் குழந்தைகள் நல மானியம், உள்ளூர் பாசன நிதி மற்றும் மத்திய மாநில அரசுத் திட்ட மானியங்கள்.

3. மாநில நிதி ஆணைய மானியம், மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் **10** விழுக்காடு நிதியில், **58** விழுக்காடு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதில், **32** விழுக்காடு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் விடுவிக்கப்படுகிறது. சீரான நிதி கிடைக்கும் வகையில் ரூ.30 லட்சம் குறைந்தபட்ச நிதியாக (Floor Amount) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மீதித்தொகை, மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடுவிக்கப்படுகிறது.
4. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்: ஒப்படைக்கப்பட்ட வருவாயானது மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 60:32:8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப் படுகிறது.

### 2.21 மாவட்ட ஊராட்சி

**1994–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு **24**ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும், உத்தேசமாக **50,000** மக்கள் தொகைக்கு ஒரு வார்டு என்ற அடிப்படையில் பல வார்டுகளைக் கொண்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு



உறுப்பினர்கள் மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் செயலராக ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, பின்வரும் நிலைக்குழுக்களை அமைக்கலாம்.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்
4. கல்வி மற்றும்
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் நலத் திட்டங்கள்.

இக்குழுக்கள் மாவட்ட ஊராட்சியில் ஒப்படைக்கப்படும் பணிகளைச் செயல்படுத்தும். இக்குழுக்கள் தவிர, மாவட்ட ஊராட்சியால் கூடுதல் நிலைக் குழுக்களைத் தேவையின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார். மாவட்ட ஊராட்சியின் கடமைகளாவன:

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கையினை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.
4. ஊரக வீட்டு வசதிக்கான திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல், குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு.
5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

### 2.21.1 நிதி

மாவட்ட ஊராட்சிக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் சில வளர்ச்சி மானியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டடங்கள் வாயிலாகக் கிடைக்கும் வருவாய் ஆகியவை முதன்மை வருவாய் இனங்களாகும்.

மாநில நிதி ஆணையம் மானியம் – மாநில சொந்த வரி வருவாயில் 10 சதவீத ஒதுக்கீட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் 58 சதவீத நிதியில், 8 சதவீதம் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு



செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

### 2.21.2 புதிய வாகனம் அனுமதித்தல்

மாவட்ட ஊராட்சியின் பொது நிதியிலிருந்து மாவட்ட ஊராட்சித் தலைவரின் பயன்பாட்டிற்காக, கழிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக புதிய ''ஸ்கார்பியோ'' வாகனம் வாங்கிட வகை செய்து அரசாணை எண். 116, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.4) துறை, நாள் 27.11.2012–ல் அரசு ஆணையிட்டுள்ளது. அத்துடன், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட திருப்பூர் மற்றும் அரியலூர் மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கும் புதிய ஸ்கார்பியோ வாகனம் அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

### 2.22 மாவட்டத் திட்டக் குழு

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 241–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டத் திட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் இருப்பர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாசாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பர். மாவட்டத் திட்டக்குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதிவரையிலான விபரங்களைப் பெறுதல்.
2. தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்
3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.
4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும் வளர்ச்சித் திட்டம் மாநிலத் திட்டக்குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருத்தல்.
5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.
6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.
8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.



அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு மாவட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டதன் தொடர்ச்சியாகவும், 96 கிராம ஊராட்சிகள் அருகிலுள்ள மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டதன் விளைவாகவும் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட திட்டக்குழுவை அரசாணை (நிலை) எண்.31, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா–2)துறை, நாள் 23.4.2012–ன்படி மாற்றியமைத்து கீழ்க்கண்டவாறு உறுப்பினர்கள் எண்ணிக்கை மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**திருத்தி அமைக்கப்பட்ட மாவட்டத் திட்டக்குழு உறுப்பினர்கள் விவரம்**

| வ. எண். | மாவட்டம் | மாவட்ட ஊராட்சிப் பகுதி களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | காஞ்சிபுரம் | 5 | 3 |
| 2 | திருவள்ளூர் | 4 | 4 |
| 3 | கடலூர் | 6 | 2 |
| 4 | விழுப்புரம் | 7 | 1 |
| 5 | வேலூர் | 8 | 4 |
| 6 | திருவண்ணாமலை | 7 | 1 |
| 7 | சேலம் | 7 | 5 |

| | | | |
|---|---|---|---|
| 8 | நாமக்கல் | 5 | 3 |
| 9 | தருமபுரி | 7 | 1 |
| 10 | கிருஷ்ணகிரி | 7 | 1 |
| 11 | ஈரோடு | 6 | 6 |
| 12 | திருப்பூர் | 6 | 6 |
| 13 | கோயம்புத்தூர் | 3 | 9 |
| 14 | நீலகிரி | 3 | 5 |
| 15 | தஞ்சாவூர் | 5 | 3 |
| 16 | நாகப்பட்டினம் | 6 | 2 |
| 17 | திருவாரூர் | 6 | 2 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 7 | 5 |
| 19 | கரூர் | 5 | 3 |
| 20 | பெரம்பலூர் | 7 | 1 |
| 21 | அரியலூர் | 7 | 1 |
| 22 | புதுக்கோட்டை | 7 | 1 |
| 23 | மதுரை | 5 | 7 |
| 24 | தேனி | 4 | 4 |
| 25 | திண்டுக்கல் | 5 | 3 |
| 26 | இராமநாதபுரம் | 6 | 2 |
| 27 | விருதுநகர் | 5 | 3 |
| 28 | சிவகங்கை | 6 | 2 |
| 29 | திருநெல்வேலி | 6 | 6 |
| 30 | தூத்துக்குடி | 7 | 5 |
| 31 | கன்னியாகுமரி | 3 | 5 |



**2.23 ஊராட்சி அமைப்புகளுக்கான கணக்கீட்டு மென்பொருள்(PRIASOFT)– மாதிரி கணக்கீட்டு முறை**

**2012–13**ம் ஆண்டு முதல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகிய மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் கணக்கீட்டு மென்பொருள் மாதிரி கணக்கீட்டு முறை **(PRIASOFT–Model Accounting System)** யினை செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. **இத்திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் புதிய கணினி, அச்சுப்பொறி, தடையற்ற மின்வழங்கி மற்றும் அகண்ட அலைக்கற்றை இணைப்பு வசதி ஆகியவை வழங்க அரசாணை எண். 26, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா 1)துறை, நாள் 12.4.2012ல் ரூ.79.50 கோடி நிதியினை அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.** கணினி மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்து ஊராட்சிகளில் நிறுவும் பொறுப்பினை தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்திற்கு (ELCOT)வழங்கி அரசு ஆணையிட்டது. அதன்படி எல்காட் நிறுவனம், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கணினி மற்றும் இதர உபகரணங்களை நிறுவி முடித்துள்ளது. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் அகண்ட அலைக்கற்றை இணைப்பு (Broadband Connectivity) வழங்கும் பொறுப்பை பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட்(BSNL)க்கு வழங்கியுள்ளது. பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனம், அனைத்து கிராம

ஊராட்சிகளிலும் அகண்ட அலைக்கற்றை இணைப்பு வசதியினை 31.3.2013–க்குள் அளித்திட உறுதியளித்துள்ளது.

ஊராட்சி செயலர்களுக்கான அடிப்படைக் கணினிப் பயிற்சியினை எல்காட் நிறுவனம் தொடங்கி மாவட்ட அளவில் நடத்தி வருகிறது. கணக்கீட்டு மென்பொருளின் பயன்பாடு குறித்து வட்டார, மாவட்ட அளவிலான அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் , பயிற்சியாளர்களின் பயிற்றுநராகப் பணிபுரிய உள்ள துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் இம்மென்பொருள் முறையினைப் பயன்படுத்தி இணையதளம் மூலம் சோதனை அடிப்படையில் கணக்கீட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2013–ம் ஆண்டு ஏப்ரல் முதல் அனைத்து கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் கணக்கீட்டு மென்பொருள்–மாதிரி கணக்கீட்டு முறையினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



# 3. மாநில அரசுத் திட்டங்கள்

## 3. மாநில அரசுத் திட்டங்கள்

### 3.1 தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

வள ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து, குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்து குக்கிராமங்களுக்கும் சென்றடையும் வகையில் ஒரு முன்னோடித் திட்டமாக "தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டு (தாய்) திட்டம்" என்னும் புதிய திட்டத்தினை இந்த அரசு அறிமுகப்படுத்தி **2011–12–ம்** ஆண்டு முதல் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. ***தேசிய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில்தான் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு முதன்முறையாக, இம்முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.***

மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், சராசரியாக ஒரு கிராம ஊராட்சியில் 7 குக்கிராமங்கள் உள்ளன. எனினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 37 குக்கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 3 குக்கிராமங்களும் உள்ளன. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சம அளவிலான நிதி ஒதுக்கீடு செய்வது வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச்



சொத்துக்களை உருவாக்குவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்றத் தாழ்வுகளையும் உருவாக்கும். ஊரகப் பகுதிகளிலுள்ள குக்கிராமங்களை அடிப்படை அலகுகளாகக் கொண்டு பணிகளை செயல்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாக அமைந்துள்ளதால், இத்திட்டம் ஊரகப் பகுதியின் வளர்ச்சிக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

தமிழகத்தில், சென்னை நீங்கலாக உள்ள 31 மாவட்டங்களில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின்படி, தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகை 500க்குக் குறைவாகவும், சில ஊராட்சிகளில் மக்கள் தொகை 10,000க்கு அதிகமாகவும் உள்ளது.

**மக்கள் தொகையின் அடிப்படையில்**
**கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்**
**(2001 கணக்கெடுப்பின்படி)**

| வ.எண். | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 500 மற்றும் அதற்குக் கீழ் | 66 |
| 2. | 501–1000 | 1,175 |
| 3. | 1001–3000 | 7,228 |
| 4. | 3001–5000 | 2,554 |
| 5. | 5001–10000 | 1,354 |
| 6. | 10,000க்கு மேல் | 147 |
| மொத்தம் | | **12,524** |

குக்கிராமங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுக்கும்போது கிராம ஊராட்சிகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

**குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்.**

| வ.எண். | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5க்கும் கீழ் | 6,241 |
| 2. | 5–15 | 5,434 |
| 3. | 16–25 | 637 |
| 4. | 25க்கு மேல் | 212 |
| மொத்தம் | | 12,524 |

### 3.1.1 நிதி ஒதுக்கீடு

குக்கிராமங்களின் எண்ணிக்கையையும், ஊராட்சியில் உள்ள மக்கள் தொகையையும் ஒப்புநோக்கும் போது, குக்கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மக்கள் தொகையும் கூடுகிறது என்பது தெளிவாகிறது. பின்வரும் அட்டவணையே இதற்குச் சான்றாகும்.



**"தாய்" திட்டத்திற்குத் தேவைப்படும் நிதி**

| வ. எண் | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகை | ஒரு ஊராட்சிக்கான சராசரி மக்கள் தொகை | ஓர் ஊராட்சிக்கான ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | | மொத்த தேவை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைந்தபட்ச அடிப்படை மானிய நிதி | கூடுதல் நிதி | மொத்த நிதி | |
| 1. | 5க்கும் கீழ் | 6241 | 12534047 | 2008 | 20 | 0 | 20 | 1248.20 |
| 2. | 5–15 | 5434 | 17392688 | 3201 | 20 | 10 | 30 | 1630.20 |
| 3. | 16– 25 | 637 | 3553429 | 5578 | 20 | 20 | 40 | 254.80 |
| 4. | 25க்கு மேல் | 212 | 1864689 | 8796 | 20 | 30 | 50 | 106.00 |
| மொத்தம் | | 12524 | 35344853 | 2822 | –– | –– | – | 3239.20 |
| கணக்கெடுப்பு, தகவல்,கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், ஆரம்ப கட்டப் பணிகள் மற்றும் விருதுகளுக்கான நிதி | | | | | | | | 160.80 |
| பெருமொத்தம் | | | | | | | | 3,400.00 |

அதிக அளவிலான குக்கிராமங்களைக் கொண்ட ஊராட்சிக்கு அதிக அளவிலான நிதி தேவைப்படுகிறது. இதன் அடிப்படையில் அனைத்து ஊராட்சிகளும் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வகைக்கேற்பவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதாவது, அதிகக் குடியிருப்புகள் மற்றும் அதிக மக்கள் தொகையுடைய ஊராட்சிகள் அதிக நிதி ஒதுக்கீட்டினைப் பெறும். மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி ஐந்து ஆண்டுகளில் அனைத்து 12,524 ஊராட்சிகளிலும் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் ரூ.3,400 கோடி

மதிப்பீட்டில் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு 2011–12 ஆம் ஆண்டில் ரூ.680 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2012–13 ஆம் ஆண்டில் ஊரக குக்கிராமங்களில் உள்ள இடைவெளிகள் (Infrastructural gaps) அடிப்படை தேவைகளை நிறைவு செய்ய ரூ.750 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.1.2 திட்டக் கூறுகள்

"தாய்" திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் மூன்று விதமாக வகைப்படுத்தப்பட்டு பின்வருமாறு பட்டியலிடப் பட்டுள்ளது:

| வ. எண் | குறைந்த பட்ச அடிப்படை தேவைகள் | கூடுதல் தேவைகள் | இதர பணிகள் |
|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகம் | அங்கன்வாடி மையங்கள் | அனுமதிக்கப்பட்ட இதர பணிகள் |
| 2 | தெருவிளக்குகள் | பொது விநியோகக் கடைகள் | |
| 3 | சாலைகள் | சுய உதவிக்குழு கட்டடங்கள் | |
| 4 | சுடுகாடு / இடுகாடு | கதிரடிக்கும் களம் | |
| 5 | சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் | விளையாட்டு மைதானம் | |



### 3.1.3 குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள்

#### 3.1.3.1. குடிநீர் விநியோகம்

குடிநீர் விநியோகப் பணிகளான சிறுமின்விசை இறைப்பான், குடிநீர்க் குழாய் விரிவாக்கம், தற்போதுள்ள தனி மின்விசைத் திட்டத்திற்கான நீராதாரத்தினைப் பெருக்குதல் போன்ற பணிகள், தேவையின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

#### 3.1.3.2 தெரு விளக்குகள்

புதிய குக்கிராமங்கள், விரிவாக்கப் பகுதிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள் அடங்கிய குடியிருப்புகளில் தேவைக்கேற்ப புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படும். ஏற்கெனவே உள்ள இடங்களில் தெரு விளக்குகள் பற்றாக்குறையாக இருந்தால் கூடுதல் தெரு விளக்குகளும் அமைக்கப்படும். சூரிய சக்தி தெருவிளக்குகளும் இத்திட்டத்தில் அமைக்கப்படுகிறது.

#### 3.1.3.3 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

இருபுறங்களிலும் குடியிருப்புகள் அதிகமாக உள்ள இடம், மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கும் தெருக்கள் அல்லது சந்துகள், ஏற்கனவே சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்ட தெருக்களில் விடுபட்ட பகுதி ஆகியன முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்பட்டு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படுகிறது.

#### 3.1.3.4 இணைப்புச் சாலைகள்

பேருந்துகள் செல்லும் சாலைகள், கற்சாலைகளைத் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல், ஒரு கிராம ஊராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேல் உள்ள குக்கிராமங்களை இணைத்துச் சாலை அமைத்தல், மண் சாலைகள் / சரளைச் சாலைகளைத் தரம் உயர்த்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

#### 3.1.3.5 சுடுகாடு/இடுகாடு

ஒவ்வொரு சுடுகாடு/இடுகாட்டிற்கும் அணுகு சாலைகள், சுற்றுச்சுவர், சுடுகாடு கொட்டகை, தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதிகள் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

#### 3.1.3.6 சுடுகாடு/இடுகாட்டிற்கு சாலை வசதி செய்தல்

ஏற்கெனவே சாலை வசதி உள்ளதெனில் மேற்படி சாலையின் தற்போதைய தன்மையைக் கருத்திற்கொண்டு தேவையின் அடிப்படையில் சாலை மேம்படுத்தப்படும். சாலை வசதி இல்லாத சுடுகாடு/இடுகாட்டிற்கு முன்னுரிமை அடிப்படையில் அணுகுசாலை அமைக்கப்படுகிறது.

கூடுதல் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட பணிகள் தேவை மற்றும் அத்தியாவசியத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

தாய் திட்டம் தவிர ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்கள்



அல்லது பிற துறைகளில் உள்ள பல வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

#### 3.1.3.7 திட்ட செயலாக்கம்

- இத்திட்டம் 2011–12ம் ஆண்டு முதல் 2015–16ம் ஆண்டு வரை ஐந்து கட்டங்களாக செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.
- முதற்கட்டமாக, 2011–12ம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 25,335 குக்கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு ரூ.680 கோடி ஆண்டு ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.
- 2012–13ம் ஆண்டில் இத்திட்டம் 2,250 கிராம ஊராட்சிகளில் உள்ள 18,581 குக்கிராமங்களில் ரூ.750 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

எஞ்சியுள்ள குக்கிராமங்களில் இத்திட்டம் பின்வருமாறு செயல்படுத்தப்படும்.

| வ.எண் | ஆண்டு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2013–14 | 2,500 | 15,115 |
| 2 | 2014–15 | 2,740 | 12,093 |
| 3 | 2015–16 | 3,014 | 8,270 |

இவ்வாறு 12,524 கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள 79,394 குக்கிராமங்களிலும், 2015–16க்குள் அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்

### 3.1.3.8 2011–12 & 2012–13 ஆம் ஆண்டுகளில் திட்ட செயலாக்கம்

2011–12 மற்றும் 2012-13 ஆம் ஆண்டுகளில் தற்போதுள்ள அடிப்படை வசதிகள் மற்றும் தேவைப்படும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றைக் கண்டறிய ஒரு விரிவான கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2011–12ஆம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளை சார்ந்த 25,335 குக்கிராமங்களிலும், 2012–13ம் ஆண்டில் 2,250 கிராம ஊராட்சிகளை சார்ந்த 18,581 குக்கிராமங்களிலும் அனைத்து புள்ளிவிவரங்களும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் வலைதளத்தில் (www.tnrd.gov.in) உள்ளீடு செய்யப்பட்டுள்ளன.

**நாட்டிலேயே முதன் முறையாக குக்கிராம அளவில் தற்போதுள்ள வசதிகளை மதிப்பீடு செய்யவும், நுண்ணிய அளவில் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், முதன்முறையாக மேற்கொள்ளப்பட்ட தனித்தன்மை வாய்ந்ததொரு கணக்கெடுப்புப் பணி இதுவாகும்.**

இக்கணக்கெடுப்புப்பணி, பின்வரும் 12 படிவங்களுடன் அடிப்படைத் தேவைகளான குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள் மற்றும் இதர



உட்கட்டமைப்பு வசதிகளை குக்கிராம அளவில் கணக்கீடு செய்யும் அளவில் வடிவமைக்கப்பட்டதாகும்.

1.குக்கிராமம் குறித்த அடிப்படை விவரங்கள்

2. குடிநீர் விநியோகம்
   (அ) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்
   (ஆ) சிறுமின்விசை பம்புகள்
   (இ) தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள்
   (ஈ) கைப்பம்புகள்
3. தெருவிளக்குகள்
4. தெருக்கள் மற்றும் சந்துகள்
5. இடுகாடு/சுடுகாடு
6 (அ). அரசு / உள்ளாட்சி கட்டடங்கள் (பள்ளி கட்டடங்கள் நீங்கலாக)
   (ஆ). அரசு/உள்ளாட்சி பள்ளி கட்டடங்கள்
7. சிறுகுளங்கள் மற்றும் ஊரணிகள்
8. விளையாட்டு மையங்கள்
9. பேருந்து நிலையங்கள்
10. சந்தைகள்
11. சுய உதவிக்குழுக்கள் குறித்த விவரங்கள்
12 (அ) கிராம ஊராட்சி சாலைகள்
   (ஆ) ஊராட்சி ஒன்றிய சாலைகள்

விரிவான புள்ளி விவர கணக்கெடுப்பின் அடிப்படையில் 2011–12 மற்றும் 2012–13ம் ஆண்டிற்கான திட்ட செயலாக்க கிராம ஊராட்சிகளான முறையே 2,020 மற்றும் 2,250ல் அமைந்துள்ள 25,335 மற்றும் 18,581

குக்கிராமங்களுக்குத் தேவைகள் மற்றும் இதர தேவைகள் என கண்டறியப்பட்ட மொத்த பணிகளின் எண்ணிக்கையில் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள், கூடுதல் அத்தியாவசிய தேவைகள் மற்றும் இதர தேவைகள் கண்டறியப்பட்டு அவற்றில் அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

'தாய்' திட்டம் தவிர, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் 13வது நிதிக்குழு மான்யம் போன்ற ஊரக வளர்ச்சி திட்டங்களின் மூலம் கண்டறியப்பட்ட பணிகள் அனைத்தும் 2011–12 மற்றும் 2012–13ம் ஆண்டுகளில் ஒருமுகப்படுத்தியதன் மூலம் அனைத்து இன்றியமையாத தேவைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2011–12 மற்றும் 2012–13ம் ஆண்டுகளில் தாய் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட மற்றும் முடிக்கபட்ட குறைந்தபட்ச அடிப்படைத் தேவை பணிகளின் விவரங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது :



**i. குடிநீர் விநியோகம்**

40 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் கொடுக்கப்படும் குக்கிராமங்கள் கண்டறியப்பட்டு அவற்றின் குடிநீர் ஆதாரங்களை பெருக்கும் வகையில் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்ட விவரங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | வருடம் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | பணிகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 8443 | 7,753 | 110.40 |
| 2 | 2012–13 | 8758 | 11,319 | 177.36 |

**ii. தெரு விளக்கு**

ஒவ்வொரு 30மீ இடைவெளிக்கு இடையில் ஒரு தெரு விளக்கு பொருத்தும் நோக்குடன், இதுவரை தெருவிளக்கு இல்லாத குக்கிராமங்கள் மற்றும் தெருக்களில் தெருவிளக்குகள் எடுக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | வருடம் | தெரு விளக்குகளின் எண்ணிக்கை | பணிகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 43,239 | 21,589 | 41.88 |
| 2 | 2012–13 | 42,000 | 21,976 | 48.74 |

### iii. சாலைகள்

#### அ) தார்சாலைகள்

அனைத்து காலநிலைக்கும் ஏற்ற வகையில் அமையுமாறு பலதரப்பட்ட குக்கிராமங்களை இணைக்கும் பாதைகளில் தார் சாலைகள் எடுக்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | வருடம் | சாலைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 2873 | 177.78 |
| 2 | 2012–13 | 3265 | 315.13 |

#### ஆ) சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

இருபுறங்களிலும் குடியிருப்புகள் அதிகமாக உள்ள இடங்களில் தெருக்கள் மற்றும் சந்தைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | வருடம் | சாலைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 14,775 | 185.15 |
| 2 | 2012–13 | 8,255 | 64.98 |



### iv. சுடுகாடு/இடுகாடு

தேவையின் அடிப்படையில் எரிமேடை / காத்திருப்போர் கூடம் ஆகியவற்றுடன் தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | வருடம் | பணிகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 3,375 | 73.07 |
| 2 | 2012–13 | 3,562 | 86.52 |

### v. சுடுகாடு/இடுகாட்டிற்கான சாலை வசதி

சுடுகாடு / இடுகாட்டிற்கான அணுகு சாலைகள் தேவையின் அடிப்படையில் செய்து தரப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | வருடம் | பணிகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 389 | 12.98 |
| 2 | 2012–13 | 1,153 | 41.61 |

### vi. கூடுதல் அத்தியாவசிய தேவைகள்

தேவைப்படும் என கண்டறியப்பட்ட கூடுதல் அத்தியாவசியப் பணிகளான பொது விநியோகக் கடைகள், அங்கன்வாடி, பள்ளி கட்டடங்கள், சுய உதவிக்குழு கட்டிடங்கள், கதிரடிக்கும் களம் மற்றும் விளையாட்டு மையங்கள் மேற்கொள்ளப்பட்ட விவரம் பின்வருமாறு.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | வகைப்பாடு | 2011–12 | | 2012–13 | |
|---|---|---|---|---|---|
| | | பணிகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தொகை | பணிகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட தொகை |
| 1 | அங்கன்வாடி மையங்கள் | 54 | 220.980 | 27 | 109.370 |
| 2 | நியாய விலைக் கடைகள் | 58 | 310.032 | 18 | 93.250 |
| 3 | சுய உதவிக் குழு கட்டடங்கள் | 14 | 50.372 | 5 | 21.200 |
| 4 | கதிரடிக்கும் களம் | 159 | 304.133 | 86 | 198.690 |
| 5 | விளையாட்டு மைதானங்கள் | 7 | 4.586 | 8 | 8.390 |

குறைந்தபட்ச அடிப்படை தேவை பணிகள் மற்றும் கூடுதல் அத்தியாவசிய தேவைப்பணிகள் தவிர ஏனைய இதர பணிகள் **2011–12** ஆம் ஆண்டில் **1207** எண்ணிக்கையும் **2012–13** ஆம் ஆண்டில் **713** எண்ணிக்கையும் குக்கிராமங்களில் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.1.3.9 2013–14ம் ஆண்டில் தாய் திட்ட செயலாக்கம்

தாய் திட்டத்தின் கீழ் ரூ.**750.00** கோடி நிதி ஒதுக்கீட்டின் கீழ் **2500** கிராம ஊராட்சிகளில் உள்ள **15,115** குடியிருப்புகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். இதில் ரூ.**680** கோடி அடிப்படைத் தேவைகளை



நிறைவேற்றுவதற்கும் ரூ.**70** கோடி நிதி **2013–14**ம் ஆண்டு தாய் கிராம ஊராட்சிகள் மற்றும் அக்கிராமங்களுக்கு அருகில் உள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்த ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3.2 முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **03.06.2011** அன்று மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் “இந்த அரசு கிராமப்புற ஏழைகள் பயன்பெறும் வகையில் ‘சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்’ தொடங்கி சுமார் **300** சதுர அடி அளவில் ரூ.**1.80** இலட்சம் அலகுத்தொகையில் முழு செலவினையும் அரசே ஏற்று வீடுகளை கட்டிக் கொடுக்கும்” என அறிவிக்கப்பட்டது.

அதன்படி ஒவ்வொரு வீடும் ரூ.**1.80** இலட்சம் அலகுத் தொகையில் **300** சதுர அடி பரப்பளவில் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளை ஆண்டு ஒன்றுக்கு **60,000** வீடுகள் என்ற அடிப்படையில், **2011–12**–ல் தொடங்கி, அடுத்து வரும் **5** ஆண்டுகளில் இவ்வீடுகளைக் கட்டுவது என அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு “முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்” என பெயரிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால். அனுமதிக்கப்பட்ட “முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்**

**கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள், ஊரகப் பகுதிகளில் மிகவும் தேவையென கண்டறியப்பட்ட ஊரக வீட்டு வசதிகளை உருவாக்குவதற்கான வளர்ச்சித் திட்ட அணுகுமுறைகளின் வரலாற்றில் மற்றுமொரு மைல் கல்லாகும். இலவசமாக வீடுகள் கட்டித்தரப்படும் திட்டங்களில், 300 சதுர அடி பரப்பளவில் சூரிய மின்சக்தியுடன் கூடிய இவ்வீடுகள் கட்டும் திட்டத்தைப் போல் நாட்டிலேயே வேறெங்கும் கட்டித்தரப்படுவதில்லை.**

### 3.2.1 இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் அனைவரும் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் பெற தகுதியானவர்கள்.
- ஒவ்வொரு வீடும் **300** சதுர அடி பரப்பளவில், ரூ.**1.80** இலட்சம் அலகுத் தொகையுடன் மாநில அரசின் முழு நிதி உதவியுடன் கட்டப்படுகிறது.
- ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய வசதிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புடன் கட்டப்படவுள்ளது.
- ஒவ்வொரு வீட்டிலும் **5** சூரிய ஒளி சக்தியில் எரியும் அடர்குறு விளக்குகள் அமைக்கப்படும். இவை படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல்அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளில் ஒரு விளக்கு வீதம்



அமைக்கப்படும். பயனாளிகளின் விருப்பத்தின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மின் இணைப்பு பெறவும் விருப்பத்திற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.**1.80** இலட்சம் அலகுத் தொகையாகும். கட்டுமானத்திற்காக ரூ.**1.50** இலட்சம் மற்றும் சூரிய சக்தி விளக்குகளுக்காக ரூ.**30,000** இதில் அடங்கும்.
- வீடுகள் கட்டும் பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்படுத்தும்.
- பசுமை வீடுகள், பயனாளிகளின் குடியிருப்பு அமைந்துள்ள இடம் அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்குச் சொந்தமான இடங்களில் கட்டித்தரப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கென நில எடுப்புகள் ஏதும் செய்யப்படமாட்டாது. வீட்டுமனைப் பட்டா உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் வீடு பெறத் தகுதியானவர்கள் ஆவர்.
- சூரிய சக்தி விளக்குகள் மற்றும் இதர உபகரணங்களை வழங்குதல் அவற்றை நிறுவுதல் ஆகியவற்றை அனுமதிக்கப்பட்ட

வழிமுறைகளின்படி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர்களுடன் ஒருங்கிணைந்து, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்படுத்தும்.

### 3.2.2. மாதிரி வடிவமைப்பு மற்றும் அலகுத்தொகை

- ஒவ்வொரு பசுமை வீடும் அதிகபட்சம் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.1.80 இலட்சம் அலகுத்தொகையில் கட்டப்படும். இந்த வீடுகளில், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையலறை மற்றும் கழிப்பறை ஆகியவை கட்டப்படும். முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியைப் பயன்படுத்தி இக்கழிப்பறை கட்டப்படும். அனைத்து பசுமை வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்படும். சூரிய சக்தி விளக்குகள் மற்றும் இதர கருவிகளை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலர்களின் ஒத்துழைப்புடன் பசுமை வீடுகளில் அமைக்கப்படும்.
- ஒவ்வொரு பசுமை வீடும் அனுமதிக்கப்பட்ட பரப்பளவான 300 சதுர அடிக்கு மிகாமல் இதற்கென தனியாக வடிவமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகளை விரைந்து முடிக்கும் வகையிலும் ஒரே மாதிரியான வடிவமைப்பிலும் கட்ட வேண்டும் என்பதால் இதன் வடிவமைப்பில் மாறுதல்கள் அனுமதிக்கப் படுவதில்லை.
- இருப்பினும், அனுமதிக்கப்பட்ட வீட்டின் பரப்பளவான 300 சதுர அடியில் வீட்டின் வடிவமைப்பில் மாறுதல் செய்யாமல், சமையலறை மற்றும் படுக்கை அறை ஆகியவற்றை இடஅமைவிற்கேற்ப மாற்றி அமைக்க அனுமதிக்கப்படும்.
- செராமிக் ஓடுகளில் இத்திட்டத்திற்கென வடிவமைக்கப்பட்ட சின்னத்தை அனைத்து வீடுகளிலும், அனைவரும் பார்க்கும் வகையில் வீட்டின் வடிவமைப்பில் உள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் பதிக்கப்பட வேண்டும்.
- இத்திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட அனைத்து வீடுகளிலும் திட்டத்தின் பெயர், பயனாளியின் பெயர் மற்றும் வீடு கட்டப்பட்ட ஆண்டு ஆகிய விபரங்கள் தெளிவாகத் தெரியும் வகையில் வண்ணத்தினால் எழுதப்படவேண்டும்.

### 3.2.3 சூரிய சக்தி விளக்குகள் நிறுவுதல்

கீழே குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றி பசுமை வீடுகளில் சூரிய சக்தி விளக்குகள் அமைக்கவும், செயல்படுத்தவும், பராமரிக்கப்படவும் உள்ளது:

- ஒவ்வொரு வீட்டிலும் சூரிய மின் ஒளி அமைப்பு மூலம் 5 அடர்குறு விளக்குகள் (CFL) அமைக்கப்படும்.
- வீட்டின் உட்புறம் செய்யவேண்டிய கம்பி அமைப்பு (Wiring) வேலை கட்டுமானப்பணியுடன் சேர்த்துச் செய்யப்படும். மின்மாற்றி மற்றும் ஸ்விட்சு நிறுவும் பணி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் செயல்படுத்தப்படும்.
- விரிவான வருடாந்திர பராமரிப்புக் கட்டணத்தை உள்ளடக்கிய ஐந்து ஆண்டு உத்திரவாதமுள்ள பொருட்களை வழங்க அளிக்கும் விலைபுள்ளியிலேயே சேர்க்கப்படவேண்டும். தொடர்புடைய நிறுவனம் வட்டார அளவிலும், மாவட்ட அளவிலிலும் பராமரிப்பு மையங்களை அமைத்திட வேண்டும், மேலும், இப்பொருட்களைத் தயாரித்த மற்றும் விநியோகித்த நிறுவனங்களால் மாவட்ட அளவில் சிறப்பு தொலைபேசி இணைப்பு (Helpline) ஒன்று அமைக்கப்படும்.
- ஒரு வீட்டிற்கு சூரிய சக்தி விளக்கு அமைப்பதற்குத் தேவையான தொகை ரூ.30,000/—ஐ சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பட்டியலிட்டு கருவூலத்திலிருந்து பெற்று, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் கணக்கில் வைத்திருக்க வேண்டும். இதற்குரிய தகுதியான மானியத்தொகையினை ஊரக வளர்ச்சி மற்றும்



ஊராட்சித் துறையின் மூலம் புதுடெல்லியில் உள்ள புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தில் இருந்து பெற்று தமிழ்நாடு அரசுக்கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

- இத்திட்டத்தினை செயல்படுத்தும்போது பெறப்படும் வட்டி மற்றும் இதர சேமிப்புத்தொகை ஏதேனும் இருப்பின், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை அதனை தமிழ்நாடு அரசுக்கணக்கில் செலுத்திட வேண்டும்.
- தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998ன்படி, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் இதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.
- சூரிய சக்தி விளக்குகள் அமைத்துப் பராமரிப்பது தொடர்பான சிற்றேடு/துண்டுப் பிரசுரம் மற்றும் இதர பயிற்சிக் கையேடுகள் வெளியிடத் தக்க நடவடிக்கைகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் எடுக்கப்பட வேண்டும். மேலும் 'செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை' குறித்த கையேடு ஒன்றையும் நடைமுறையிலுள்ள உள்ளூர் மொழியில் தயாரித்து பயனாளிகளுக்கு வழங்கிட வேண்டும்.
- விநியோகிஸ்தர்களுக்கும், பயனாளிகளுக்கும் இடையே சரியான புரிந்துணர்வை ஏற்படுத்த கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலர்கள்,

தேர்வு செய்யப்பட்ட சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் தகுதியான உள்ளூர் பிரதிநிதிகள் ஆகியவர்களுக்கு உரிய பயிற்சியளிக்கத் தேவையான பயிற்சித் தொகுப்புகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் தயாரிக்கப்படும்.

**3.2.4. பணிகளை செயல்படுத்துதல்**

இவ்வமைப்பினை நிர்மாணித்து செயல்படுத்தும் நிறுவனங்கள் விரிவான ஆண்டு பராமரிப்புக் கட்டணத்தை உள்ளடக்கிய 5 ஆண்டு உத்திரவாதம் வழங்க வேண்டும். திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையுடன் ஒருங்கிணைந்து செயல்படவும், கண்காணிக்கவும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, ஒரு உதவி செயற்பொறியாளர்/உதவி பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்–கணினி இயக்குநர் நிலையில் ஒருவரையும் ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் பணியமர்த்த வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பணியாளர்கள் பணியாற்ற தனி அறை ஒன்றை திட்ட இயக்குநர் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**3.2.5. தரக்கட்டுப்பாடு மற்றும் ஆய்வு**

திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் மற்றும் ஆய்வு மேற்கொள்ள நிர்ணயிக்கப்படும் நிறுவனங்கள் ஆகியவற்றினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை முடிவு செய்யும். வாங்கப்படும் பொருட்களின் தரம் மற்றும் முடிக்கப்பட்ட வேலைகளின் அளவுகள்



நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டியது இந்நிறுவனங்களின் பொறுப்பாகும். பொருட்கள் விநியோகம் செய்வதற்கு முன் அவை இருப்புவைக்கப்பட்ட விநியோகஸ்தர்களின் இடத்தில் வைத்து ஆய்வு செய்வதும் இந்த நிறுவனங்களின் பொறுப்பில் அடங்கும். விளக்குகள் அமைக்கப்பட்ட பின் இப்பணியினை திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் 100 சதவீதம் ஆய்வு மேற்கொண்டு வேலை நடைபெற்றதை உறுதி செய்ய வேண்டும். அமைக்கப்பட்ட சூரிய சக்தி விளக்குகள் மற்றும் அமைப்புகளில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அதனை உடனடியாக பழுது நீக்கம் செய்யும் பொருட்டு தொடர்புடைய பயனாளி, கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட நிர்வாகத்தினால் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

அமைக்கப்பட்ட விளக்குகளில் / அமைப்பில் ஏதேனும் குறைபாடுகள் / திருப்தியின்மை போன்றவை தர ஆய்வின் போது கண்டறியப்பட்டால் தொடர்புடைய ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் பழுதான பொருளை மாற்றித் தருவதையும் அல்லது சரியாக செய்யப்படாத வேலையை சரி செய்வதையும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை உறுதி செய்யும். அனைத்து பணிகளுமே நிறைவாக இல்லையெனில் அவ்வினங்களில் பழுதுநீக்கம் செய்த பின் ஒப்பந்ததாரரிடமிருந்து பழுது நீக்கம் செய்யப்பட்டதென அறிக்கை பெற்ற பின்னரும் அப்பணி மறு ஆய்வு

செய்யப்படலாம். பழுது நீக்கம் செய்த பின் பணி நிறைவாக முடிக்கப்பட்டுள்ளதென அறிக்கை வரப்பெற்றால் மட்டுமே தொடர்புடைய நிறுவனங்களுக்கு நிதி விடுவிக்கப்பட வேண்டும். மேற்படி பணிகளைக் கண்காணிப்பதற்காக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை தகுதியான உயர் அலுவலர் ஒருவரை நியமிக்கும்.

### 3.2.6 சூரிய சக்தி அமைப்புகளை பராமரித்தல்

செயல்படுத்தும் நிறுவனங்களுடன் முடிவு செய்யப்படும் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள பயனாளிகள் மற்றும் 4 சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு, அமைக்கப்பட்ட விளக்குகள் மற்றும் சூரிய சக்தி அமைப்புகளை அன்றாடம் பராமரிப்பு செய்யும் வகையில் அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியது சம்மந்தப்பட்ட நிறுவனங்களின் முழு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

### 3.2.7. மாநில அதிகாரமளிக்கப்பட்ட குழு

தமிழ்நாடு அரசால், தலைமைச் செயலாளரின் தலைமையில் அதிகாரமளிக்கப்பட்ட மாநில குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் கீழ்கண்டவர்கள் உறுப்பினர்களாக அங்கம் வகிப்பார்கள். திட்ட மதிப்பீடுகளை கூராய்வு செய்தல், திட்ட செயல்பாடுகளை ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் மற்றும் இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்திடத் தேவையான நெறிமுறைகளை அவ்வப்போது வகுத்தளித்தல், திட்டங்களுக்கு ஒப்பளிப்பு செய்தல் ஆகிய பணிகளை இக்குழு மேற்கொள்ளும்.



மேலும், தொழில்நுட்ப வரையறைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான ஆவணங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் இறுதியான விலைப்புள்ளிகளை முடிவு செய்யும் அலுவலர்களுக்கு பரிந்துரை செய்தல் ஆகிய பணிகளையும் இக்குழு மேற்கொள்ளும்.

தலைவர்/நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை
– உறுப்பினர்–செயலர்

அரசு முதன்மை செயலர், எரிசக்தி துறை

அரசு முதன்மை செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

அரசு முதன்மை செயலர், நிதித்துறை.

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
பெருந்தலைவர், TANTRANSCO
Dr. கிரிதர், Centre for Wind Energy Technology
பேராசிரியர் அசோக் ஜுன்ஜுன்வாலா,
பெருந்தலைவர், RTBI, IIT சென்னை.

### 3.2.8. நிதி விடுவித்தல் மற்றும் அரசு மானியம் கோருதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் இத்திட்டத்திற்கான நிதியை அரசிடமிருந்து பெற்று தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு விடுவிக்கப்படும். ஒப்பந்த நிறுவனங்களுக்குப் பணியின் முன்னேற்றத்திற்கு ஏற்ப நிதி விடுவிக்கப்படும். பணிகள் நிறைவாக முடிக்கப்பட்டுள்ளதென தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு

முகமையின் அதிகாரம்பெற்ற அலுவலர் மூலம் உரிய சான்றிதழ் கிடைக்கப்பெற்றவுடன் ஒப்பந்த நிறுவனங்களுக்கு இறுதித் தொகை வழங்கப்படும். மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திடமிருந்து பெற்று தமிழ்நாடு அரசிற்கு மீள செலுத்த வேண்டிய மானியம் பெறுவதற்கான விண்ணப்ப படிவங்களை அனுப்பும் பணியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையுடன் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை இணைந்து செயல்படும்.

**3.2.9 உத்தரவாதம்**

மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நல்ல தரநிர்ணயம் மற்றும் நிபந்தனைகளை நிறைவு செய்வதை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை உறுதிப்படுத்த வேண்டும். சூரிய சக்தி பலகை, மின்கலம் மற்றும் தொடர்புடைய உபகரணங்களுக்கான உத்தரவாதம் ஆகியவை ஒப்பந்தத்தில் இடம்பெற வேண்டும். சூரிய சக்தியில் இயங்கும் விளக்குகளுக்கு குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். 2 ஆண்டுகளில் உத்தரவாதம் முடிவுற்ற பின்னர் கூடுதலாக 3 ஆண்டுகளுக்கு முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (CAMC) ஒப்பந்தப்புள்ளி முறையில் இறுதி செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத் (CAMC) தொகை, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையில் உள்ள



நிதி நிலையினைப் பொறுத்து எத்தனை ஆண்டுகளுக்கு வழங்குவது என்று இறுதி முடிவு மேற்கொள்ளப்படும்.

**3.2.10 மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்பு மற்றும் உரிய வசதிகள் செய்தல்.**

- சூரிய சக்தி விளக்குகள் அமைக்க உள்ள வீடுகளின் விவரங்கள் மற்றும் ஊராட்சிகளின் விவரங்கள் போன்றவற்றை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு முன் கூட்டியே அனுப்பிட வேண்டும்.
- சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியில், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மாவட்ட மேலாளர் மூலமாக பணி அமர்த்தப்படும் திட்ட மேலாண்மை ஆலோசகர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.
- இப் பணி தொடர்புடைய விவரங்களுக்காக எளிதில் தொடர்பு கொள்வதற்கு வழிவகை செய்ய தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்கள் / விநியோகஸ்தர்கள் / ஒப்பந்ததாரர்கள் (AMC holders) பற்றிய முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் போன்ற விவரங்களை மாவட்டம், ஊராட்சி

ஒன்றியம் மற்றும் ஊராட்சிகள் அளவில் வழங்கிட வேண்டும்.

### 3.2.11 முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (CAMC)

சூரிய சக்தி விளக்குகள் அமைக்க உள்ள நிறுவனங்கள் / விநியோகஸ்தர்கள் / ஒப்பந்ததாரர்களுடன் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செய்து கொள்ளும் உத்தரவாதம் பற்றிய விவரம் மற்றும் முழுமையான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்த விவரங்களையும் சூரிய சக்தி விளக்குகள் மற்றும் அமைப்புகளை நிறுவிய பின்னர் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

### 3.2.12 பயனாளிகளைத் தேர்வு செய்யும் முறை

பயனாளிகள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்:

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை இடத்திற்கு சொந்தக்காரராக இருக்க வேண்டும்.
- குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினரில் எவரேனும் ஒருவர் பெயரிலோ



வில்லங்கமற்ற வீட்டுமனைப் பட்டா இருக்க வேண்டும்.

- தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட வீடு எதுவும் இருக்கக் கூடாது.
- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன்பெற்றவராக இருக்கக் கூடாது.

#### 3.2.12.1 பயனாளிகள் தேர்வு செய்யும் முறை

- ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோரின் நிரந்தர காத்திருப்புப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். மேலும், மிகவும் வறிய நிலையிலுள்ளோர் தேர்வு செய்யப்பட வேண்டும்.
- பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும்போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், ஹெச்ஐவி/எய்ட்ஸ்/காசநோய் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என துணை இயக்குநரின் (மருத்துவப் பணிகள்) சான்றிதழ் பெற்றவர்கள், வெள்ளம், தீ விபத்து ஆகிய இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநிலை

பாதிக்கப்பட்டவர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

- தகுதியுள்ள ஏழை ஒருவரின் பெயர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் பட்டியலில் விடுபட்டிருப்பின், விடுபட்ட நபர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர், விவரங்களை சரிபார்த்து மாவட்ட ஆட்சியரின் இசைவுடன் அவரது பெயரைப் பட்டியலில் இடம் பெறச் செய்து அதனை கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறவேண்டும். அவ்வாறு சேர்க்கப்படும் நபர் நிரந்தர காத்திருப்பு பட்டியலில் இடம் பெற்று தேர்வுக்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்.
- கிராம ஊராட்சிகள், தகுதியுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பயனாளிகளின் பட்டியலை தேர்வு செய்து கிராம சபையின் ஒப்புதலுக்காக வைக்கப்படவேண்டும்.

### 3.2.12.2 பயனாளிகள் தேர்வு

தகுதிவாய்ந்த பயனாளிகளின் பட்டியலை வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர் ஆகியோர், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள தகுதிவாய்ந்த பயனாளிகளின் பட்டியலை வழிகாட்டி நெறிமுறைகளின் படி



தேர்வு செய்து அதனை கிராம சபைக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெற வேண்டும்.

### 3.2.13 வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

- மாநில அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் இத்திட்டத்தின்கீழ் ஓராண்டில் கட்டப்பட வேண்டிய மாவட்ட வாரியாக வீடுகளின் இலக்கினை ஒதுக்கீடு செய்வார்.
- மாவட்ட ஆட்சியர் மாவட்ட அளவில், ஊராட்சிவாரியாக வீடுகளை ஒதுக்கீடு செய்வதை முடிவு செய்வார்.
- வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் நிரந்தர காத்திருப்புப் பட்டியலில் முன்னுரிமைப்படி தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கிராம சபையின் ஒப்புதல் பெற்று வீடு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

### 3.2.14 பணிகளுக்கான உத்தரவு வழங்குதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களால் நில உரிமை, இடம் ஆகியவை சரிபார்க்கப்பட்டதை உறுதி செய்த பின்னர் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) வேலை உத்திரவினை வழங்க வேண்டும்.

### 3.2.15 இடத்தை குறியீடு செய்தல்

சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியின் ஒன்றிய மேற்பார்வையாளர் அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட

வடிவமைப்பின்படி வேலையைத் துவக்குவதற்காக நிலத்தினைக் குறியீடு செய்ய வேண்டும்.

### 3.2.16 கட்டுமானப் பொருட்கள் விநியோகம்

**சிமெண்ட்**

மாநில அளவில், கிராம ஊராட்சிகளுக்குத் தேவையான சிமெண்ட் தங்குதடையின்றி விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ‘அரசு சிமெண்ட்’ (TANCEM) மூலமாக சிமெண்ட் விநியோகம் செய்து அதற்கான தொகையை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படவேண்டும்.

**இரும்புக் கம்பி**

இதேபோன்று, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் தங்களது மாவட்டங்களின் தேவைக்கேற்ப இரும்புக் கம்பிகள் கொள்முதல் செய்து, இதற்கான தொகையைத் திட்ட நிதியிலிருந்து வழங்க வேண்டும்.

**கதவுகள் மற்றும் ஜன்னல்கள்**

பயனாளிகள் கதவுகள் மற்றும் ஜன்னல்களைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளலாம். பயனாளிகளால் கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்ய இயலாத நிலையில், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்து வழங்கிவிட்டு அதற்கான தொகையினை திட்ட நிதியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம். ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேற்காணும்



கொள்முதல்களுக்கு திட்ட இயக்குநர்கள், தங்கள் மாவட்டங்களுக்குத் தேவையான பொருட்களின் மொத்த அளவினைக் கணக்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

### 3.2.17 திட்ட செயலாக்கம்

- ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மூலம் திட்டம் செயல்படுத்தப்படும்.
- வீடுகளைக் கட்டுவதற்கும், தொழில்நுட்ப வேலைகளுக்கும் ஒன்றியப் பொறியாளர்களே பொறுப்பாவார்கள். வீட்டின் பணி முன்னேற்ற ஆய்வு மற்றும் மேலளவு செய்வதை உதவி செயற் பொறியாளர்கள் மேற்கொள்வர்.
- மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள், வீடுகளின் பணி முன்னேற்றத்தை அடிக்கடி ஆய்வு செய்து அதனை விரைந்து முடிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இத்திட்டத்தின்கீழ் மாதிரிவடிவமைப்பில் மாறுபாடோ அல்லது குறைபாடுகளோ இல்லை என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

### 3.2.18 ஆவணப்படுத்துதல்

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) வேலைக்கான உத்தரவு வழங்கும் முன்பு பயனாளி தற்போது தான் வசிக்கும் வீட்டின் முன்பாக நின்று எடுத்துக்கொள்ளப்பட்ட புகைப்படத்தினை பதிவு செய்துகொள்ள வேண்டும். இதே முறையில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் புகைப்படம் எடுத்து பதிவு செய்துகொள்ள வேண்டும். இறுதி பணப் பட்டுவாடா செய்யும் முன்பாக வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) இந்தப் பதிவுகளை ஆவணப்படுத்த வேண்டும். இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 1 விழுக்காடு ஆவணப்படுத்துதல், செய்தி, கல்வி மற்றும் தொடர்பு (Information, Education and Communication) நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### 3.2.19 கண்காணித்தல்

மாவட்ட ஆட்சியர், இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளின் பணி முன்னேற்றம் சூரிய சக்தி விளக்குகள் மற்றும் அமைப்புகள் நிறுவும் பணியின் முன்னேற்றம் ஆகியவற்றை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை அலுவலர்களுடன் ஆய்வு செய்வர். இத்திட்டப்பணிகளைக் கண்காணிக்க உதவி இயக்குநர் நிலையில் தொடர்பு அலுவலர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நியமனம் செய்யவேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆகியோர் மாவட்ட அளவில் இத்திட்டத்தை



முறையாக செயல்படுத்துவதற்கு பொறுப்பாவர். சூரிய சக்தி விளக்கு அமைப்பை நிறுவுதலுக்கு மாநில அளவில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பொறுப்பாகும்.

### 3.2.20 நிதி விடுவிப்பு

- இத்திட்டத்திற்கான ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து இரண்டு அரையாண்டு தவணைகளில் நிதி விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு ரூ.1,50,000/– வீதமாக மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்படும். மீதத் தொகை ஒரு வீட்டிற்கு ரூ.30,000/– வீதம் சூரிய சக்தியுடன் கூடிய மின்னொளி கருவியினை வாங்குதல் மற்றும் பொருத்துதலுக்காக மேலாண்மை இயக்குநர்/ தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு வைப்புத் தொகையாக வழங்கப்படும். மாவட்ட ஆட்சியர்கள் தொடர்புடைய கிராம ஊராட்சிகளுக்கு நிதியை நேரடியாக விடுவிப்பார்கள். வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மூலமாக நிதியினை விடுவித்திடக்கூடாது.
- **பசுமை வீடுகள் திட்டத்திற்காக** ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என்ற பெயரில் ஒரு தனி சேமிப்பு வங்கி கணக்கைத் தொடங்கிட வேண்டும். மாவட்ட

அளவில் ஒரே ஒரு வங்கி கணக்கு மட்டும் பராமரிக்கப்படும்.

- **‘பசுமை வீடுகள் திட்டம்’** செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில், **ஆறாவது கணக்காக ‘கிராம ஊராட்சி CMSPGHS திட்டக் கணக்கு’** என்ற பெயரில் செயல்படுத்தப்படும். வரவு வைக்கப்பட வேண்டிய விவரங்கள், அதிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய செலவுகளின் வகைகள் மற்றும் பசுமை வீடுகள் திட்டக் கணக்கினை கிராம ஊராட்சி பராமரித்தல் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

**கணக்குப் பராமரிப்பு முறை:** கிராம ஊராட்சி நிதிக் கணக்கினை பராமரிப்பதுபோலவே, மேலே குறிப்பிட்ட இத்திட்டக்கணக்கினையும் கிராம ஊராட்சியின்தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர் இணைந்து பராமரிக்க வேண்டும். இருப்பினும், மாவட்ட ஆட்சியர்கள் சம்மந்தப்பட்ட வங்கிக் கிளைகளுக்கு பசுமை வீடுகள் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியின் தொகையினை வழங்குவதற்கு தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரின் கையெழுத்து காசோலையில் உள்ளது எனவும் வட்டார வளர்ச்சி அலுவலரின் (வட்டார ஊராட்சி) செயல்முறை ஆணைகள் இருப்பதையும் உறுதி செய்து வங்கிப் பதிவேடுகள் மற்றும் கணினியில் உரிய பதிவுகள் மேற்கொண்ட பின்னரே தொகை வழங்கப்படவேண்டும் என தொடர்புடைய வங்கிக் கிளைகளுக்கு எழுத்து மூலம் அறிவுரைகள் வழங்க



வேண்டும். ஒவ்வொரு காசோலையிலும் ‘வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) செயல்முறை ஆணைகள் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே தொகை வழங்கப்பட வேண்டும்’ என முத்திரை இடப்பட்டிருக்க வேண்டும். இத்திட்டக் கணக்கில் சுய கையெழுத்திட்ட காசோலைக்கோ, பணம் பெறும் படிவத்திலோ தொகை வழங்கஅனுமதிக்கக்கூடாது. இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது ஏற்படும் தேவைகளுக்கேற்ப உரிய மாறுதல் செய்து கொள்ள அரசு அதிகாரம் பெற்றதாகும்.

### 3.2.21 முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டச் செயல்பாடு

2012—13ம் ஆண்டில் ரூ.1,080 கோடி ஒதுக்கீட்டில் 60,000 பசுமை வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் 20.3.2013 வரை 17,554 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மீதமுள்ள 42,446 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**2013—14ம் ஆண்டிலும் சூரிய சக்தி விளக்குகளுடன் 60,000 வீடுகள் இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும்.**

### 3.3 சூரிய சக்தியுடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்தல்

**2011—12 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சூரிய சக்தியுடன் கூடிய தெரு விளக்குகள் திட்டம், மாநில அரசின் திட்டமாகும்.** பராமரிப்பு செலவினைக் குறைத்தல் மற்றும் ஊரகப் பகுதிகளில்

புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி என்ற தத்துவத்தினை கொண்டு செல்லும் நோக்கத்தில் கிராம ஊராட்சிகளில் ஏற்கனவே உள்ள தெரு விளக்குகளுக்குப் பதிலாக சூரிய சக்தி தெருவிளக்குகள் பொருத்தப்படும்.

கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்படும். முதற்கட்டமாக இத்திட்டம், 2011–12ம் ஆண்டு முதல், ஐந்து ஆண்டுகளில் 1000 கிராம ஊராட்சிகளில் 1 லட்சம் தெருவிளக்குகளை சூரிய சக்தி தெரு விளக்குகளாக மாற்ற எடுத்துக்கொள்ளப்படும். 2011–12 ஆம் ஆண்டில் கிராம ஊராட்சிகளில் உள்ள 20,000 தெருவிளக்குகளை சூரிய சக்தியுடன் கூடிய தெருவிளக்குகளாக மாற்றி அமைத்திட ரூ.52.50 கோடி நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை இத்திட்டத்தினை செயல்படுத்தும் முகமையாகும். இந்நிறுவனத்தின் மூலம் இதுவரை 15,020 தெருவிளக்குகள், சூரிய சக்தியுடன் கூடிய தெருவிளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள யாவும் மார்ச், 2013 இறுதிக்குள் முடிக்கப்படும்.

2012–13ம் ஆண்டிலும் 20,000 தெருவிளக்குகளை சூரிய சக்தியுடன் கூடிய தெருவிளக்குகளாக மாற்றி அமைத்திட அனுமதி வழங்கியதுடன் ரூ.52.83 கோடி நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. சூரிய சக்தியுடன் கூடிய தெருவிளக்குகள் அமைக்கப்படவேண்டிய இடங்கள் / குக்கிராமங்கள்/ ஊராட்சிகளின் விவரங்களைத் தொகுத்துப் பட்டியலிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர்களால் தமிழ்நாடு



எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை இதற்காக வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை 2013 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் நிறைவு செய்து ஏப்ரல் 2013 முதல் பணிகள் துவங்கப்படும்.

**2013–14ம் ஆண்டிலும் ரூ.50 கோடி செலவில் 20,000 தெரு விளக்குகள், சூரிய சக்தி தெரு விளக்குகளாக மாற்றப்படும்.**

### 3.4. ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

இந்த அரசு, ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான, புதிய கட்டடங்கள், சமையல் அறை, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறைகள் ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் "ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" எனும் திட்டத்தை 2011–12ம் ஆண்டு துவக்கியது. தேவைப்படும் இடங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பள்ளிக் கட்டடங்கள் அனைத்தும் தட்டு ஓடு பதித்த கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாத வகையில் கட்டப்படும். புதிய பள்ளிக் கட்டடங்கள், பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள

காலி இடத்தில் அமைக்கப்படும். பள்ளி கட்டடம் கட்டத் தேவையான காலி இடம் இல்லாத நிலையில், ஏற்கனவே உள்ள கான்கிரீட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித்தன்மையை சரிபார்த்து அதன் மேல் தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படும்.

சமையல் அறை இல்லாத ஊராட்சி ஒன்றியப்பள்ளிகளில் புதிய சமையல் அறைகள் அமைக்கப்படும். தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல்/புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்படும். ஏற்கனவே உள்ள சமையல் அறைக் கட்டடத்தில் மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப்பொருட்களை இருப்பு வைத்துக் கொள்ளும் கூடுதல் அறைகளும் தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின், அவை பழுது நீக்க சீரமைக்கப்படும். குடிநீர்க்குழாய் நீட்டிப்பு பணிகள், தேவைப்படும் இடங்களில் ஏற்படுத்தப்படும். ஊராட்சியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து புதிய குடிநீர் இணைப்புகள் தேவைப்படும் இடங்களில் ஏற்படுத்தப்படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனியாக, போதுமான அளவில் கழிப்பறைகள் கட்டப்படுவதை இந்த அரசு உறுதிசெய்யும். நடுநிலைப் பள்ளிகளில் மாணவிகளின் வசதிக்காக எரியூட்டிகள் (Incinerator) அமைக்கப்படும்.



முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் புதிய கழிப்பறைகள் அமைக்கப் போதிய நிதி இல்லையெனில், இத்திட்டத்தின் கீழ் புதிய கழிப்பறைகள் கட்டித் தரப்படும். பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**மேலும் தற்போது மேற்கொள்ளப்படும் பணிகளை தவிர, மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் பள்ளிகளில் சுகாதாரத்தை மேம்படுத்த 2012–13 முதல் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து தாய் திட்ட அடிப்படையில் விரிவாக ஆய்வு மேற்கொள்ள மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

**3.4.1 திட்ட செயலாக்கம் 2011–12 மற்றும் 2012–13**

2011–12 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டது.

அதேபோல, 2012–13ம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

2011–12 (2020 கிராம ஊராட்சிகள்) மற்றும் 2012–13 (2250 கிராம ஊராட்சிகள்)–ல் தாய் திட்டத்திற்கென தேர்வு செய்யப்பட்டுள்ள கிராமங்களுக்கு அவைகளின் அடிப்படை தேவைகளான கட்டிடங்கள், சமையற்கூடங்கள், கழிவறைகள், குடிநீர் பணிகள் மற்றும் சுற்றுசுவர் பணிகள்

விரிவு செய்யப்பட்டுள்ளன. புதிய மற்றும் பழுது பார்க்கும் பணிகளின் விபரம் பின்வருமாறு:-

**ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

**2011–12**

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எண். | பணியின்பெயர் | பழுதுபார்த்தல் பணிகள் | | புதிய பணிகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| 1 | பள்ளிக் கட்டிடங்கள் | 1222 | 914.943 | 162 | 1174.930 | 1384 | 2089.873 |
| 2 | சமையற் கூடங்கள் | 1398 | 419.794 | 1072 | 2135.213 | 2470 | 2555.007 |
| 3 | கழிவறைகள் | 3515 | 1339.231 | 907 | 1468.654 | 4422 | 2807.885 |
| 4 | குடிநீர் பணிகள் | - | - | 2220 | 1481.288 | 2220 | 1418.288 |
| | **மொத்தம்** | 6135 | 2673.97 | 4361 | 6260.09 | 10496 | 8934.053 |

**ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

**2012–13**

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எண் | பணியின் பெயர் | பழுதுபார்த்தல் பணிகள் | | புதிய பணிகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | ரூபாய் | எண்ணிக்கை | ரூபாய் | எண்ணிக்கை | ரூபாய் |
| 1 | பள்ளிக் கட்டிடங்கள் | 2058 | 1671.050 | 67 | 450.600 | 2125 | 2121.65 |
| 2 | சமையற் கூடங்கள் | 1198 | 328.864 | 665 | 1330.456 | 1863 | 1659.32 |
| 3 | கழிவறைகள் | 2533 | 999.195 | 540 | 837.825 | 3073 | 1837.02 |
| 4 | குடிநீர்பணிகள் | - | - | 904 | 1018.712 | 904 | 1018.712 |
| 5 | சுற்றுச்சுவர் | - | - | 1213 | 3163.180 | 1213 | 3163.180 |
| | **மொத்தம்** | **5789** | **2999.11** | **3389** | **6800.77** | **9178** | **9799.882** |



### 3.4.2 2013–14 திட்ட செயலாக்கம்

**இத்திட்டம் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் வரும் 2013–14ம் ஆண்டில் மேற்கண்டவாறு செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.**

### 3.5 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி முழுவதையும் மாநில அரசே வழங்குகிறது. சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தனது தொகுதியில் நிறைவேற்ற விரும்பும் பணிகளைக் கண்டறிந்து பரிந்துரை செய்வர். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்புறப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேவையான கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் வழங்கப்பட்டு வந்த ரூ.1.75 கோடியானது, 2011–12ம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கிச் செயல்பாட்டு முகமையினை நிர்ணயிப்பார். தொகுதிக்கான மொத்த ஒதுக்கீட்டில் ரூ.1.125 கோடி நிதியை அரசால் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைப் பணிகளுக்கும், மீதமுள்ள ரூ. 0.875 கோடி நிதியை சட்டமன்ற உறுப்பினர் தனது

விருப்பப்படி திட்ட வழிக்காட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யலாம்.

**3.5.1 சிறப்பம்சங்கள்**

**3.5.1.1 வரையறுக்கப்பட்ட நிதி தொகையான ரூ.1.125 கோடியில் மேற்கொள்ளப்படும் பணிகள்**

வரையறுக்கப்பட்ட நிதியின் கீழ் ரூ.1.125 கோடி மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ளலாம். ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், பழுதுற்ற கழிப்பறைகள், குடிநீர் வழங்கல், சமையலறைகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடங்கள், சத்துணவு மையக் கட்டிடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் எடுத்திட வேண்டும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் மாற்றுத் திறனாளிகளுக்குக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கிட ரூ.5.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும். மேற்படி தொகை ரூ.5.00 இலட்சத்தில், இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள், நவீன செயற்கை அவயம் மற்றும் காதுக்கு பின்புறம் அணியும் காதொலி கருவி ஆகியவற்றை வாங்குவதற்கு ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், அங்கன்வாடி சமையல்



அறையை நவீனப்படுத்துவதற்காகவும், சமையல் எரிவாயு இணைப்பு (Gas connection) வழங்குவதற்காகவும், ஒரு அங்கன்வாடி மையத்திற்கு ரூ.6050/– வீதம் ஒருமுறை செலவினம் மேற்கொள்ள ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொகுதியில் உள்ள அனைத்து தகுதியுள்ள அங்கன்வாடி சமையல் அறை நவீனபடுத்தும் பணிகளை மேற்கொண்டபின், மீதமுள்ள தொகையினை பள்ளி சமையலறை மையங்களை நவீனப்படுத்தும் பொருட்டு அரசாணை (நிலை) எண். 294 சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டம் (ச.உ.தி. 7) துறை, நாள்11.12.2012–ல் தெரிவித்தவாறு ஒரு மையத்திற்கு ரூ.22,000 வீதம் ஒருமுறை செலவினம் மேற்கொள்ளலாம். **மேலும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், சட்டப் பேரவையில் நிகழ்த்திய 2013–14 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையின்போது, தற்போதுள்ள அரசுக் கட்டடங்களில் சூரிய மின் உற்பத்திக் கருவிகளை நிறுவுவதற்காக ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயை தனியாக ஒதுக்கீடு செய்து மொத்தமாக ரூ.11.70 கோடி செலவிடப்படும் என அறிவித்துள்ளார்.**

வரையறுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள ரூ.47.50 இலட்சம் நிதியில், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளைத் தேர்வு செய்யலாம்.

அ) ஊரகப் பகுதிகளில்

1. சூரிய சக்தி தெரு விளக்குகள் பொருத்துதல்
2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச்சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்குக் கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.
6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்தல்
7. பாலங்கள் கட்டுதல்



8. இடுகாடு மற்றும் சுடுகாடு வசதி இல்லாத கிராம ஊராட்சிகளில் இவ்வசதிகளை அமைத்தல்.
9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பொது சொத்தாக பதிவு செய்யப்பட்ட மயானங்களுக்கு சுற்றுச்சுவர்/வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதால், இப்பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

ஆ) நகர்ப்புறப் பகுதிகளில்

1. சூரிய சக்தி தெரு விளக்குகள் அமைத்தல்
2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச்சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்.)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்கு கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள்

மற்றும் அரசு விடுதிகள் ஆகியவைகளுக்குக் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்தல்.
7. பாலங்கள் கட்டுதல்
8. சுடுகாடு/இடுகாடுகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்
9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்
10. புதிய பொதுப் பூங்காக்கள் அமைத்தல்
11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்
12. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களை வாங்குதல்.
13. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பொது சொத்தாக பதிவு செய்யப்பட்ட மயானங்களுக்கு சுற்றுச்சுவர்/வேலி அமைத்தல் தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதால், இப்பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.



### 3.5.1.2 வரையறுக்கப்படாத தொகையான ரூ.87.50 இலட்சத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட பட்டியலில் உள்ள கீழ்கண்ட பணிகளைத் தவிர, ஏனைய பணிகளை வரையறுக்கப்படாத திட்ட நிதியான ரூ.87.50 லட்சம் ஒதுக்கீட்டிலிருந்து எடுத்து செய்யலாம். அதேபோல் வரையறுக்கப்பட்ட நிதியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத நிதியில் மேற்கொள்ளலாம்.

### 3.5.1.3 தடை செய்யப்பட்ட பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சிறப்பினமாக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகளை எடுத்து செய்ய இயலாது.

1. மத்திய, மாநில அரசுத் துறைகள் (பொதுத் துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலக கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

   **விதிவிலக்கு (i)** பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுதல், நேரடிக் கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த

குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் (ii) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச்சுவர் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல்.

2. அனைத்து வகையான பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு** – அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2002 வரை கட்டப்பட்ட வீடுகளை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகள் உட்பட வீடு ஒன்றுக்கு ரூ. 25.000/–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், இப்பணிகளை எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மற்றும் தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்,

**விதிவிலக்கு (i)** அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு தளவாடச் சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.



(ii) அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான கழிவு செய்யப்பட்ட சாதாரண பேருந்துகளுக்கு (அரசாணை (நிலை) எண். 2552, போக்குவரத்துத் துறை, நாள் 26.9.91–ல் குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி கழிவு செய்யப்பட்ட பேருந்துகள்) பதிலாக மட்டும் புதிய சாதாரண வகை பேருந்துகள் வாங்குதல்,

(iii) பணிமனைகளுக்கு பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குதல்,

(iv) மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்,

இருப்பினும் இத்தகைய பணிகளை எடுத்துச் செய்யும்போது இதற்கான பணியாட்களுக்கான (Man power) செலவினம் எதுவும் மேற்கொள்ளக்கூடாது.

4. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு:-**100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ் வழிக் கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச்செய்தல். பகுதி சுய நிதி பெறும் மற்றும் பகுதி நிதி உதவிப் பள்ளி அல்லது பகுதி தமிழ்வழிக் கல்வி அல்லது பகுதி ஆங்கில வழிக் கல்விப் பள்ளிகள் இத்திட்டத்தில் அரசு

நிதி உதவி பெற தகுதியில்லை. நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்றுக்கு இத்திட்டத்தில் அரசு நிதி உதவி ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ரூ. 15 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்று இத்திட்டத்தில் எவ்வளவு நிதி உதவி பெற்றிருப்பினும், அப்பள்ளி இத்திட்டத்தின் கீழ் அடுத்த மூன்றாண்டுகளுக்கு உதவி பெற தகுதியில்லை.

மேற்படி பணிகளைப் பொருத்தமட்டில், மாவட்ட ஆட்சியர் தனது சொந்த விசாரணையை மேற்கொள்வதோடு, சம்பந்தப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கீழ்காணும் சான்றிதழ்களைப் பணி மேற்கொள்வதற்கு முன் பெற வேண்டும்.

(i) இந்தப் பள்ளி 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் வகுப்புகள் / பிரிவுகள் கொண்டது. ஆங்கில வழி வகுப்புப் பிரிவுகள் இல்லை,

(ii) இந்தப் பள்ளி 100 சதவீதம் அரசு உதவி பெறும் பள்ளி ஆகும். அதே நிர்வாகத்தால் ஒரே வளாகத்திலோ அல்லது வெவ்வேறு வளாகங்களிலோ நடத்தப்படும் இந்தப் பள்ளியின் சுய நிதிப் பிரிவுகள் / வகுப்புகள் இயங்கவில்லை.



5. தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.
6. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.
7. மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.
8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.
9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.
10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.
11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.
12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.
13. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).
14. உயர் கம்ப மின் விளக்குகள் பொருத்துதல்.

- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 21 சதவீதம் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி அல்லது நகர்புறங்களில் குடிசை பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.
- தேவையின் அடிப்படையில், வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்களை அரசு மேற்கொள்ளலாம்.

### 3.5.1.4 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம்

இத்திட்டத்தின் கீழ் 2011-12–ம் ஆண்டில் 14,823 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன, அவற்றுள் 12,159 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் அனைத்தும் 31.03.2013–க்குள் முடிக்கப்படும்.

**அரசாணை (நிலை) எண். 3 ஊரக வளர்ச்சி (மா.அ.தி1) துறை நாள் 25.01.2012–ன்படி ரூ. 3.34 கோடி செலவில், பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதியுடன், 171 மடிக் கணினிகள் மற்றும் 58 கணினிகள், 229 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

இத்திட்டத்தின் கீழ் 2012-13ம் ஆண்டிற்கு ரூ. 470 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 16,757



பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 4,299 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.

2012–13 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிட்டவாறு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

| | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | அங்கன்வாடிகள் / சமையல் கூடங்கள் | 756 | 34.47 |
| 2 | பள்ளிக் கட்டிடங்கள் | 133 | 9.22 |
| 3 | பள்ளிகளுக்கான தளவாடங்கள் | 789 | 17.21 |
| 4 | சமுதாயக் கூடங்கள் | 104 | 10.07 |
| 5 | நியாயவிலைக் கடைகள் | 313 | 16.60 |
| 6 | சாலைகள் மற்றும் பாலங்கள் | 2997 | 102.67 |
| 7 | குடிநீர் பணிகள் | 2173 | 44.92 |
| 8 | தெரு விளக்குகள் | 1450 | 9.85 |
| 9 | இதர பணிகள் | 8042 | 134.00 |
| | **மொத்தம்** | **16757** | **379.01** |

2013-14–ம் ஆண்டிலும் இத்திட்டத்தின் ரூ. 470 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3.6 ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் பராமரிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கட்டடங்கள் முறையாகத் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தால் மட்டுமே அவற்றை முழுமையாக பயன்படுத்த இயலும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களான அங்கன்வாடி மையங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிகள், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் போன்றவை இத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுகின்றன.

ஏற்கனவே கட்டப்பட்டு பராமரிப்பின்றி இருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களை 2011–12 ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்தின் கீழ் ரூ.170 கோடி செலவில் புனரமைக்கப்பட்டு பயன்படுத்தும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. அதேபோல, 2012–13ம் ஆண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், பிரதான குடிநீர்க் குழாய்கள் சீரமைத்தல் போன்ற பணிகள் ரூ.175.22 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## 3. 7 தன்னிறைவுத் திட்டம்

இந்த அரசு, கலந்தாலோசித்து முடிவு செய்தல், சமுதாய சிந்தனை மற்றும் கருத்தொருமைப்பாடு ஏற்படுத்தும் முயற்சி ஆகியவற்றில் சமுதாயப் பங்களிப்பின் முக்கியத்துவத்தை கண்டுணர்ந்து, அதன் மூலம் தனிநபர் மற்றும் குழுக்கள் தங்களது கருத்துக்களைப் பரிமாற்றம் செய்து வெளிப்படையான மற்றும் பொறுப்புடன் கூடிய முயற்சியின் மூலம் பயன்தரத்தக்க சமுதாயச் சொத்துக்களை உருவாக்கவும், பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் தன்னிறைவுத் திட்டத்தினை 2011–12ம் ஆண்டு முதல் மீண்டும் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

### 3.7.1. பணிகளைத் தேர்வு செய்தல்

1. ஒரு பணியினை எடுத்துச் செய்வதற்கான தேவை, தனிநபர்களிடமிருந்தோ, குழுவினரிடமிருந்தோ, தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்தோ அல்லது அப்பகுதி மக்களிடமிருந்தோ எழலாம்.
2. தேர்வு செய்யப்பட்ட பணி குறித்த விண்ணப்பமும், மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாத தொகையினை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தினையும் பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெறலாம்.

3. தேவை மற்றும் செயல்படுத்தத்தக்க தன்மையினை உறுதிபடுத்திய பின்னரே மதிப்பீடுகள் தயார் செய்தல் வேண்டும்.
4. நிதி ஒதுக்கீட்டைவிடத் தேவையான பணிகளின் மதிப்பீடு அதிகமாகும் நிலையில், முன்னுரிமை அடிப்படையில் பணியினைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
5. மாநில அளவில் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களுக்காக ஊரக வளர்ச்சி ஆணையர், தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பங்களிப்பைப் பெறலாம்.

**3.7.2. பணிகளின் பட்டியல்**

**3.7.2.1. அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்**

1. அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், மலைவாழ் மக்களுக்கான பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டடங்கள், ஆய்வகங்கள், கழிவறைகள் மற்றும் சுற்றுச் சுவர் / சுற்று வேலி அமைத்தல்.
2. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், துணை மையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவைகளுக்குக் கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் சுற்று சுவர் / சுற்று



வேலி அமைத்தல். இடுகாடுகளுக்குச் சுற்று சுவர் கட்டுதல். தமிழ்நாடு இஸ்லாமிய அறக்கட்டளை குழுமத்தில் பதிவு செய்யப்பட்ட பொது இஸ்லாமிய அறக்கட்டளைக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுசுவர் கட்டுதல் பணியும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.
3. ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் நூலகங்கள் கட்டுதல் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் சத்துணவு மையங்கள், சத்துணவு மைய சமையல் கூடங்கள், அங்கன்வாடிகள் மற்றும் பொது விநியோகக் கடைகள் ஆகியவைகளுக்குக் கட்டிடங்கள் கட்டுதல். எங்கெல்லாம் நூலகங்கள் கட்டப்படுகின்றனவோ, அங்கெல்லாம் புத்தகங்கள் வாங்குவதற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என கவனத்தில் கொள்ள வேண்டும்.
4. ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் குடிநீர் ஆதாரங்கள் உருவாக்குதல், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் கதிரடிக்கும் களங்கள் போன்ற சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல்.
5. அனைத்து சமூகச் சொத்துக்களையும் பராமரித்தல், முன்னுரிமை அடிப்படையில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தினை பராமரிக்கும் பணிக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

6. ஆடவர் மற்றும் மகளிர்க்கென ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்
7. பாலங்கள் அல்லது சிறு பாலங்கள் கட்டுதல், சரளை/கப்பிச் சாலைகளை தார்ச்சாலைகளாக தரம் உயர்த்துதல், பழுதடைந்த தார்ச்சாலைகளைப் புதுப்பித்தல். தெருக்கள் மற்றும் சிறிய சந்துகளை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் பலகை அல்லது சிமெண்ட் கான்கிரீட் கொண்டு சீரமைத்தல்.
8. பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலைத் திட்டுக்கள் (Traffic Islands), நீரூற்றுகள், தெருவிளக்குகள் (சூரிய ஒளி விளக்குகள் உட்பட) போன்றவற்றை அமைத்தல் மற்றும் மேம்படுத்தி பராமரித்தல்.
9. பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நூலகங்கள் மற்றும் கட்டிடங்களுக்குத் தேவையான அறைகலன்கள், கணினிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல். பழைய கணினிகள், உபகரணங்கள் வாங்கக்கூடாது.
10. அரசு உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், மலைவாழ் மக்களுக்கான பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும்



பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகங்கள் கழிப்பிடங்கள், சுற்றுசுவர்கள் மற்றும் மிதிவண்டி நிறுத்துமிடம் கட்டுதல்.
11. திடக் கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து வகைப்பணிகள் மற்றும் சுற்றுச் சூழலின் சுகாதார நிலையினை மேம்படுத்தும் பணிகள்.
12. அரசு கட்டடங்கள் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொது கட்டிடங்கள் மற்றும் அங்கன்வாடிகளில் சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல்.

**3.7.2.2 தடை செய்யப்பட்ட பணிகள்**

சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகளை தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது.

1. மத்திய, மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

   **விதிவிலக்கு–** ஆரம்ப சுகாதார நிலையங்கள் / அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு வசிப்பிடங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் சீரமைத்தல், அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள்

மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்குக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல், பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுதல், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்தக் குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல்.

2. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

**விதிவிலக்கு–** அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அங்கன்வாடிகள், மதிய உணவு மையங்கள், அரசுக் கல்லூரிகள், அரசு மாணவர் தங்கும் விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்கடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குத் தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். அதேபோல் திடக்கழிவு மேலாண்மைக்காக மூன்று சக்கர மிதிவண்டி மற்றும் சிறு லாரிகள் போன்ற வாகனங்கள் வாங்கலாம்.

3. சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

4. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்



5. மானியம், கடன் மற்றும் மாநில, யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்குப் பங்களித்தல்

6. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

7. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகளுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

8. தனிநபர்/குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

9. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்

10. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள்/குழுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் பணிகள்

11. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.

**விதிவிலக்கு–** அ). மாவட்ட ஆட்சியர் அவசியம் எனக் கருதினால், பொதுப்பணித்துறை கண்மாய்கள் தூர் வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல் மற்றும் மதகு/ அணைகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். இதில் மக்கள் பங்களிப்புத் தொகை பொதுப்பணித் துறையினரால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டிற்கு 50 சதவீதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். தேவையிருப்பின் நீர்

நிலைகள், வரத்து கால்வாய் மற்றும் உபரி நீர் கால்வாய் ஆகியவற்றைத் தூர்வாரும் பணியினைப் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் / IAMWARM போன்ற திட்டங்களின் கீழ் மேற்கொள்ளலாம்.

ஆ) மேலும் பேரூராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு சொந்தமான அத்தியாவசிய நீர் ஆதாரக் குளங்களைத் தூர்வாரும் பணியினை 50% பொதுமக்களின் பங்களிப்புத் தொகையுடன் ஒப்பந்தப் புள்ளி முறையைப் பின்பற்றி மேற்கொள்ளலாம்.

12. சரளை / கப்பிச் சாலைகள் (தார்ச்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்)

13. சோடியம் ஆவி விளக்குகள்/உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

**பணிகளைச் செயல்படுத்துதல்**

சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் பெரிய அளவில் மக்கள் பங்கேற்க ஏதுவாக பொதுமக்களோ, அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவரோ அல்லது வேறு முகவர்கள் மூலமாகவோ மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள விரும்பினால்



தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யும் போது எழுத்துபூர்வமாக தெரிவித்திட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இக்கோரிக்கையினை ஆய்வு செய்து பணியின் மதிப்பீட்டில் பொது மக்களின் பங்களிப்பு 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால் பங்களித்தவரையோ, முகவரையோ அப்பணியை மேற்கொள்ள அனுமதி வழங்குவார். ஆனால், பொதுப்பணித்துறை, பேரூராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கண்மாய்கள் தூர்வாரும் பணியைப் பொருத்த மட்டில் பொது மக்கள் பங்களிப்பு 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருப்பினும் ஒப்பந்தப் புள்ளி முறையைப் பின்பற்றியே பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

**3.7.3. திட்ட செயலாக்கம் 2011–12 மற்றும் 2012–13**

இத்திட்டத்தின் கீழ் 2011–12 மற்றும் 2012–13 ஆண்டுகளில் பணிகள் மேற்கொள்ள ஆண்டொன்றுக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்த நிதியில் ரூ.25 கோடி சிறப்புப் பணிக்காக கூடுதல் நிதியாக மாவட்டங்களுக்கு வழங்க ஏதுவாக ஊரக வளர்ச்சி ஆணையருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.75 கோடியில் ரூ1 கோடியினை தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு (IEC) பணிகளுக்கு ஒதுக்கீடு செய்தும், ரூ.74 கோடியை அனைத்து மாவட்டங்களுக்கும் மற்றும் சென்னை மாநகராட்சிக்கும் மக்கள் தொகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளது.

2011–12ம் ஆண்டில் 2,529 பயனுள்ள சமுதாயச் சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோல் 2012–13ம் ஆண்டில் சமுதாயத் தேவையின் அடிப்படையில் 1,621 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. முக்கிய சில பணிகள் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | 2011–12 | 2012–13 |
| 1 | பள்ளிக்கட்டிடங்கள் மற்றும் நூலகங்கள் கட்டுதல் | 87 | 42 |
| 2 | அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு தளவாடங்கள் வாங்குதல் | 92 | 90 |
| 3 | கணினிகள் கொள்முதல்செய்தல் | 127 | 25 |
| 4 | பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் கட்டுதல் | 93 | 60 |
| 5 | அங்கன்வாடி மற்றும் சமையற்கூடங்கள் கட்டுதல் | 21 | 32 |
| 6 | குடிநீர் ஆதாரத்தினை உருவாக்குதல் | 377 | 315 |
| 7 | சாலைகளை மேம்படுத்துதல் | 635 | 381 |
| 8 | சமுதாயக்கூடம் மற்றும் பொது விநியோகக் கடைகள் கட்டுதல் | 64 | 39 |
| 9 | கதிரடிக்கும் களம் அமைத்தல் | 8 | 3 |
| 10 | ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுதல் | 5 | 4 |
| 11 | இதர பணிகள் | 1020 | 630 |
| | **மொத்தம்** | **2529** | **1621** |



**3.7.3.1 திட்ட செயலாக்கம் 2013–14**

2013–14ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பயனுள்ள மற்றும் அத்தியாவசியமான சமுதாய சொத்துக்களை உருவாக்கிட ரூ.100 கோடி நிதியை கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்படும். மொத்த ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:–

| | | |
|---|---|---|
| அனைத்து மாவட்டங்கள் மற்றும் சென்னை மாநகராட்சிக்கு விடுவிக்கப்பட வேண்டிய தொகை | : | ரூ. 74.00 கோடி |
| ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் விருப்ப நிதியாக மாவட்டங்களுக்கு வழங்க 25 விழுக்காடு ஒதுக்கப்படவேண்டிய தொகை | : | ரூ. 25.00 கோடி |
| IEC பணிகளுக்கு 1 சதவீதம் ஒதுக்கீடு | : | ரூ. 1.00 கோடி |
| **மொத்தம்** | | **ரூ. 100.00 கோடி** |

**3.8 ஊரக உள்கட்டமைப்புத் திட்டம்**

ஊரகப் பகுதிகளில் நிலையான சொத்துக்களை உருவாக்குவதும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்துதலுமே, ஊரக உள்கட்டமைப்புத் திட்டத்தின் நோக்கம் ஆகும். இந்த அரசு ஊரக கட்டமைப்புத் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்தும். இதற்காக 2011–12 மற்றும் 2012–13ஆம் ஆண்டுகளில் மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ரூ.250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பின்வரும் வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

- தற்போதுள்ள மண் கிராவல் சாலைகளை கற்சாலைகளாகத் (WBM) தரம் உயர்த்துதல்.
- தற்போதுள்ள கற்சாலைகளைத் தார்ச்சாலைகளாக தரம் உயர்த்துதல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளில் பொருட்கூறுடன் செயல்படுத்த வேண்டிய பணிகளான மதகு சீரமைத்தல், மறுகால் சீரமைத்தல், தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற பணிகளை செயல்படுத்துதல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய சாலைகளில் சிறுபாலங்கள், தடுப்புச் சுவர்கள் கட்டுதல்.



ஊரக உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் **2011–12** மற்றும் **2012–13** ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு :

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | விவரம் | 2011–12 | | 2012–13 | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| 1. | சாலைப் பணிகள் | 1364 | 150.00 | 1364 | 166.67 |
| 2. | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்துதல் | 6268 | 96.60 | 4826 | 79.00 |
| | **மொத்தம்** | **7632** | **246.60** | **6190** | **245.67** |

**3.8.1. 2013–14 ஆம் ஆண்டின் செயலாக்கம்**

**2013–14** ஆம் ஆண்டிலிருந்து, ஊரக உள்கட்டமைப்புத் திட்டம் இரண்டு தனித் திட்டங்களாக முறையே, ஊரக உள்கட்டமைப்புத் திட்டம்–சாலைகள் மற்றும் ஊரக உள்கட்டமைப்புத் திட்டம்–மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்துதல் என்று செயல்படுத்தப்படும்.

**3.8.2 ஊரக உள்கட்டமைப்புத் திட்டம்–சாலைகள் :**

**22,382** கி.மீ. மண் மற்றும் கிராவல் சாலைகள் இன்னும் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்தப்பட

வேண்டியுள்ளதால், மண் மற்றும் கிராவல் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றும் பணிகள் மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும். மொத்த ஒதுக்கீடான ரூ. 150 கோடி நிதியும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் தரத்தினை உயர்த்திட வழங்கப்படும்.

**3.8.3. ஊரக உள்கட்டமைப்புத் திட்டம்–மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்துதல்**

அனைத்து ஊராட்சிகளிலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. அவ்வாறு உருவாக்கப்படும் சொத்துக்கள் மக்களுக்கு பயன்தரும் வகையில் அவற்றை நிலைநிறுத்தும் பணிகள் ஊரக உள்கட்டமைப்புத் திட்டம்–மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்துதல் கீழ் மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3.9 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைப்பு**

2001–ஆம் ஆண்டில் இந்த அரசு பதவியேற்ற போது பெண்களுக்கு மேம்பட்ட சுகாதாரத்தை ஏற்படுத்துவது என்பதே தாரக மந்திரமாயிருந்தது. முறையான சுகாதார வசதிகள் கிடைக்கப் பெறாததால், கிராமப் பெண்களின் வாழ்க்கை சிரமத்துக்குள்ளானது. பெண்கள் காலைக்கடனை மாலைக்கடனாக மாற்ற வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. அவ்வாறாக இருட்டும் வரை காத்திருந்து



தங்களின் உபாதைகளைக் கழிக்க வேண்டிய கட்டாயம் இருந்ததால், மலச்சிக்கல் ஏற்பட்டு உணவு மற்றும் குடிநீர் உட்கொள்ளுவதில் சிக்கல் ஏற்பட்டு சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டன. ஏழ்மை மற்றும் கலாச்சாரப் பழக்கங்களால் சுகாதார வசதி இல்லாதிருந்த நிலையிலிருந்து அவர்கள் மீளவேண்டியிருந்தது. எனவே, ஊரகப் பெண்களுக்கான தனித்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்து அவர்களின் பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மிகவும் அவசியமானதும் முக்கியமானதும் ஆகும்.

தமிழகத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்ட, 2001–ஆம் ஆண்டில் இந்த அரசால் முடிவெடுக்கப்பட்டது. பெண்கள் எளிய முறையில் உபயோகப்படுத்தும் வகையில், வளாகங்கள் கட்டுவதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. ஒவ்வொரு வளாகமும், 14 கழிவறைகள், 2 குளியலறைகள், தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கத் தேவையான கல் ஆகியவற்றை உள்ளடக்கியதாயிருந்தது. குளிக்கவும், துணி துவைக்கவும் தேவையான தண்ணீர் வசதி இவ்வளாகத்தில் உறுதிசெய்யப்பட்டது. இவ்வளாகத்திலுள்ள கழிவறைகளை ஒதுக்கீடு செய்ய உபயோகிப்பாளர்கள் இனங்கண்டு குழுவாக்கப்பட்டனர். தண்ணீர் வசதி மற்றும் விளக்குகளுக்குத் தேவையான மின்வசதியைக் கிராம ஊராட்சிகள் வழங்கி சம்மந்தப்பட்ட குடும்பங்கள் அதனை பராமரித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டன. மகளிர்

வசதிக்காக இவ்வளாகங்களில் எரியூட்டிகள் (Incinerators) அமைக்கப்பட்டன.

தொடக்கத்தில், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மகளிர் சுகாதார வளாகம் என்ற அடிப்படையில் ஒரு வளாகத்திற்கு ரூ.2 லட்சம் என்ற மதிப்பீட்டில் 385 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர், அலகுத்தொகை ரூ.2.25 லட்சமாக உயர்த்தப்பட்டது. 2001 முதல் 2004–ஆம் ஆண்டு வரை மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும், மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன. முந்தைய ஆட்சிக் காலத்தில் போதுமான கவனிப்பு இல்லாததால் பெரும்பாலான மகளிர் சுகாதார வளாகங்கள் முறையான பயன்பாடு மற்றும் பராமரிப்பு இல்லாமல் போனது.

**மாண்புமிகு தமிழக முதல்வரின் வழிகாட்டுதலின் பேரில் பாழ்பட்டுப்போன 12,796 மகளிர் சுகாதார வளாகங்கள் 2011–12 ஆம் ஆண்டில் ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு அடிப்படை சுகாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.**

### 3.9.1 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிப்பு

#### 3.9.1.1 பயன்படுத்துவோர் குழுக்கள் அமைத்தல்

மகளிர் சுகாதார வளாகத்தை முறையாகப் பயன்படுத்தவும், பராமரிக்கவும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் குக்கிராம வாரியான குழுமத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து ஒவ்வொரு வளாகத்திற்கும்



பயன்படுத்துவோர் குழுக்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தை முறையாகப் பயன்படுத்தவும் பராமரிக்கவும் இந்தப் பயன்பாட்டுக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பயன்பாடு மற்றும் பராமரிப்பிற்கான வழிக்காட்டிக் குறிப்பு தயாரிக்கப்பட்டு அனைத்து பயன்பாட்டுக் குழுக்களுக்கும் கையேடாக வழங்கப்பட்டுள்ளது.

#### 3.9.1.2 நேரடி பராமரிப்பு

அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி, மகளிர் சுகாதார வளாகத்தில் மின் வசதி உள்ளதை கிராம ஊராட்சி உறுதி செய்ய வேண்டும். தண்ணீர் விநியோகம் மற்றும் மின் விளக்கு ஆகியவற்றுக்கான கட்டணம் கிராம ஊராட்சிப் பொது நிதியிலிருந்து வழங்கப்படவேண்டும். பம்பு செட் பராமரிப்பு, கழிவு தொட்டி சுத்தம் செய்தல் போன்ற சிறு பழுது / பராமரிப்பு பணிகளை கிராம ஊராட்சி செய்வதுடன், இதற்கான செலவினத்தை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொண்டு சுகாதார வளாகம் தொடர்ந்து செயல்பட உறுதி செய்யவேண்டும்.

மின் கட்டணம் முறையாக செலுத்துதல், முறையான இடைவெளியில் கழிவு நீர் தொட்டி சுத்தம் செய்தல் ஆகியவை உடனுக்குடன் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி செய்வதை பயன்படுத்துவோர் குழு கிராம ஊராட்சியின்

கவனத்திற்கு கொண்டு வந்து உடனுக்குடன் செயல்படுத்த வேண்டும்.

**3.9.1.3 பயன்படுத்துவோர் குழுவின் மூலமாக அன்றாடப் பராமரிப்பு**

தங்களது உறுப்பினர்களிடம் குறைந்தபட்ச பங்களிப்பினைப்புப் பெற்று அதன் மூலம் வளாகத்தின் தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்கள் மேற்கொள்கின்றன. பயன்படுத்துவோர் குழு உறுப்பினர்கள் இதுவரை ரூ.3.17 கோடி நிதி பங்களிப்பினைச் செலுத்தி வளாகத்தின் தினசரி பராமரிப்பினை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய மாற்றம் வளாகத்தின் தினசரி பராமரிப்புப் பணியில் பயன்படுத்துவோர் குழு உறுப்பினர்களிடையே, வளாகம் தங்களின் சொத்து என்கிற பொறுப்புணர்வை ஏற்படுத்துவதுடன், வளாகங்கள் தொடர்ந்து செயல்படுவதை உறுதிசெய்துள்ளது.

**3.9.1.4 கண்காணிப்புக் குழுக்கள் அமைத்தல்**

மகளிர் சுகாதார வளாகத்தின் பராமரிப்பைக் கண்காணித்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கண்காணிப்புக் குழுக்களை அமைத்துள்ளனர்.

பின்வரும் பொருள்கள் குறித்து கூட்டங்களில் இக்குழுக்கள் விவாதித்து அதன்படி நடவடிக்கை எடுத்து வருகின்றன.

- ஒவ்வொரு ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தின் செயல்பாட்டு நிலை



- சுகாதார வளாகங்களைப் பயன்படுத்துவோர் குழுக்கள் பராமரிக்கும் முறை
- கிராம ஊராட்சியின் முறையான பராமரிப்பு
- பயன்பாட்டு குழுக்களின் கருத்துக்கள்
- கண்காணிப்புக் குழு உறுப்பினர் அல்லது மண்டல அலுவலர் ஆய்வின் போது பெற்ற கருத்து.

**3.10 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்**

தமிழகத்தில் மகளிருக்கென அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் சுகாதார மேம்பாட்டில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்த வசதியைபோன்று ஊரக ஆடவரும் தங்களுக்கு இதுபோன்ற வசதிகளை வழங்கக் கேட்டுக்கொண்டதின்பேரில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2012–13 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக ஒரு வட்டாரத்திற்கு இரண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் அமைத்திட ஆணையிட்டார்கள். தமிழகத்திலுள்ள 385 வட்டாரங்களில் ரூபாய் 35 கோடி மதிப்பீட்டில் 770 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டுவதற்கான இடங்கள், உள்ளூர் தேவையின் அடிப்படையிலும், திறந்தவெளி மலம் கழித்தல் அதிகமாக உள்ள பகுதிகள், வீடுகளில் கழிப்பறைகள் இல்லாமை, போதுமான தண்ணீர் வசதி போன்ற தகுதிகளின் அடிப்படையிலும் மாவட்ட ஆட்சியர்களால்

கண்டறியப்பட்டன. இந்த வளாகத்தின் பரப்பளவு 570 சதுர அடியாக இருக்கும். ஒவ்வொரு வளாகமும் 8 கழிப்பறைகள் உள்ளடக்கியதாக இருக்கும். இதில் முதியோர் / மாற்றுதிறனாளிகள் பயன்படுத்தும் வகையில் ஒரு ஐரோப்பிய கழிவறையும் (Western Closet), இளம்சிறார்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் குழந்தை நேயக் கழிவறையும் (Baby friendly toilet) இருக்கும். தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்கும் இடம், துணி துவைக்கும் கல் ஆகியவையும் இருக்கும். இதன் தொடர் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வளாகத்திலும் தனியாக தண்ணீர் விநியோகம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கென பயன்படுத்துவோர் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்கள் வளாக கட்டுமானப் பணியின் துவக்கத்திலிருந்தே ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படுவதுபோல, இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களே எடுத்துச் செய்வதுடன், இதன் தொடர்பராமரிப்பு சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியால் மேற்கொள்ளப்படும். இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்புப் பணியில் பயன்படுத்துவோர் குழுக்களுடன், கூட்டாண்மை அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்களும் பங்கேற்க ஊக்கப்படுத்தப்படும்.

2012–13ம் ஆண்டு எடுக்கப்பட்டுள்ள அனைத்து 770 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்களும் மே 2013 இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.



### 3.11 தூய்மையான கிராம இயக்கம்

தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு இந்த அரசால் 2003–ஆம் ஆண்டில் “தூய்மையான கிராம இயக்கம்” துவக்கப்பட்டது. இவ்வியக்கம் சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

#### 3.11.1 தூய்மையான கிராம இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள்

- திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் மற்றும் விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- பல்வேறு தரப்பு மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கண்டறிவதுடன், சுகாதாரத்தில் குறிப்பிட்ட இலக்கான மகளிர் மற்றும் குழந்தைகள், இளவயதினர், வயதானோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு சுகாதாரத் தேவையின் முக்கியத்துவத்தை ஊக்குவித்தல்.
- அங்கன்வாடிகள், பள்ளிகள் மற்றும் பொது இடங்கள் ஆகியனவற்றில் சுற்றுச்சூழல் சுகாதாரத்தினை மேம்படுத்துதல்.
- பல்வேறு புவியமைப்புகளில், தண்ணீர் கிடைக்கும் நிலை, நீராதாரம் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்.

- அறிவுசார் திறமைகள் மூலம் சுகாதாரப் பழக்க வழக்கத்தை ஊக்குவித்து சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் சுகாதாரத்தைப் பேணுவதில், சமுதாயத்திற்கும் ஊராட்சி அமைப்புகளுக்கும் மேலாண்மைத் திறனைப் பலப்படுத்துதல்.
- சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் பணியாற்றும் பலதரப்பட்ட அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை நிலைப்படுத்துதல்.

மேலும், தீவிர தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமாக கிராம ஊராட்சிகள் மற்றும் இதரத் துறைகளையும் சமூகத்துடன் ஒருங்கிணைப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

### 3.11.2 தூய்மையான கிராம இயக்கத்தின் கூறுகள்

1. திறந்தவெளியில் மலம் கழித்தலைத் தடுத்தல்.
2. மழை நீர் சேகரிப்பு மற்றும் கழிவுநீரினை மறு சுழற்சி செய்தல்.
3. திடக்கழிவு மேலாண்மை
4. மனிதக் கழிவுடன் இணைந்த எரிவாயு கலன் அமைத்தல்.



தனிநபர் இல்லங்கள், பள்ளிகள் ஆகியவற்றில் சுகாதார வசதி மற்றும் திறந்தவெளி மலங்கழித்தலை முழுமையாக அகற்றுவதன் மூலம் தூய்மையான சூழலை உருவாக்கியும், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர் சேகரிப்பு வாயிலாக 100 விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகள் மாநில அரசு வழங்கும் ரூ.5 இலட்சம் ரொக்கப் பரிசு பெறத் தகுதியாகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 15 கிராம ஊராட்சிகளுக்கு ரொக்கம் மற்றும் செயலாக்க ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

முந்தைய அரசால் கைவிடப்பட்ட இத்திட்டத்தினை பரிசீலித்து, மீண்டும் அறிமுகப்படுத்தி 2011–12 ஆம் ஆண்டில் மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்ந்தெடுத்து, அக்கிராம ஊராட்சிக்கு ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசு மற்றும் **“தூய்மையான கிராம இயக்கம்”** விருதாக, 31 மாவட்டங்களிலும் செயல்படுத்த ரூ.1.55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2011–12 ஆம் ஆண்டில் 31 மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து இந்த விருது பெறுவதற்காக 91 கிராம ஊராட்சிகள் பரிந்துரைக்கப்பட்டு முன்மொழிவுகள் பெறப்பட்டன. இந்த முன்மொழிகள் பரிசீலிக்கப்பட்டு மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 31 கிராம ஊராட்சிகள் இவ்விருதிற்கென அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 2012–13 ஆம் ஆண்டிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

**2013–14 ஆம் ஆண்டிலும் இத்திட்டமானது ரூ.1.55 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

### 3.12 அங்கன்வாடி மையங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைத்தல்

### 3.12.1 சிறு பராமரிப்புப் பணிகள்

அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் பராமரிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **12.9.2011** அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அரசாணை (நிலை) எண். **20**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள் **27.3.2012**–ன்படி அங்கன்வாடி மையங்களில் சிறு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.**52.83** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. **8,596** அங்கன்வாடி மையங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, இதுவரை **8,465** அங்கன்வாடி மையங்களில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள **131** மையங்களிலும் பராமரிப்புப் பணிகள் **31.3.2013**–க்குள்முடிக்கப்படும்.

### 3.12.2 பெரிய அளவிலான பராமரிப்புப் பணிகள்

ஊரகப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பெரிய அளவிலான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.**32.99** கோடி நிதியினை ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, **2,509** அங்கன்வாடி மையங்களில் பராமரிப்புப் பணிகள் எடுக்கப்பட்டு, **829** பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள



அங்கன்வாடி மையங்களில் பல நிலைகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இவை அனைத்தும் **30.4.2013**–க்குள் முடிக்கப்படும். சுவர்களில் உள்ள விரிசல், மேற்கூரையில் நீர் ஒழுகுதல் ஆகியவற்றினை சீர் செய்தல், மேற்கூரை மாற்றுதல், தரை, கூரை தளம், கதவு மற்றும் சன்னல் புதுப்பித்தல், வெள்ளையடித்தல் மற்றும் வண்ணப்பூச்சுப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.12.3 அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல்

சட்டடன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அங்கன்வாடி சமையலறைகளை நவீனப்படுத்திடவும், சமையல் வரிவாயு இணைப்பு (Gas connection) வழங்கிடவும் ஒரு அங்கன்வாடி மையத்திற்கு ரூ.**6,050/–** வீதம் ஒருமுறை செலவினம் மேற்கொள்ள ரூ.**10.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **2012–13**ம் ஆண்டில் இதுவரை **18,249** அங்கன்வாடி மையங்கள் நவீனப்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

ஒரு சட்டமன்றத் தொகுதியிலுள்ள தகுதியுள்ள அனைத்து அங்கன்வாடி சமையல் அறைகளையும் நவீனப்படுத்தும் பணிகளை மேற்கொண்ட பின்னர், மீதமுள்ள தொகையினை பள்ளி சமையலறை மையங்களை நவீனப்படுத்தும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.**294** சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம் (ச.உ.தி.7) துறை, நாள்

11.12.2012–ல் தெரிவித்தவாறு ஒரு மையத்திற்கு ரூ.22,000/– வீதம் ஒரு முறை செலவினம் மேற்கொள்ளலாம்.

### 3.12.4 குழந்தைகள் நேய கழிப்பறைகள் கட்டுதல்

அரசாணை (நிலை) எண்.27 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் (சந7) துறை நாள் 29.2.2012ல் கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 16,387 அங்கன்வாடி மையங்களில் உள்ள கழிப்பறை ஒன்றுக்கு ரூ.18,000 மதிப்பீட்டில் (மாநில அரசு நிதியிலிருந்து ரூ.10,000 மற்றும் நிர்மல் பாரத் அபியான் திட்டத்திலிருந்து ரூ.8,000) என்ற அடிப்படையில் குழந்தைகள் நேயக் கழிப்பறை கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. சமூக நலத்துறையால் தெரிவிக்கப்பட்ட ஊரக பகுதிகளில் உள்ள 16,387 அங்கன்வாடி மையங்களையும் முழுமையாக கணக்கெடுப்பு செய்து ரூ.18,000/– மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் குழந்தைகள் நேய கழிப்பறை கட்டுவதற்கு உரிய சரியான எண்ணிக்கையை அறிந்திட முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு அங்கன்வாடி மையம் வாரியான விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் வலைதளமான www.tnrd.gov.in–ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கணக்கெடுப்பின்படி 4,871 மையங்களில் கழிப்பறைகள் இல்லை என்பதும் 3,811 மையங்களில் உள்ள ஏற்கனவே கட்டப்பட்ட கழிப்பறைகள் சிறிய பழுதுகள் காரணமாக பயன்படுத்தப்படாமலும், 



8,473 மையங்களில் முன்னர் கட்டப்பட்ட கழிப்பறைகள் பெரிய பழுதுகள் மற்றும் பழுது பார்க்க இயலாத நிலையிலும் இருந்தமையால் பயன்படுத்தப்படாமல் இருந்தது தெரிய வந்தது.

அரசுக் கட்டிடங்களில் செயல்பட்டு வரும் 4871 அங்கன்வாடி மையங்களில் கழிப்பறைகள் இல்லாததால் குழந்தை நேய புதிய கழிப்பறைகளை நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின்கீழும், மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்தும் ரூ.18,000/–மதிப்பீட்டில் (நிர்மல் பாரத் அபியான் திட்டத்திலிருந்து ரூ.8,000/–ம் மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்து ரூ.10,000/– ) எடுக்கப்பட்டுள்ளது. சிறிய பழுதுகள் உள்ள 3,811 அங்கன்வாடி மையக் கழிப்பறைகள், அங்கன்வாடி மையங்கள் பழுதுபார்க்கப்படும்போது எடுக்கப்பட்டு அவை பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். பெரிய பழுது மற்றும் பழுது பார்க்க இயலாத நிலையில் 8,473 கழிப்பறைகள் உள்ளன. அரசாணை எண். 75 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா–1) துறை நாள் 25.2.2013–ல் ரூ.18,000/– மதிப்பீட்டில் இந்த குழந்தைகள் நேய கழிப்பறைகளை புதிதாக கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (இதில் மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்து ரூ.8,000/– மற்றும் மாநில அரசு நிதி ரூ.10,000/– ஆகும்).

### 3.13 சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

நக்சலைட்டுகளின் செயல்பாட்டினைக் கட்டுப் படுத்திடவும், அவர்களின் வளர்ச்சியைத் தடுத்திடவும்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டமாக 2003–04–ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் பழுது பார்த்தல், கிராமப்புற இளைஞர்களுக்குத் தேவையான பல்வேறு தொழில் சார்ந்த தளவாடக் கருவிகள் அளித்தல், மாற்றுத்திறனாளிகள், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்குத் தனிநபர் உதவி வழங்குதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

2012–13–ஆம் ஆண்டில் ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் 3,762 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் டிசம்பர் 2012–ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் அறிவித்தவாறு, 2013–14–ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்திற்கு ரூ.20 கோடி ஆகவும், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ரூ.1 கோடி ஆகவும் நிதி ஒதுக்கீடு உயர்த்தப்படும்.**

### 3.13.1 சிறப்பு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் டிசம்பர் 2012–ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் அறிவித்தவாறு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைப் போன்றே 2013–14 ஆம் ஆண்டில் சிறப்பு**



**சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டதிற்கு ரூ.10 கோடியும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ.20 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

### 3.14 தானே குடியிருப்புத் திட்டம்

மிகவும் கொடூரமான, தானே என்ற புயலை டிசம்பர் மாதம் 2011ம் ஆண்டு தமிழ்நாடு எதிர்கொண்டது. ‘‘மிகக் கடுமையான புயல்காற்று’’ என வகைப்படுத்தப்பட்ட தானே புயல் இலட்சக்கணக்கான வீடுகளை சேதப்படுத்தியதுடன் இலட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை இழக்கச் செய்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி தமிழக அரசு மிகத் துரிதமாகச் செயல்பட்டு அதிக அளவில் உடனடி மீட்பு நடவடிக்கைகளை விரிவாக மேற்கொண்டது. அரசு ஆணையின்படி இத்துறை மற்ற துறைகளுடன் ஒன்றிணைந்து பணியாற்றி உடனடி மீட்பு பணிகளை குறித்த நேரத்தில் முடித்தது. மிகவும் நலிவுற்ற பிரிவினர், ஏழைகளிலும் ஏழைகள், நிலமற்ற கூலித் தொழிலாளர்கள், மீனவர்கள் மற்றும் சிறுகுறு விவசாயிகள் ஆகியோர் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். பாதிக்கப்பட்ட குடிசைகளையும், வீடுகளையும் தற்காலிகமாக சீர்செய்திட உடனடியாக உதவிகள் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களது அனைத்து முயற்சிகளையும் வாழ்வாதார நடவடிக்கைகளை மீட்டெடுப்பதற்காகவே செலவிடுவதால் பாதிப்படைந்த தங்களது வீடுகளையும்,

வாழிடங்களையும் மீளக் கட்டுவதற்கு அதிக காலமாகும். ஆகவே, பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது வாழிடங்களை மீளக் கட்டுவதற்கு இயலாத நிலையிலுள்ளனர்.

எனவே, மேதகு ஆளுநர் அவர்கள் 3.4.2012 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையில், “இந்த அரசு தானே புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட ஊரகப் பகுதி மக்கள் பயனடையும் வகையில் **தானே குடியிருப்புத் திட்டத்தை** அறிமுகப்படுத்தி தானே புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 1 லட்சம் கான்கிரீட் வீடுகளை ரூ.1,000 கோடி செலவில் கட்டிக் கொடுக்கப்படும்” என அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப ஒரு இலட்சம் வீடுகள் கட்ட ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை(நிலை) எண்79, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (SGS-II) துறை நாள் 27.8.12–ன்படி ஆணை வெளியிடப்பட்டது.

**இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

1. தானே புயலால் பாதிக்கப்பட்ட ஊரகக் குடும்பங்கள் அனைத்தும் இத்திட்டத்தில் பயன்பெறத் தகுதியுள்ளவர்கள்.
2. ஒவ்வொரு வீடும் 200 சதுர அடி பரப்பளவு கொண்டதாக இருக்கும்
3. ஒவ்வொரு வீட்டிலும் வசிக்கும் அறை, சமையலறை மற்றும் கழிவறையுடன் மழைநீர் சேகரிப்புத் தொட்டியும் அமைக்கப்படும். நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின்கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டித்தரப்படும்.
4. ஒரு வீடு கட்டுவதற்கான அலகுத் தொகை ரூ.1 இலட்சம் என்ற அடிப்படையில் மாநில அரசு நிதியில் கட்டப்படும்.
5. கட்டுமானப்பணிகளை பயனாளிகளே மேற்கொள்வர்.
6. இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே புயலால் பாதிக்கப்பட்ட பழுதடைந்த வீடுகள் இருந்த இடத்திலேயோ அல்லது ஊராட்சியில் அந்த பயனாளிக்குச் சொந்தமான வேறு இடத்திலேயோ வீடுகளை கட்டிகொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் எவ்வித நில எடுப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது.
7. பொதுப்பணித்துறையினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள நாட்டு செங்கற்கள், நிலக்கரி, சாம்பல் கற்கள் அல்லது சிமெண்ட் கற்கள் (hollow block) கொண்டு பயனாளிகள் விருப்பத்திற்கேற்ப கட்டிக் கொள்ளலாம்.

இப்பணியினை விரைந்து முடித்திட ஏதுவாக அரசு கீழ்கண்டப் பணியிடங்களை புதிதாக ஏற்படுத்திட 9.11.2012ல் அனுமதி அளித்துள்ளது.

| வ.எண். | அலுவலகம் | பதவியின் பெயர் | பணியிடங்க ளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மாவட்ட அளவிலான நிர்வாகப் பிரிவு | உதவி திட்ட அலுவலர் | 1 |
| 2 | | கண்காணிப்பாளர் நிலையில் வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| 3 | | கண்காணிப்பாளர் நிலையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கணக்குகள்) | 1 |
| 4 | | கணினி இயக்குபவர் | 2 |
| 5 | | அலுவலக உதவியாளர் | 1 |
| 6 | மாவட்ட அளவிலான தொழில் நுட்பப் பிரிவு | செயற்பொறியாளர் | 1 |
| 7 | | உதவி செயற் பொறியாளர். | 8 |
| 8 | | இளநிலை வரைதொழில் அலுவலர் | 1 |
| 9 | வட்டார அளவிலான நிர்வாகப் பிரிவு | வட்டார வளர்ச்சி அலுவலர் | 13 |
| 10 | | கணினி இயக்குபவர் | 13 |
| 11 | கிராம அளவிலான தொழில் நுட்பப் பிரிவு | உதவிப் பொறியாளர் | 26 |
| 12 | | தொழில் நுட்ப உதவியாளர் | 200 |
| மொத்தம் | | | 268 |

தானே திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட அனைத்து வீடுகளும் டிசம்பர் 2013க்குள் கட்டி முடிக்கப்படும்.



# 4. மத்திய அரசுத் திட்டங்கள்

## 4. மத்திய அரசு திட்டங்கள்

### 4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் உருவாக்கப்பட்டு, இத்திட்டத்திற்கு சட்டப் பாதுகாப்பு வழங்கிட நாடாளுமன்றத்தில் செப்டம்பர் 2005ம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் இயற்றப்பட்டது. ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் அவர்களது வாழ்வாதாரப் பாதுகாப்பினை உயர்த்துவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் உடலுழைப்பினால் செய்யப்படும் வேலைவாய்ப்பினை வழங்குவது இத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும். வறுமையை உருவாக்கும் காரணிகளான வறட்சி, காடுகள் அழிப்பு, மண்அரிப்பு போன்றவற்றைத் தடுக்கும் பணிகளை மேற்கொள்ளுவதன் மூலம் இயற்கை ஆதாரங்களின் மேம்பாட்டினை உறுதி செய்து, நிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் துணைக் குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில், முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் 2.2.2006ல் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் மற்ற மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.



**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

**மூன்று கட்டங்களில் விரிவாக்கம்**

| முதற் கட்டம் (2.2.2006 முதல் ) | இரண்டாம் கட்டம் (1.4.2007 முதல் ) | மூன்றாம் கட்டம் (1.4.2008 முதல்) |
|---|---|---|
| 1. கடலூர் | 1. தஞ்சாவூர் | 1. காஞ்சிபுரம் |
| 2. விழுப்புரம் | 2. திருவாரூர் | 2. திருவள்ளூர் |
| 3. திருவண்ணாமலை | 3. கரூர் | 3. வேலூர் |
| 4. நாகப்பட்டினம் | 4. திருநெல்வேலி | 4. சேலம் |
| 5. திண்டுக்கல் | | 5. நாமக்கல் |
| 6. சிவகங்கை | | 6. தர்மபுரி |
| | | 7. கிருஷ்ணகிரி |
| | | 8. ஈரோடு |
| | | 9. கோயம்புத்தூர் |
| | | 10. நீலகிரி |
| | | 11. திருச்சி |
| | | 12. பெரம்பலூர் |
| | | 13. அரியலூர் |
| | | 14. புதுக்கோட்டை |
| | | 15. மதுரை |
| | | 16. தேனி |
| | | 17. இராமநாதபுரம் |
| | | 18. விருதுநகர் |
| | | 19. தூத்துக்குடி |
| | | 20. கன்னியாகுமரி |
| | | 21. திருப்பூர் |

**4.1.1. திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

1. கிராம ஊராட்சிகளில் பதிவு செய்த அனைத்து குடும்பங்களுக்கும் 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்தல்.
2. திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு, கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவில் 75 விழுக்காடு மத்திய அரசால் ஏற்கப்படுகிறது.
3. ஒப்பந்ததாரர்கள் மற்றும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.
4. இத்திட்டத்தின் வேலைகளுக்கான ஊதியம் மற்றும் பொருட்களுக்கிடையேயான விகிதாச்சாரம் 60:40 என்று அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 100 விழுக்காடு முழுமையான மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.
5. வழிகாட்டி நெறிமுறைகளின்படி, கிராமத்திற்கான திட்டத் தொகுப்பினை, கிராம சபை ஒப்புதல் அளித்தபின், அதில் கிராம ஊராட்சியின் மூலம்



செயல்படுத்த 50 விழுக்காடு வேலைகள் ஒதுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில், கிராம ஊராட்சியே அனைத்து வேலைகளையும் செயல்படுத்தி வருகிறது.

6. திறன்சாரா, உடல் உழைப்பு மேற்கொள்ள விருப்பம் உள்ள வயது வந்தோர், எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழியாகவோ தமது விருப்பத்தினை, கிராம ஊராட்சிக்கு தெரிவித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.
7. புகைப்படம் மற்றும் பதிவு எண்ணுடன் கூடிய வேலை அட்டையினை கிராம ஊராட்சி இலவசமாக வழங்கும்.
8. எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழியாகவோ பெறப்பட்ட வேண்டுகோளின்படி 15 நாட்களுக்குள் வேலை அட்டை வழங்கப்படும்.
9. வேலை அட்டை உள்ளோர் எழுத்து மூலமாகவும் வேலை கோரலாம். அத்தருணங்களில், கிராம ஊராட்சி தேதியுடன் கூடிய ஒப்புகைச் சீட்டு வழங்கும். அது அவர்களுக்கு 15 நாட்களுக்குள் வேலை வழங்குவதற்கு உத்தரவாதமாக விளங்கும்.
10. வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் இருக்கும். வேலை நடைபெறும் இடம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருந்தால், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத்

தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும்.

11. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948ன்படி, விவசாய தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.
12. ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும்.
13. பொதுவாக, வாரந்தோறும் ஊதியம் வழங்கப்படுகிறது. 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
14. மூன்றில் ஒரு பங்கு பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும்.
15. ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ஊதியம் ரூ.119/– என மத்திய அரசால் 2011–12ல் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. அதனை மத்திய அரசு 2012–13ம் ஆண்டில் ரூ.132/- ஆக உயர்த்தி நிர்ணயித்தது. **2013–14ம் ஆண்டுக்கான ஊதியம் ரூ.148/– என நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான அறிவிக்கை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.**
16. வேலை நடைபெறும் இடங்களில், குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.
17. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, கிராம சபை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" மூலம் மேற்கொள்ளும்.
18. குறைகளைத் துரிதமாகத் தீர்க்கும் வகையில், குறை தீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை "1299" (Toll free Helpline '1299') ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.
19. இத்திட்டத்தின் அனைத்து கணக்கு மற்றும் ஆவணங்களை பொதுமக்கள் பரிசீலிக்கலாம்.
20. இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும், "தமிழ்நாடு அரசு மாநில வேலை உறுதி மன்றம்" என்ற அமைப்பு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பிரிவு 12–ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

### 4.1.2 அனுமதிக்கப்பட்ட பணிகள்

மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

**(அ) 100 விழுக்காடு மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகள்**

1. நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்புப் பணிகளான, சம அளவு உயரமுள்ள வாய்க்கால்கள், சம அளவு உயரமுள்ள வரப்புகள், கல் தடுப்பணை, கல் கட்டமைப்பு அணைகள் (Gabion Structure), நிலத்தடி

அணைக்கரை, மண் அணை, தடுப்பணைகள் மற்றும் நீரூற்று ஆதாரப்பணிகள் (Springshed Development).

2. வறட்சியினைத் தடுக்கும் வகையில், காடு வளர்ப்பு மற்றும் மரக்கன்றுகள் நட்டு வளர்த்தல்.
3. சிறு மற்றும் குறுநீர்ப்பாசனப் பணிகள் உள்ளிட்ட பாசனக் கால்வாய்கள்.
4. தாழ்த்தப்பட்ட/ பழங்குடியின விவசாயிகள், சிறு / குறு விவசாயிகள், நிலச்சீர்திருத்தத் திட்டப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டப் பயனாளிகள் மற்றும் விவசாய கடன் தள்ளுபடி மற்றும் கடன் நிவாரண திட்டம், 2008 அல்லது தாழ்த்தப்பட்ட மற்றும் இதர பராம்பரிய வனப்பகுதிகளில் வசிப்பவர்கள் (வன உரிமை அங்கீகாரம்) சட்டம், 2006 (2007ல் 2)ன்படி சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளோர் ஆகியோரின் நிலங்களில் பாசன வசதிகளை ஏற்படுத்துதல், மரக்கன்றுகள் நடுதல், நில மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தோட்டக்கலை சார்ந்த பணிகள்.
5. குளங்கள்/ஏரிகள் தூர் வாருதல் உள்ளிட்ட பாரம்பரிய நீராதார அமைப்புகளைப் புனரமைத்தல்
6. நிலங்களை மேம்படுத்துதல்.
7. நீர் தேங்கக்கூடிய இடங்களில் வடிகால்களை ஆழப்படுத்துதல் மற்றும் சீர்செய்தல் உள்ளிட்ட வெள்ளத் தடுப்புப் பணிகள்.



8. அனைத்துப் பருவகாலத்திற்கும் ஏற்ற சாலைகள் அமைத்தல் (மண் சாலைகள்).
9. கடற்கரை பகுதிகளில் வளரக்கூடிய மரங்களை நடுதல், உறிஞ்சு குட்டை மற்றும் ஊறும் குட்டைகள் அமைத்தல் போன்ற ஊரக குடிநீர் தொடர்பான பணிகள்.

**(ஆ) மேற்கொள்ளப்படக்கூடாத பணிகள்**

1. பாறாங்கற்கள், கூழாங்கற்கள் அல்லது புதர்களை அகற்றுதல் மற்றும் இதுபோன்ற பணிகள் தனியாக மேற்கொள்ள அனுமதியில்லை. இருப்பினும், விவசாயம் செய்ய இயலாத மற்றும் தரிசு/வெற்று நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுவதற்காக ஒரு முறை மட்டும் செய்யப்படும் நில மேம்பாட்டுப் பணிகள் (One time Land Development) மற்றும் எங்கெங்கு நில மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறதோ, அங்கு ஒரு சில நபர்களுக்கு உரியதாக அல்லாமல் நுண்ணிய நீர்வடிகால் (Micro Watershed) நோக்குடன் கூடிய பொதுவான பணியாக இருக்கும் நிலையில், இப்பணிகள் அதன் ஒரு அங்கமாக அனுமதிக்கப்படும்.
2. சாதாரண விவசாய நடவடிக்கைகளான நிலத்தினை தயார் செய்தல், உழுதல், விதைத்தல், களையெடுத்தல், மண்ணை திருப்புதல், தண்ணீர் பாய்ச்சுதல், அறுவடை செய்தல், வெட்டுதல் மற்றும் இது போன்ற இதர நடவடிக்கைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதியில்லை.

3. உணவுப் பொருட்கள், காய்கறிகள், பூக்கள், உள்ளிட்டவைகளை சார்ந்த எந்தவிதமான விவசாய பணிகளும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதியில்லை. இதற்கான இடுபொருட்களின் (விதைகள், உரங்கள், பூச்சிகொல்லிகள்) விலைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதியில்லை.

4. காடுவளர்ப்பு மற்றும் பழ மரங்கள் நடுதல் போன்ற நிகழ்வுகளில் 2–3 வருடங்களுக்கு மட்டுமே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் களையெடுத்தல் மற்றும் நீர்பாய்ச்சுதல் போன்ற பணிகளுக்கான ஊதியம் வழங்கலாம். இந்த காலங்கள் முடிவடையும் போது பழ மரங்கள் காய் காய்க்கும் பருவத்தினை அடைந்து விடுவதால் அதற்குப்பின் தேவைப்படும் களையெடுத்தல், நீர்பாய்ச்சுதல், முதலியவை சாதாரண செயல்களின் ஒரு பகுதியாக வந்துவிடும். அதேபோன்று, 2–3 வருடங்கள் முடிவடையும்போது, வனப்பகுதிகளில் நடப்படும் மரங்கள் போதிய அளவு வளர்ந்து பின் தனியாக வளரக்கூடிய நிலைக்கு வந்துவிடும். மேய்ச்சலிலிருந்து பாதுகாக்கும் வகையில் குழி மற்றும் உயர்த்தப்பட்ட கரைகள் அல்லது வேறுவிதமான தடுப்புகளை வளர்ப்பு நிலங்களை சுற்றி அமைக்க வேண்டும். மாநில அரசின் விவசாயம்/ தோட்டக்கலை/வனத் துறைகள் தோட்டங்கள் மற்றும் காடுகளுக்கு களையெடுத்தல் மற்றும் நீர்பாய்ச்சுதல் போன்றவற்றினை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள தேவைப்படும் காலக்கெடு மற்றும் மனிதநாட்களுக்கான விதிமுறைகளை தெரிவிக்கும். எனினும், இந்த விதிமுறைகள் அத்துறைகள் தனது துறைகளின் கீழ் மாநில அரசு அல்லது மத்திய அரசு திட்டப் பணிகளில் மேற்கொள்ளும் அளவிலேயே இருக்கும்



### 4.1.3. 2011–12 மற்றும் 2012–13ம் ஆண்டுகளுக்கான சாதனைகள்

#### 4.1.3.1. செயல் மற்றும் நிதி குறித்த சாதனைகள்

2011–12ம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட 30.02 கோடி மனித சக்தி நாட்கள் என்ற இலக்கினை ஒப்பிடுகையில் இந்த அரசால் 33 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அதே போன்று, 2012–13ம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட 38.91 கோடி மனித சக்தி நாட்கள் என்ற இலக்கினை ஒப்பிடுகையில், 38.99 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது (13.03.2013 வரை). நிதியினை பொறுத்தவரையில் இலக்கீடான ரூ.5136 கோடியில் இதுவரை ரூ.3661 கோடி ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது(13.03.2013 வரை).

மதிப்பீட்டு இலக்கு மீதான சாதனை

| ஆண்டு | மதிப்பீட்டு இலக்கு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | நிதித்திறன் (ரூ.கோடியில்) | | | செயல்திறன் (மனித சக்தி நாட்கள்) கோடியில் | | |
| | ஏற்பளிப்பு | சாதனை | % | ஏற்பளிப்பு | சாதனை | % |
| 2011–12 | 3572 | 3000 | 84 | 30.02 | 33.00 | 110 |
| 2012–13 | 5136* | 3661 | 71 | 38.91* | 38.99 | 100 |

*** மத்திய அரசு 2012–13ம் ஆண்டிற்கு தொழிலாளர் வரவு–செலவின் கீழ் 37.90 கோடி மனிதநாட்களை அங்கீகரித்தது. பின்னர், மாநிலத்தின் சிறப்பு செயல்பாட்டின் காரணமாக, மத்திய அரசு 38.91 கோடி மனித நாட்களாக உயர்த்தி அங்கீகரித்துள்ளது. எனவே, ஒதுக்கீட்டுத் தொகையும் ரூ.5002 கோடியிலிருந்து ரூ.5,136 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தேசிய அளவில், தமிழ்நாடு செயல்பாட்டில் கீழ்க்கண்டவாறு சிறந்து விளங்குகிறது :

- **எதிர்நோக்கப்பட்ட செலவினத்தில் ரூ.3661 கோடியினை (13.03.2013 வரை) செலவழித்ததன் மூலம், நாட்டிலேயே முதலிடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது**
- **தமிழ்நாடு 2012–13ம் ஆண்டிற்கான பணி முடிக்கப்பட்ட விகிதத்தை பொறுத்தவரை 33 % பணிகளை முடித்து நாட்டிலேயே முதலிடத்தை பெற்றுள்ளது.**



- **பெண்களின் பங்களிப்பு விகிதத்தை பொறுத்தவரை நாட்டிலேயே இரண்டாவது இடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது(74 %).**
- **தமிழ்நாடு எதிர்நோக்கப்படும் மனித சக்தி நாட்களின் இலக்கீட்டினை விஞ்சிய முதன்மையாக விளங்கும் மூன்று மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது. தமிழ்நாடு எதிர்நோக்கப்படும் மனித சக்தி நாட்களின் இலக்கீடான 38.91 கோடியினை விஞ்சி 13.03.2013 வரை 38.99 கோடி மனிதசக்தி நாட்களை உருவாக்கியுள்ளது.**
- **ஒரு குடும்பத்திற்கான வேலைவாய்ப்பினை அளிப்பதில் தேசிய சராசரியினை விஞ்சிய நான்கு மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக திகழ்கிறது. தேசிய அளவில் ஒரு குடும்பத்திற்கான சராசரி வேலை நாட்கள் 39 ஆக உள்ள நிலையில் தமிழ்நாட்டில் 49 நாட்களாக உள்ளது.**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான விருதுகள்**

- **2011–12**ம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக **தேசிய அளவில் 7 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டன. நமது மாநிலத்தில் மட்டும் தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரு மாவட்டங்கள் இந்த விருதினைப் பெற்றன.**

- அதேபோன்று **தேசிய அளவில் 10 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டதில், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காடம்பாடி கிராம ஊராட்சியும் ஒன்றாகும்.**

**4.1.3.2 கிராம ஊராட்சிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளை எடுத்து செய்ய அனுமதித்தல்**

15.5.2011க்கு முன்னர் கிராம ஊராட்சிகளில் அனுமதிக்கப்பட்ட பணிகளில் ஒரே நேரத்தில் ஒரு பணியை மட்டுமே எடுத்து செய்ய உத்திரவிடப்பட்டிருந்தது. இதனால் திட்டச் செயல்பாட்டில் பின்வரும் இடர்பாடுகள் இருந்தன :

i) ஒரு பணித்தளத்தில் மிக அதிகமான தொழிலாளர்கள் ஒன்று சேர்தல்.

ii) தொழிலாளர்களை மேற்பார்வையிடுதலில் சிரமம்

iii) குக்கிராமங்களிருந்து நீண்ட தூரத்தில் பணி நடைபெறுவதால் தொழிலாளர்கள் பங்கேற்க இயலாமை.

iv) 'குக்கிராமவாரியாக' சுழற்சி முறையில் பணி செய்து வந்ததால் 100 நாட்களுக்கு பதிலாக அதைவிட குறைந்த நாட்களுக்கு மட்டுமே வேலை வழங்கப்பட்டு வந்தது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு அதிக வேலை வழங்க, இந்த அரசால், ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள குக்கிராமங்கள் மற்றும் பணிக்கு வரும் பணியாளர்களின் எண்ணிக்கையை



அடிப்படையாகக் கொண்டு அதிக வேலைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒரு பணிக்கு மேல் பல பணிகள் மேற்கொள்ள, வழக்கமாக பணிக்கு வரும் பணியாளர்கள் மற்றும் குடியிருப்புகளின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு, தாங்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கு அருகாமையில் பணியை செய்திட ஏதுவாக ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை எடுத்து செய்ய அக்கிராம ஊராட்சிகளில் உள்ள குடியிருப்புகள் தொகுதிகளாக பிரிக்கப்பட்டு, ஒரு தொகுதிக்கு குறைந்தபட்சம் ஒரு பணி செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு ஊராட்சியில் எத்தனை தொகுதிகள் உள்ளனவோ அத்தனை பணிகள் ஒரே நேரத்தில் செயல்படுத்தப்படுகிறது.

இந்த முறை அக்டோபர் 2011 முதல் செயல்பட்டு வருவதால் பின்வரும் பலன்கள் கிடைக்க வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

i) குடியிருப்புகளுக்கு மிக அருகாமையிலேயே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணி நடைபெறுவதால் அதிக அளவில் தொழிலாளர்கள் பணித்தளத்திற்குச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ii) 2010–11ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 26.86 கோடி மனித சக்தி நாட்களை ஒப்பிடும்போது 2011–12ம் ஆண்டில் 33 கோடி மனித சக்தி நாட்களாக அதிகரித்துள்ளது. அதே போன்று 2012–13ம் ஆண்டில் (13.03.2013 வரை) 38.99 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

iii) ஒரு வாரத்தில் வழங்கப்பட்ட சராசரி ஊதியம் ரூ.50 கோடியிலிருந்து 2011–12ம் ஆண்டு ரூ.75 கோடியாகவும், 2012–13ம் ஆண்டு ரூ.100 கோடியாகவும் அதிகரித்துள்ளது.

iv) தொழிலாளர்கள் பணித்தளத்திற்கு செல்லும் மொத்த தூரம் 5–6 கி.மீ. ஆக இருந்தது 500 மீட்டர் முதல் 1 கி.மீ. வரை என்கிற அளவில் குறைந்துள்ளது.

v) ஆண்டுவாரியாக குடும்பங்களுக்கு வழங்கப்படும் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது.

| வருடம் | 2010–11 | 2011–12 | 2012–13 |
|---|---|---|---|
| **வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட மொத்த குடும்பங்கள் (இலட்சத்தில்)** | **49.60** | **58.16** | **67.00** |

**4.1.3.3 நில மேம்பாட்டு பணிகள்**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட வழிகாட்டி நெறிமுறையின்படி தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், நிலச் சீர்திருத்த திட்டப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டப் பயனாளிகள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் ஆகியோரின் நிலங்கள் மேம்பாடு செய்ய அனுமதி உள்ளது. இவ்வாறான நிலச் சீர்த்திருத்தப் பணிகள் சில மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



- தமிழக அரசால் இத்திட்டத்தின் மூலம் விவசாயப் பணிகள், நிலமேம்பாட்டுப் பணிகள், பாசனப் பணிகள், தோட்டக் கலை மற்றும் பலதரப்பட்ட நில மேம்பாடுப்பணிகளை தகுதியுடையவர்களின் நிலங்களில் செய்திட 2011–12ம் ஆண்டில் கீழ்க்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
  - ➢ உயர் அலுவலர்கள் கொண்ட இரண்டு குழுக்கள் ஆந்திரா மற்றும் கேரளா மாநிலங்களுக்கு சென்று இத்திட்டம் செயல்படுத்தப்படும் முறை குறித்து தீவிர ஆய்வுகளை மேற்கொண்டன.
  - ➢ வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைகளுடன் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டது.
  - ➢ மேலும் தனிநபர் நிலமேம்பாட்டிற்கான பல்வேறு பணிகள் எடுத்துச் செய்வது குறித்த காலநிர்ணய வேலை அளவு (Time and Motion Study) ஈரோடு, திருச்சிராப்பள்ளி, விருதுநகர் மற்றும் வேலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் எடுத்து செய்யப்பட்டது.
- மேற்கண்ட நடவடிக்கைகளை அடிப்படையாக கொண்டு வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வனத்துறை மற்றும் தோட்டக்கலை துறைகளின் உதவியுடன் சிறப்பு வழிகாட்டி நெறிமுறைகள் தயாரிக்கப்பட்டு அரசாணை (நிலை) எண்.61, ஊரக வளர்ச்சி மற்றும்

ஊராட்சித் (மதி.1) துறை, நாள் 23.07.2012ன்படி வெளியிடப்பட்டுள்ளது. தனிநபர் நிலமேம்பாட்டு பணிகள் மற்றும் பொது மற்றும் அரசுக்கு சொந்தமான நிலங்களில் நில மேம்பாட்டுப் பணிகள் அரசிற்கு சொந்தமான பொது நிலங்களில் காடுவளர்ப்பு பணிகள் 2012–13ம் ஆண்டில் சோதனை முயற்சியாக மேற்கொள்ளப்பட்டது. 2013–14ம் ஆண்டில் இந்த நில மேம்பாட்டு பணிகள் முழுவீச்சில் செயல்படுத்தப்படும்.

- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழ் பண்ணைக்குட்டைகள் அமைக்க விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண். 17, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–1)த் துறை, நாள் 15.02.13ல் வகுக்கப்பட்டுள்ளன.**
- பண்ணைக் குட்டைகள் அமைத்தல் உள்ளிட்ட நில மேம்பாட்டுப்பணிகளை செயல்படுத்துவது விவசாயத் துறையில் ஒரு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதோடு கீழ்க்கண்டவாறு 1.40 கோடி விவசாயிகள் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.



| வ. எண். | வகைப்பாடு | விவசாயிகள் எண்ணிக்கை (இலட்சத்தில்) | நிலப்பரப்பளவு (இலட்சம் ஹெறக்டேரில்) |
|---|---|---|---|
| 1 | தாழ்த்தப்பட்ட விவசாயிகள் | 9.10 | 5.26 |
| 2 | பழங்குடியின விவசாயிகள் | 0.62 | 0.77 |
| 3 | சிறு விவசாயிகள் | 12.33 | 17.21 |
| 4 | குறு விவசாயிகள் | 118.00 | 44.00 |
| | மொத்தம் | 140.05 | 67.24 |

### 4.1.3.4 வனத்துறையுடன் ஒருங்கிணைப்பு

- சுற்றுச்சூழலில் உயிரினத்தொகுதியினை (Biomass) அதிகரிக்கும் நடவடிக்கையாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான குளங்களில் கருவேலம் மரக்கன்றுகளை நடுவதற்கு அரசாணை (3டி)எண்.25, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம் 6) துறை, நாள் 20.03.2012ன்படி வனத்துறையால் வெளியிடப்பட்டுள்ளது.
- வனத்துறையின் ஆணைக்கேற்ப, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் மரக்கன்றுகளை உருவாக்குதல் தொடர்பு நடவடிக்கைகளுக்கான சிறப்பு விலைப்பட்டியலை அரசாணை (நிலை)

எண்.104, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மதி.1) துறை, நாள் 09.11.2012ன்படி வெளியிடப்பட்டுள்ளது.

- ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான முகப்பு பகுதிகளில் (Foreshore) 4000 ஹெக்டேர் பரப்பில் கருவேலம் மரக்கன்றுகளை நடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**4.1.3.5 மாற்று திறனாளிகளுக்கான சிறப்பு பணிகள்**

- மாற்றுத்திறனாளிகள் உரிமை (சமவாய்ப்பு, உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995ல் தெரிவித்துள்ளவற்றை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் செயல்படுத்தும் வகையில், தமிழக அரசு அரசாணை (நிலை) எண்.52, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மதி.1) துறை, நாள் 25.06.2012ன் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

**அரசாணையின்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனாளிகள் மேற்கொள்வதற்கான சிறப்பு பணிகள் கீழ்க்கண்டவாறு :**

- பணித்தளத்தில் தொழிலாளர்களுக்கு தண்ணீர் வழங்கும் பணியாளர்
- குழந்தைகளை பார்த்துக்கொள்ளும் பொறுப்பாளர்
- பொறுப்பாளருக்கு உதவியாளர். ஒவ்வொரு 5 குழந்தைகளுக்கும் ஒரு கூடுதல் உதவியாளர் அமர்த்தலாம்.



- பணித்தள பொறுப்பாளருக்கு முன்அளவீட்டினை மேற்கொள்ள உதவுதல் (100க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருப்பின் ஒரு மாற்றுத்திறனாளியினை பணித்தள பொறுப்பாளருக்கு உதவியாளராக அமர்த்தலாம்).
- தளத்தில் அகற்றப்பட்ட மரங்களை அப்புறப்படுத்துதல் (இலை, தழைகள் மற்றும் சிறு மரங்கள்)
- ஆழப்படுத்தப்படும் இடங்களில் தண்ணீர் தெளித்தல் (குறிப்பாக கோடை காலங்களில்)
- மண்வெட்டி, கடப்பாறை போன்றவற்றை கொண்டு கரைகளில் கொட்டப்படும் மண் சமப்படுத்துதல்
- கரைகளை சமன்படுத்துதல் (benching)
- கரைகளின் சரிவுப்பகுதியினை சீர்செய்தல்.

**<u>மண்தொடர்பான பணிகளில் சிறப்பு வழிமுறைகள்</u>**

- உடல் உழைப்பினை மேற்கொள்ளத் தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகளை மண்வேலை தொடர்பான பணிகளான காடுகளை அழித்தல், ஆழப்படுத்துதல், நடுதல், மண்மூடுதல் மற்றும் நீர்பாய்ச்சுதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தலாம்.
- பணித்தளம் / பணித்தளங்களில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், அவர்களை மேலே கூறப்பட்டுள்ள சிறப்பு பணிகளை மேற்கொள்ள மட்டுமே அனுமதிக்க வேண்டும்.

- பணித்தளம் / பணித்தளங்களில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் மட்டுமே மண்தொடர்பான பணிகளுக்கு பயன்படுத்தலாம். அப்போது, அவர்கள் 5 அல்லது 10 பேர் கொண்ட குழுவாக பிரிக்கப்பட்டு, சாதாரண தொழிலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிஅளவில் 50 சதவீத அளவினை மட்டுமே அவர்கள் மேற்கொள்ள முன்அளவீடு செய்ய வேண்டும்.

**4.1.3.6. செயற்கைகோள் மூலம் தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் அடிப்படையில் பணிகள் தெரிவுசெய்தல்**

- இவ்வரசு செயற்கைகோள் உதவியுடன் தற்போதுள்ள நீர் நிலை ஆதாரங்களை (குளம் / ஊரணி / குடிநீர் வடிகால்) கொண்ட வரைபடம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே முடிவு செய்துள்ளது.
- 1960 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நில வரைபடங்கள் மற்றும் தொலை உணர் தொடர்பு (IRS) செயற்கைகோள் படங்களை கொண்டு நீர்நிலை ஆதாரங்களின் முந்தைய மற்றும் தற்போதைய நிலை ஆகியவற்றைக் காட்டிடும் வரைபடம் வட்டாரம் வாரியாக அண்ணா பல்கலைக்கழக உதவியுடன் தயார்செய்யப்



பட்டுள்ளது. மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் விரிவான தல ஆய்வறிக்கையின் மூலம் பெறப்பட்ட தற்போதுள்ள விபரங்களும் அதில் இடம் பெற்றுள்ளது. இந்த வள ஆதார வரைபடம் (Resource Map) அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்டம், வட்டாரம் மற்றும் ஊராட்சி வாரியாக தயார் செய்யப்பட்டுள்ளது.

- மேற்படி வரைபடங்களின் அடிப்படையில், முதலில் இருந்த கொள்ளளவை பெறும் வகையிலும் நிலத்தடி நீர் அளவை உயர்த்தும் பொருட்டும், 2012–13 ஆம் ஆண்டில் இது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் சோதனை முயற்சியாக மதகு மற்றும் மறுகால் சீரமைத்தல் உள்ளிட்ட தொடர் நீராதாரக் குளங்கள் (System Tanks), புனரமைக்கும் பணிகள் மாநில அரசின் ஊரக உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பெரிய ஊரணிகள் மற்றும் நீர் ஆதாரங்களை புனரமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாணை (1டி) எண்.487, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.3) துறை, நாள் 18.09.2012ன்கீழ் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.
- தெரிவு செய்யப்படட தலைசிறந்த நிறுவனங்கள் / முகமைகளின் மூலம் ‘‘விரிவான திட்ட அறிக்கை’’

தயார் செய்யப்பட்டு 2013–14ம் ஆண்டில் இப்பணிகள் செயல்படுத்தப்படும்.

**4.1.3.7. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்கள் அதிக ஊதியம் பெறுதல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 8 மணிநேர வேலைக்கு பரிந்துரைக்கப்பட்ட ஊதியம் தொழிலாளர்களால் செய்யப்படுகின்ற வேலையின் அளவைப் பொறுத்தே வழங்கப்படுகிறது. 15.5.2011ற்கு முன்னர் தொழிலாளர்கள், பெரும்பாலான நேரங்களில் ரூ.80/– முதல் ரூ.90/– வரை மட்டுமே ஊதியம் பெறும் நிலை இருந்தது. ஆகையால், இத்திட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு இயக்கம் மற்றும் விரிவான விளம்பரங்கள் வாயிலாகவும் மற்றும் பணித்தளத்தில் மாதிரி குழிகள் அமைத்தும், தொழிலாளர்கள் சரியான ஊதியம் பெற தேவையான அளவு வேலை செய்ய வேண்டிய அளவீடுகள் குறித்து முன் அளவீடு செய்தல் மற்றும் அளவு எடுப்பது குறித்த பயிற்சி பணி மேற்பார்வையாளர்களுக்கு நடத்தப் பட்டது. இவ்விழிப்புணர்வு இயக்கம் நடத்தப்பட்டதன் விளைவாக தொழிலாளர்கள் பெறும் சராசரி ஊதியம் ரூ.90/– லிருந்து 2012–13ம் ஆண்டில் ரூ.105/– ஆக உயர்ந்துள்ளது.

- ஊரக விலைப்பட்டியலை திருத்தம் செய்யக் கோரி வரப்பெற்ற கோரிக்கையினைத் தொடர்ந்து ஒரு விரிவான காலநிர்ணய வேலை அளவு 13 மாவட்டங்களில் பலவிதமான மண்களின்



தன்மையினையும் கணக்கில் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- மேற்கொள்ளப்பட்ட கால நிர்ணய அளவின்படி, ஒரு திருத்திய ஊரக விலைப்பட்டியல் அரசாணை (நிலை) எண் 110 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(மதி–1) துறை நாள் 15.11.2012 ல் வெளியிடப்பட்டுள்ளது.

**4.1. 4. சமூக தணிக்கை அலகு**

**4.1.4.1. முன்னோடி சமூக தணிக்கை**

- மத்திய அரசு "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தணிக்கைக்கான விதிகள் 2011" க்கான அறிவிக்கை வெளியிட்டுள்ளது.
- அதன்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தணிக்கை விதிகள் 2011, விதி 4(1)ல் அனைத்து கிராம ஊராட்சியிலும் தணிக்கை செய்யும் நோக்கில் மாநில அரசு 'சமூக தணிக்கை அலகு' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளது.
- இப்பொருள் தொடர்பாக 02.01.2012 முதல் 06.01.2012 வரை மாநில அளவிலான 20 வழிகாட்டி நபர்கள் சமூக தணிக்கை நடத்துவதற்கான பயிற்சியினை ஐதராபாத்தில் உள்ள தேசிய ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் பெற்றுள்ளனர்.
- அதனடிப்படையில், சமூக தணிக்கை செய்ய, முன்மாதிரியாக, வேலூர் மாவட்டத்தில் கனியம்பாடி ஊராட்சி ஒன்றியத்திலும் மற்றும் விழுப்புரம்

மாவட்டத்தில் கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்திலும் சமூகத் தணிக்கை பணி நடத்தப்பட்டது.

- வேலூர் மாவட்டத்தில் கிராம அளவில் உள்ள வழிகாட்டி நபர்கள் 120 பேருக்கும், விழுப்புரம் மாவட்டத்தில் கிராம அளவில் உள்ள வழிகாட்டி நபர்கள் 220 பேருக்கும் 16.02.2012 முதல் 19.02.2012 வரை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்வதற்கான பயிற்சி வகுப்பு மாவட்ட அளவில் வழங்கப்பட்டது.
- வேலூர் மாவட்டம் கனியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 24 கிராம ஊராட்சிகளிலும், மற்றும் விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அனைத்து 44 கிராம ஊராட்சிகளிலும் சமூக தணிக்கை செய்ய அட்டவணை தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் 07.03.2012 முதல் 20.3.2012 வரை சமூக தணிக்கை நடைபெற்றுள்ளது.
- அறிக்கையில் கண்டறியப்பட்டவைகளை மத்திய அரசின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**4.1.4.2. தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம்**

- சுதந்திர அமைப்பான தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் "தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்ட"த்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மதி.1) துறை, நாள் 27.07.2012ன் படி



தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கத்தின் அமைப்பு விவரம் பின்வருமாறு:

| வ.எண். | பதவி | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சமூக தணிக்கை இயக்குநர் | 1 |
| 2. | இணை இயக்குநர் | 2 |
| 3. | சமூக தணிக்கை வல்லுநர் | 1 |
| 4. | மாநில குழு கண்காணிப்பாளர்கள் | 4 |
| 5. | மாவட்ட ஆதார வல்லுநர்கள் | 44 |
| 6. | வட்டார ஆதார வல்லுநர்கள் | 1,235 |
| 7. | கிராம ஊராட்சி ஆதார வல்லுநர்கள் | 62,620 |

- இயக்குநர், இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- சமூக தணிக்கை வல்லுநர், மாநில குழு கண்காணிப்பாளர்கள், மாவட்ட ஆதார வல்லுநர்கள் மற்றும் வட்டார ஆதார வல்லுநர்கள் ஆகியோர் மே, 2013க்குள் பணியமர்த்தப்படுவார்கள்.
- சமூக தணிக்கை கையேடு தயாரிக்கப்பட்டு வருகிறது.
- கிராம ஊராட்சி ஆதார வல்லுநர்களை ஈர்க்கும் பணியும் மே, 2013க்குள் முடிவடையும்.

- சமூகத்தணிக்கை **2013–14**ம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**4.1.5. வங்கிகள் மூலமாக ஊதியம் வழங்கும் முறை**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ''ஊதியக்குழு'' மூலம் நேரடியாக ஊதியம் வழங்கும் முறையை நிறுத்துவது என அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, கீழ்க்கண்ட நோக்கங்களுடன் வங்கிகள் மூலம் ஊதியம் வழங்கும் முறை படிப்படியாக செயல்படுத்தப்படும். இதனால்

i) ஊதியம் வழங்கும் முறையில் உள்ள முளைகேடுகள் களையப்படும் மற்றும்

ii) பணி வழங்குகின்ற முகமையும், ஊதியம் வழங்கும் முகமையும் வேறுவேறாக இருக்கும்.

இதனடிப்படையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இத்திட்டத்தின் கீழ் **82** இலட்சம் தொழிலாளர்களுக்கு வங்கி கணக்குகள் துவங்கப்பட்டுள்ளது.
- தற்பொழுது **385** கிராம ஊராட்சிகளில் (அதாவது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஊராட்சி வீதம்) வங்கி மூலம் ஊதியம் வழங்கும் முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- காஞ்சிபுரம், திருவள்ளூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள அனைத்து **1,744** கிராம ஊராட்சிகளிலும் உள்ள **6.24** இலட்சம் தொழிலாளர்களுக்கான ஊதியம் வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது.



- தமிழ்நாட்டில் மீதமுள்ள **10,780** கிராம ஊராட்சிகளிலும் **01.04.2013** முதல் ஊதியம் வங்கிகள் மூலம் வழங்கப்படும். இதனால் முதல் கட்டமாக தொடர்ந்து பணிபுரியும் **31** இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

**மின்னணு நிதி பரிமாற்ற முறை (e-FMS) மூலம் ஊதியம் வழங்குதல்**

- ஒவ்வொரு தொழிலாளர் வங்கிக் கணக்குகளுக்கும் ஒரு மத்திய/தொடர்பு மையத்திலிருந்து நேரடியாக ஊதியம் வழங்குமுறையாக விளங்கும் மின்னணு நிதி பரிமாற்ற முறையினை **2012–13**ம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் முன்மாதிரியாக செயல்படுத்தப்பட்டது.
- **2013–14**ம் ஆண்டில் எஞ்சிய அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக மின்னணு நிதி பரிமாற்ற முறை செயல்படுத்தப்படும்.

**வங்கித் தொடர்பாளர்களை நியமித்தல்**
**(Banking Correspondent)**

- வங்கிகள் மூலம் தனிநபர்கள்/ தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கும் முறை வெற்றி பெறுவது வங்கிகள் பணம் வழங்குவதற்கான நிலையான அமைப்பினை ஏற்படுத்துவதை பொறுத்து அமையும்.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் 31.03.2013க்குள் வங்கித் தொடர்பாளர்களை நியமிக்க முடிவு செய்துள்ளது.
- பணம் வழங்கும் முறையினை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வங்கித் தொடர்பாளர்களாக நியமிக்கப்பட உள்ளனர்.

**4.1.6. 2012–13ம் ஆண்டில் வறட்சி நிலையினை எதிர்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தமிழகத்தின் அனைத்து பகுதிகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அரசாணை (நிலை) எண்.48 வருவாய்(வ.நி.3–1) துறை நாள் 13.02.2013–ஐ தொடர்ந்து வெளியிடப்பட்ட தமிழக அரசிதழ் அறிக்கை எண்.45 வருவாய் துறை நாள் 20.02.2013ன் படி அறிவிக்கப்பட்டது.

அதன்படி:

- **வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து 31 மாவட்டங்களிலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்படி தற்போதுள்ள 100 நாட்கள் வேலைவாய்ப்பினை 150 நாட்களாக 2012–13ம் நிதியாண்டில் 21.02.2013 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.**



- **இத்திட்டத்தின்படி ரூ.181 கோடி மதிப்பீட்டில் 15,000 பண்ணைக்குட்டைகள் 8 டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், நாகப்பட்டிணம், கடலூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ளன.**
- **இதற்கும் மேலாக ரூ.1336 கோடி மதிப்பீட்டிலான பணிகளை டெல்டா பகுதிகளிலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படவும் உள்ளது.**
- இவ்வாறாக டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த 20.24 இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களும் இதர 26 மாவட்டங்களைச் சேர்ந்த 100 நாட்கள் வேலை செய்து முடித்த 3.34 இலட்சம் குடும்பங்களும் கூடுதல் வேலைவாய்ப்பினை பெறும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- வேலைவாய்ப்பு வழங்குவதற்கான முன்திட்டமிடலின் (Projected) அடிப்படையில், 100 நாட்கள் வேலை செய்து முடித்த மற்றும் 100 நாட்கள் வேலைவாய்ப்பினை நிறைவு செய்யாத குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் விதமாக அனைத்து மாவட்டங்களிலும் கூடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் பின்வருமாறு:
  - **20.03.2013** வரை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் **100** நாட்கள் பணிபுரிந்த **8,50,894** குடும்பங்களை சார்ந்த **9,66,428** தொழிலாளர்கள் மேலும் பணிபுரிந்தனர்.
  - **20.03.2013** வரை, எட்டு டெல்டா மாவட்டங்களில், **14,010** பண்ணைக் குட்டைகள் அமைத்திட உத்திரவிடப்பட்டு, **1,100** பண்ணைக் குட்டைகளை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
  - வறட்சியாக அறிவிக்கப்பட்ட பிறகு **20.03.2013** வரை, **1,575** பணிகள் துவங்கப்பட்டு ரூ.**86** கோடி செலவழிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. **26,518** பணிகள் ரூ.**648.64** கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. எனவே, எட்டு டெல்டா மாவட்டங்களிலும், மொத்தம் ரூ.**734.65** கோடி செலவில் **28,093** பணிகள் வறட்சியை போக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**4.1.7. 2013–14ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள புதிய முன்முயற்சிகள்**

➢ **2013–14**ம் ஆண்டில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ்



அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழிலாளர் வரவுசெலவு திட்டம் ரூ.**6341.80** கோடியில் **42.85** கோடி மனிதசக்தி நாட்கள் உருவாக்கப்படும்.

➢ **2013–14**ம் ஆண்டில் பின்வரும் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்:

- மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை செயல்படுத்தும் மற்றும் கண்காணிக்கும் அலுவலர்கள் அனைத்து நிலையிலும் கூடுதலாக நியமிக்கப்படுவார்கள்.
- உருவாக்கப்படும் சொத்துக்களின் தரத்தினை கண்காணிக்கும் வகையிலும் மூன்றாவது நிலை கண்காணிப்பு (Third Party Monitoring) என்கிற அடிப்படையில், தனியாக மாநில தர கட்டுபாட்டு ஆய்வாளர்கள் (State Qualtiy Monitors) நியமிக்கப்படுவார்கள்.
- மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் ஒட்டுமொத்த நிதியில், ரூ.**100** கோடி மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சொத்துக்களை நிலைநிறுத்தும் பணிகளுக்காக ஒதுக்கப்படும்.
- ஊரகப் பகுதிகளில் பசுமைச் சூழலை வளர்த்திடும் வகையில், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள ஊராட்சி/வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலங்களில் காடுவளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

- கடற்கரையோரம் உள்ள கிராம ஊராட்சிகளில் உப்பு நீரைத் தாங்கி வளரும் மரங்களை வளர்த்திட சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- மாநிலத்தில் உள்ள 31 மாவட்டங்களிலும் படிப்படியாக மின்னணு நிதி பரிமாற்ற முறை அமல்படுத்தப்படும்.
- மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் பிரிவு 7ன்படி வேலையில்லாப் படி வழங்குவதற்கான விதிகள் வெளியிடப்படும்.
- மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, பணித்தள பொறுப்பாளருக்கு (mate) உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, அவர்கள் தங்களது பணிகளுக்கு பொறுப்பாக்கப்படுவார்கள்.

### 4.2 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு அங்கமாக இருந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், தனித்திட்டமாக 1997–98 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும், வீடில்லாத ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித்தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும்



நபர்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள், தேர்வு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்திற்கான ஒரு நிதியாண்டின் மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 60 விழுக்காடு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு (SC/ST) புதிய வீடுகள் மற்றும் கச்சா வீடுகளை மேம்பாடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக 40 விழுக்காடு ஒதுக்கீடு, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மேற்கண்ட இனங்களில் 3 விழுக்காடானது, உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு ஒதுக்கப்படுகிறது. மொத்த வீடுகளில் 15 விழுக்காட்டினை சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு மாநில அரசுகளை கேட்டுக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு 75:25 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2011–12 ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒரு வீட்டுக்கான அலகுத்தொகை ரூ.45,000/– ஆக இருந்தது. இதில் மத்திய அரசின் பங்குத்தொகை ரூ.33,750/– ஆகவும், மாநில அரசின் பங்குத்தொகை ரூ.11,250/– ஆகவும் இருந்தது. **கட்டுமானப்பொருட்களின் விலையேற்றத்தினைக் கருத்தில் கொண்டு கான்கிரீட் கூரை அமைப்பதற்காக மாநில அரசு வழங்கும் கூடுதல் நிதியினை இந்த அரசு ரூ.30,000/– லிருந்து ரூ.55,000/– ஆக அரசாணை எண் 87 ஊரக**

**வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி1) துறை, நாள் 16.11.2011 மூலம் உயர்த்தியுள்ளது.** அதன்படி, தமிழ்நாட்டில் இந்திரா நினைவுக்குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒரு வீட்டிற்கான அலகுத்தொகை 2011–12 ஆம் ஆண்டில் ரூ.1 இலட்சமாக இருந்தது. இதில் மாநில அரசின் பங்குத்தொகை மட்டும் ரூ.66,250/– (66.25%), மத்திய அரசின் பங்குத்தொகை ரூ.33,750/– (33.75%) ஆகும். 2011–12ம் ஆண்டில் 1,00,553 வீடுகள் ரூ.1005.53 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

2012–13ம் ஆண்டில் 1,11,410 வீடுகள் கட்ட ரூ.1114.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 72,369 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலுள்ள அனைத்து நிலுவை வீடுகளும் ஏப்ரல் 2013 இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

மத்திய அரசு தற்போது, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் அலகுத்தொகையினை 2013–14ம் ஆண்டு முதல் ரூ.45,000/–லிருந்து ரூ.70,000/–ஆக உயர்த்தியுள்ளது. இருப்பினும், தமிழ்நாட்டின் அலகுத்தொகையான ரூ.1 இலட்சத்தினை விட ரூ.70,000/– என்பது மிகக் குறைவானதே ஆகும். **2013–14ம் நிதி ஆண்டிலும், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 1 லட்சம் வீடுகள் கட்டித்தரப்படும்.**



### 4.3. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஏற்கெனவே பல்வேறு மாநிலத் திட்டங்கள் மற்றும் மத்திய திட்டங்களால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியினை நிரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய அரசு, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியினை ரூ. 2 கோடியிலிருந்து ரூ. 5 கோடியாக 2011-12–ம் ஆண்டு முதல் உயர்த்தியுள்ளது. நிர்வாக செலவினங்களுக்காக மொத்த ஒதுக்கீட்டில் வழங்கப்பட்ட தொகை 0.5 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக 2011-12–ம் ஆண்டு முதல் உயர்த்தியுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும் மேலும் தடை செய்யப்பட்ட பணிகள் குறித்து வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற பணிகள் பராமரிப்பு பணிகளாக கருதப்பட்டு இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய இயலாது.

இத்திட்டத்தின் கீழ் 2012-13–ம் ஆண்டிற்கு ரூ.295 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 4,534 பணிகள் ரூ.224.94 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்

கொள்ளப்பட்டு, **1,303** பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.

| வ.எண். | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | அங்கன்வாடி / சமையல் கூட கட்டிடங்கள் | 35 | 1.58 |
| 2 | பள்ளி /கல்லூரி கட்டிடங்கள் | 104 | 11.82 |
| 3 | பள்ளிகளுக்கான தளவாடங்கள் /மருத்துவமனை உபகரனங்கள் | 93 | 4.71 |
| 4 | சமுதாயக் கூடங்கள் | 145 | 19.06 |
| 5 | நியாயவிலைக் கடை கட்டிடங்கள் | 90 | 4.96 |
| 6 | சாலைகள் மற்றும் பாலங்கள் | 1352 | 72.66 |
| 7 | குடிநீர் பணிகள் | 1012 | 25.17 |
| 8 | தெரு விளக்குகள் | 294 | 10.07 |
| 9 | இதர பணிகள் | 1409 | 74.91 |
| | **மொத்தம்** | **4534** | **224.94** |

**2013-14–ம்** ஆண்டில் இத்திட்டத்திற்கென உத்தேசமாக ரூ. **295** கோடி மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும்.



### 4.4 முழு சுகாதார இயக்கம் / நிர்மல் பாரத் அபியான்

ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி, திறந்தவெளி மலம் கழித்தலை அடியோடு ஒழிப்பதை உறுதி செய்யும் பொருட்டு மத்திய அரசின் ராஜீவ்காந்தி தேசிய குடிநீர் இயக்கத்தினால் “முழு சுகாதார இயக்கம்” என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஊரக சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அனைத்து வீடுகளுக்கும் தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள், சுகாதாரப் பழக்கங்களில் முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தேவையின் அடிப்படையிலும், மக்களை மையப்படுத்தியும் ஊரக ஏழைக் குடும்பங்கள் குறைந்த அளவு மானியத்துடன் கூடிய கழிப்பிடங்கள் கட்டுவதற்கு இத்திட்டம் ஊக்கம் அளிக்கிறது. ஊராட்சி அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளை ஈடுபடுத்தி, செய்தி, கல்வி மற்றும் தொடர்பு, திறன் வளர்த்தல் மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவற்றைச் செம்மையாக அளிப்பதன் மூலம் ஊரக மக்களின் செயல்பாடுகளில் மாற்றம் கொண்டுவருவதை முழு சுகாதார இயக்கம் வலியுறுத்துகிறது. முழு சுகாதார இயக்கம் **1999** ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, முதலில் கடலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் பின்னர் **2004** ஆம் ஆண்டுக்குள் அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டமானது தற்போது “நிர்மல் பாரத் அபியான்” என பெயர் மாற்றம் செய்யப்பட்டு திருத்திய வழிகாட்டு

நெறிமுறைகள் மத்திய அரசினால் வெளியிடப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு :

- நிறைவுபடுத்தும் அணுகுமுறையைக் (Saturation approach) கையாண்டு, தூய்மையான கிராம ஊராட்சிகளை உருவாக்குவதற்கு சுகாதார மேம்பாட்டினை ஊரக பகுதிகளில் மென்மேலும் ஊக்குவித்தல் அவசியம் .
- கிராம ஊராட்சியை அடிப்படை அலகாகக் கொண்டு நிர்மல் பாரத் அபியான் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் வசதி உள்ள குக்கிராமங்கள் அடங்கிய கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை தரப்படும்.
- நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளையும் தூய்மை கிராமங்களாக மாற்றி, 2022 ஆம் ஆண்டுக்குள் ஒரு தூய்மையான பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்கினை அடைவதற்கு, ஊரகப் பகுதிகளில் சுகாதார பணிகளை முடுக்கி விடுதல்.
- இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் மட்டுமல்லாமல் வறுமை கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், வீடு உள்ள ஆனால் நிலமற்ற விவசாய உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள்



தலைமையில் செயல்படும் குடும்பங்கள் ஆகியோர் தனி நபர் கழிப்பறைகள் கட்டுவதற்கான மானியம் பெறுவதற்குத் தகுதியுடையவராவர்.

- தனி நபர் கழிப்பறை கட்டுவதற்கான மானிய அலகுத் தொகை ரூ.3,200/– லிருந்து ரூ.4,600/– ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது (கடினமான மற்றும் மலைப்பிரதேசங்களுக்கு ரூ.5,100/–). இதில் மத்திய அரசின் பங்கு ரூ.3,200/– ஆகும். (கடினமான மற்றும் மலைப்பிரதேசங்களுக்கு மத்திய அரசின் மானியத் தொகை ரூ.3,700/–). மாநில அரசின் பங்கு ரூ.1,400/– ஆகும். பயனாளியின் குறைந்தபட்ச பங்கு ரூ.900/– ஆகும்.
- அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்கீழ் ஊரக பகுதிகளில் முறையான சுகாதார வசதிகள் பெறாது விடுபட்டுள்ள அரசுப் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை செய்து தருதல், மாணவர்களிடம் சுகாதார பழக்கங்களை வளர்த்தல் மற்றும் சுகாதார கல்வி வளர்ச்சிக்கு தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஏற்றவாறு இணைந்து செயல்பட வழிவகுக்கிறது.
- நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின்கீழ் சுகாதார வசதிகளை பெருக்குவதற்கு பயனாளிகளுக்குத்

தரப்படும் மானிய வசதிகளை, இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் பயனாளிகளால் கட்டப்பட்ட அனைத்து வீடுகளும் அல்லது கழிப்பறை சேர்க்கப்படாத இதர மாநில வீட்டுவசதி குடியிருப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகளும் பெற தகுதியானவை.

- திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை பணிகளானது ஏற்கனவே நிர்மல் கிராம் புரஸ்கார் விருது பெற்ற மற்றும் விருதிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள ஊராட்சிகளில் மேற்கொள்ளலாம். நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை பணிகளுக்கான நிதியுதவி கிராம ஊராட்களில் உள்ள மொத்த குடியிருப்பு வீடுகளின் அடிப்படையில் அதிகபட்சமாக கீழ் கண்டவாறு கணக்கிடப்படும்.
  1. 150 வீடுகள் வரை ரூ.7 லட்சம்
  2. 300 வீடுகள் வரை ரூ.12 லட்சம்
  3. 500 வீடுகள் வரை ரூ.15 லட்சம் மற்றும்
  4. 500 வீடுகளுக்கு மேல் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு ரூ.20 லட்சம்

மத்திய, மாநில மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகைக்கான பங்கீட்டு விவரம் பின்வருமாறு :



| வ. எண் | கூறுகள் | மத்திய அரசு | மாநில அரசு | பயனாளியின் பங்குத் தொகை | மொத்த அலகுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | தனிநபர் இல்லக் கழிப்பறை | 3,200 | 2,500* | 900 | 6,600 |
| 2 | பள்ளிக் கழிப்பறை | 24,500 (70%) | 10,500 (30%) | 0 | 35,000 |
| 3 | அங்கன்வாடி கழிப்பறை | 5,600 (70%) | 2,400 (30%) | 0 | 8,000 |
| 4 | சுகாதார வளாகங்கள் | 1,20,000 (60%) | 60,000 (30%) | 20,000 (10%) | 2,00,000 |
| 5 | திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை | 70% | 30% | 0 | |

***மாநில அரசின் கூடுதல் பங்குத்தொகையும் சேர்ந்தது.**

**தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு வழங்கப்படும் மானியம் குறைவாக உள்ளதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட மாநில அரசின் பங்குத் தொகையான ரூ.1,400—ஐ ரூ.2,500 ஆக உயர்த்தி தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.**

### 4.4.1 தனிநபர் இல்லக்கழிப்பறைகள்

இதன் முக்கிய நோக்கம்

- ஊரகப் பகுதிகளில், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
- ஊரகப் பகுதிகளில் சுகாதாரம் முழுமை பெறுவதை விரைவுபடுத்துதல்.

- சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் சுகாதார வசதியின் அவசியத்தை உணரச் செய்தல்.
- திறந்தவெளி மலங்கழிக்கும் பழக்கத்தை முற்றிலும் அகற்றி, தண்ணீர் மற்றும் உணவு மாசுபடுதலைத் தடுத்தல்.
- உலர் கழிப்பிடங்களைத் (dry latrines) தண்ணீர் ஊற்றிப் பயன்படுத்தும் கழிப்பிடங்களாக (flush out latrines) மாற்றுவதன் மூலம் மனித கழிவுகளைத் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு சுத்தப்படுத்தும் அவல நிலையை அகற்றுதல்.

தமிழ்நாட்டில் கட்டப்பட வேண்டிய இலக்கான **86,67,088** தனி நபர் இல்லக் கழிப்பிடங்களில் **71,12,683** கழிப்பறைகள் இதுவரை கட்டப்பட்டுள்ளன.

**4.4.2 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்து சுகாதாரப் பணிகளை செயல்படுத்துதல்**

சுகாதார வசதிகளைப் பொறுத்த வேலைகளை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வது தொடர்பாக ஜுன் – செப்டம்பர் **2012**ல் மத்திய அரசு விரிவான நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

தமிழக ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, தனி நபர் இல்லக்கழிப்பறை கட்டுதல் மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டப்பணிகளை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் நிர்மல் பாரத் அபியான் திட்டம் இரண்டினையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டு அரசாணை(நிலை) எண்.**121** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் **28.11.2012**–ல் அரசு ஆணையிட்டுள்ளது.



**4.4.3 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் சுகாதார மேம்பாடுகள் தொடர்பாக ஊரக பகுதிகளில் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகள்**

(அ) நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் கட்டப்படும் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு அதிகபட்சமாக **20** திறன் சாரா பணியாளர்களும், **6** திறன் சார்ந்த பணியாளர்களும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) ஏற்கனவே நிர்மல் கிராமத்திற்கான தகுதிகளை அடைந்த அல்லது நிர்மல் கிராமத்திற்கான தகுதிகளை அடையவுள்ள கிராமங்களில் மேற்கொள்ளப்படும் எருக்குழிகள், மண்வாறுகால், உறிஞ்சு குழிகள், மறுசுழற்சி குழிகள் மற்றும் பார்த்தீனியம் களை நீக்குதல் உள்ளிட்ட முட்புதர்களை அகற்றுதல் போன்ற திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைப்பணிகள்.

**4.4.3.1 தனிநபர் இல்லக்கழிப்பறை கட்டுதல்**

**4.4.3.1 .1 அலகுத்தொகை மற்றும் வடிவமைப்பு**

தனிநபர் இல்லக்கழிப்பறை கட்டுவதற்கான அலகுத்தொகை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1) | மத்திய அரசின் பங்கு * | ரூ.3,200 |
| 2) | மாநில அரசின் பங்கு ** (மாநில அரசால் வழங்கப்படும் கூடுதல் தொகை உள்ளிட்டது) | ரூ.2,500 |
| 3) | பயனாளி பங்குத் தொகை | ரூ. 900 |
| | நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின்கீழ் **அலகுத் தொகை** | ரூ.6,600 |
| 4) | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திலிருந்து வழங்கப்படும் உதவித்தொகை | ரூ.4,500 |
| | **மொத்த அலகுத்தொகை** | **ரூ.11,100** |

* மலைப் பிரதேசம் மற்றும் கடினமான பகுதிகளுக்கு மத்திய அரசின் பங்கு ரூ.3700/– ஆகும்.

** தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கான வடிவமைப்பு, விரிவான மதிப்பீடு மற்றும் கழிப்பறைத் தொட்டிக்கான உழைப்பு சார்ந்த பகுதிக்கான கையேடு (Ready Reckoner) ஆகியவற்றுடன் தனிநபர் கழிப்பறை கட்டுமானத்திற்கு பயன்படுத்துவதற்கான மாதிரி தினசரி வருகை பதிவேடும் வழங்கப்பட்டுள்ளன.



**4.4.3.1 .2 தனிநபர் இல்லக்கழிவறை கட்டுவதற்காக நிர்மல் பாரத் அபியான் / மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகை/உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள்**

(அ) வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள்

(ஆ) வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு, குறு விவசாயிகள், வீடு உள்ள நிலமற்ற உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் தலைமையில் செயல்படும் குடும்பங்களும் இதில் அடங்கும். இவ்வகைக் குடும்பங்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஆதிந) மற்றும் தொடர்புடைய கிராம ஊராட்சித்தலைவரைக் கொண்ட குழுவால் கண்டறியப்பட்டு, தயாரிக்கப்படும் பட்டியல் கிராம சபையின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

(இ) இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் (IAY) அல்லது முதலமைச்சர் அவர்களின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை இல்லத் திட்டம் அல்லது மத்திய / மாநில அரசுகளின் இதர வீட்டுவசதித் திட்டத்தில் கட்டப்படும் அனைத்து வீடுகளும், நிர்மல் பாரத் அபியான் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின்கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறையுடன் கட்டத் தகுதியானவையாகும்.

இருப்பினும், முழு சுகாதார இயக்கம் / நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின்கீழ் ஏற்கனவே தனிநபர்

இல்லக்கழிப்பறை கட்டுவதற்குப் பயன்பெற்றவர்களும், வீடுகளில் ஏற்கனவே கழிப்பறை உள்ள குடும்பங்களும் இந்த உதவித் தொகை / ஊக்கத் தொகையைப் பெற தகுதியுடையவர்கள் அல்லர்.

**4.4.4 வேலைகளுக்கான அனுமதி**

கிராம ஊராட்சியில் தனிநபர் இல்லக்கழிப்பறை கட்டுவதற்கு விருப்பமுள்ள, தகுதிவாய்ந்த பயனாளிகளின் ஒருங்கிணைந்த பட்டியல் தயாரிக்கப்படும். கிராம சபையால் அந்த ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கான நிர்வாக அனுமதியானது, **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழான வேலைப் பகுதியையும் நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழான பொருட்கள் பகுதியையும் தெளிவாகக் குறிப்பிட்டு மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்/மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும்.**

**4.4.5. தனி நபர் இல்லக்கழிப்பறை வேலைகளைச் செயல்படுத்துதல்**

- கிராம ஊராட்சி மூலம் இத்திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும்.
- வேலை அட்டை வைத்திருப்பவர்கள் மட்டுமே வேலையின் திறன்சாரா பகுதிக்கு பணியாற்றலாம். தனிநபர் இல்லக்கழிப்பறைப் பணியில், பயனாளியும் கழிப்பறையின் கட்டுமானப்பணியில் பணியாற்றுவது அவசியம். பயனாளிக்குரிய வேலை அட்டை இல்லாத பயனாளிகள் அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும். இருப்பினும், இந்த நிபந்தனை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் தலைவர்களாக உள்ள குடும்பங்களுக்கு, அக்குடும்பங்களில் வயது வந்த உறுப்பினர்கள் வேறு யாரும் இல்லையென்றாலோ அல்லது பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களில், அக்குடும்பத்தலைவரின் வயது 60க்கு மேற்பட்டிருந்தாலோ, இந்நியதி தளர்த்தப்படும்.
- ஒரு சமயத்தில், ஒரு கிராம ஊராட்சியில் எடுக்க உத்தேசித்துள்ள ஒவ்வொரு 15 – 25 தனிநபர் இல்லக்கழிப்பறைகளுக்கும் (புவியியல் அடிப்படையில் அவற்றின் அமைவிடத்தை பொறுத்து) ஒரு பொறுப்பாளர் அமர்த்தப்படுவார்.

இவ்வாறு நியமனம் செய்யப்படும் பொறுப்பாளர் கீழ்க்கண்ட பணிகளுக்கு பொறுப்பாவார்:

(அ) அவருக்கு ஒதுக்கப்பட்ட கிராம ஊராட்சி / குடியிருப்புப் பகுதியின் தனிநபர் இல்லக் கழிப்பறைகளுக்கான தினசரி வருகைப் பதிவேட்டினை பராமரித்தல்.

(ஆ) திறன்சார்ந்த/ திறன்சாரா ஊழியர்கள் வருகையைப் பதிவு செய்தல்.

(இ) குறைந்தபட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வடிவில் கழிப்பறை கட்டப்படுவதை உறுதி செய்வதுடன் அவ்வாறு கட்டப்பட்டமைக்கான சான்று வழங்குதல்.

### 4.4.6 தொகை வழங்கும் விதம்

- தனிநபர் இல்லக் கழிப்பறை முழுமையாக முடிக்கப்பட்ட பின்னர், அவ்வேலையின் அளவீடு செய்யப்படும். சம்மந்தப்பட்ட பொறுப்பாளர், அவருக்கு ஒதுக்கப்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறை முடிக்கப்பெற்றவுடன், தினசரி வருகை பதிவேட்டில் மேலொப்பம் செய்வதுடன், வேலை முடித்ததற்கான சான்றளித்து, அதனை ஒன்றியப் பணி மேற்பார்வையாளரின் மேல் நடவடிக்கைக்காக ஒப்படைப்பார்.
- பின்னர், பணி மேற்பார்வையாளர் அளவீடுகளைப் பதிவு செய்து, மதிப்பீடு சான்று / முடிவுச் சான்றினை, தினசரி வருகைப் பதிவேட்டில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் பதிவுகள் செய்து, அதனை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (கிராம ஊராட்சி) ஒப்படைப்பார்.
- தினசரி வருகைப்பதிவேட்டைப் பெறும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), இரட்டைப் பிரதிகளில், நிதி விடுவிப்பு ஆணையைக் கிராம ஊராட்சிக்கு அளிப்பார். இவ்வேலைக்கு வழங்கப்படவேண்டிய கூலியைப் பொறுத்தவரை, கிராம ஊராட்சித்தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலரால் (கிராம ஊராட்சி) அனுமதிக்கப்பட்ட தொகையை கிராம ஊராட்சியால் பராமரிக்கப்பட்டுவரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட கணக்கிலிருந்து பெற்று அதனைப் பணியாளர்களுக்குரிய தினசரி வருகைப்பட்டியலில் பதிவு செய்து, தொகை பெற்றுக்கொண்டதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கையொப்பம் பெற்று வழங்க வேண்டும்.
- தினசரி வருகைப்பட்டியலின் நகல்கள் (வேலையாட்களுக்குத் தொகை வழங்கியமைக்கான கையொப்பம் பெற்ற பின்) வட்டார அலுவலகத்திலுள்ள நிர்மல் பாரத் அபியான் பிரிவு மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பிரிவு ஆகிய இரண்டிலும் தனித்தனியே பராமரிக்க வேண்டும்.

### 4.4.7 திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை

- ஏற்கனவே நிர்மல் கிராம புரஸ்கார் விருது பெற்ற கிராம ஊராட்சிகள் அல்லது அவ்வாண்டில் நிர்மல் கிராமமாக 'நிறைவடையும்' (Saturation) அணுகுமுறைப்படி முன்மொழியப்பட்ட கிராம ஊராட்சிகள் இவற்றில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைப் பணிகள் வேலைகள் மேற்கொள்ளப்படும். நிர்மல் கிராம் புரஸ்கார் விருது பெற்ற கிராம ஊராட்சிகளில், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை தந்து, திட மற்றும்

திரவக் கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

- இத்திட்டம் சார்ந்த கிராம ஊராட்சியே இதனைச் செயல்படுத்தும் அமைப்பாகும்.
- திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கிராம ஊராட்சியின் ஒவ்வொரு குடியிருப்பிலும் மேற்கொள்ளப்படும் வேலைகளைத் தனிப்பட்ட வேலையாகக் கருதப்படவேண்டும். அதன்படி தினசரி வருகைப் பதிவேடுப் படிவமும் வழங்கப்படவேண்டும்.
- தற்போது நடைமுறையில் உள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் தினசரி வருகைப் பட்டியலே திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும்.
- ஒரு குடியிருப்பில் நடைபெறும் ஒவ்வொரு வேலையையும் மேற்பார்வையிட நியமிக்கப்படும் நபருக்கு, நாள் ஒன்றுக்கு ரூ.132/– வழங்கப்படும். அவர் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வார்.

(அ) முன்னுரிமை அடிப்படையில் வேலைகளை ஒதுக்கீடு செய்தல்

(ஆ) ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் வேலையாட்களை ஒதுக்கீடு செய்தல்



(இ) எருக்குழி, மண் வாறுகால், உறிஞ்சு குழி போன்ற வேலைகளாக இருப்பின் முன்குறியீடு (pre-marking) செய்தல்

(ஈ) மண் வாறுகால் வேலை செய்யும்போது திரவக் கழிவு எவ்விதத் தடையுமின்றி இறுதி இடத்தைச் சேர்வதற்கு தேவையான அளவு சருக்கல் / சரிவு இருத்தலை உறுதிசெய்தல்

(உ) வருகைப் பதிவேடு பராமரித்தல் மற்றும் வருகையைப் பதிவு செய்தல்

(ஊ) ஊராட்சி செயலாளரிடம் தேவையான அனைத்து சுருக்கப்பட்டியலுடன் வருகைப் பதிவேட்டினை ஒப்படைத்தல்.

- திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை வேலைகளில் ஒப்பந்தக்காரர் அனுமதிக்கப் படுவதில்லை என்பதுடன் இயந்திரங்களையும் ஈடுபடுத்தக் கூடாது.

### 4.4.7.1 திடக்கழிவு மேலாண்மை

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைக்காகத் தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில் இயற்கையாக மக்கும் தன்மை கொண்ட கழிவு மற்றும் அகற்றப்பட்ட பார்த்தீனியக் களை உள்ளிட்ட கழிவுகளைச் சேகரிப்பதற்கான எருக்குழி ஏற்படுத்துவது முக்கியமான பணியாகும்.

### 4.4.7.1.1 இயற்கையாக மக்கும் கழிவுகளுக்கான உரக்கிடங்கு

இயற்கையாக மக்கும் தன்மையுடைய கழிவுகளுக்கான உரக்கிடங்கு 5மீ X5மீ அளவில் கீழ் மட்டமும், 9.50 மீ X 9.50 மீ அளவில் மேல் மட்டமும் கொண்ட சரிவக (trapezoidal) வடிவ எருக்குழியை ஒவ்வொரு குடியிருப்பிலும் ஏற்படுத்தலாம்.

### 4.4.7.1 .2 முட்புதர்களை அழித்தல் மற்றும் பார்த்தீனியக் களையை அகற்றுதல்

குடியிருப்பிலும் அதனைச் சுற்றிலும் உள்ள பார்த்தீனியக் களை உள்ளிட்ட புதர்கள் கிராமங்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். குறிப்பிட்ட இடைவெளியில் அவ்வப்போது களைகள் அகற்றப்படவேண்டும். இவ்வகையான வேலைகளுக்குரிய மதிப்பீடு மற்றும் அளவீடு செய்வதற்கு, ஊரக விலைப் பட்டியலைப் பயன்படுத்த வேண்டும்.

### 4.4.7.2 திரவக் கழிவு மேலாண்மை

திரவக் கழிவு மேலாண்மையின்கீழ் தெருக்களில் மண் வடிகால் அமைத்தல் மற்றும் உறிஞ்சுகுழி அமைத்தல் ஆகியவை முக்கிய பணிகளாகக் கருதப்படும்.

- எங்கெல்லாம் மண் வடிகால் தேவையோ அங்கு 0.60 மீ அகலமும் 0.45 மீ ஆழமும் கொண்ட மண் வடிகால்களை முக்கிய வடிகாலுடன் முறையாக இணைக்கும் பணியை மேற்கொள்ளலாம். அதேபோன்று குடியிருப்பு அமைந்துள்ள நிலப்பகுதியைப் பொறுத்து, மழைநீர் தேங்காமல் வழிந்தோட மண் வடிகால் அமைக்கத் திட்டமிடவேண்டும்.
- மண்வடிகால் முடிவடையும் இடங்களில் 1.50 மீ விட்டமும் 1.50 மீ ஆழமும் கொண்ட உறிஞ்சுகுழிகள் தேவைப்படுமிடங்களில் அமைக்கப்பட வேண்டும். இவ்வுறிஞ்சு குழிகளை உள்ளூரிலேயே கிடைக்கும் பெருஞ்ஜல்லி மற்றும் மணலால் நிரப்பவேண்டும்.
- கைப்பம்புகள் மற்றும் சிறு மின்விசைப் பம்பு அமைந்துள்ள பகுதிகளில், தேவையான இடங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களைக் கொண்டு, 1.50 மீ விட்டமும் 1.50 மீ ஆழமும் கொண்ட உறிஞ்சுகுழிகள் அமைக்கப்பட வேண்டும். இவ்வுறிஞ்சுகுழிகளை உள்ளூரிலேயே கிடைக்கும் பெருஞ்ஜல்லி மற்றும் மணலால் நிரப்பவேண்டும்.

### 4.4.8 திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைப் பணிகளை செயல்படுத்துதல்

- ஒரு குடியிருப்புப் பகுதிக்குத் தேவையான கழிவு உரக்குழி, மண்வாறுகால் மற்றும் உறிஞ்சு குழி போன்ற வேலைகளுக்கான மதிப்பீடு தயார் செய்யும் பொழுது அவற்றை ஒரே வேலையாகக் கருதவேண்டும்.

- பணி செயல்படுத்தப்படும்பொழுது முட்புதர்கள் மற்றும் பார்த்தீனியக்களை ஆகியவற்றை அகற்றும் பணி முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பெரும்புதர் அகற்றுதல் மற்றும் பார்த்தீனியக் களை நீக்கும் பணி முடிக்கப்பட்டபின், எருக்குழி தோண்டுதல், மண் வடிகால் அமைத்தல் மற்றும் உறிஞ்சுகுழி அமைத்தல் போன்ற பணிகளில் பணியாட்களை ஈடுபடுத்தலாம்.
- ஒரு குடியிருப்பில் உள்ள அனைத்து திடக்கழிவு, திரவக்கழிவு மேலாண்மை வேலைகளும் முடிக்கப்பட்ட பின்னரே, அவ்வேலை முடிக்கப்பட்டதாகக் கருதப்படும்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நடைமுறைகளின்படி, பணி மேற்பார்வையாளரால் வேலைகள் அளவீடுகள் செய்யப்படும். மேலும், வேலையின் அளவீடுப் பதிவுகள் மற்றும் பணிபற்றிய கணிப்பு ஆகியவை அளவுப் புத்தகத்திலும் வருகைப் பதிவேட்டிலும் பதிவு செய்யப்படும்.
- வாராந்திர வருகைப்பதிவேடு (NMR) மற்றும் அளவு விவரங்கள் வரப்பெற்றவுடன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) பட்டியலை சரிபார்த்து கிராம ஊராட்சிக்கு நிதி விடுப்பு ஆணையை வழங்குவார். கிராம ஊராட்சி இப்பணிக்கான தொகையினைப் பெற்று வழங்கும்.



- திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைப் பணி முடிந்தவுடன், குடும்ப வேலை வாய்ப்புப் பதிவேட்டில் (மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட ஊராட்சி படிவம்–3) வேலை அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட வேலை விபரம் குறித்து உரிய பதிவுகள் செய்யப்படும்.

**2013–2014 ஆம் ஆண்டில் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை திட்டத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 2013–14 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை முறையை செயல்படுத்துவதற்காக நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்படுமென அறிவித்துள்ளார்கள். மேலும், 2013–14 ஆம் ஆண்டில் 'நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய ரூ.97.85 கோடி நிதியிலிருந்தும், திடக்கழிவு நீர் மேலாண்மைப் பணிகள் செயல்படுத்தப்படும்.**

### 4.4.9. பள்ளி சுகாதாரமும், சுகாதாரக் கல்வியும்

மாணவர்கள், புதிய சிந்தனைகளை உடன் ஏற்றுக்கொள்ளும் திறன் கொண்டவர்களாதலால் திறந்தவெளி மலம் கழித்தலைத் தவிர்த்துக் கழிப்பிடங்களை உபயோகிப்பதைக் கல்வி மற்றும் ஊக்கப்படுத்துதல் மூலம் அவர்களின் எண்ணங்கள் மற்றும் நடவடிக்கைகளை மாற்றுவதில் பள்ளிகளும், அங்கன்வாடிகளும் சிறந்த பங்கு வகிக்கின்றன. ஆசிரியர்கள் புகட்டும் சுகாதாரக் கல்வி மற்றும் கழிப்பிடங்களை உபயோகிப்பதால் கிடைக்கும்

அனுபவம் ஆகியவை மாணவர்கள் மூலம் வீடுகளை அடைந்து அதன் மூலம் பெற்றோர்கள் சுகாதாரப் பழக்கங்களைக் கடைபிடிக்க ஏதுவாகும். எனவே, பள்ளி சுகாதாரம், முழு சுகாதாரத் திட்டத்தில் முக்கியப் பங்காற்றுகிறது. ஆரம்பப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மற்றும் அங்கன்வாடி மையங்கள் என அனைத்து வகையான அரசு கல்வி நிறுவனங்களிலும் இத்திட்டத்தின் மூலம் கழிப்பிடங்கள் கட்டப்படுகின்றன. பெண்கள் பயிலும் பள்ளிகளில் கழிப்பறை கட்ட அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.

சுகாதாரம் மற்றும் சுகாதாரக் கல்வி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பள்ளிக் கல்வித்துறையுடன் ஒருங்கிணைந்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்துப் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தித் தருவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது.

நிர்மல் பாரத் அபியான் திட்டத்தில் பள்ளி சுகாதாரத்திற்கான மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி 70:30 என்ற விகிதத்தில் அளிக்கப்படுகிறது. இதுவரை ரூ.111.55 கோடி செலவில் 46,986 பள்ளிக்கழிப்பிடங்கள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வித் துறையினரால் அளிக்கப்பட்ட பட்டியலில் கண்ட பள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டு கழிப்பறைகள் இல்லாத 2,057 பள்ளிகளிலும் கழிப்பறை கட்ட



உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 4.4.10 அங்கன்வாடி கழிப்பறைகள்

குழந்தைகளின் இளவயதிலேயே சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் அங்கன்வாடிக் கழிப்பறைகள் அமைத்து அதனைப் பயன்படுத்தச் செய்வதன் மூலம் அவர்களிடையே சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றச் செய்து மாணவர்களுக்கும், அங்கன்வாடிகளில் இருந்து மாணவர்களை அழைத்துச் செல்ல வருகைதரும் தாய்மார்களுக்கும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவசியமாகும். அங்கன்வாடிகளில் குழந்தைகள் பயன்படுத்துவதற்கேற்ற கழிப்பிடங்கள் அமைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் இதுவரை 26,347 அங்கன்வாடிக் கழிப்பிடங்கள் ரூ.16.81 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. செயல்படும் கழிப்பறைகள் இல்லாத அங்கன்வாடி மையங்கள் கணக்கெடுக்கப்பட்டு அவற்றிலும் கழிப்பறை கட்டித் தரப்படுகின்றன.

### 4.4.11 சமூக சுகாதார வளாகங்கள்

முழு சுகாதார இயக்கத்தில், சமூக சுகாதார வளாகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. கிராமத்தில் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் எளிதில் அணுகக்கூடிய இடத்தில் சுகாதார வளாகங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வளாகங்களை, கிராம ஊராட்சிகள் முறையாகப்

பராமரிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும் அல்லது அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாயப் பங்குத் தொகை 60:30:10 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. கிராம ஊராட்சியும், சமுதாயப் பங்களிப்பை அளிக்கலாம். இதுவரை 1,732 வளாகங்கள் ரூ.27 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

**4.4.12 ஊரக சுகாதார அங்காடிகள்**

ஊரக சுகாதார அங்காடிகள், சமூக நோக்குடன் உள்ள வர்த்தகச் செயல்பாட்டு அமைப்பு ஆகும். சுகாதார வளாகங்கள் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள தனி நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு கழிப்பறை கட்டத் தேவையான பொருட்களை வழங்குவதே ஊரக சுகாதார அங்காடிகளின் நோக்கமாகும். சம்மந்தப்பட்ட பகுதிகளுக்கேற்ற தொழில் நுட்பம் மற்றும் நிதி வசதிகளுக்கு ஏற்பக் கட்டப்படும் பல்வேறு விதமான கழிப்பிடங்களுக்கான பொருட்கள், அவை சார்ந்த சேவை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை இதன் குறிக்கோளாகும். இந்த அங்காடிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிர் நிறுவனங்கள், ஊராட்சி அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளால் துவக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்திலுள்ள 31 மாவட்டங்களில், 195 அங்காடிகள் ரூ.2.93 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.



**4.4.13 உற்பத்தி மையங்கள்**

குறைந்த செலவில், தரமான கட்டுமானப் பொருட்களின் உற்பத்தியை பெருக்குவதற்கு இந்த உற்பத்தி மையங்கள் உதவி புரிகின்றன. ஒவ்வொரு மையத்தினை அமைப்பதற்கும், கொத்தனார் பயிற்சி மற்றும் சுழல் நிதிக்காக அதிகபட்சம் ரூ.3.50 இலட்சம் வழங்கப்படுகிறது. இதுவரை, ரூ. 65 இலட்சம் செலவில் 65 உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**4.4.14 நிர்மல் கிராம புரஸ்கார் விருது**

**சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், நாட்டிலேயே முதன் முறையாக ஜுலை 2003–ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "தூய்மையான கிராம இயக்கம்" என்ற விருது, சுகாதார திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் என அறிவித்தார்கள்.** அதனைத் தொடர்ந்து, மத்திய அரசாலும், முழு சுகாதார இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் நிர்மல் கிராம புரஸ்கார் விருது 2005–லிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது தங்கள் பகுதிகளில் முழு சுகாதாரத்தை எய்தும் ஊராட்சிகளுக்கும் இதர அமைப்புகளுக்கும் ஒரு அங்கீகாரமாகத் திகழ்கிறது.

### 4.4.14.1 நிர்மல் கிராம புரஸ்காரின் இலக்குகள்

1. சமூக மற்றும் அரசியல் தொடர்புகளை ஏற்படுத்தி இந்தியாவில் உள்ள ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதியினை மேம்படுத்தி வளர்ச்சி பெறச் செய்தல்.
2. திறந்தவெளியில் மலம் கழித்தலைத் தடுத்தலும் தூய்மையான கிராமத்தை உருவாக்குதலும்.
3. முழுசுகாதார இயக்கத்தை, தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுத்த ஊராட்சி அமைப்புகளை ஊக்குவித்தல்.
4. முழு சுகாதாரத்தை எய்தப் பாடுபடும் அமைப்புகளை ஊக்குவிப்பதன் மூலம் சமூக ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

நிர்மல் புரஸ்கார் விருதுக்கான மானிய தொகையானது ரூ.50,000/–ல் இருந்து ரூ.5 இலட்சம் வரை கிராம ஊராட்சிகளுக்கும் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சம் வரை வட்டார ஊராட்சிகளுக்கும் மக்கள் தொகைக்கேற்ப வழங்கப்படுகிறது.

2011 வரை தமிழ்நாட்டில் 5 வட்டார ஊராட்சிகள் மற்றும் 2,385 கிராம ஊராட்சிகள் சுகாதாரம் மற்றும் முழுமையான தூய்மைக்காக இவ்விருதினைப் பெற்றுள்ளன. டிசம்பர் 2012ல் இந்திய அரசால் நிர்மல் கிராம் புரஸ்கார் தொடர்பாக புதிதாக வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 2012 ஆம் ஆண்டு முதல் நிர்மல் புரஸ்கார் விருதுக்கான கிராம ஊராட்சிகளை தேர்வு



செய்வது மாநில அரசுகளுக்கும், வட்டார மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான தேர்வு மத்திய அரசாலும் தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சுகாதார நடவடிக்கைகளுக்கு வலுசேர்க்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் சிந்தனையை செயலாக்கும் முகத்தான் 2015–ல் சுகாதாரமான மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத சுகாதாரமான கிராமங்களை உருவாக்குவதற்கு தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனங்கள் மூலம் இந்த அரசு உறுதி செய்யும்.**

### 4.4.15 2015–ல் தமிழகத்தை திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக்குவதற்கான தொலைநோக்கு

தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவரும் பெறுவதற்கு, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இந்தியாவிலேயே சிறப்பாக தமிழகம் பெறவேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்கு 2023–ன் முக்கிய 10 மைய இலக்குகளில் ஒன்றாகும்.

தமிழகத்தை திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கமற்ற மாநிலமாக 2015 ஆம் ஆண்டுக்குள் ஆக்குவதற்கும் அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து, மக்கள் புரட்சியாக சுகாதார எழுச்சி உருவாக, பல்முனை உத்திகளை கையாளவேண்டும் என்று 17.12.2012ல் மாவட்ட ஆட்சியர்களுக்காக நடத்தப்பட்ட

கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் பணித்துள்ளார்கள்.

முதற்கட்டமாக, ஊரக பகுதிகளில் அடிப்படை கணக்கெடுப்பு நடத்தி அதன்மூலம் சுகாதார குறைபாடுகளை கண்டுபிடித்து அவற்றை முறையாக சீர்படுத்தி, தமிழகத்தை 2015க்குள் திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கமற்ற மாநிலமாக ஆக்குவது அவசியமாகிறது.

நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின்கீழ் மத்திய அரசினால் வெளியிடப்பட்ட வழிமுறைகளின்படி, திட்ட செயலாக்க வடிவம் (PIP) தயாரிப்பதற்கு அடிப்படை கணக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். இறுதியாக திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கமற்ற நிலையை தமிழகம் அடைவதற்கும் மேலும் சுகாதார திட்டங்களை செயல்படுத்துவதற்கும் இந்த திட்ட வடிவம் ஒரு அடித்தளமாகவும் வழிகாட்டியாகவும் செயல்படும்.

நிர்மல் பாரத் அபியான் என்று தற்போது அழைக்கப்படும் முழு சுகாதார இயக்கத்தின்கீழ் தகவல், கல்வி, தொடர்பு கூற்றிற்கு தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முக்கியத்துவம் தரபட்டப் போதிலும் 2006–2011 ஆம் ஆண்டுகளில் இதனையொட்டிய செயல்பாடுகளுக்கு எந்தவிதமான வெளிப்படையான முயற்சிகளும் எடுக்கப்படாததால், அதற்கு முந்தைய காலத்தில் அரசால்



நடைமுறைப்படுத்தப்பட்ட சுகாதார பணிகளில் தொய்வு ஏற்பட்டது.

சுகாதார செயல்பாடுகளை மீண்டும் முன்னிறுத்துவதற்காக, 2011–12ல் தமிழக அரசு ஊரகப் பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பயன்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பெண்கள் சுகாதார வளாகங்களை புதுப்பிக்கவும் 2001–2006 வரை சுகாதாரப் புரட்சியை ஏற்படுத்திய துாய்மையான கிராம இயக்கத்தை மறுபடியும் எழுச்சியுறச் செய்யவும் தமிழக அரசு உத்திரவிட்டது. முக்கியமாக ஊரக பகுதிகளில் உள்ள மக்களிடையே சுகாதார சேவைகளை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் சுகாதார பழக்க வழக்கங்களில் இன்றியமையாத மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தகவல், கல்வி தொடர்பு உத்திகளை கையாளவேண்டியது அவசியமாகிறது. அதனால், தமிழகத்தை திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக 2015க்குள் மாற்றும் இலக்கினை அடைய, தேவையான தகவல், கல்வி தொடர்பு சாதனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் மாபெரும் தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு இயக்கம் ஒன்றை மாநிலம் முழுவதிலும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுகாதார இயக்கத்தின் இலக்கினை அடைவதற்கு கிராமங்களில் வீட்டுக்கு வீடு சென்று நேருக்குநேர் தகவல் பரிமாற்றங்கள் மூலம் கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த சுகாதாரத் துாதுவர்களை ஈடுபடுத்த துாய்மை

நிர்மல் பாரத் அபியான் வழிவகை செய்கிறது. கிராம ஊராட்சிக்கும் வட்டார ஊராட்சி / மாவட்ட நிர்வாகம் இவற்றிடையே ஒரு பாலமாகவும் மிக முக்கியமாக பணியாற்றும் நபர்களாகவும் உயர்வான மதிப்போடு இந்த சுகாதார தூதுவர்கள் கிராம ஊராட்சிகளில் அறியப்படவேண்டும். இதற்காக நடத்தப்பட்ட பயிற்சிகளில் கலந்துக்கொண்டு தங்களை எடுத்துக்காட்டாக வெளிப்படுத்திக் கொண்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர் / சமூக வல்லுநர் போன்ற பெண்களில், சுகாதாரத் தூதுவர்களுக்கான தகுதிகளும் திறன்களும் உடையவர்களை சுகாதாரத் தூதுவர்களாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் இனம் கண்டது. வழிகாட்டு நெறிமுறைகள் சுட்டிக்காட்டும் சுகாதாரத் தூதுவர்களின் பங்கு மற்றும் பொறுப்புகளையொட்டி, சுகாதார பழக்க வழக்கங்களை கிராம மக்களிடையே கொண்டு வருவதற்கு ஒத்த குழுவினரை இணங்கவைப்பதில் இவர்கள் சிறந்த திறனுடையவர்கள். அதனால் கிராம ஊராட்சி அளவில் சுகாதாரத் தூதுவர்களாக இத்தகையப் பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்டு வருவதற்கு தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கமற்ற தமிழகத்தை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள பல முயற்சிகளில் ஒரு பகுதியாக, தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரால்



**வருடாந்திர சுகாதார நாட்குறிப்பு: 2013** என்ற கையேடு, ஒருங்கிணைப்பாளர்கள், சுகாதார அலுவலர்கள், சுகாதார தூதுவர்கள் போன்ற அனைத்து முக்கிய செயலாற்றுவோருக்கு உதவியாக வெளியிடப் பட்டுள்ளது. இந்த நாட்குறிப்பு பயன்படுத்துவோரை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. நன்முறையில் திட்டமிடுவதற்கும், செயல்படுவதற்கும் மற்றும் குறித்த இலக்குகளின்படி சுகாதார செயல்பாடுகளினால் ஏற்படும் விளைவுகளைக் கண்காணிப்பதற்கும், சுகாதாரப் பணிகளில் ஈடுபட்டுள்ள முக்கிய நபர்களுக்கு இந்த நாட்குறிப்பு ஒரு வழிகாட்டியாகும்.

### 4.4.16 பயன்பாடற்ற கழிப்பறைகள்

நிர்மல் பாரத் அபியான் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள முழு சுகாதார இயக்கம் முழு அளவில் செயலாக்கத்திற்கு கொண்டு வர பயன்பாடற்ற கழிப்பறைகள், தற்போதுள்ள சூழ்நிலையில் ஒரு பெரிய சவாலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. 2011 –ல் குடும்ப வாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுகாதாரம் குறித்த புள்ளி விவரங்களுக்கும், மாநிலங்களின் அறிக்கைப்படியான சுகாதார புள்ளி விவரங்களுக்கும் இடையே காணப்படும் இடைவெளி குறித்து புதுதில்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. அதில் கலந்து கொண்ட பல்வேறு மாநிலங்களின் பிரதிநிதிகள் இந்த இடைவெளிக்கான காரணம், முழு சுகாதார இயக்கம் செயலாக்கத்திலிருந்த

பெரும்பாலான காலக்கட்டங்களில் வழங்கப்பட்ட குறைவான மானியத்தொகையேயாகும் எனக் கருத்து தெரிவித்தனர். எனவே, பயன்பாடற்ற கழிப்பறைகள் ஒரு தேசிய அளவிலான பிரச்சினையாகவே கருதப்பட வேண்டும்.

1999–2007 காலகட்டத்தில், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கான அலகுத் தொகை பயனாளியின் பங்கு உட்பட ரூ.625 மட்டுமே என்பது கூர்ந்து நோக்கத்தக்கது. இத்தகைய மிகக் குறைவான தொகையில் அந்தந்த இடங்களில் குறைந்த செலவில் கிடைக்கப்பெறும் சாக்குப்பை, ஓலைகள் போன்ற பொருட்கள் மேல் கட்டமைப்புகளாக தடுப்புகள் வைக்கப்பட்டன. அப்போது கழிப்பறை என்றால் மக்கள் எதிர்பார்த்தது ஒரு மறைவிடமே தவிர கழிப்பறைகளின் கட்டுமானத்தையோ, பயன்பாட்டையோ, நிலைத்த தன்மையையோ அல்ல. அதனால் கட்டப்பட்ட கழிப்பறைகள் நின்று நிலைத்திராது சில காலமே பயன்படுத்தக்கூடிய ஆதாரங்களாக அமைந்தன.

அலகுத்தொகை மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும் நிர்மல் பாரத் அபியான் திட்ட வழிமுறைகள் பயன்பாடற்ற கழிப்பறைகளைப் பற்றிய பிரச்சினை முடிந்தாலன்றி அர்த்தமற்றதாகிவிடும். பயன்பாடற்ற கழிப்பறைகள் இன்று தேசிய அளவிலான பிரச்சினையாக உள்ளதால், அதுவாக தீர்ந்துவிடும் என்று ஒதுக்கிவிட முடியாது. நிர்மல் பாரத் அபியானின் பயன்கள்



முழுமை அடைய மத்திய அரசு பயன்பாடற்ற கழிப்பறைகளைக் புதுப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.5 பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி (BRGF)

தமிழகத்தில் பின்தங்கிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட தேசிய வளர்ச்சி மற்றும் புனரமைப்புத் திட்டம் (Rashtriya Sam Vikas Yojana) மத்திய திட்டக் குழுவிலிருந்து மத்திய ஊராட்சி அமைச்சகத்திற்கு மாற்றப்பட்டது. ஊராட்சி அமைச்சகம் இத்திட்டத்தைப் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி (Backward Regions Grant Fund) என மாற்றியமைத்தது. இத்திட்டம், தற்போது தமிழ்நாட்டில் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளர்ச்சியில் பல்வேறு பகுதிகளில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்காக உருவாக்கப்பட்டதே பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி ஆகும். தற்போதுள்ள திட்டங்களின் செயல்பாடுகளால் வளர்ச்சியில் முழுமைப் பெறாத பகுதிகளுக்கு ஏற்றவாறு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை மேம்படுத்துதல்,

அவற்றுக்கு ஒப்படைக்கப்பட்ட முக்கியக் கடமைகளை நிறைவேற்றுதலில் திறனை மேம்படுத்த உதவுதல் மற்றும் வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வுகளைக் களைதல் ஆகியவற்றை இத்திட்டம் மையப்படுத்துகிறது.

**இத்திட்டத்தின் கீழ் இரு வழிகளில் நிதி அளிக்கப்படுகிறது.**

1. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குப் பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படையான தன்மையை ஏற்படுத்தும் வகையில் திட்டமிடல், செயலாக்கம், கண்காணித்தல், கணக்குகளைப் பராமரித்தல் ஆகியவற்றில் அவர்களின் திறனை மேம்படுத்தப் பயிற்சி அளித்தல்.
2. ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் பகுதிகளில் உள்ள அடிப்படை வசதிகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் களையும் விதமாக மக்களோடு இணைந்து திட்டமிடல் வாயிலாக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் வரையறுக்கப்படாத மானியத்தை வழங்குதல்.

பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மான்ய நிதியில் வளர்ச்சி மானியமாக **2011–12** மற்றும் **2012–13** ஆம் ஆண்டுகளில் **6** மாவட்டங்களுக்குக் கீழ்கண்டவாறு மத்திய அரசால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.



**2011–12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டுகளுக்கான பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மான்ய நிதி ஒதுக்கீடு**

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர் | 2011–12 | 2012–13 |
|---|---|---|---|
| | | தொகை (ரூ.கோடியில்) | |
| 1 | கடலூர் | 19.33 | 19.34 |
| 2 | விழுப்புரம் | 24.10 | 24.10 |
| 3 | திருவண்ணாமலை | 14.16 | 21.14 |
| 4 | திண்டுக்கல் | 20.46 | 20.46 |
| 5 | நாகப்பட்டினம் | 16.08 | 16.08 |
| 6 | சிவகங்கை | 16.64 | 16.64 |
| | **மொத்தம்** | **110.76** | **117.76** |

**2011–12 மற்றும் 2012–13ம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட பணிகளின் வகைப்பாடு விபரம்**

| வ. எண். | வகைப்பாடு | 2011–12 | 2012–13 |
|---|---|---|---|
| 1 | தார்சாலைகள் | 570 | 546 |
| 2 | வடிகால் வசதியுடன் சிமெண்ட் சாலைகள் | 2,191 | 2,196 |
| 3 | சிறுபாலங்கள் | 308 | 364 |
| 4 | தடுப்பு சுவர்கள் | 220 | 253 |
| 5 | குடிநீர் வசதி | 276 | 685 |
| 6 | தொகுப்பு வீடுகள் | 231 | 176 |
| 7 | கதிரடிக்கும் களங்கள் | 109 | 108 |
| 8 | பொதுக் கட்டடங்கள் | 85 | 124 |
| 9 | இதர பணிகள் | 342 | 123 |
| மொத்தம் | | 4,332 | 4,575 |

**2011–12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டில்**
**எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் விபரம்**

| | மாவட்டம் | 2011–12 | | 2012–13 | |
|---|---|---|---|---|---|
| | | எடுத்து கொள்ளப் பட்ட பணிகள் | முடிக்கப் பட்டவை | எடுத்து கொள்ளப் பட்ட பணிகள் | முடிக் கப் பட்ட வை |
| 1 | கடலூர் | 326 | 283 | 502 | 56 |
| 2 | விழுப்புரம் | 1042 | 1042 | 1562 | 495 |
| 3 | திருவண்ணாமலை | 986 | 975 | 822 | 51 |
| 4 | திண்டுக்கல் | 1012 | 973 | 839 | 79 |
| 5 | நாகப்பட்டினம் | 537 | 537 | 444 | 54 |
| 6 | சிவகங்கை | 429 | 374 | 406 | 32 |
| | **மொத்தம்** | **4332** | **4184** | **4575** | **767** |

2011–12 ஆம் ஆண்டில் முடிக்கப்பட வேண்டிய அனைத்து பணிகளும் ஏப்ரல் 2013 இறுதிக்குள் முடிக்கப்படும். 2012–13 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் ஜுன் 2013 இறுதிக்குள் முடிக்கப்படும். 2012–13 ஆம் ஆண்டிற்கு ரூ.62.76 கோடி முதல் தவணையாக மத்திய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகை, மார்ச் 2013–க்குள் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகத்திலிருந்து பெறப்படும்.

### 4.6 தேசிய கரிமவாயு திட்டம்

இத்திட்டம் 100 சதவீதம் மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது. மலைப்பாங்கான இடங்களில் ரூ.10,000/–க்கும் இதர இடங்களில் ரூ.8,000/–க்கும் கரிமவாயு கலன்கள் அமைக்கப்படுகின்றன. கழிப்பறைகளுடன் இணைக்கப்பட்ட கரிமவாயுக் கலன்கள் அமைப்பதற்கு ரூ.9,000/– மானியமாக வழங்கப்படுகிறது. 2012–13 நிதியாண்டில் ஆயிரம் கரிமவாயு கலன் அமைத்திட குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 710 கரிமவாயு கலன்கள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் 7 மாவட்டங்களில் அதாவது, காஞ்சிபுரம் (4), கன்னியாகுமரி (3), கரூர் (6), தேனி (1), திருச்சிராப்பள்ளி (1), திருநெல்வேலி (7) மற்றும் திருப்பூர் (2) ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 24 கழிப்பறைகளுடன் இணைக்கப்பட்ட கரிம வாயு கலன்களும் உள்ளடங்கும் .

### 4.7 சமூக பொருளாதார மற்றும் சாதி கணக்கெடுப்பு

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மூலமாக சமூக பொருளாதார சாதி கணக்கெடுப்பு 2011–ஐ இந்திய அரசு துவக்கியுள்ளது. இக்கணக்கெடுப்பின் மூலம் ஊரக மற்றும் நகர்புறத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் அனைத்து குடும்பங்களும் கண்டறியப்படும்; சாதி மற்றும் மதம் தொடர்பான அனைத்து புள்ளி விவரங்களும் இக்கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்டாலும் சாதி, மதம் தொடர்பான விவரங்கள் மட்டும் பொதுமக்கள் பார்வைக்கு அல்லாமல், இந்திய அரசின் பொது பதிவாளரால் சமூக பொருளாதார புள்ளி விவரங்கள் தொகுப்பது தொடர்பான பயன்பாட்டிற்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்படும்.

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் நிதியினைக்

கொண்டு மாநில நிர்வாகத்தின் மூலம் இக்கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பு பணியானது, விவரங்கள் எழுத்துப்பூர்வமாக பதியப்படாமல் பெங்களூரிலுள்ள மத்திய அரசின் நிறுவனமான பாரத மின்னணு நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட கைக்கணினியில் நேரடியாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்ட கணக்கெடுப்பாளர்களுக்கு, கணக்கெடுப்பு பகுதி வாரியான வீட்டுப் பட்டியல் சுருக்கம் மற்றும் கள வரைபடம் ஆகியவை மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்ககம் வழங்கியுள்ளது. தேசிய மக்கள் தொகை பதிவேட்டில் சேகரிக்கப்பட்டுள்ள வீட்டு விவர பட்டியல் இலக்கைக் கணினிகளில் கணக்கெடுப்பு தொடங்குவதற்கு முன் பதிவு செய்யப்பட்டன. இதற்கென நியமிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பாளர் மற்றும் பாரத மின்னணு நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்ட புள்ளி விவர பதிவாளர் (Data Entry Operator) ஆகியோர் இக்கணக்கெடுப்பு பணியினை களத்தில் ஒருங்கிணைந்து மேற்கொண்டனர். இக்கணக்கெடுப்பு பணிக்கு மாவட்டம் முழுமைக்கும் மாவட்ட ஆட்சியர், முதன்மை சமூக பொருளாதார சாதி கணக்கெடுப்பு அலுவலராவார். இவரது கண்காணிப்பின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனி நபர் மற்றும் வீடுகளில் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்கள்: தொழில், கல்வி, மாற்றுத்திறன், மதம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவரம் சாதி / 



பழங்குடியினரின் பெயர், பணி, வருமானம் மற்றும் வருமான ஆதாரம், அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், நுகர்வோர் வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் நிலம். மேலும், மேற்படி கணக்கெடுப்பானது வீட்டு வசதி குறித்த விவரங்கள், பணி விவரங்கள், கல்வி நிலை, வீட்டு உறுப்பினர்களின் மாற்றுத்திறன் மற்றும் நில உடமை விவரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இக்கணக்கெடுப்பில், கணக்கெடுக்கப்படுபவரின் விவரங்கள் அவர் சுயமாக அளிக்கும் விவரங்களை இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வினா படிவத்தில் பதியப்பட்டுள்ளது.

குடும்பத் தலைவர் அளிக்கும் விவரங்கள் தவறானவை என கணக்கெடுப்பாளர் கருதும் பட்சத்தில் அவை சரியானவை அல்ல என்று கணக்கெடுப்பாளர் பதிவு செய்த இனங்களில் மேற்பார்வையாளர், மேற்கண்ட வீட்டிற்கு நேரடியாக சென்று தகவல்களின் உண்மைத் தன்மையினை சரிபார்த்துள்ளனர். இதனைத் தொடர்ந்து பெறப்படும் கோரிக்கைகள், மறுப்புகள் மற்றும் அது தொடர்பான முடிவுகள் குறித்து உரிய வழிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சேகரிக்கப்பட்ட தகவல்கள் கிராம சபை கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறப்பட வேண்டும். கணக்கெடுப்புப் பணி முடிவுற்றவுடன் வரைவு பட்டியல் வெளியிடப்படும். அதன் பின்னர் ஊரகப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் 31வது நாள் நிறைவிலும், நகர்புறத்தை பொறுத்தமட்டில் 52 வது நாள் நிறைவிலும்

இறுதி பட்டியல் வெளியிடப்பட்டு இணைய தளத்திலும் வெளியிடப்படும்.

தமிழ்நாட்டில் இப்பணியினை மேற்கொள்ள மத்திய அரசு ரூ.89.21 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டில், இப்பணி உள்ளாட்சிகளுக்கு நடைபெற்ற சாதாரண தேர்தலுக்கு பின்பு டிசம்பர் 2011ல் தொடங்கப்பெற்று செப்டம்பர் 2012ல் கணக்கெடுப்பு மற்றும் மேற்பார்வையாளரின் சரிபார்ப்பு பணிகள் முடிவடைந்துவிட்டன. நவம்பர் 2012 ல் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தில் மென்பொருளை பயன்படுத்தி சரிபார்த்தல் மற்றும் திருத்தம் தொடர்பான பணிகள் முடிக்கப்பட்டன. தற்போது மத்திய அரசு வழங்கிய தொழில்நுட்ப தெளிவுரைகளின் அடிப்படையில், பாரத மின்னணு நிறுவனம், வரைவு பட்டியல் வெளியிடுவதற்கான மென்பொருளில் சில திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. இக்கணக்கெடுப்பின் அனைத்து நடவடிக்கைகளும் ஜூன் 2013–க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# 5. ஊரக உள்கட்டமைப்பு

## 5. ஊரக உள்கட்டமைப்பு

ஊரகப் பகுதிகளில், விரைவான மற்றும் நிலையான வளர்ச்சியுடன் கூடிய சமூகப் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி, வறுமை ஒழிப்பை எதிர்கொள்ள, அனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தக்கூடிய இணைப்புச் சாலைகள் இருத்தல் அவசியமானதாகும். வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கும், சாலை வசதியுடன் கிராமப்புறங்கள் இணைக்கப்பட்டிருத்தலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஒரு பகுதியில் அமைந்துள்ள இணைப்புச் சாலை வசதியானது, அப்பகுதியின் சமூக பொருளாதார நிலையினை பிரதிபலிக்கும்.

குக்கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகள் கிராமப்புற மக்களது வாழ்வின் பல்வேறு அம்சங்களில், குறிப்பாக விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த துறைகளில், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

**இந்த அரசு ஏற்கனவே "மக்கள் தொகை 500க்கு அதிகமாக உள்ள அனைத்து கிராமங்களுக்கும் தார்ச்சாலைகள் அமைக்கப்படும் எனவும், பிற குடியிருப்புகளுக்கு எல்லா பருவகாலத்திலும் பயன்படுத்தக்கூடிய வகையில் சாலைகள் அமைக்கப்படும்" என அறிவித்துள்ளது.**

நெடுந்தொலைவில் உள்ள பகுதிகளுக்கும், சாலைவசதி இல்லாத இடங்களுக்கும், அனைத்து பருவகாலங்களுக்கும் ஏற்ற சாலைகள் அமைப்பது இந்த அரசின் நோக்கமாகும்.



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, அரசின் இந்த அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், பல்வேறு தொடர் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம் பின்வருமாறு:

- ஏற்கனவே விடுபட்ட சாலைகள், புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பேருந்து செல்லும் சாலைகள் சேர்க்கப்பட்டு வட்டார அளவிலான புதிய சாலைகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டது.
- குக்கிராமங்களின் சாலை இணைப்பு விவரங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
- புதுப்பிக்கப்பட்ட கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்கு, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- தார்ச்சாலை அல்லாத சாலைகளை தார்சாலைகளாக மேம்பாடு செய்ய விரிவான சாலைகள் மேம்பாட்டு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- குக்கிராமங்களின் இணைப்பு, பயன்பெறும் மக்கள் தொகை மற்றும் சாலைகளின் தற்போதைய நிலை, அதன் பயன்பாடு ஆகியவற்றினை கருத்திற் கொண்டு சாலைகளின் முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

## ஊரகச்சாலைகளின் தொகுப்பு (Rural Road Network)

மேற்கூறியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:

**ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்**

| வ. எண். | மேற்பரப்பின் வகை | ஊராட்சி சாலைகள் | ஊராட்சி ஒன்றிய சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீட்டரில்) | | |
| 1. | தார்ச்சாலை | 47,838.80 | 27,142.49 | 74,981.29 |
| 2. | ஈரடுக்கு கப்பிசாலை | 3,073.28 | 513.19 | 3,586.47 |
| 3. | ஓரடுக்கு கப்பிசாலை | 9,756.01 | 1,214.74 | 10,970.75 |
| 4. | சரளைக்கல் சாலை | 7,872.42 | 776.60 | 8,649.02 |
| 5. | மண்சாலை | 26,808.63 | 1,321.82 | 28,130.45 |
| 6. | சிமெண்ட் சாலை | 1,734.16 | 136.79 | 1,870.95 |
| | **மொத்தம்** | **97,083.30** | **31,105.63** | **1,28,188.93** |

மேற்கூறிய ஊரக சாலைத் தொகுப்பின் அடிப்படையில், தார்ச் சாலை அல்லாத அனைத்து சாலைகளையும் மேம்பாடு செய்ய, கீழ்க்கண்டவாறு முழுமையான சாலை மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது :-



| வருடம் | மண் மற்றும் சரளைச் சாலைகளின் நீளம் (கி.மீ) | தொகை (ரூ.கோடியில்) | கப்பி சாலைகளின் நீளம் (கி.மீ) | தொகை (ரூ.கோடியில்) | மொத்த நீளம் (கி.மீ) | மொத்தம் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|---|
| 2012–13 | 6,069 | 987 | 3166 | 461 | 9235 | 1448 |
| 2013–14 | 5,438 | 881 | 3797 | 551 | 9235 | 1432 |
| 2014–15 | 5,438 | 881 | 3797 | 551 | 9235 | 1432 |
| 2015–16 | 5,437 | 881 | 3797 | 551 | 9234 | 1431 |
| **மொத்தம்** | **22,382** | **3,630** | **14,557** | **2114** | **36,939** | **5,743** |

**2012–13**ம் ஆண்டில், பல்வேறு திட்டங்களின் கீழ், **9,235** கி.மீ நீளமுள்ள சாலைகள் ரூ. **1,448** கோடி மதிப்பீட்டில், மேம்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளன. இந்த துறை, பல்வேறு திட்ட நிதியினை சாலை மேம்பாட்டிற்காக ஒருங்கிணைத்திட கடினமான முயற்சிகளை மேற்கொண்டது. ஏற்கனவே நடப்பில் உள்ள நபார்டு, ஊரக உள்கட்டமைப்பு திட்டம், தாய் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டு திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொதுநிதி போன்ற திட்டங்களின் கீழ் ரூ. **1,246** கோடி நிதி, சாலை மேம்பாட்டிற்கு இதன்மூலம் பயன்படுத்தப்பட்டது. மீதமுள்ள ரூ. **202** கோடி நிதி, மாநில நிதிக் குழு மானியத்தின் கீழ் சிறப்பினமாக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்துறையானது பெரும்பாலான ஊரக சாலைகளை பராமரித்து, மேம்பாடு செய்யும் தனது முயற்சியினை மேலும் தீவிரப்படுத்தும்.

### 5.1 பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டம்

சாலை வசதியில்லாத குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலத்திற்கும் ஏற்ற சாலை வசதியினை ஏற்படுத்தித்

தருவதற்காக மத்திய அரசால் 2000ம் ஆண்டில் பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

ஆண்டு முழுவதும், அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்த தக்கவகையில் தேவையான சிறுபாலங்கள் மற்றும் வடிகால் வசதிகளுடன் கூடிய சாலைகள் அமைப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின் முதல் ஏழு கட்டங்களில், அதாவது 2000–2001ல் இருந்து 2007–08 (பாரத் நிர்மான் கட்டம் II) வரை 9,970.15 கி.மீ. நீளமுள்ள 4,946 சாலைப்பணிகள், மொத்தம் ரூ.2,022 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் ஆயிரத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களில், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஒரு குக்கிராமத்தை தவிர, அனைத்து குக்கிராமங்களுக்கும் இணைப்பு சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது, இந்த குக்கிராமத்திற்கும் இணைப்பு சாலை வழங்க வனத்துறை மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

### 5.1.1 பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டம்–தொகுதி VIII (2012–13)

**தமிழக அரசின் தொடர் முயற்சியின் விளைவாக, 4 வருட இடைவெளிக்குப் பின்னர், மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறையானது, கீழே தெரிவிக்கப்பட்டவாறு பிரதம**



**மந்திரி கிராமச் சாலை திட்டம்–தொகுதி VIII –ன் கீழ் புதிய திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.**

#### 5.1.1.1 500 முதல் 999 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு புதிய இணைப்புச்சாலைகள்

41 இணைப்பு சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு இணைப்பு வழங்க ரூ.39.01 கோடி மதிப்பீட்டில், மொத்தம் 90.03 கி.மீ நீளமுள்ள 40 சாலைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

#### 5.1.1.2 சாலைகள் மேம்பாடு

சாலைகளின் தற்போதைய நிலையின் அடிப்படையில் அவற்றினை மேம்பாடு செய்ய, மொத்தம் 3005.74 கி.மீ நீளமுள்ள 1258 சாலைப்பணிகள் ரூ.1012.91 கோடிமதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

#### 5.1.1.3 தென்னை நார் தொழில்நுட்ப சாலை (Coir – Geo Textile road)

சாலைகள் மேம்பாடு செய்வதில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் வகையில், தென்னை நாரினை பயன்படுத்தி ரூ. 16.74 கோடி மதிப்பீட்டில் 42.2 கி.மீ நீளமுள்ள, 19 சாலைகளை மேம்படுத்த மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது

#### 5.1.1.4 RBI Grade 81 இரசாயனப் பொருளை பயன்படுத்தி சாலை அமைத்தல்

ஒரு முன்னோடி திட்டமாக, RBI Grade 81 எனும் மண்ணின் உறுதித்தன்மையை அதிகப்படுத்தும்

இரசாயனப்பொருளை பயன்படுத்தி 7 சாலைகள் அமைக்கப்படும். மொத்தம் ரூ.5.71 கோடி மதிப்பீட்டில், **16.5** கி.மீ நீளமுள்ள சாலைப்பணிகள் விரைவில் செயல்படுத்தப்படும்.

**5.1.1.5 நீளமான பாலங்கள்**

வருடம் முழுவதும் தடையில்லா இணைப்பு வழங்கும் நோக்கத்துடன், 45 நீண்ட பாலங்கள் மொத்தம் ரூ.78.18 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளது.

**இவ்வாறு, மொத்தம் 1343 சாலைகள் மற்றும் பாலங்கள், 3095.77 கி.மீ நீளத்திற்கு ரூ. 1130.10 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இதில் ரூ. 108.95 கோடி மாநில அரசின் பங்குத்தொகையும் அடங்கும்.**

இந்த அரசு, இப்பணிகளின் ஐந்து வருட தொடர் பராமரிப்பிற்காக ரூ. 66.84 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அனைத்து பணிகளுக்கும் விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.

பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டம் தொகுதி VIII-ன் கீழ் (2012–13) மாவட்ட வாரியாக எடுக்கப்படவுள்ள பணிகளின் விவரம்:

| வ.எண் | மாவட்டம் | பணிகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 54 | 140.31 | 42.54 |
| 2. | திருவள்ளூர் | 41 | 86.72 | 25.57 |
| 3. | கடலூர் | 36 | 90.42 | 28.53 |
| 4. | விழுப்புரம் | 136 | 308.15 | 118.56 |
| 5. | வேலூர் | 48 | 100.97 | 38.90 |
| 6. | திருவண்ணாமலை | 24 | 59.82 | 17.22 |
| 7. | சேலம் | 32 | 69.46 | 33.57 |
| 8. | நாமக்கல் | 18 | 31.31 | 18.12 |
| 9. | தருமபுரி | 29 | 55.00 | 23.14 |
| 10. | கிருஷ்ணகிரி | 26 | 49.80 | 17.69 |
| 11. | ஈரோடு | 60 | 127.70 | 36.70 |
| 12. | திருப்பூர் | 67 | 137.19 | 43.37 |
| 13. | கோயம்புத்தூர் | 58 | 125.96 | 45.16 |
| 14. | நீலகிரி | 11 | 22.57 | 15.20 |
| 15. | தஞ்சாவூர் | 24 | 61.66 | 21.15 |
| 16. | நாகப்பட்டினம் | 59 | 132.80 | 85.39 |
| 17 | திருவாரூர் | 29 | 75.51 | 47.08 |
| 18. | திருச்சிராப்பள்ளி | 43 | 84.09 | 29.02 |
| 19. | கரூர் | 21 | 44.55 | 14.43 |
| 20. | அரியலூர் | 26 | 55.30 | 20.72 |
| 21. | பெரம்பலூர் | 22 | 67.92 | 26.11 |
| 22. | புதுக்கோட்டை | 55 | 174.54 | 49.49 |
| 23. | மதுரை | 39 | 90.61 | 28.53 |
| 24. | தேனி | 6 | 10.67 | 7.71 |
| 25. | திண்டுக்கல் | 55 | 117.92 | 33.70 |
| 26. | இராமநாதபுரம் | 124 | 264.71 | 108.44 |
| 27. | விருதுநகர் | 45 | 111.56 | 34.07 |
| 28. | சிவகங்கை | 32 | 97.44 | 26.94 |
| 29. | திருநெல்வேலி | 55 | 153.01 | 39.76 |
| 30. | தூத்துக்குடி | 61 | 126.14 | 44.85 |
| 31. | கன்னியாகுமரி | 7 | 22.00 | 8.46 |
| மொத்தம் | | 1343 | 3095.77 | 1130.10 |



**5.1.1.6 கூடுதல் திட்டங்கள்**

மேலே தெரிவிக்கப்பட்ட திட்டப்பணிகளுடன், ரூ.375 கோடி மதிப்பிலான 1,040 கி.மீ நீளமுள்ள

412 சாலைப்பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மாநில தொழில்நுட்ப முகமையின் ஒப்புதல் பெற்று இதற்கான கருத்துருக்கள் மத்தியஅரசுக்கு அனுப்பப்படும்.

**5.2 நபார்டு ஊரக உட்கட்டமைப்பு சாலைப் பணிகள்**

மத்திய அரசின் வழிகாட்டுதலுக்கிணங்க, **1995–96** ஆம் ஆண்டு நபார்டு வங்கி, கிராமப் பகுதிகளில் மாநில அரசு, அரசுத்துறை நிறுவனங்கள், கிராம ஊராட்சிகள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு உட்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிதி உதவி வழங்கும் பொருட்டு, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியை உருவாக்கியது. நபார்டு வங்கி பல்வேறு பகுதிகளாக இந்த நிதியினை விடுவித்து வருகிறது. இந்த நிதியின் மூலம் பெரும்பான்மையான கிராமப்புறச் சாலைகள், பாலங்கள், சிறுபாசனக் கட்டமைப்புகள், பள்ளிகள், சுகாதார மையங்கள் மற்றும் மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நபார்டு வங்கி தமிழக அரசுக்கு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியினை கடனாக வழங்கி வருகிறது. சாலைகள் மற்றும் பாலங்களுக்கு நிதி வழங்குவது, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி–IIவது பகுதியில் இருந்து துவங்கியது. இந்த நிதி, சாலைகள் அமைத்தல், ஏற்கனவே உள்ள சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்துதல், பழுதடைந்த தார்ச்சாலைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி



நிதியின் மூலமாக, XVI பகுதி வரை, மொத்தம் **4,305** சாலைப்பணிகள் ரூ.**1,321.17** கோடி மதிப்பீட்டில் **10,577.42** கி.மீ. நீளத்திற்கு எடுக்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

நபார்டு வங்கி, ஊரக உட்கட்டமைப்பு நிதி XVIIகீழ் **2011–12**–ம் ஆண்டில் **902.07** கி.மீ நீளமுள்ள **333** சாலைகள் மற்றும் பாலங்கள் மேம்பாடு செய்திட ரூ. **143.67** கோடி நிதியினை அளித்துள்ளது.

இத்துறையின் சிறப்பான செயல்பாட்டினைக் கருத்திற்கொண்டு, நபார்டு வங்கி, கூடுதலாக ரூ.**315** கோடி மதிப்பீட்டில், **1729.28** கி.மீ நீளமுள்ள, **637** ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்வதற்கு அனுமதி அளித்துள்ளது. நபார்டு XVII தொகுப்பின்கீழ், மொத்தத்தில், **2631.35** கி.மீ நீளமுள்ள **970** சாலைப்பணிகள், ரூ.**458.67** கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை **968.16** கி.மீ நீளமுள்ள, **383** சாலைகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**2012–13ம் ஆண்டில் நபார்டு வங்கி, பகுதி XVIIIன் கீழ் ரூ. 200.06 கோடி மதிப்பீட்டில், 1008.16 கி.மீ நீளமுள்ள 384 சாலைப்பணிகள் மேம்பாடு செய்வதற்கு அனுமதி அளித்துள்ளது. இப்பணிகளுக்கு விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.**

நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, பகுதி XVIIIன் கீழ் (2012–13) மாவட்ட வாரியாக எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்:

| வ.எண் | மாவட்டம் | பணிகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 21 | 64.65 | 11.71 |
| 2. | திருவள்ளூர் | 9 | 24.50 | 4.17 |
| 3. | கடலூர் | 11 | 31.37 | 4.97 |
| 4. | விழுப்புரம் | 21 | 51.72 | 11.71 |
| 5. | வேலூர் | 18 | 49.67 | 6.83 |
| 6. | திருவண்ணாமலை | 11 | 26.97 | 3.94 |
| 7. | சேலம் | 6 | 17.60 | 4.08 |
| 8. | நாமக்கல் | 28 | 68.27 | 11.73 |
| 9. | தருமபுரி | 16 | 39.70 | 7.30 |
| 10. | கிருஷ்ணகிரி | 9 | 23.98 | 4.43 |
| 11. | ஈரோடு | 7 | 17.04 | 2.70 |
| 12. | திருப்பூர் | 22 | 62.05 | 11.33 |
| 13. | கோயம்புத்தூர் | 15 | 42.56 | 10.99 |
| 14. | நீலகிரி | 2 | 5.43 | 4.02 |
| 15. | தஞ்சாவூர் | 18 | 54.43 | 9.50 |
| 16. | நாகப்பட்டினம் | 15 | 27.36 | 7.08 |
| 17. | திருவாரூர் | 9 | 21.36 | 4.32 |
| 18. | திருச்சிராப்பள்ளி | 9 | 27.20 | 4.16 |
| 19. | கரூர் | 15 | 42.75 | 10.21 |
| 20. | அரியலூர் | 4 | 20.49 | 3.56 |
| 21. | பெரம்பலூர் | 5 | 15.36 | 2.80 |
| 22. | புதுக்கோட்டை | 17 | 45.30 | 8.89 |
| 23. | மதுரை | 7 | 17.18 | 2.55 |
| 24. | தேனி | 7 | 17.52 | 2.47 |
| 25. | திண்டுக்கல் | 15 | 39.39 | 11.60 |
| 26. | இராமநாதபுரம் | 22 | 57.20 | 11.14 |
| 27. | விருதுநகர் | 4 | 11.30 | 2.22 |
| 28. | சிவகங்கை | 13 | 31.01 | 7.29 |
| 29. | திருநெல்வேலி | 11 | 19.09 | 4.19 |
| 30. | தூத்துக்குடி | 12 | 26.51 | 6.74 |
| 31. | கன்னியாகுமரி | 5 | 9.20 | 1.43 |
| | **மொத்தம்** | **384** | **1008.16** | **200.06** |



மேலும் 2013–14ம் ஆண்டிற்கு ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துவதற்கு கூடுதல் நிதி வழங்கிட நபார்டு வங்கிக்கு விரைவில் கருத்துரு அனுப்பப்படவுள்ளது.

**5.3 பதிமூன்றாம் நிதிக்குழு மானிய சாலைப்பணிகள்**

அரசு ஆணை எண்.11, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் (H.N I) துறை நாள் 23.1.12ன்படி சாலைகள் மற்றும் பாலங்கள் பராமரிப்பிற்கான மானியம் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுக்கு இடையே 2:1 என்ற விகிதப்படி பிரிக்கப்படுகிறது. இந்த நிதி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச்சாலைகளை பராமரிப்பு செய்ய பயன்படுத்தப்படுகிறது. 2011–12 ஆம் ஆண்டில் 1778.48 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகள்

ரூ.143 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், 2012–13 ஆம் ஆண்டிற்கு, ரூ.151 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பராமரிப்பிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 810 சாலைப்பணிகள், 1659.14 கி.மீ நீளத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 561.35 கி.மீ நீளமுள்ள, 271 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

பதிமூன்றாம் நிதிக்குழு மானியம், 2012–13–ன் கீழ், மாவட்ட வாரியாக எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்:

| வ.எண் | மாவட்டம் | பணிகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 25 | 48.95 | 4.38 |
| 2. | திருவள்ளூர் | 22 | 48.86 | 4.63 |
| 3. | கடலூர் | 36 | 61.34 | 5.39 |
| 4. | விழுப்புரம் | 40 | 84.18 | 7.08 |
| 5. | வேலூர் | 40 | 78.49 | 6.73 |
| 6. | திருவண்ணாமலை | 36 | 72.96 | 6.25 |
| 7. | சேலம் | 38 | 78.36 | 7.14 |
| 8. | நாமக்கல் | 31 | 59.46 | 5.38 |
| 9. | தருமபுரி | 22 | 50.44 | 4.36 |
| 10. | கிருஷ்ணகிரி | 17 | 41.69 | 3.83 |
| 11. | ஈரோடு | 33 | 62.5 | 6.04 |
| 12. | திருப்பூர் | 35 | 76.81 | 7.27 |
| 13. | கோயம்புத்தூர் | 16 | 38.37 | 3.74 |
| 14. | நீலகிரி | 11 | 15.65 | 1.51 |
| 15. | தஞ்சாவூர் | 64 | 98.77 | 7.87 |
| 16. | நாகப்பட்டினம் | 25 | 55.32 | 5.2 |
| 17. | திருவாரூர் | 32 | 52.66 | 4.81 |
| 18. | திருச்சிராப்பள்ளி | 31 | 71.04 | 6.79 |
| 19. | கரூர் | 19 | 46.3 | 4.57 |
| 20. | அரியலூர் | 9 | 36 | 3.25 |
| 21. | பெரம்பலூர் | 7 | 12.05 | 1.19 |
| 22. | புதுக்கோட்டை | 33 | 74.82 | 6.47 |
| 23. | மதுரை | 22 | 32.36 | 3.19 |
| 24. | தேனி | 11 | 22.5 | 1.99 |
| 25. | திண்டுக்கல் | 26 | 70.17 | 6.32 |
| 26. | இராமநாதபுரம் | 22 | 47.67 | 5.06 |
| 27. | விருதுநகர் | 12 | 32.8 | 3.06 |
| 28. | சிவகங்கை | 16 | 47.74 | 4.85 |
| 29. | திருநெல்வேலி | 28 | 56.69 | 4.86 |
| 30. | தூத்துக்குடி | 21 | 42.18 | 4.23 |
| 31. | கன்னியாகுமரி | 30 | 42.01 | 3.56 |
| | மொத்தம் | 810 | 1659.14 | 151.00 |



2013–14ம் ஆண்டிற்கு, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பராமரிப்பிற்கு ரூ.159 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 5.4 பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு தார்ச்சாலைகள் அமைத்தல்

தமிழக அரசின் 2011–12ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு சாலை அமைக்கவும், கிராமங்களிலிருந்து பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றவும் நிதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு சாலை அமைப்பது இந்த துறைக்கு முற்றிலும் புதிதல்ல. இத்துறை மூலமாக ஏற்கனவே

**2001–2006** வரை **1031.39** கி.மீ. நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச்சாலைகள் அமைக்கப்பட்டன.

**2011–12**ம் நிதியாண்டில், இத்துறை, **31** மாவட்டங்களிலும், **110.21** கி.மீ நீளமுள்ள **45** தார்ச்சாலைகளை, ரூ.**9** கோடி மதிப்பீட்டில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி அமைத்தது. இதுதவிர, **13–**ம் நிதிக்குழு மானிய நிதி ஒதுக்கீட்டின் கீழ், **83.63** கி.மீ நீளம் கொண்ட, **37** சாலைகளை ரூ.**7.28** கோடி மதிப்பீட்டில் பிளாஸ்டிக் கழிவுகளைக்கொண்டு அமைத்தது.

**2012–13**ம் நிதியாண்டில், மொத்தம் **234.85** கி.மீ நீளமுள்ள **119** சாலைப்பணிகள் ரூ.**20** கோடி மதிப்பீட்டில் அனைத்து மாவட்டங்களிலும் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்தும் அரசின் நோக்கத்திற்கு உத்வேகம் கொடுக்கும் வகையில், இத்துறையின் மூலம் நபார்டு XVII திட்டத்தின்கீழ், **700** கி.மீ நீளத்திற்கும், **13–**ம் நிதிக்குழு மானியத்தில் **126.34** கி.மீ நீளத்திற்கும், கூடுதலாக பணிகள் எடுக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**இத்துறை 2011–12 மற்றும் 2012–13 ஆகிய இரண்டு ஆண்டுகளில் ரூ.153.50 கோடி மதிப்பீட்டில் 1255 கி.மீ நீளமுள்ள பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச் சாலைப் பணிகளை மேற்கொண்டுள்ளது.**

இத்துறையானது, **20** பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு மையங்களை ரூ.**80** இலட்சம் மதிப்பீட்டில் அமைத்துள்ளது.



இந்த மையங்கள், கிராம அளவிலான கூட்டமைப்பினால் நிர்வகிக்கப்படுகிறது. சாலைகளுக்கு தேவைப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் இம்மையங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. **இதுவரை 1148.54 மெ.டன் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி தார்ச்சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன.**

**5.5 ஊரக உள்கட்டமைப்பு திட்டம்**

ஊரகப்பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிக்குறைவினை நிரப்புவதும், நிலையான சொத்துக்களை உருவாக்குவதும், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்துதலுமே, ஊரக உள்கட்டமைப்பு திட்டத்தின் நோக்கமாகும்.

**5.5.1 ஊரக உள்கட்டமைப்பு திட்டம் 2011–12**

இத்திட்டத்தின்கீழ் **2011–12**ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூ.**250** கோடி நிதியில், **60**% (ரூ.**150** கோடி) சாலைகளின் மேம்பாட்டிற்காகவும், **40**% (ரூ.**100** கோடி) தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளை நிலைப்படுத்துவதற்காகவும் ஒதுக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண். **75**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (SGS1) நாள் **22.8.2012**ன்படி மொத்தம் **1,313.51** கி.மீ நீளமுள்ள **1,364** சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு, தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளும் ஏப்ரல் **2013** க்குள் முடிக்கப்படும்.

ஊரக உள்கட்டமைப்பு திட்டம், 2011–12–ன் கீழ், மாவட்ட வாரியாக எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்:

| வ.எண் | மாவட்டம் | பணிகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 58 | 59.01 | 6.04 |
| 2. | திருவள்ளூர் | 53 | 49.08 | 5.35 |
| 3. | கடலூர் | 70 | 57.57 | 6.61 |
| 4. | விழுப்புரம் | 63 | 61.09 | 10.64 |
| 5. | வேலூர் | 126 | 112.94 | 9.26 |
| 6. | திருவண்ணாமலை | 75 | 95.63 | 7.62 |
| 7. | சேலம் | 55 | 57.16 | 7.16 |
| 8. | நாமக்கல் | 40 | 26.98 | 4.00 |
| 9. | தருமபுரி | 51 | 54.03 | 4.67 |
| 10. | கிருஷ்ணகிரி | 73 | 70.46 | 5.36 |
| 11. | ஈரோடு | 52 | 52.00 | 4.38 |
| 12. | திருப்பூர் | 32 | 33.33 | 4.09 |
| 13. | கோயம்புத்தூர் | 15 | 21.04 | 3.78 |
| 14. | நீலகிரி | 7 | 8.15 | 1.35 |
| 15. | தஞ்சாவூர் | 109 | 70.58 | 6.43 |
| 16. | நாகப்பட்டினம் | 35 | 28.58 | 4.92 |
| 17 | திருவாரூர் | 24 | 30.44 | 3.96 |
| 18. | திருச்சிராப்பள்ளி | 46 | 44.73 | 5.56 |
| 19. | கரூர் | 19 | 20.54 | 2.59 |
| 20. | அரியலூர் | 9 | 12.60 | 2.62 |
| 21. | பெரம்பலூர் | 10 | 14.15 | 1.76 |
| 22. | புதுக்கோட்டை | 34 | 36.75 | 5.17 |
| 23. | மதுரை | 38 | 44.03 | 4.75 |
| 24. | தேனி | 15 | 16.68 | 2.13 |
| 25. | திண்டுக்கல் | 39 | 35.32 | 5.44 |
| 26. | இராமநாதபுரம் | 29 | 21.71 | 3.76 |
| 27. | விருதுநகர் | 55 | 53.57 | 4.8 |
| 28. | சிவகங்கை | 30 | 26.85 | 3.55 |
| 29. | திருநெல்வேலி | 37 | 37.65 | 6.07 |
| 30. | தூத்துக்குடி | 29 | 37.77 | 3.79 |
| 31. | கன்னியாகுமரி | 36 | 23.13 | 2.39 |
| | **மொத்தம்** | **1364** | **1313.51** | **150.00** |



### 5.5.2 ஊரக உள்கட்டமைப்பு திட்டம் 2012–13

அதுபோன்றே, 2012–13ம் ஆண்டிற்கு, அரசாணை (நிலை) எண்.80 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (SGS1) நாள் 28.8.2012ன்படி ரூ. 250 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மூன்றில் இரண்டு பங்கு (ரூ.166.67கோடி) சாலைகள் மேம்பாட்டிற்கும் மூன்றில் ஒரு பங்கு (ரூ.83.33 கோடி) தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளை நிலைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டு, மொத்தம் 1,298.93 கி.மீ நீளமுள்ள 1,364 சாலைகள் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளும் மே 2013 க்குள் முடிக்கப்படும்.

ஊரக உள்கட்டமைப்பு திட்டம், 2012–13–ன் கீழ், மாவட்ட வாரியாக எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்:

| வ. எண் | மாவட்டம் | பணிகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 51 | 52.09 | 6.71 |
| 2. | திருவள்ளூர் | 84 | 58.95 | 5.95 |
| 3. | கடலூர் | 65 | 53.39 | 7.35 |
| 4. | விழுப்புரம் | 68 | 65.67 | 11.82 |
| 5. | வேலூர் | 97 | 81.68 | 10.3 |
| 6. | திருவண்ணாமலை | 57 | 67.62 | 8.46 |
| 7. | சேலம் | 44 | 55.58 | 7.96 |
| 8. | நாமக்கல் | 41 | 26.50 | 4.44 |
| 9. | தருமபுரி | 52 | 62.74 | 5.19 |
| 10. | கிருஷ்ணகிரி | 67 | 74.99 | 5.96 |
| 11. | ஈரோடு | 51 | 47.11 | 4.87 |
| 12. | திருப்பூர் | 32 | 29.33 | 4.54 |
| 13. | கோயம்புத்தூர் | 18 | 23.03 | 4.2 |
| 14. | நீலகிரி | 4 | 5.95 | 1.5 |
| 15. | தஞ்சாவூர் | 121 | 77.19 | 7.14 |
| 16. | நாகப்பட்டினம் | 26 | 25.01 | 5.46 |
| 17. | திருவாரூர் | 22 | 29.43 | 4.4 |
| 18. | திருச்சிராப்பள்ளி | 45 | 46.25 | 6.17 |
| 19. | கரூர் | 22 | 23.60 | 2.87 |
| 20. | அரியலூர் | 10 | 13.80 | 2.91 |
| 21. | பெரம்பலூர் | 9 | 15.81 | 1.95 |
| 22. | புதுக்கோட்டை | 34 | 42.58 | 5.75 |
| 23. | மதுரை | 31 | 32.23 | 5.28 |
| 24. | தேனி | 15 | 14.13 | 2.37 |
| 25. | திண்டுக்கல் | 40 | 37.05 | 6.05 |
| 26. | இராமநாதபுரம் | 30 | 27.81 | 4.18 |
| 27. | விருதுநகர் | 62 | 62.84 | 5.33 |
| 28. | சிவகங்கை | 38 | 31.34 | 3.94 |
| 29. | திருநெல்வேலி | 39 | 47.57 | 6.74 |
| 30. | தூத்துக்குடி | 54 | 46.76 | 4.22 |
| 31. | கன்னியாகுமரி | 35 | 20.93 | 2.66 |
| | **மொத்தம்** | **1364** | **1298.93** | **166.67** |



**2013–14**ம் ஆண்டிற்கு, ஊரக உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் சாலை மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.**150** கோடி ஒதுக்கப்படும்.

**5.6 மாநில நிதிக்குழு மானியம் (தார்ச்சாலை அல்லாத சாலைகளை மேம்படுத்துதல்) 2012–13**

மேற்கூறிய விரிவான சாலை மேம்பாட்டு திட்டத்தின்படியும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சிதுறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படியும், அரசாணை எண். (1D) 505 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (SGSII) நாள் **26.9.2012**ன் படி, தார்ச்சாலை அல்லாத சாலைகள் மேம்பாடு செய்வதற்கு ரூ.**202** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் **1255.64** கி.மீ நீளமுள்ள **1046** சாலைகள் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு, தற்பொழுது பணி நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் மே **2013** க்குள் முடிக்கப்படும்.

மாநில நிதிக்குழு மானியம், 2012–13–ன் கீழ், மாவட்ட வாரியாக எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்:

| வ.எண் | மாவட்டம் | பணிகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 33 | 48.85 | 8.13 |
| 2. | திருவள்ளூர் | 49 | 43.96 | 7.21 |
| 3. | கடலூர் | 53 | 48.55 | 8.90 |
| 4. | விழுப்புரம் | 71 | 77.82 | 14.33 |
| 5. | வேலூர் | 66 | 81.94 | 12.49 |
| 6. | திருவண்ணாமலை | 64 | 77.10 | 10.26 |
| 7. | சேலம் | 32 | 41.05 | 9.65 |
| 8. | நாமக்கல் | 35 | 30.58 | 5.39 |
| 9. | தருமபுரி | 36 | 41.77 | 6.29 |
| 10. | கிருஷ்ணகிரி | 33 | 43.28 | 7.22 |
| 11. | ஈரோடு | 39 | 33.35 | 5.90 |
| 12. | திருப்பூர் | 25 | 22.59 | 5.50 |
| 13. | கோயம்புத்தூர் | 17 | 27.50 | 5.09 |
| 14. | நீலகிரி | 4 | 5.70 | 1.82 |
| 15. | தஞ்சாவூர் | 58 | 52.15 | 8.66 |
| 16. | நாகப்பட்டினம் | 36 | 35.30 | 6.62 |
| 17. | திருவாரூர் | 43 | 38.37 | 5.33 |
| 18. | திருச்சிராப்பள்ளி | 32 | 42.12 | 7.48 |
| 19. | கரூர் | 21 | 20.92 | 3.48 |
| 20. | அரியலூர் | 10 | 15.55 | 3.52 |
| 21. | பெரம்பலூர் | 5 | 10.16 | 2.37 |
| 22. | புதுக்கோட்டை | 47 | 132.89 | 6.96 |
| 23. | மதுரை | 22 | 32.03 | 6.40 |
| 24. | தேனி | 18 | 14.60 | 2.87 |
| 25. | திண்டுக்கல் | 62 | 53.22 | 7.33 |
| 26. | இராமநாதபுரம் | 31 | 32.65 | 5.06 |
| 27. | விருதுநகர் | 10 | 30.80 | 6.46 |
| 28. | சிவகங்கை | 24 | 26.85 | 4.78 |
| 29. | திருநெல்வேலி | 27 | 49.97 | 8.17 |
| 30. | தூத்துக்குடி | 17 | 25.75 | 5.11 |
| 31. | கன்னியாகுமரி | 26 | 18.27 | 3.22 |
| | மொத்தம் | 1046 | 1255.64 | 202.00 |



### 5.7 சாலை பராமரிப்பு மானியம்

ஊரகச்சாலைகள், வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் இருப்பதை உறுதிப்படுத்த, சாலைகள் குறித்த நேரத்தில் முறையாக பராமரிக்கப்படுவது முக்கியமானதாகும். முறையான பராமரிப்பு செய்தல், அதிக பொருட்செலவில் மற்றும் குறித்த காலத்திற்கு முன்னரே சாலைகளை மேம்பாடு செய்தல் அல்லது வலுப்படுத்துதலை தடுத்து, அதன்மூலம் அரசுக்கு ஏற்படும் நிதிச்சுமையை தவிர்ப்பதற்கு வழிவகுக்கிறது.

ஊரகச்சாலைகள் பராமரிப்பிற்கென தனிநிதி ஒதுக்கீடு இதுவரை செய்யப்படவில்லை.

தார்ச்சாலைகளின் பராமரிப்பு குறித்த விவரம் கீழ்க்கண்டவாறு:

| வ. எண். | விவரம் | சாலையின் நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1. | தார்ச் சாலைகளின் நீளம் | 74,981 |
| 2(i) | கடந்த 5 ஆண்டுகளில் மேம்பாடு செய்யப்பட்ட தார்ச் சாலைகளின் நீளம் | 26,981 |
| (ii) | மேம்பாட்டிற்காக 2012–13ம் ஆண்டு எடுக்கப்பட்ட சாலைகளின் நீளம் | 3,000 |
| (iii) | 2013–14ம் ஆண்டில் மேம்பாடு செய்யப்பட உள்ள சாலைகளின் நீளம் | 1,000 |
| 3. | 5 வருடங்களுக்கு முன்னர் மேம்பாடு செய்யப்பட்டு, தற்போது பராமரிக்கப்பட வேண்டிய சாலைகளின் நீளம் | 44,000 |

இத்துறை தனது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து சாலைகளையும் பராமரிப்பதற்கு தொடர்ந்து தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளும்.

**5.8 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம்**

**2012–13** ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ், **ரூ.44.36** கோடி மதிப்பீட்டில் **25** ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடப் பணிகளும், **ரூ.29.42** கோடி மதிப்பீட்டில் **361** ஊராட்சி அலுவலகக் கட்டடப் பணிகளும் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும், **ரூ.36.91** கோடி மதிப்பீட்டில் மொத்தம் **255.34** கி.மீ. நீளமுடைய **216** சாலைப் பணிகளும், **ரூ.17.52** கோடி மதிப்பீட்டில் **11** உயர் மட்டப் பாலங்களும், **ரூ.2.33** கோடி மதிப்பீட்டில் **94** குடிநீர் மற்றும் பிற பணிகளும் எடுக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.



ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டக் கூறு நிதி ஒதுக்கீட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் பயன்பாட்டிற்காக வாகனங்கள் வாங்கிடவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, **2012–13** ஆம் ஆண்டு வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி இயக்குநர்கள், உதவி செயற்பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் பயன்பாட்டிற்காக **ரூ.1.27** கோடி மதிப்பீட்டில் **24** வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின் கீழ் மொத்தம் **ரூ.131.81** கோடி மதிப்பீட்டில் **707** பணிகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், **24** வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**2012–13**ம் ஆண்டில் எடுக்கப்பட்ட பல்வேறு பணிகளின் விவரம் பின்வருமாறு:

| வ .எண் | பணியின் வகைப்பாடு | பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | சாலைகள் | 216 | 36.91 |
| 2. | பாலங்கள் | 11 | 17.52 |
| 3. | ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் | 25 | 44.36 |
| 4. | ஊராட்சி மன்ற அலுவலக கட்டடங்கள் | 361 | 29.42 |
| 5. | குடிநீர் வழங்கல் மற்றும் பிற பணிகள் | 94 | 2.33 |
| | மொத்தப் பணிகள் | 707 | 130.54 |
| 6. | வாகனங்கள் | 24 | 1.27 |
| | **மொத்தம்** | **731** | **131.81** |

## 5.9 புதிய நடவடிக்கைகள்

### 5.9.1 மின் ஒப்பந்தப்புள்ளி

இந்த துறை ஒப்பந்தப்புள்ளி கோரும் அனைத்து அமைப்புகளும் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டிற்கு மேலுள்ள அனைத்து பணிகளுக்கும் மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வழி வகை செய்துள்ளது. இத்துறை, படிப்படியாக மின் ஒப்பந்தப்புள்ளி முறைக்கு மாறும்.

### 5.9.2 நிகழ்நேர கண்காணிப்பு (Real-Time Monitoring)

பணிகளை சிறப்பாக கண்காணிப்பதற்காக, இந்த அரசு கைப்பேசி மூலம் செயல்படுத்தப்படக்கூடிய மென்பொருளை உருவாக்கியுள்ளது. இதன்மூலம் களஆய்வு தொடர்பான தகவல்களை உடனே பெறக்கூடிய வகையில், பணிகளின் புகைப்படங்களை உடனடியாக அனுப்ப இயலும். இதற்கான மென்பொருள் தேசிய தகவல் மையம் (NIC) மூலம் தயாரிக்கப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. திருப்பூர் மாவட்டத்தில், இத்திட்டம் முன்னோடியாக செயல்படுத்தப்பட்டபின்னர், நிகழ்நேர கண்காணிப்பு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

### 5.9.3 தரக்கட்டுப்பாடு

தரக்கட்டுப்பாட்டு அமைப்பினை மேம்பாடு செய்து வலுப்படுத்தும் ஒட்டுமொத்த முயற்சியின் ஒரு பகுதியாக, இத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



- இதன் முதல் கட்டமாக ரூ. 85 இலட்சம் செலவில் மாவட்ட தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கு தேவையான தரக்கட்டுப்பாட்டு உபகரணங்கள் வழங்கி ஆய்வகங்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.
- மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு தரக்கட்டுப்பாடு தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளதோடு பணிகளின் ஆய்வின்போது தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் மேற்கொள்ளவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அவ்வப்போது ஏற்பாடு செய்யும் பத்திரிகையாளர் பயணத்தின்போது தரக்கட்டுப்பாடு தொடர்புடைய பல்வேறு அளவீடுகள் ஊடகத்தினருக்கு விளக்கப்படுகின்றன.
- அனைத்து மட்டங்களில் உள்ள தரக் கட்டுபாட்டு செயலாக்கத்தினை வலுப்படுத்தும் வகையில், கட்டாய சோதனைகள் மேற்கொள்ள தேவையான அடிப்படை சோதனை உபகரணங்கள், அனைத்து வட்டார அலுவலகங்களுக்கும், ஆய்வு மேற்கொள்ளும் அலுவலர்களது வாகனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
- பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டின் மூலம் பணிகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில், உதவிப்பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள் மற்றும் செயற் பொறியாளர்கள் தேசிய அளவில் நடைபெறும் பல்வேறு பயிற்சி

வகுப்புகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள். 2012–13ம் ஆண்டில் 6 செயற் பொறியாளர்கள், 20 உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் 74 உதவிப் பொறியாளர்களுக்கு தேசிய நெடுஞ்சாலை பொறியாளர் கழகம் மற்றும் மத்திய சாலைகள் ஆராய்ச்சி நிறுவனம், புதுடில்லி ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்பட்டது. 2013–14 ஆம் ஆண்டில் 333 பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர மாநில மற்றும் மாவட்ட அளவிலும் பல்வேறு பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

- தரக்கட்டுப்பாட்டு செயலாக்கத்தினை வலுப்படுத்தும் முயற்சியின் தொடர்ச்சியாக மாவட்ட தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அவைகள் மேலும் பலப்படுத்தப்படும். இரண்டாம் கட்ட தரக் கட்டுப்பாட்டு செயலாக்கத்தினை மேம்படுத்தும் வகையில், கூடுதலாக மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான பயிற்சிகள் அளிக்கப்படும்.

### 5.9.4 தொழில்நுட்ப கையேடு

ஊரக வளர்ச்சித் துறையில் உள்ள பொறியாளர்கள் மற்றும் இதர கள அலுவலர்கள் பயன்பெறும் வகையில், இத்துறை, "கட்டடங்கள்" மற்றும் "சாலைகள் மற்றும்



பாலங்கள்" என இரு விரிவான தொழில்நுட்ப கையேடுகளை வெளியிட்டுள்ளது.

### 5.9.5. இணையதளத்தில் சாலைகளை மேலேற்றுதல்

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் புதுப்பிக்கப்பட்ட பட்டியல், இத்துறையின் இணையதளத்தில், "www.tnrd.gov.in" மேலேற்றம் செய்யப்படும். இது ஊரகச் சாலைகளின் நிலையினை கண்காணிக்கும் தளமாகவும், முடிவெடுப்பதற்கான கருவியாகவும் செயல்படும்.

**2012–13 ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்களின் கீழ் எடுக்கப்பட்ட சாலைப் பணிகளின் விவரம்**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ.) | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் | 2063.34 | 321.13 |
| 2. | மாநில நிதிக்குழு மானியம் | 1255.64 | 202.00 |
| 3. | ஊரக உள் கட்டமைப்புத் திட்டம் | 2612.44 | 316.67 |
| 4. | 13வது நிதிக்குழு மானியம் | 1659.14 | 151.00 |
| 5. | நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி –XVII | 2631.35 | 458.67 |
| 6. | இதர திட்டங்கள் | 1432.89 | 202.34 |
| | மொத்தம் | 11654.80 | 1651.81 |

# 6. மனித வள மேம்பாடு



## 6. மனித வள மேம்பாடு

### 6.1 பணியாளர் நலன்

பணியாளர் நலனுக்கு முன்னுரிமை அளிக்கும் அரசின் கொள்கையானது **2013–14**ம் ஆண்டிலும் தொடரும். முன்மாதிரியான நிர்வாகத்தை வழங்கும் குறிக்கோளில், அரசுப் பணியாளர்களுக்குச் சேரவேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு, பதவி உயர்வு உட்பட அனைத்து வழக்கமான உரிமைகள் உரிய நேரத்தில் கிடைக்க இவ்வரசு வழிவகை செய்துள்ளது. **2012–13**ம் ஆண்டில் இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் பணியிடங்களுக்கான தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் **22 தகுதிவாய்ந்த உதவி இயக்குநர்கள், இணை இயக்குநர்களாகப் பதவி உயர்வு** பெற்றுள்ளனர். அதேபோல, **127 தகுதிவாய்ந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதவி இயக்குநர்களாகப் பதவி உயர்வு** பெற்றுள்ளனர். கூடுதலாக நேரடியாக நியமனம் செய்யப்பட்ட **19 உதவி இயக்குநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு 2012–13**ம் ஆண்டில் பணியிடம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கீழ்க்கண்ட பதவிகளில் காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் **2012–13**ல் நிரப்பப்பட்டுள்ளன.

| பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| உதவியாளர் | 1182 |
| இளநிலை உதவியாளர் | 532 |
| தட்டச்சர்/சுருக்கெழுத்து தட்டச்சர் | 84 |

இவை மட்டுமின்றி **172 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு** வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், **360 உதவியாளர்களுக்கு** துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், **770 இளநிலை உதவியாளர்கள்/ தட்டச்சர்களுக்கு** உதவியாளர்களாகவும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. **243 நபர்களுக்கு கருணை அடிப்படையில்** இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பப் பிரிவில் **252 உதவிப் பொறியாளர்கள்** பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும் **251 சாலை ஆய்வாளர்களுக்கு** நிலை–2லிருந்து நிலை–1 ஆக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

திட்டங்களின் செயல்பாட்டினை தொடர்ந்து தரமான ஆய்வு செய்வதற்கு ஏதுவாக **அலை தொலைபேசி மூலம் "பொது பயன்பாட்டுக் குழு" (CUG)** முறையில் கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் முதல் வட்டார வளர்ச்சி அலுவலர் வரை உள்ள அனைத்து நிர்வாக அலுவலர்களுக்கும் கண்காணிப்புப் பொறியாளர் முதல் உதவிப் பொறியாளர் வரை உள்ள அனைத்துத் தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க **184 பணி உதவியாளர்கள் பணியிடம் முறைப்படுத்தப்பட்டு,** அவர்கள் முறையான பணியமைப்பின்கீழ் தகுதியின் அடிப்படையில் பதிவுறு



எழுத்தர் / அலுவலக உதவியாளர்/ இரவுக் காவலர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஊராட்சி செயலர்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்கும் விதமாக, **சிறப்புப் பணி விதி** முன்மொழிவுகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. வட்டார மற்றும் மாவட்டத் தலைமையிடங்களுக்குப் பயணம் மேற்கொள்ளும்போது ஏற்படும் செலவினை ஈடுசெய்ய ஊராட்சி செயலர்களுக்கு நிரந்தரப் **பயணப்படியாக மாதம் ரூ.300/–** வழங்கப்படுகிறது. மேலும், மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைக்க செவ்வனே பணி மேற்கொள்ளும் **மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு** சிறப்புப் படியாக மாதம் **ரூ.200/–** கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

**பணியாளர் நலனிற்கு முன்னுரிமை** வழங்கி தமிழக அரசு **2013–14**ம் ஆண்டிலும் பின்வரும் நடவடிக்கைகளை செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

குறிப்பிட்டக் காலவரையறைக்குள் பதவி உயர்வு வழங்குவதை உறுதி செய்ய அடிப்படைப் பயிற்சியை முடித்திருக்க வேண்டியது கட்டாயம் ஆகும். தற்போது புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள உதவியாளர்/இளநிலை உதவியாளர்/ சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகியோருக்கு வழக்கமாக பவானிசாகரில் உள்ள அரசு குடிமைப் பணிகள் பயிற்சி நிறுவனத்தில் அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது. தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக அனைத்து நிலையிலும் நியமனம்

செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,800க்கு மேற்பட்டது என்பதனைக் கணக்கில் கொண்டு அனைவருக்கும் ஒரே நிறுவனத்தில் 3 வருடங்களுக்குள் பயிற்சியளிப்பது என்பது இயலாத ஒன்று. இந்த அடிப்படைப் பயிற்சி முடிக்கவில்லையெனில் புதிதாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு தகுதிகாண் பருவம் விளம்புதல் மற்றும் பதவி உயர்வோ அல்லது ஆண்டு ஊதிய உயர்வோ வழங்க இயலாது. எனவே, இந்த **அடிப்படைப் பயிற்சியை மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களிலும்** 2013–14ம் ஆண்டில் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து உதவியாளர்/இளநிலை உதவியாளர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர்களுக்கும் 1 முதல் 2 வருடங்களுக்குள் இந்த அடிப்படைப் பயிற்சியை வழங்க இயலும்.

ஏற்கெனவே 2012–13 ஆம் ஆண்டு கொள்கைக் விளக்கக் குறிப்பில் அறிவித்தபடி, உயர்நீதிமன்றம் தொடர்புடைய பல்வேறு வழக்குகளின் நிலைகளைக் கண்காணிக்கப் புதிதாக சிறப்பு **மென்பொருள் மூலம்** பணி நடைபெற்று வருகிறது. இம்மென்பொருள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்குத் தேவையான சில மாற்றங்களை **சோதனை செய்யும் வகையில்** மாவட்டங்களில் நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதன் பயன்பாட்டு நிலை குறித்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. 2013–14ம் ஆண்டில் வழக்குகள் குறித்த



பதிவுகள் அனைத்தும் இம்மென்பொருளில் ஏற்றப்பட்டு முழுமையாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

பணியாளர்கள் பெற்ற சலுகைகள் மற்றும் பயன்களைக் கண்காணிக்க ஏதுவாக, ஏற்கெனவே அளிக்கப்பட்ட முன்மொழிவுகளைத் தொடர்ந்து அனைத்துப் பணியாளர்களின் **பணிப் பதிவேடுகளில்** உள்ள பதிவுகள் அனைத்தையும் கணினியில் உபயோகிப்பதற்காக **மின்னணு குறிப்பாக** மாற்றிப் பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணிப் பதிவேட்டிலும் அனைத்துப் பதிவுகளையும் நாளது தேதி வரை ஏற்றி சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, உதவி இயக்குநர் மற்றும் மேல் நிலை அலுவலர்களது சொந்த மாவட்டம், தற்போது பணிபுரியும் இடம், அதற்கு முந்தைய பணி விவரங்கள் ஆகியவை கொண்ட குறிப்பிட்ட சில விவரங்களை மட்டும் அடக்கிய மின்குறிப்புப் படிவம் உள்ளது. இவ்விவரங்களை மேம்படுத்தி 2013–14–ம் ஆண்டில், **பணி விவரங்கள்,** தகுதிகாண் பருவம் முடித்தது, துறைத் தேர்வுகள் தேர்ச்சி பெற்ற விவரம், பொது வைப்பு நிதி விவரங்கள், நிலுவையிலுள்ள / முடிக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த விவரங்களையும் சேர்த்து மின்னணு குறிப்பாக மாற்றி கணினியில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பதிவுகள் அனைத்தும் செய்யப்பட்ட பின்னர், ஒவ்வொரு **மாவட்டத்திற்கும் தனித்தனியே குறியீட்டு எண் மற்றும் கடவுச் சொல்** அளிக்கப்பட்டு,

முறையாக கண்காணிக்கவும், பணியாளர்கள் அனைவரின் தகுதியான பயன்களைக் காலதாமதமின்றிப் பெறவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**பொறியியல் பிரிவில்** கூடுதல் திட்டப் பணிகள் செயற்படுத்தப்படும் நிலையில், அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதால் ஏற்படும் வேலைப்பளுவினை கருத்தில் கொண்டு அனைத்து நிலையிலும் **கூடுதல் பணியிடங்கள்** தோற்றுவிக்கவும், காலியிடங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் **பணி விதிகளில் இன்றியமையாத் தகுதிகளைத் தவிர்த்து இதர விதித் தளர்வு** வழங்கி பொறியியல் பிரிவின் அடிப்படை வரை புத்துணர்வூட்டும் வகையில் சீரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. புவியியல் அமைப்பின் அடிப்படையிலும் உபகோட்ட அளவில் ஒரே அளவிலான பணிகளைச் செய்யவும் ஏதுவாக புதிதாக **கூடுதல் உபகோட்டங்கள்** உருவாக்கிட முன்மொழியப்பட்டுள்ளது. முன்மொழிவு செய்யப்படும் உபகோட்டங்கள் ஒவ்வொன்றும் தலா 2 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியும், திட்டங்கள் வாரியாக **உபகோட்ட உதவி செயற்பொறியாளர் பணிகள் பிரிக்கப்படாமல்** ஊராட்சி ஒன்றிய எண்ணிக்கை அடிப்படையில் பிரிக்கப்பட்டு செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில், சென்னை வருகை தரும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் தங்குவதற்கு **விருந்தினர் மாளிகையும்,** சென்னையில் பணிபுரியும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்



துறை அலுவலர்கள் குடியிருக்க அலுவலர் குடியிருப்பு வீடுகள் கட்டிடவும் பரிசீலனையில் உள்ளது. விரிவான வரைபடங்கள் மற்றும் தேவையான காலியிடம் அறியப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இப்பணிகள் **2013–14 ஆம்** ஆண்டு உரிய விதிமுறைகளின்படி துவக்கப்படும்.

2012–13ம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நிறுவனங்கள் மூலம் செய்யப்படும் பணிகளை சிறப்பாக செய்திட ஏதுவாக வட்டார அளவில் **தொகுதி துணை வட்டார வளர்ச்சி அலுவலர்** என்ற அமைப்பினை ஏற்படுத்திட முன்மொழியப்பட்டது. வருவாய்த் துறையில் மண்டல துணை வட்டாட்சியர் உள்ளது போல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலை அமைப்பினை **2013–14ம் ஆண்டு முதல் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்..**

சிவகங்கை, திருப்பூர், நீலகிரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் **திட்ட இயக்குநர்களுக்கு குடியிருப்புக்** கட்டிடம் கட்ட 2012–2013ம் ஆண்டு அனுமதிக்கப்பட்டு பணிகள் துவங்கியுள்ளது. இப்பணிகள் நடப்பு ஆண்டிற்குள் முடித்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

2013–2014ம் ஆண்டிற்கு பகுதி–2 திட்டத்தின்கீழ் தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை **திட்ட இயக்குநர் அலுவலகக் கட்டிடம்** ரூ.103.50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை **செயற்பொறியாளர் குடியிருப்புக் கட்டிடம்** ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

2013–2014ம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின்கீழ் உதவி இயக்குநர்(தணிக்கை), காஞ்சீபுரம் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி), கோயம்புத்தூர் ஆகியோருக்கு ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டிற்குள் **இரண்டு வாகனங்கள்** நடப்பு 2013–14 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

**6.2 திறன் மேம்பாடு**

தமிழ்நாட்டில், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் ஆகியவை ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினை சார்ந்த அலுவலர்கள் மற்றும் சுய உதவி குழுக்கள் ஆகியோருக்கு, ஊராட்சி நிர்வாகம், மாநில மற்றும் மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் ஆகிய பல்வேறு பொருள்கள் சம்பந்தமாக தொடர்பான பயிற்சிகளை அளிக்கின்றன.

**6.2.1. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள்**

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள், திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்திய விஜயநகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

**6.2.2. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள்–தோற்றம்**

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் தமிழக அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.



பொதுவாக, ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி நிலையில் பணியாற்றுகின்ற ஊர் நல அலுவலர்கள், ஊராட்சிச் செயலர்கள், இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றிய பொறியாளர்கள், பணி மேற்பார்வையாளர்கள், சாலை ஆய்வாளர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் ஆகியோருக்கு இந்நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கிராம ஊராட்சித் தலைவர்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் சார்பு துறையினர் ஆகியோருக்கும் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**6.2.3 பயிற்சி திட்ட விவரம்**

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் பயிற்சி திட்டங்கள், மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் வழக்கமான பயிற்சிகள், கணினி பயிற்சிகள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்ட பயிற்சிகள், பிற அமைப்புகளின் நிதி ஆதாரங்களின் கீழ் நடத்தப்படும் பயிற்சிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட சமூக தணிக்கை தொடர்பான பயிற்சிகள், சார்பு துறை பயிற்சிகள் , தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஐதராபாத் மற்றும் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மறைமலைநகர் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து நடத்தும் பயிற்சிகள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த பயிற்சி திட்டங்களின் கீழ் பயிற்சி பெறுவர்களுக்கு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994,

இச்சட்டத்தின் விதிமுறைகள், ஊராட்சி கணக்குகள் மற்றும் கணக்கு மேலாண்மை, மாநில அரசின் வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான விவரங்கள், மத்திய அரசின் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் தொடர்பான விரிவான வழிமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகின்றன. மேலும், திடக் கழிவு மேலாண்மை, மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிப்பு, மரபு சாரா எரிசக்தி வளங்களை பயன்படுத்துதல், மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடு போன்ற பொருள்கள் குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதர சமூக நல நடவடிக்கைகளாக கிராம சுகாதார செவிலியருடன் ஒருங்கிணைந்து தொற்று நோய்களை தவிர்ப்பதற்கான சுகாதார நடைமுறைகளை செயல்படுத்ததுல், சத்துணவு மைய அமைப்பாளர், அங்கன்வாடி மைய உதவியாளர் ஆகியோரைத் தொடர்பு கொண்டு பள்ளிக் குழந்தைகள் நல மேம்பாட்டினை உறுதி செய்தல் போன்ற இதர பொருள்கள் குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இவை தவிர, கட்டுமானப் பணிகள் குறித்த நவீன தொழில் நுட்பங்கள், கணினி பயிற்சி, மத்திய, மாநில அரசுகளின் ஊரக வளர்ச்சித் துறை தொடர்பான இணைய தளங்களைப் பயன்படுத்தி ஊராட்சி நிர்வாகத்தை மேம்படுத்தும் வழிமுறைகள் ஆகிய தொழில்நுட்பப் பொருள்கள் குறித்த பாடத்திட்டங்களும் இந்நிறுவனங்களின் பயிற்சி திட்டத்தில் பாடப் பொருளாகச் சேர்க்கப்பட்டுள்ளன. **2013–14**ம் ஆண்டில் ஒவ்வொரு



மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் மூலமும் குறைந்தபட்சம் **5000** நபர்களுக்கு பயிற்சி அளித்திடவும், அனைத்து பயிற்சி நிறுவனங்களின் மூலம் **1,00,000** பயிற்சி நாட்கள் என்ற இலக்கினை எய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**6.2.4 பணியமைப்பு**

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின், கூடுதல் இயக்குநர்/இணை இயக்குநர், நிலையிலான முதல்வர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. உதவி இயக்குநர் நிலையிலான **3** விரிவுரையாளர்கள், ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்திலும் பணிபுரிந்து வருகின்றனர். கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்து அயற்பணியில் நியமிக்கப்படும் உதவி இயக்குநர் நிலையிலான விரிவுரையாளரால் கணக்கு மற்றும் தணிக்கை தொடர்பான பயிற்சிகள் பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன. இவ்வகையான **4** விரிவுரையாளர்கள் பணியிடங்கள் ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**6.2.5 நிதி**

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் ஊதியம் மற்றும் ஊதியம் சாராத வழக்கமான செலவினங்களுக்கு தமிழ்நாடு அரசு தனது வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு வழங்குகிறது. மத்திய அரசு, மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் பயிற்சி திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ஒவ்வொரு ஆண்டிற்கும்

ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கும் வழங்குகிறது. மண்டல ஊரக வளாச்சி நிறுவனங்கள் தமது தொடரா செலவின மூலதன பணிகள் தொடர்பான கருத்துருக்களை தயார் செய்து அவற்றை மத்திய அரசுக்கு அனுப்புகின்றன. இக்கருத்துருக்கள் ஆய்வு குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்படும் பணிகளுக்கான நிதி 100 விழுக்காடு மத்திய அரசு மானியமாக இந்நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த நிதி நேரடியாக மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் தமது வளாகத்திலுள்ள கட்டிடங்கள், பயிற்சிக் கூடங்கள், தங்கும் விடுதிகள், பயிற்சி உபகரணங்கள் ஆகியவற்றை சார்பு துறைகளும், இதர பிற நிறுவனங்களும் அவற்றின் பயிற்சிகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதிக்கும் வகையில் அதற்கான கட்டணங்களின் மூலம் இந்நிறுவனங்களின் நிதி ஆதாரம் மேம்படுத்தப்படுகின்றன.

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, மாவட்ட அளவிலான பயிற்சிகள், வட்டார அளவிலான பயிற்சிகள், ஊராட்சி அளவிலான பயிற்சிகள் ஆகியவற்றை மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் நடத்துகின்றன. பயிற்சிகளை திட்டமிடுதல், ஏற்பாடு செய்தல், சிறப்பு விரிவுரையாளர்களை ஏற்பாடு செய்தல், பயிற்சி கையேடுகளை அளித்தல் போன்ற பல்வேறு வகையான பயிற்சி தொடர்பான பணிகளை



மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. இத்துடன் ஆந்திர மாநிலம், ஐதராபாத், இராஜேந்திர நகரில் உள்ள தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனத்துடனும் ஒருங்கிணைந்து பயிற்சிகள், மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 6.2.6 மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் துறை அலுவலர்கள், பணியாளர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி அளிப்பதற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படும் மாநில அளவிலான பயிற்சி நிறுவனமாகும், தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளித்து வருகிறது. இந்நிறுவனம் 1961 ஆம் ஆண்டு பவானிசாகரில் துவங்கப்பட்டது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் படி ஒரு சங்கமாக இந்நிறுவனம் 1990 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு முதல் மறைமலைநகரில் செயல்பட்டு வருகிறது.

### 6.2.7 குறிக்கோள்

மனித வளத்தை மையமாகக் கொண்டு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் அலுவலர்கள், பணியாளர்களின் திறமை, அறிவு மற்றும் செயல்திறனை மேம்படுத்தி அதன் மூலமாக

மேலாண்மையை உயர்த்துவதுடன் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் திட்டங்களை செயல்படுத்தப்பட வைப்பதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

**6.2.8 மேலாண்மை மற்றும் நிர்வாகம்**

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் தனது செயல்பாடுகளை திட்டமிடுதல், மேலாண்மை மற்றும் மேற்பார்வை செய்வதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலரை தலைவராகக் கொண்ட ஆட்சிமன்ற குழு மற்றும் செயற்குழுவினை கொண்டுள்ளது. ஆட்சி மன்றக்குழு ஆண்டிற்கு ஒரு முறையும், செயற்குழு ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும் கூடுகிறது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர் நிலையில் உள்ள அலுவலரே இந்நிறுவனத்தின் இயக்குநர் ஆவார். இவர் நிர்வாக பொறுப்புகளையும் கவனிப்பார்.

**6.2.9 விரிவுரையாளர்கள்**

நிறுவனத்தின் பணிகளை மேற்கொள்ள தமிழக அரசு நிர்வாகம் மற்றும் விரிவரையாளர் பணியிடங்களை அனுமதித்துள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, வேளாண்மைத் துறை ஆகிய துறைகளிலிருந்து அலுவலர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் அயற்பணியின் மூலமாகவும் மற்றும் நேரடி நியமனம் மூலமாகவும் பணியாற்றுகிறார்கள். மேலும் ஒப்பந்த அடிப்படையில் 5 சிறப்பு விரிவுரையாளர்களை பயன்படுத்திக் கொள்ள மத்திய அரசின் ஊரக வளர்ச்சி



அமைச்சகம் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கு அனுமதித்துள்ளது.

**6.2.10 பயிற்சிக்கான நிதி ஆதாரம்**

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் பயிற்சி திட்டங்களை நடத்துவதற்கு கீழ்கண்டவாறு நிதி ஆதாரங்களைப் பெறுகிறது.

**ஊரக வளர்ச்சி அமைச்சகம்:** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், இந்திரா நினைவு ஊரக குடியிருப்புத் திட்டம், தேசிய வாழ்வாதார இயக்கம், மக்களை நோக்கி செல்லுதல் ஆகிய திட்டங்களை செயல்படுத்துவதற்கான பயிற்சி அளித்திட மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் 100 விழுக்காடு நிதி வழங்குகின்றது.

**பஞ்சாயத்துராஜ் அமைச்சகம்:** ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிகள் வழங்குவதற்கான நிதியினை ராஜீவ்காந்தி ஊராட்சி அதிகாரமளிக்கும் திட்டத்தின் கீழ் 75 விழுக்காடு நிதி மத்திய அரசின் பஞ்சாயத்துராஜ் அமைச்சகமும், 25 விழுக்காடு நிதி மாநில அரசும் 2013–14ஆம் ஆண்டு முதல் வழங்க உள்ளன.

**தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம்:** ஐதராபாத்தில் செயல்பட்டு வரும் தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் கீழ்கண்ட பயிற்ச்சிகளை நடத்திட 100 விழுக்காடு நிதி உதவி அளிக்கின்றது.

i) நீர் வடிப்பகுதி குறித்த மேலாண்மை பயிற்சி

ii) ஊரக வளர்ச்சியில் புவியியல் தகவல் தொழில்நுட்ப பயன்பாடு,

iii) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் சார்ந்த பயிற்சிகள்.

**பணியாளர்கள் மற்றும் பயிற்சி துறை, புதுடில்லி**

மத்திய அரசில் பணியாற்றும் சார்பு செயலர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டு வார கால களப்பயிற்சி அளிக்க தேவையான 100 விழுக்காடு நிதியினை மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சி துறை வழங்குகிறது.

**6.2.11 நிர்வாகச் செலவினங்கள்**

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் நிர்வாகச் செலவினங்களுக்கு கீழ்கண்டவாறு நிதி உதவி (Grants in aid) பெறுகிறது.

**ஊதியத்திற்கான மானியம்**

நிறுவனத்தின் நிர்வாக பணியாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கான ஊதியம் மற்றும் இதர செலவினங்களை மேற்கொள்ள மாநில மற்றும் மத்திய அரசுகள் முறையே 50:50 என்ற விகிதத்தில் நிதி வழங்குகின்றன.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் 5 விரிவுரையாளர்களின் ஊதியச் செலவினம் மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் 100 விழுக்காடு வழங்கப்படுகிறது.



**ஊதியமில்லா செலவினத்திற்கான மானியம்**

நிறுவனத்தின் ஊதியமில்லா செலவினத்திற்கான நிதியினை தமிழக அரசு ஆண்டு தோறும் வழங்குகிறது.

**அடிப்படை ஆதார வசதிகளை தரம் உயர்த்த மானியம்**

பயிற்சி தொடர்பான அடிப்படை ஆதார வசதிகளை பயிலரங்க கட்டிடங்கள், தங்கும் விடுதிகள், சிறப்பான பயிற்சிகள் நடத்த பயிற்சி உபகரணங்களை பெறும் பொருட்டு மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் 100 விழுக்காடு நிதி உதவி வழங்குகிறது.

**6.2.12 பயிற்சி பங்கேற்பாளர்கள்**

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களின் திறன் மேம்பாட்டிற்கு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் கீழ்கண்ட பயிற்சிகளை நடத்தி வருகிறது.

**1. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகள்**

- மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்
- மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள்
- ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள்
- ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள்
- கிராம ஊராட்சித் தலைவர்கள்
- கிராம ஊராட்சி உறுப்பினர்கள்

**2. அலுவலர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்கள்**

இணை இயக்குநர்கள்
துணை இயக்குநர்கள்
வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
செயற் பொறியாளர்கள்

உதவி செயற் பொறியாளர்கள்

உதவிப் பொறியாளர்கள்

பணி மேற்பார்வையாளர்கள்

கிராம அளவிலான சுய உதவிக் குழு / கூட்டமைப்பு உறுப்பினர்கள்

கிராமத் தன்னார்வலர்கள்

வங்கியாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிறர்.

**6.2.13 பயிற்சி முறைகள்**

இந்நிறுவனத்தில் நடத்தப்படும் பயிற்சிகளில் விரிவுரை மற்றும் விவாதம் அடிப்படையிலான பயிற்சி முறை பின்பற்றப்படுகிறது. பயிற்சிகளில் பயிற்சி அமர்வு சார்ந்த விளையாட்டுகள், தனி நடிப்பு, புத்துணர்வூட்டும் நிகழ்வுகள், குழு விவாதங்கள், பட்டறிவுப் பயணங்கள், பயிற்சி அட்டைகள் (Training Charts) தயாரித்தல் ஆகியவையும் தொடர்ந்து இடம் பெறுகின்றன. இத்தகைய அமர்வுகளை நிறுவன விரிவுரையாளர்கள், அரசுத் துறை அலுவலர்கள், இதர பயிற்சி நிறுவனங்களைச் சார்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் பலர் திறம்பட நடத்துகின்றனர்.

**6.2.14 பயிற்சிகள் நடத்துதல்**

இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை மறைமலைநகரில் உள்ள நிறுவன வளாகத்திலும், உறைவிடப் பயிற்சி தவிர பிற பயிற்சிகளை வெளி வளாக பயிற்சிகளாக மாவட்ட, வட்டார தலைமையிடங்களிலும் மற்றும் மாவட்ட



நிர்வாகத்தால் கண்டறியப்பட்ட கிராம ஊராட்சிகள் தொகுப்புகளிலும் நடத்துகின்றது.

**6.2.15 பயிற்சி வல்லுநர்கள்**

நிறுவனத்தில் பணிபுரியும் பல்வேறு விரிவுரையாளர்கள் தவிர, பயிற்சி அமர்வுகள் தொடர்பான சிறப்பு விரிவுரையாளர்கள் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரவழைக்கப்படுகின்றனர்.

- தேசிய தகவல் தொழில்நுட்ப மையம், சென்னை.
- தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஐதராபாத்.
- அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள தொலையுணர்வு மையம், சென்னை.
- அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை.
- எஸ்.ஆர்.எம் பல்கலைக் கழகம், பொத்தேரி, காஞ்சிபுரம் மாவட்டம்.
- விவசாய அறிவியல் மையம், காட்டுப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.
- கால்நடை ஆராய்ச்சி மையம், பொத்தேரி, காஞ்சிபுரம் மாவட்டம்.
- சென்னை பல்கலைக் கழகம், சென்னை.
- பொது சுகாதார நிறுவனம், பூந்தமல்லி, திருவள்ளூர் மாவட்டம்.
- வேளாண்மைபொறியியல் துறை, சென்னை.
- பிற துறை அலுவலர்கள்

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்ந்த அலுவலர்கள்
- தேசிய மற்றும் மாநில அளவிலான தரக் கண்காணிப்பாளர்கள்
- சிறந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள், அரசு சாரா அமைப்புகள், பணியிலுள்ள / பணி ஓய்வு பெற்ற அலுவலர்கள் ஆகியோரின் சேவைகளைப் பயன்படுத்தி மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் பயிற்சிகளை நடத்தி வருகிறது.

**6.2.16 நிறுவன உள்கட்டமைப்பு வசதிகள்**

பயிற்சிகளை முறையாக நடத்துவதற்குத் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட குளிரூட்டப்பட்ட பயிற்சி அறைகள், பயிற்சி உபகரணங்கள், நூலகம், இணைய தள வசதியுடன் கூடிய கணினிக் கூடங்கள், 130 நபர்கள் வரை தங்கி உணவருந்தக் கூடிய விடுதி, தானியங்கி வசதியுடன் கூடிய 125 KVA மின்னாக்கி ஆகியவை உள்ளன.

**6.2.17 2012–13 ஆண்டுக்கான நிறுவன செயல்பாடுகள்**

**மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தால் 2012–13 ஆம் ஆண்டில் 1,76,431 நபர்களுக்கு பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 1,07,194 தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.**



விடுதியில் ரூ.30.30 இலட்சம் செலவில் **61 அறைகளில்** பயிற்சி பங்கேற்பாளர்கள் வசதிக்காக **67 குளிர்சாதனங்கள்** பொறுத்தப்பட்டுள்ளன.

இந்நிறுவன வளாகத்தில் **700 மீட்டர் நீளமுள்ள சிமெண்ட் சாலை** ரூ.34.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. **640 மீட்டர் சுற்றுச் சுவர் ரூ.30.50** இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

**ரூ.1436.13 இலட்சம் செலவில்** புதிதாக கட்டப்படவுள்ள **விடுதிக் கட்டிடம்** மற்றும் **ரூ.814.31 இலட்சம் செலவில்** கட்டப்படவுள்ள **பல்நோக்கு கருத்தரங்குக் கூடம்** ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள், காஞ்சிபுரம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் ஒப்படைக்கப்பட்டு விரைவில் பணிகள் துவங்கப்படவுள்ளது.

ரூ.99.85 இலட்சம் செலவில் ஊரகத் தொழில்நுட்ப வளாக மையத்திற்கான கட்டடப் பணிகள் ஏப்ரல் 2013–க்குள் முடிக்கப்படும்.

ரூ.102 இலட்சம் செலவில் அலுவலர் குடியிருப்பு மற்றும் விடுதிக்கான கட்டடப் பணிகள் மே 2013–க்குள் முடிக்கப்படும்.

தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஐதராபாத், இந்நிறுவனத்தில் ரூ.30.62 இலட்சம் செலவில் ஊரக வளர்ச்சி புவியியல் தகவலியியல் பயன்பாட்டு மையத்தை அனுமதித்துள்ளது. இதன் மூலம் பல்வேறு பயிற்சிகள் நடத்தப்படும். தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் முதல் 3 ஆண்டுகளுக்கு தொழில்நுட்ப உதவி மற்றும் நிதி

உதவிகளை வழங்கும் அதன் பின்பு மையமானது தற்சார்பு நிலையில் செயல்படும்.

**2013–14–ம் ஆண்டில் கீழ்க்கண்ட பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்**

- குடிநீர் மற்றும் சுகாதாரம்
- மழைநீர் சேகரிப்பு
- திடக்கழிவு மேலாண்மை
- சூரிய எரிசக்தி பயன்பாடு
- ஊராட்சிகளின் நிதி ஆதாரங்கள் மேம்பாடு
- பெண்கள் மேம்பாடு மற்றும் பாலினம்
- தலைமைத்துவ பண்புகள்
- ஊராட்சிக் கணக்குகள் மற்றும் தணிக்கை
- பணியமைப்பு விவரங்கள்
- கணினி பயன்பாடு
- மாநில மற்றும் மத்திய அரசின் இணைப்புத் திட்டங்கள்
- பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சிகள்
- கட்டுமானத் தொழில் நுட்பம்
- தகவல் உரிமைச் சட்டம் – 2005.
- பரவலாக்கப்பட்ட திட்டம்.



**2013–14 ஆம் ஆண்டில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் ரூ.14. 59 கோடி செலவில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உட்பட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர் என மொத்தம் 91,289 பேர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.**

# 7. புது வாழ்வு திட்டம்



**7. புது வாழ்வு திட்டம்**

**அனைத்து தரப்பு மக்களின் தேவைகளை உள்ளடக்கிய உயரிய வளர்ச்சியை வெளிப்படுத்தும்– மிகவும் பின்தங்கிய, நலிவுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலனில் அக்கறை கொண்டு சமமான வாய்ப்புகளும், வசதிகளும் பெற்று, வேண்டுவோருக்கு வேலை கிடைக்கச்செய்து, வறுமை முற்றிலும் அகன்று தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக உருவாகும்.**

**– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை 2023 ஆவணம்.**

**7.1 அறிமுகம்**

தமிழ்நாடு அரசு, உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தும் புது வாழ்வு திட்டம், அடித்தள மக்களின் பங்கேற்புடன் ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழ்மையை முழுமையாக ஒழிக்க சீரிய முயற்சி மேற்கொண்டுள்ளது. மக்களிடையே அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தி நிலையான விளைவுகளை தக்க வைத்துக்கொள்ளும் வகையில் மக்களை முன்னிறுத்தி அவர்களே தங்களின் முன்னேற்றத்திற்கு பொறுப்பாக்கும் அணுகுமுறையை பின்பற்றி மிகவும் ஏழை மற்றும் நலிவுற்றோர் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு இத்திட்டம் அடிகோலுகிறது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2005ம் ஆண்டு துவக்கப்பட்ட இத்திட்டம் உலக அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது. தமிழக முதலமைச்சர் அவர்களின்**

**தொலைநோக்கு பார்வை – 2023–ன் நோக்கத்தை எட்டும் வகையில், வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு இணையாக சமுதாய மற்றும் மனித வள மேம்பாட்டு குறியீட்டினை எய்திட, வலுவான மக்கள் அமைப்புகள், நலிவுற்றோர் மற்றும் ஏழை எளியோருக்கான வள ஆதாரங்கள் மற்றும் சமுதாய மூலதனம் ஆகியவற்றை ஏற்படுத்தி புது வாழ்வு திட்டம் தமது பங்கினை ஆற்றி வருகிறது.**

**7.2 திட்ட பகுதிகள்**

இத்திட்டம் 2005ம் ஆண்டில் 15 மாவட்டங்களில் துவக்கப்பட்டு, தற்போது 26 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் அடங்கும் 4170 ஊராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.1667 கோடி ஆகும். இதன் மூலம் 9.8 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயன்பெறும். இத்திட்டம் செப்டம்பர் 2014 வரை செயல்படும்.

**7.3 நோக்கங்கள்**

வலுவான சமுதாய அமைப்புகளை ஏற்படுத்தி, மக்களின் திறனை மேம்படுத்தி, வாழ்வாதாரத்திற்கு வேண்டிய உதவிகள் புரிந்து நலிவுற்ற இலக்கு மக்கள் பிற துறைகள் மூலம் பெற வேண்டிய உரிமைகள் மற்றும் பயன்களை அவர்களுக்கு பெற்றுத்தந்து ஏழை எளிய மக்களின் அதிகார பங்களிப்பிற்கு வழிவகை செய்து அவர்களின் வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலையை தோற்றுவிப்பதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.



**7.4 திட்ட செயலாக்க அமைப்பு**

**அ) மாநில அளவில்**

இத்திட்ட செயல்பாட்டிற்கு நிகர்நிலை அதிகாரம் கொண்ட மாநில அளவிலான தமிழ்நாடு புது வாழ்வு சங்கமானது தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் அவர்கள் இச்சங்கத்தின் தலைவராவார்.

திட்ட இயக்குநர் இச்சங்கத்தின் உறுப்பினர் – செயலாளராக செயல்படுவதுடன் மாநில திட்ட நிர்வாக அமைப்பிற்கு தலைமை பொறுப்பு வகிப்பார். பல்வேறு நிலையில் பல்முனை திறன் கொண்ட வல்லுநர் குழு இந்த அமைப்பின் ஒரு அங்கம் ஆகும். இத்தலைமை அமைப்பு திட்ட செயலாக்கத்திற்கு தேவையான மேலாண்மை, வழிகாட்டல், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பிற்கு பொறுப்பாகி திட்ட செயலாக்கத்தின் அனுபவங்களின் அடிப்படையில் அவ்வப்போது திட்ட செயலாக்க நடைமுறைகளை மறுவரையறை செய்தும் மாற்றி அமைத்தும் வழி நடத்துகிறது.

**ஆ) மாவட்ட அளவில்**

மாவட்ட அளவிலான திட்ட செயலாக்க அமைப்பு மற்றும் சங்கத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைமை பொறுப்பு வகிப்பார். உதவி திட்ட மேலாளர்கள் மற்றும் களப்பகுதி அணிகள் உதவியுடன் திட்ட செயலாக்க அமைப்பிற்கு மாவட்ட திட்ட மேலாளர் தலைமை வகிப்பார். திட்ட

செயலாக்கம், கண்காணிப்பு, வழிகாட்டுதல் மற்றும் வழிநடத்துதல் ஆகிய பணிகளை மாவட்ட அமைப்பு மேற்கொள்ளும்.

**இ) பகுதி அளவில்**

களஅளவில் திட்ட செயலாக்கத்திற்கு திட்ட ஒருங்கிணைப்பு அணி முக்கிய இடம் வகிக்கிறது. எளிதான செயல்பாட்டிற்காக தொடர்ச்சியாக அமைந்துள்ள 10 முதல் 15 ஊராட்சிகள் அடங்கியது ஒரு களப்பகுதியாகும். அடித்தள நிலையில் மக்கள் அமைப்புகளுக்கு உறுதுணையாக இருந்து அவர்களின் திறனை வளர்த்து திட்ட செயல்பாட்டை மேற்கொள்ள ஒவ்வொரு களப்பகுதிக்கும் 5 பணியாளர்கள் கொண்ட ஒரு ஒருங்கிணைப்பு அணி உள்ளது.

**ஈ) கிராம அளவில்**

கிராம வறுமை ஒழிப்பு சங்கம், இலக்கு மக்களை உள்ளடக்கி, தன்னாட்சியுடன் செயல்படும் மக்கள் அமைப்பாகவும் கிராம சபைக்கு கட்டுப்பட்ட பொறுப்பான அமைப்பாகவும் செயல்படுகிறது. இச்சங்கம் அனைத்து திட்ட செயல்பாடுகளையும் முன்நின்று மேற்கொள்கின்றது. இது கிராமஅளவிலான திட்ட செயல்பாட்டிற்கு பொறுப்பாகிறது. கிராம ஊராட்சி மன்றத் தலைவர் இச்சங்கத்தின் தலைவராவார். சமூகப் பணிகளை மேற்கொண்டு இலக்கு மக்களின் பலவகையான தேவைகளை நிறைவேற்றி, சேவைகள் கடைநிலை வரை சென்றடைவதை உறுதி செய்து, வறுமையின் பிடியிலிருந்து



மக்கள் மீளப்பெறும் தன்மை பெற்றிட செயல்படும் சக்தி வாய்ந்த அமைப்பாக கிராம வறுமை ஒழிப்பு சங்கம் உருவாகி உள்ளது.

**7.5 இலக்கு மக்கள்**

இத்திட்டமானது மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களை கண்டறியும் வலிமையான மற்றும் வெளிப்படையான செயல்முறையை கொண்டுள்ளது. இதன் மூலம் இயல்பான வாழ்க்கையில் எதையும் எதிர்கொள்ள உள்ளார்ந்த திறமைகளற்றவர்களை உள்ளடக்கிய வறுமை நிலையில் வாடுபவர்கள் கண்டறியப்படுகிறார்கள். உணவு, உடை, உறைவிடம், சமூக பாதுகாப்பு, மருத்துவ தேவை மற்றும் நிதியுதவி போன்ற தேவைகள் அனைத்திற்கும் பிறரைச் சார்ந்துள்ளோர், மிகவும் வயதானவர்கள், கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஆதரவற்றோர் இவர்களில் அடங்குவர்.

**7.6 அணுகுமுறை**

இத்திட்டம் குறிப்பாக, மிகவும் ஏழைகள் மற்றும் நலிவுற்றோர், தங்களின் உரிமைகளை பெறுவதிலுள்ள தடைகளை அகற்றி, தொடர் சேவைகள் தங்கு தடையின்றி பெற்றிட உறுதிசெய்கிறது. மேலும் அவர்களின் திறன்களை மேம்படுத்தி, கடன் வசதி மற்றும் சந்தைப்படுத்துதலில் கவனம் செலுத்தி, ஊராட்சி மன்றம் மற்றும் சமுதாய அமைப்புகள் ஒருவருக்கொருவர் பயன்பெறும் வகையில் செயல்படுகிறது. மக்களே மக்களை ஒருங்கிணைத்து தங்கள் முன்னேற்றத்திற்கு தாங்களே தூண்டுகோலாக இருந்து

தங்களிடம் உள்ள திறன்களை வலுப்படுத்தி, எளிதில் கிடைக்கப்பெறும் அனைத்து வாய்ப்புகளையும் முழுமையாக பயன்படுத்தி, நலிவின் தாக்கத்திலிருந்து தங்களை பாதுகாத்து வறுமையின் பிடியிலிருந்து வெளிக்கொணரும் அணுகுமுறையினை இத்திட்டம் பின்பற்றுகிறது.

மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்காக இத்திட்டம், மக்களை முன் நிறுத்தி அவர்களே தங்களின் முன்னேற்றத்திற்கு பொறுப்பாகும் அணுகுமுறையை பின்பற்றுகிறது.

திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான முடிவுகளை தாங்களாகவே மேற்கொண்டு கண்காணிக்கும் திறமை படைத்தவர்களாக மக்களை உருவாக்கி, அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வழிகாட்டிகளாக திட்ட களப்பணியாளர்கள் செயல்படுகின்றனர்.

### 7.7 திட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட சமுதாய அமைப்புகள்

திறன் வளர்ப்பு மூலம் செறிவூட்டப்பட்ட வலுவான சமுதாய அமைப்புகளை திட்டம் உருவாக்குகிறது.

ஊராட்சி அளவில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், மக்களின் உரிமைகள், சமூக பாதுகாப்பு போன்ற சமூக நலன்களில் கவனம் செலுத்துகிறது. சுய உதவிக் குழுக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வங்கிகள் மற்றும் நபார்டு போன்ற நிதி நிறுவனங்கள் மூலம் நிதியைத் திரட்டி கடன் வழங்கும் அமைப்பாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் செயல்படுகிறது.



ஊராட்சி அளவில் ஒரே வகையான தனிநபர் வாழ்வாதார நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட ஒத்த தொழில் குழுக்கள், சந்தைப்படுத்துதல், பொது கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி கொடுத்தல் மற்றும் மூலப் பொருட்கள் வாங்குவதில் குழு அங்கத்தினர்களுக்கு உதவி புரிகின்றது.

ஊராட்சி அளவில் ஏற்படுத்தப்பட்ட அனைத்து சமுதாய அளவின் செயல்பாடுகளையும் கண்காணித்து கிராம சபை கூட்டத்திற்கு நேரடியாக அறிக்கை அளிக்கும் தற்சார்பற்ற அமைப்பாக சமூக தணிக்கை குழு செயல்படுகிறது.

### 7.8 உருவாக்கப்பட்ட சமூக மூலதனம்

திட்டத்தின் திறன் வளர்ப்பு தேவைகளை நிறைவேற்ற தேவையான பன்முனை திறன் கொண்ட சமுதாய வல்லுநர்களை இத்திட்டம் கொண்டுள்ளது. தேவையின் அடிப்படையில் குறைந்த செலவில் தரமான சேவையை இவர்கள் வழங்குகின்றனர். திட்ட செயல்பாடுகள் தவிர தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், தாட்கோ, எய்ட்ஸ் கட்டுப்பாடு போன்ற பிற திட்டங்களுக்கு தேவைப்படும் திறன் வளர்ப்பு சேவைகளையும் வழங்குகின்றனர்.

### 7.9 திட்டத்தின் முதன்மை பணிகள்

வலுவான மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களின் அடிப்படையில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**திட்டத்தின் பல்வேறு நடவடிக்கைகள்:**

1. மக்களிடம் திட்ட செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான தகவல் தொடர்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
2. மக்கள் நிலை ஆய்வு மூலம் இலக்கு மக்களை கண்டறிந்து கிராம சபையில் ஒப்புதல் பெறுதல்.
3. திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இலக்கு மக்களைக் கொண்டு கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் சமூக தணிக்கை குழு உருவாக்குதல்.
4. மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை கண்டறிய முகாம்களை நடத்துதல்.
5. இளைஞர்கள் அடிப்படை புள்ளி விவர பட்டியல் தயார் செய்து, அவர்களுக்கு தேவையான தொழில் வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சிகளை கிராம வறுமை ஒழிப்பு சங்கம் வழங்க ஏற்பாடு செய்தல்.
6. விடுபட்ட இலக்கு மக்களை கண்டறிந்து புதிய சுய உதவி குழுக்களை உருவாக்குதல்.
7. சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் உதவி கிடைக்கச் செய்தல்.



8. ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்கள் கூட்டமைப்பு ஏற்படுத்தி வாழ்வாதார நிதியுதவி பெற்றுத்தருதல்.
9. தனிநபர் வாழ்வாதார செயல்பாடுகளை ஒருங்கிணைத்து, அவற்றை ஒத்த தொழில் குழுக்களாக உருவாக்கி, பொது கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
10. சமூக வல்லுநர்களை உருவாக்கி அவர்களை நிறுவன அமைப்பின் கீழ் கொண்டு வருதல்.

### 7.10 சாதனைகள்

| வ. எண் | நடவடிக்கை | 2012–13ஆம் ஆண்டு இலக்கு | சாதனை |
|---|---|---|---|
| திட்ட நிதி சாதனைகள் | | | |
| 1. | பெண்கள், பழங்குடியினர் மற்றும் இளைஞர்களுக்கான சுய உதவிக் குழுக்கள் உருவாக்குதல் | 4,000 | 4,233 |
| 2. | மாற்றுத் திறனாளிகளுக்கான சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் | 2,800 | 2,930 |
| 3. | வாழ்வாதார நடவடிக்கைகள் தொடங்குவதற்கு நிதியுதவி பெற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் எண்ணிக்கை | 2,500 | 2,894 |
| 4. | வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி பெற்ற இளைஞர்கள் | 25,000 | 28,128 |

| வ. எண் | நடவடிக்கை | 2012–13ஆம் ஆண்டு இலக்கு | சாதனை |
|---|---|---|---|
| 5. | வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்கள் | 20,000 | 23,224 |
| 6. | மறு சீரமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | 30 | 36 |
| 7. | வழங்கப்பட்ட வாழ்வாதார நிதியுதவி | ரூ.75 கோடி | ரூ.80.74 கோடி |
| 8. | உருவாக்கப்பட்ட ஒத்த தொழிற் குழுக்கள் | 400 | 483 |
| **திட்ட நிதிக்குட்படாத சாதனைகள்** | | | |
| 9. | சுழல் நிதி பெற்ற புதிய மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1,200 | 1,244 |
| 10. | சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட முதல் கடன் உதவி | ரூ.10 கோடி | ரூ.10.68 கோடி |
| 11. | இரண்டாம் கடன் உதவி பெற்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 2,000 | 2,076 |
| 12. | சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட இரண்டாம் கடன் உதவி | ரூ.8 கோடி | ரூ.16.41 கோடி |
| 13. | திட்டத்தின் முயற்சியால் பராமரிப்புத் தொகை பெற்ற மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை | 750 | 869 |
| 14. | உபகரணங்கள் மற்றும் கருவிகள் பெற்ற மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை | 3,200 | 3,402 |
| 15. | திட்டத்தின் முயற்சியால் சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் பெற்றவர்களின் எண்ணிக்கை | 15,000 | 18,567 |



கூடுதலாக எடுத்துக்கொள்ளப்பட்ட 10 மாவட்டங்களில் திட்ட செயலாக்கத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் அடிப்படை தகவல் சேகரிப்பு, துவக்கநிலை தகவல் தொடர்பு செயல்பாடுகள், மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிந்து கிராமசபை ஒப்புதல் பெறுதல், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் சமூக தணிக்கை குழுக்கள் அமைத்தல் போன்ற அனைத்து பணிகளும் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளன.

### 7.11 சிறப்பு செயல்பாடுகள்–2012–13

#### 7.11.1 கிராம கற்றல் மையங்கள்

கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களை வலுப்படுத்தி கிராம கற்றல் மையங்களாக செயல்பட தேவையான அகண்ட அலைவரிசை இணைப்பு, வலைதள படக்கருவி, கல்வி குறுந்தகடுகள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் வழங்கி பயன்படுத்தபட்டு வருகின்றன. சந்தை விலை நிலவரம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வழிகாட்டுதல், மாணவர்கள் கல்வி சம்பந்தமான தகவல்கள் பெறவும், வழிகாட்டுதலுடன் இணையத்தை முழுமையாக பயன்படுத்தவும் வழிவகை செய்யப்படுகிறது.

முதற்கட்ட மாவட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்ட 2,509 கிராமங்கள் அனைத்திலும் இம்மையங்கள் இயங்கும். தற்போது 1,499 கிராமங்களில் இவை செயல்பட்டு வருகின்றன.

### 7.11.2 சுகாதார அட்டை வழங்கும் திட்டம்

இலக்கு மக்கள் குடும்பங்களை சார்ந்த பெண்களின் ஆரோக்கியம் மற்றும் நல மேம்பாட்டை கண்காணித்திடும் முகத்தான் அவர்களுக்கு சுகாதார அட்டை வழங்க உத்தேசிக்கப்பட்டது. இதன் மூலம் அவர்களின் ஆரோக்கியத்தை பேணி, தக்க தருணத்தில் உரிய சிகிச்சைகள் பெற இயலும். காலாண்டு சுகாதார பரிசோதனை மூலம் அட்டைதாரரின் உயரம், எடை, இரத்தவகை, இரத்தஅழுத்தம், நீரிழிவு, இரத்தசோகை போன்றவை குறித்து தகவல்கள் இவ்வட்டையில் பதிவு செய்யப்படும். உள்ளூரில் அமைந்துள்ள சுகாதார மையங்களில் பணிபுரியும் செவிலியர்களின் சேவையை பயன்படுத்தி சுகாதார அட்டையில் உடல் நலம் சார்ந்த தகவல்களை பதிவு செய்து கண்காணிக்கும் வேலை அனைத்து ஊராட்சிகளிலும் துவக்கப்பட்டுவிட்டது.

### 7.11.3 மனிதவள மேம்பாட்டு கொள்கைக்கான மானியம் மூலமாக மனநலம் இயலாதோர்க்கு சமூகம் சார்ந்த அணுகுமுறை (2012–2016)

நம்பிக்கையுடன் கூடிய அர்த்தமுள்ள வாழ்க்கையை மனநலம் இயலாதவர்கள் வாழ்ந்திட, தக்க மாற்றத்தை கொண்டு வருவதற்கான முயற்சி **2012–13** இல் மேற்கொள்ளப்பட்டது. ஜப்பானிய கொள்கை அடிப்படையிலான மனித வள மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.**13.60** கோடி நிதியுதவியுடன் இம்முயற்சி, புது வாழ்வு திட்டம் அமலில் உள்ள **16** முதற்கட்ட மாவட்டங்களில்



திட்டம் செயலாக்கத்தில் உள்ள **578** ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப கட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. திட்ட செயல்பாட்டு வரைவு மற்றும் திட்ட வழிகாட்டி கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட வட்டாரங்களில் உள்ள மனநலம் இயலாதோர் குறித்த அடிப்படைத்தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. (மனநோய், வளர்ச்சி நிலையில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் மனநலம் குன்றியோர்)

### 7.11.4 குடும்ப தொலைநோக்கு அட்டை

இவ்வட்டையில் இலக்கு மக்கள் குடும்பங்கள் பெற வேண்டிய உரிமைகள் மற்றும் சலுகைகள் குறித்த தகவல்கள் குறிக்கப்பட்டு இவை அனைத்தும் இக்குடும்பங்கள் பெற்றுவிட்டனவா என்பதை முறையாக கண்காணிக்க உதவுகிறது. இதுவரை இத்திட்டம் மூலம் **4,99,821** குடும்பங்கள் பயன்பெற்றுள்ளனர்.

### 7.11.5 டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

சுய உதவிக்குழு பெண்களை முன்வைத்து கொசுக்களை ஒழித்து டெங்கு காய்ச்சல் வருவதை தடுப்பதற்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. விழிப்புணர்வு பேரணிகள், சுய உதவிக்குழு கூட்டங்களில் இது குறித்து விவாதித்தல், துண்டு பிரசுரங்கள் விநியோகித்தல், வீடுகளில் ஆய்வு மேற்கொண்டு கொசு உற்பத்தியாகும் இடங்களை ஒழித்தல் மற்றும் தகவல் பலகையில் விவரங்கள் அளித்தல் போன்ற சீரிய

நடவடிக்கைகளில் பெண்கள் அதிக அளவில் கலந்து கொண்டனர்.

**7.11.6 தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடுதல்**

புது வாழ்வு திட்டத்தின் மூலம் பெண் குழந்தைகள் பாதுகாப்பு, பெண்சிசு வதை, கருக்கொலை போன்றவற்றில் இலக்கு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இம்முயற்சியில் பள்ளிக் குழந்தைகளும் கலந்து கொண்டனர். **மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்காக அளித்த 13 அம்ச சாசனம், உறுதிமொழியாக மேற்கொண்டு தீபம் ஏந்தி விழிப்புணர்வு பேரணிகள், பள்ளிக் குழந்தைகளுக்கிடையே போட்டிகள், ஊர்வலங்கள் ஆகியவை நடத்தப்பட்டன.**

**7.11.7 தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான நீச்சல் போட்டிகளில் பங்கேற்பு**

புது வாழ்வு திட்டப் பகுதியைச் சேர்ந்த 8 மாற்றுத் திறனாளிகள் 12வது தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான நீச்சல் போட்டியில் பங்கேற்று 8 பதக்கங்களைப் பெற்றனர். இதில் 2 தங்கம் 3 வெள்ளி மற்றும் 3 வெண்கல பதக்கங்களும் அடங்கும். தமிழ் நாட்டில் இருந்து இப்போட்டியில் பங்கேற்ற மொத்தம் 17 பங்கேற்பாளர்களில் 50 சதவீதம் புது வாழ்வு திட்டபகுதியைச் சார்ந்தவர்கள் என்பதும் தமிழ்நாடு வென்ற மொத்த 17 பதக்கங்களில் இவர்கள் வென்றது 8 பதக்கங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது,



**7.12 நிதி பயன்பாடு – 28.02.2013 வரை**

திட்ட தொடக்க காலத்திலிருந்து 28.02.2013 வரையில் முதல் மற்றும் இரண்டாம் கட்ட மாவட்டங்களில் ரூ.938.50 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**01.04.2012 முதல் 28.02.2013 வரை**

01.04.2012 முதல் 28.02.2013 வரையிலான காலத்தில் முதல் மற்றும் இரண்டாம் கட்ட மாவட்டங்களில் ரூ.221.99 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**2013–14க்கான நிதி ஒதுக்கீடு**

**2013–14 ஆம் ஆண்டிற்கு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.350 கோடியாகும்.**

# 8. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்



## 8. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு அரசு மகளிரை அதிகாரப்படுத்தும் முயற்சிகளை ஒருங்கிணைத்து முனைப்புடன் செயல்படுத்துவதற்காக **1983** ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தை உருவாக்கியது. மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் மத்திய அரசினால் நிறைவேற்றப்படும் பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பு இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டதன் மூலம் மகளிரை மையப்படுத்தி இந்நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டது. மத்திய அரசு பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை தேசிய ஊரக வாழ்வாதார இயக்கமாக மாற்றியமைத்துள்ளது. இவ்வியக்கம் நமது மாநிலத்தில் **2012**-13 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தினை நிறைவேற்றும் முகமையாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற இரண்டு பெரும் திட்டங்களை செயல்படுத்துகிறது.

### 8.1 மகளிர் திட்டம்

மகளிருக்கு சமூக, பொருளாதார அதிகாரம் வழங்கி, அதன் மூலம் வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன், மாநில

அரசின் முழு நிதி பங்களிப்புடன், சுய உதவிக் குழு அடிப்படையிலான "மகளிர் திட்டம்" தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க தேவையான வங்கிக்கடன் இணைப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகிறது. சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தவும், கூட்டுத்திறன் மூலம் வாழ்வாதார நடவடிக்கைகளில் பொருளாதார அளவீட்டைப் பெற்று பயனடைந்திடவும் இச்சுய உதவிக் குழுக்கள் ஊராட்சி அளவில் கூட்டமைப்புகளாக ஒருங்கிணைக்கப்படுகின்றன.

**இதுவரையிலான முன்னேற்ற விபரம்**

| வ.எண் | விபரம் | சாதனை |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 5.56 இலட்சம் |
| 2 | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 85.69 இலட்சம் |
| 3 | வங்கிக் கடன் இணைப்பு | ரூ.19417.57 கோடி |
| 4 | மொத்த சேமிப்பு | ரூ.3700 கோடி |
| 5 | மொத்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | 12,524 |
| 6 | பெருங்கடன் பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் | 549<br>தொகை<br>ரூ.123 கோடி |



சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னோடியாக செயல்படுத்திய தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற பெயரில் நமது மாநிலத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தைச் செயல்படுத்துவதற்கான அடிப்படைக் களமாகத் திகழ்கிறது.

சுய உதவிக் குழு இயக்கம் பெற்ற சாதனைகளை, நிலைப்படுத்தும் வகையில் ஒருங்கிணைத்தல், சந்தைப்படுத்துதல், எழுத்தறிவு, பாலின விழிப்புணர்வு, சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற செயல்பாடுகளை மேற்கொண்டு, சுய உதவிக் குழு இயக்கம் நிலைத்த தன்மை பெறுவதற்கு மகளிர் திட்டத்தின் கீழ் முன்னுரிமை அளிக்கப்படும்.

**8.2. மகளிர் திட்ட செயல்பாடுகள்**

**8.2.1. சிறப்பாகச் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருதுகள்**

சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்திடும் பொருட்டு, முக்கியத் திட்டப் பங்காளர்களாகச் செயல்படுபவர்களை ஊக்குவிக்கும் வகையில், பல விருதுகள் வழங்கப்படுகின்றன.

**2012–13 ஆம் ஆண்டில் அனைத்து உறுப்பினர்களையும் எழுத்தறிவு பெற்றவர்களாக உருவாக்கும் 30 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.50,000/- பரிசுடன் கூடிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சமூக அநீதிகளுக்கு எதிராக அசாதாரணமான துணிவுடன்**

**போராடும் சுய உதவிக் குழுக்களைக் கௌரவிக்கும் வகையில் 5 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.1 இலட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.** இவ்விருதுகள் மூலம் சுய உதவிக் குழுக்கள் சமூக நீதிக் காவலர்களாக, சமூக அநீதிகளை எதிர்த்துப் போராட எழுச்சி பெறுவர்.

இந்நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் ஏனைய விருதுகள் பின்வருமாறு:

**விருதுகள் விபரம்**

| வ.எண் | விருதுகளின் பெயர் | பரிசு விபரம் |
|---|---|---|
| **1** | **வங்கியாளர்களுக்கான விருதுகள்** | |
| அ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட வங்கிக்கான விருது | முதல் மூன்று வங்கிகளுக்கு - நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| ஆ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட சுய உதவிக் குழு /பெண்களுக்கான தனி வங்கிக்கிளை விருது | முதல் பரிசு – ரூ.1 லட்சம்<br>இரண்டாம் பரிசு – ரூ.75,000/- |
| இ) | மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட பிற வங்கிக் கிளை விருது | முதல் பரிசு – ரூ.1 லட்சம்<br>இரண்டாம் பரிசு – ரூ.75,000/-<br>மூன்றாம் பரிசு - ரூ.50,000/- |
| ஈ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக்கான விருது | ஒரு நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| உ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக் கிளைக்கான விருது | முதல் பரிசு ரூ.15,000/–<br>இரண்டாவது பரிசு - ரூ,10,000/–<br>மூன்றாவது பரிசு - ரூ.5,000/– |
| **2.** | **சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான விருதுகள்** | |
| அ) | 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கு மாநில அளவிலான விருதுகள் | தலா ரூ. 1 லட்சம் |
| ஆ) | சிறந்த மூன்று சுய உதவிக் குழுக்களுக்கு மாவட்ட அளவிலான விருதுகள் | தலா ரூ. 25,000/- |
| இ) | ஒரு சிறந்த சுய உதவிக் குழுவிற்கு வட்டார அளவிலான விருது | சான்றிதழ் |
| **3** | **சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு விருது** | |
| அ) | சிறந்த 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாநில அளவிலான விருதுகள் | தலா ரூ.3 லட்சம் வீதம் |
| ஆ) | மாவட்ட அளவில் சிறந்த ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு விருது | ரூ.1 லட்சம் |



## 8.2.2 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தனி நபர் அடையாள அட்டை

சுய உதவிக் குழுக்களுக்கிடையே ஒன்றுக்கும் மேற்பட்ட குழுக்களில் உறுப்பினர் ஆகும் நிலையினைத் தவிர்க்கவும், அவர்கள் மீது நம்பகத்தன்மையை உண்டாக்கிடவும் தனி நபர் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. 2012–2013 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் 15 மாவட்டங்களைச் சார்ந்த 60 வட்டாரங்களில் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தனி நபர் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வட்டாரங்களில் உள்ள 9,66,303 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்க முன்னேற்பாடு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இது வரை 2323 கிராமங்களைச் சேர்ந்த 27,748 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 3,70,058 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் விவரங்கள் சேகரிக்கும் பணி முடிவடைந்துள்ளது.

2013–2014 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டமாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படவுள்ள 110 வட்டாரங்களில் 3491 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 9,66,303 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குத் தனி நபர் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

**8.2.3. கலாச்சாரப் போட்டிகள்**

வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையே ஒரு இணக்கமான நிலை ஏற்படவும், அவர்களது திறனை வெளிப்படுத்தும் விதமாகவும் கலாச்சார போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட மற்றும் வட்டார அளவில் நடைபெற்ற கலாச்சாரப் போட்டிகளில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பெருமளவில் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தி உள்ளனர். இப்போட்டிகள் மிகவும் வெற்றிகரமாக நடப்பதைத் தொடர்ந்து 2013–2014ம் ஆண்டிலும் இப்போட்டிகள் நடத்தப்படும்.

**8.2.4. நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி**

ஒவ்வொரு சுய உதவிக்குழுவும், சேமிப்பு, சிக்கனம் மற்றும் உறுப்பினர்களுக்குள் உள்கடன் சுழற்சி ஆகியவற்றை ஆரம்ப கால நடவடிக்கைகளாகச் செய்து வருகின்றன. ஆறு மாத கால செயல்பாட்டின் முடிவில் இக்குழுக்கள் நிர்ணயிக்கப்பட்ட காரணிகள் அடிப்படையில் மதிப்பீடு



செய்யப்பட்டு, அதில் தேர்ச்சி பெறும் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய சுழல் நிதி வழங்குவதன் மூலம், குழுவின் தொகுப்பு நிதி அபிவிருத்தி செய்யப்படுகிறது. 2012–13ம் ஆண்டில் 15,000 நகர்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக தலா ரூ.10,000/ வழங்க உத்தேசிக்கப்பட்டது. 20.03.2013 வரை, 5785 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**8.2.5. சுய உதவிக் குழு வங்கி இணைப்புத் திட்டம்**

சுய உதவிக் குழு வங்கி இணைப்புத் திட்டத்தில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. சுய உதவிக் குழு / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் போதுமான கடனுதவியை உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்குவதன் வாயிலாக பெண்களை பொருளாதாரத்தில் அதிகாரப்படுத்தி முதலீடுகள் மூலம் லாபம் ஈட்டி, கடன் சுமையிலிருந்து விடுபட வழிவகை செய்யப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள் முதல் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற பின்னரே வங்கிகள் மூலம் முதல் கடன் இணைப்புப் பெற தகுதி பெறுகின்றன. சுய உதவிக் குழுக்கள் இக்கடனை நுகர்வு அல்லது பொருளாதார நடவடிக்கைக்காகப் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. இது வரை நமது மாநிலத்தில் இத்திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.19,417.57 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், ரூ.8000 கோடிக்கும் அதிகமாக இம்மாநிலத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 8.2.6. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன்

சுய உதவிக் குழு இயக்கத்தை வருங்காலங்களில் தலைமை ஏற்று நடத்துவதற்காக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் மகளிர் திட்டம் முனைப்புக் காட்டுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் அடிப்படை சேவைகளில் நிதி இடைநிலையாளர் பணியும் ஒன்றாகும். கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து மொத்த கடன் பெற்று அதனை சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்குகின்றன. ஒரு காலகட்டத்தில் இந்த கூட்டமைப்புகள் சமுதாய அளவிலான நிதி நிறுவனங்களாக உயரும் வாய்ப்பு உள்ளது. இதுவரை, 549 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகள் மூலம் பெருங்கடனாக ரூ.123 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் 2012–13ல் ரூ.22.66 கோடி பெருங்கடனாக 130 கூட்டமைப்புகள் பெற்றுள்ளன.

### 8.3. சந்தைப்படுத்துதல்

தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் சந்தை பற்றிய தகவல்கள், ஆய்வுகள், மதிப்புக் கூட்டுதல், பேக்கேஜிங், வணிக மையங்கள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. 2012–13 ஆம் ஆண்டு வணிகக் குறியீடு உருவாக்குதல், தரப்படுத்துதல்,



பெயரிடுதல், இணைய வணிகம், கல்வி நிலையங்களில் விற்பனைக் கண்காட்சிகள் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு உதவும் நிறுவனங்களை அமைப்பதன் மூலம், சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தலுக்கு புதிய வாய்ப்புகள் உருவாக்க முனைப்பு காட்டப்பட்டது.

#### i) வணிகக் குறியீடு மற்றும் வணிகச் சின்னம்

தற்கால வாடிக்கையாளர்கள் வணிகக் குறியீட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதோடு அவர்களது பெரும்பாலான முடிவுகள் வணிகக் குறியீடு மற்றும் வணிகச் சின்னத்தினை சார்ந்து உருவாகும் நம்பிக்கை அடிப்படையில் அமைகிறது. நகர்ப்புறச் சந்தை மற்றும் உயர்நிலை வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள் அனைத்தையும் ஒரே வணிகக் குறியீடு மற்றும் வணிகச் சின்னத்தின் கீழ் கொண்டு வர அரசு தீர்மானித்துள்ளது. தற்பொழுது ஒரு பொருளை உற்பத்தி செய்யும் சுய உதவிக் குழு தனது பெயரிலேயே அதனை விற்பனை செய்கிறது. ஒரே பொருள் பல்வேறு வணிகச்சின்னங்களின் அடிப்படையில் பிரிக்கப்படுவது இப்பொருள்களை பெருமளவு சந்தைப்படுத்துவதற்குத் தடையாக உள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து சுய உதவிக் குழு பொருட்களுக்கு வணிகக் குறியீடு மற்றும் வணிகச் சின்னம் ஆகியவற்றை ஒப்பளிப்பு செய்துள்ளார்கள். 2013–14 ஆம் ஆண்டு குறைந்த பட்சம் 50 உற்பத்திப் பொருட்களுக்கு நிலையான உற்பத்தி நெறிமுறை உருவாக்கப்பட்டு மதி வணிகக் குறியீட்டைப்**

**பயன்படுத்த அனுமதிக்கப்படும். இயற்கை விவசாயப் பொருட்களுக்கு மக்களிடையே உருவாகியுள்ள ஆர்வத்தினை பயன்படுத்தும் வகையில் இவ்விவசாய முறையில் விளைவிக்கப்படும் சிறுதானியங்கள் மற்றும் பருப்பு வகைகளிலிருந்து புதிதாகப் பொருட்கள் உற்பத்தி செய்வது போன்ற புதிய முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கப்படும்.**

**ii) மதி பஜார்**

தற்போதைய கால கட்டத்திற்கு ஏற்ப தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான சந்தைப்படுத்துதல் என்ற செயல்முறையின் மூலம் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் வகையில் 2012–13 ஆம் ஆண்டு ஒரு வணிக இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இணையதளமானது, ஏற்றுமதி மற்றும் மொத்த விற்பனை போன்ற வாய்ப்புகளைக் கண்டறிய உதவுவதோடு போட்டிகள் நிறைந்த சூழ்நிலையில் சுய உதவிக் குழுக்கள் வணிகம் செய்திட உதவும்.

**iii) கண்காட்சிகள்**

சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை பிரபலப்படுத்தவும், சந்தைப்படுத்தவும் தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் விற்பனைக் கண்காட்சிகளை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. சுய உதவிக் குழுக்கள் தங்களது உற்பத்தியை சந்தைப்படுத்த மாநில, தேசிய, மண்டல அளவிலான சாராஸ், இதர மாநில தலைநகர் மற்றும் புது தில்லியில் நடைபெறும் சர்வதேச வர்த்தகக்



கண்காட்சிகளிலும் பங்கு பெறுகின்றனர். சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த 2012 –13 ஆம் ஆண்டில் மூன்று மாநில அளவிலான விற்பனைக் கண்காட்சிகளும், மூன்று மண்டல அளவிலானவிற்பனைக் கண்காட்சிகளும் நடத்தப்பட்டன. இவ்விற்பனைக் கண்காட்சிகளில் ரூ.187.68 இலட்சம் மதிப்பிலான சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. அனைத்து சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விவரங்கள் அடங்கிய கையேடு தயாரிக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு அச்சு வடிவு அல்லது குறுந்தகடு வடிவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**iv) கல்லூரி சந்தைகள்**

வறுமை ஒழிப்பு மற்றும் ஏழைப் பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்வு ஆகிய பணிகளில் இளைஞர்களின் பங்கேற்பினை உறுதி செய்வதற்காக அரசால் 2012–13 ஆம் ஆண்டு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்லூரி சந்தைகள் நடத்தப்பட்டன. இது சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களுக்கு ஒரு புதிய சந்தை வாய்ப்பாகவும், இளைஞர் மற்றும் நகர்ப்புற வாடிக்கையாளர்களை கையாளும் தைரியத்தையும் அளித்ததுடன் சமூகப் பணிகளில் அக்கறை செலுத்துவதற்கு தேவையான நல்லெண்ணத்தையும் மாணவர்களிடையே உருவாக்கியது. இது வரை நமது மாநிலத்தில் 119 கல்லூரிகளில் இச்சந்தை நடத்தப்பட்டது. இதில் 2,761 சுய உதவிக் குழுக்கள் கலந்து

கொண்டு ரூ.151.18 இலட்சம் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்தனர். சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தவும், அனைவரின் நல்லெண்ணத்தைப் பரிமாறிக்கொள்ளவும் **2013–14** ஆம் ஆண்டில் 150 கல்லூரி சந்தைகள் நடத்தப்படும்.

**v) சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களை நிறுவனங்கள் மூலமாகச் சந்தைப்படுத்துதல்**

சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஏழை மக்கள் அமைப்புகளை வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் வழிநடத்தி, உற்பத்திக்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர்புகள் மூலம் பெருமளவு உற்பத்தியை மேற்கொள்ளத்தக்க அமைப்பு ரீதியான உதவிகளை வழங்குவதற்காக மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் **2012–13** ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள் சந்தையில் போட்டியிடும் வண்ணம் பேக்கேஜிங் போன்ற பல்வேறு தேவைகளைக் கண்டறிந்து மதிப்புக் கூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட உதவுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் முனைப்புடனான வாழ்வாதார மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்படும் கூடுதல் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக இந்நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் தொடர்ந்து மகளிர் திட்டத்தின் மூலம் ஆதரிக்கப்படும்.



**vi) ஒரு கிராமம் – ஒரு உற்பத்திப் பொருள்**

கைவினைக் கலைஞர்கள், விவசாயம் சாராத தொழிலாளர்களின் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தும் வகையில் ஒரு கிராமத்தில் அல்லது அருகாமையில் உள்ள கிராமங்களில் ஒத்த தொழில் செய்யும் அனைத்து சுய உதவிக் குழுக்களும் கண்டறியப்பட்டு, **"ஒரு கிராமம்–ஒரு உற்பத்திப்பொருள்"** என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தொழில் தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக ஒரு பகுதியில் ஒரே தொழிலில் ஈடுபடும் குழுக்களின் தயாரிப்பு முறைகள், வளங்கள், அடிப்படைக் கட்டமைப்புகள், சந்தை வாய்ப்புகள் போன்றவை முறையாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை **150** தொழில் தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டு அவற்றை மேம்படுத்துவதற்காக ரூ.**10.75** கோடி மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட சில ஒரு கிராமம் ஒரு உற்பத்தி பொருள் பொருளாதார நடவடிக்கை தொகுப்புகள் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழில் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | காஞ்சீபுரம் | பட்டு நெசவு | 87.45 |
| 2. | கிருஷ்ணகிரி | உணவு பதப்படுத்துதல் | 37.00 |
| 3. | மதுரை | பால் உற்பத்தி | 74.85 |
| 4. | திருநெல்வேலி | ஆயத்த ஆடைகள் | 18.00 |
| 5. | திருச்சி | மண்புழு உரம் மற்றும் இயற்கை உரங்கள் | 21.80 |

## 8.4 . பிளாஸ்டிக் மறு சுழற்சி

பிளாஸ்டிக் கழிவுகளை சுற்றுப்புறச் சூழலிலிருந்து ஒழித்தல் என்பது திடக்கழிவு மேலாண்மையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பெரும் சவாலாகும். இச்சவாலையே பொருளீட்டும் நடவடிக்கையாக சுய உதவிக் குழுக்கள் மாற்றியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2004 ஆம் ஆண்டிலேயே துவக்கப்பட்ட தொலைநோக்கு முயற்சியாகும். **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதன் பேரில் சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்தி பிளாஸ்டிக் சேகரித்தல் மற்றும் துகளாக்குதல் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்படுகிறது. இது வரை 20 பிளாஸ்டிக் மறுசுழற்சி மையங்கள் தலா ரூ.3.75 இலட்சம் செலவில் சுய உதவிக் குழுக்களால் உருவாக்கப்பட்டுள்ளன.** இத்திட்டத்திற்கான நிதி உதவி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்க வல்ல எரிசக்தி வளர்ச்சி நிதி மூலம் பெறப்பட்டது. தூளாக்கப்பட்ட பிளாஸ்டிக் துகள்களை சுமார் 1255 கி.மீ தூரம் வரை இத்துறை மூலம் சாலைகள் அமைத்திட விற்பனை செய்து அதன் மூலம் கூடுதல் வருமானம் ஈட்டுகின்றனர்.

## 8.5. சுய உதவிக்குழு எழுத்தறிவுத் திட்டம்

சுய உதவிக் குழு இயக்கமானது குழு செயல்பாடு, பொருளாதார மேம்பாடு என வளர்ச்சி பெற்று தற்போது சமூக இயக்கமாக மெருகடைந்துள்ளது. இத்தகைய சூழலில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கல்வியறிவு



பெற்றவர்களாக மாற்றிட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் அவர்களுடைய முழுத் திறனை வெளிக்கொணரவும் அரசு திட்டங்களின் பயன்களை முழுமையாகப் பெறவும் வேண்டி சுய உதவிக் குழு உறுப்பினர்கள் எழுத்தறிவு பெற ஊக்குவிக்கப்பட்டனர். 2012–13 ஆம் ஆண்டில் இந்த அரசு முதன் முறையாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் எழுத்தறிவு உள்ளவர்களாக உருவாக்கும் கூட்டமைப்புகளுக்கு விருது வழங்க ஆணையிட்டு எழுத்தறிவிக்கும் முயற்சிகளுக்கு ஒரு ஊக்குவிப்பை நல்கியது. இவ்விருதுக்கான ரொக்கப்பரிசு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஒன்றிற்கு ரூ.50,000 ஆகும்.

## 8.6. மாற்றியமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் / நகர்ப்புற அண்டைவீட்டு கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை

தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புற அண்டைவீட்டு கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் வகையில் இக்கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. இது வரை தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 8000 கூட்டமைப்புகளுக்கு ரூ.80 கோடி வழங்கப்பட்டுள்ளது, இத்திட்டம் 2013–14 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

## 8.7. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2005 ஆம் ஆண்டில் உலக வங்கி நிதி உதவியுடன் துவக்கப்பட்ட "புதுவாழ்வுத் திட்டம் " மிகவும் வறிய நிலையிலுள்ளோரை மையப்படுத்தி அமைந்த வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில் மத்திய அரசு தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தினை தேசிய அளவிலான இயக்கமாக** செயல்படுத்திட மத்திய மற்றும் மாநில அரசுகளின் 75:25 என்ற விகிதாச்சார நிதி பங்களிப்புடன் துவக்கியுள்ளது. வறிய நிலையிலுள்ள அனைத்து ஏழைக் குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களுக்கான நிலைத்த வாழ்வாதார வாய்ப்புகளையும் உருவாக்குவது, அவர்களின் வாழ்வாதார நிலையினை உயர்த்தி ஏழ்மையிலிருந்து அவர்கள் விடுபடும் வரை பாதுகாப்பது மற்றும் தரமான வாழ்க்கையை உருவாக்குவதே தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும்.

**மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இலக்கு,** ‘‘மிகவும் ஏழைகள் மற்றும் இதுவரை பயன் பெறாத குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுக்களில் இணைத்து, ஏழைகளைக் கொண்டு சுய மேலாண்மை நிறுவனங்களை உருவாக்கி, வலுப்படுத்தி அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, சமூகம் சார்ந்த நிறுவனங்கள் மூலம் படிப்படியாக வருமானம் வளர வழிவகை செய்து, அரசிடமிருந்து அவர்களின் உரிமைகளைப் பெற்றிடச் செய்வதாகும்’’.



### 8.7.1 நோக்கம்

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளை உள்ளடக்கிய **31** மாவட்டங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு 5 முதல் 7 ஆண்டுகளுக்குள் நீடித்த தன்மையுடைய வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நோக்கமாக கொண்டுள்ளது. ஏழை மக்களுக்கான அமைப்புகளை உருவாக்கி, அவற்றின் மூலமாக ஏழை மக்கள் நிதி ஆதாரங்கள் பெறுதல், வாழ்வாதாரத்திற்குத் தேவையான உதவிகள், பொதுச் சேவைகள் மற்றும் அரசினால் வழங்கப்பட வேண்டிய உரிமைகள் ஆகியவற்றினைப் பெற்று தருவதில் இவ்வியக்கம் முனைப்பு காட்டும்.

### 8.7.2 உயர் நிலை அதிகாரம் பெற்ற குழு

இவ்வியக்கத்திற்கு கொள்கை அளவிலான வழிகாட்டுதல், திட்ட நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உயர் நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் அவர்கள் இயக்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் முதன்மை நிர்வாக அலுவலராகவும் உள்ளனர். இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக

மாநில, மாவட்ட, வட்டார மற்றும் தொகுதி அளவில் தனி நிர்வாக அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 8.7.3 திட்டப்பகுதிகள்

தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

இதுமட்டுமல்லாமல் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் நான்கு மாவட்டங்களில் உள்ள 16 வட்டாரங்களில் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டாரங்களில் 120 வட்டாரங்களில் புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 265 வட்டாரங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்படும்.

**செயலாக்கத்திட்டம்**

| வ. எண் | திட்டம் செயல்படும் அலகுகள் | வருடம் – 1 2012 -13 | வருடம் – 2 2013 -14 | வருடம் – 3 2014 -15 |
|---|---|---|---|---|
| 1 | மாவட்டங்கள் | 15 | 27 | 21 |
| 2 | வட்டாரங்கள் | 60 | 110 | 95 |
| 3 | கிராம ஊராட்சிகள் | 2323 | 3491 | 2540 |
| 4 | ஏழைக் குடும்பங்கள் (லட்சத்தில் ) | 7.76 | 11.67 | 9.30 |

2012–13 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 15 மாவட்டங்களில் உள்ள 60 வட்டாரங்களில் 2323 கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு;



**முதற்கட்டம்**

| வ.எண் | அலகுகள் | முதல் ஆண்டு ( 2012–13) | | |
|---|---|---|---|---|
| | | தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் | தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் | மொத்தம் |
| 1 | மாவட்டங்கள் | 11 | 4 | 15 |
| 2 | வட்டாரங்கள் | 44 | 16 | 60 |
| 3 | கிராம ஊராட்சிகள் | 1865 | 458 | 2323 |

### 8.7.4 தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தொழிற்திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு, மகிளா கிசான் ஸசக்திகிரன் பரியோஜனா (பெண் விவசாயிகள் அதிகாரப்படுத்துதல் திட்டம்) (MKSP) மற்றும் ஊரக வாழ்வாதார இயக்க நடவடிக்கைகள் என்று மூன்று முக்கிய பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

**i) தொழிற்திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு**

ஒரு ஏழைக்குடும்பத்தில் ஒரு நபருக்கு அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பு உருவாக்கித் தருவதன் மூலம் அக்குடும்பமே மிகக் குறுகிய காலத்தில் வறுமையிலிருந்து விடுவிக்கப்படுகிறது. இது நிலையான மற்றும் அதிக வருமானத்தைத் தருகிறது. தொழில் திறனில் காணப்படும் இடைவெளி மற்றும் ஊரக ஏழை

இளைஞர்களுக்கு ஆரம்ப நிலையில் ஏற்படும் தடைகளை அகற்றும் வகையில், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கமானது செயல்பட்டு, ஏழை இளைஞர்கள் வளர்ந்து வரும் பொருளாதார துறைகளில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய வேலைவாய்ப்புகளைப் பெறும் வகையில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. மேலும், படிப்பறிவு இல்லாத, வேலை வாய்ப்புகளில் பங்கேற்க இயலாத திறனுடைய வகுப்பினருக்கு, சுய தொழிலில் ஈடுபடத் தக்க திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இம்முயற்சியை வலுப்படுத்தும் வகையில், இளைஞர் தொழிற்திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கிட பொது நிறுவனம், தனியார் நிறுவனம், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சமுதாய அமைப்புகளுடன் கூட்டாண்மையை ஏற்படுத்தி, பல்வேறு வகையான மாதிரிகள் உருவாக்கப்படும்.

இளைஞர்கள் பெற விரும்பும் பயிற்சி மற்றும் அதனை வழங்கும் நிறுவனத்தை அவர்களே தேர்வு செய்யும் வகையில் தொழில் திறன் ரசீது திட்டத்தை அரசு முன்னோடியாக செயல்படுத்தியது.

**ii) மகிளா கிசான் ஸசக்திகிரன் பரியோஜனா**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு பகுதியாக சிறு, குறு பெண் விவசாயிகள் மற்றும் புன்செய் விவசாயிகள் மேம்பாட்டிற்காக மகிளா கிசான் ஸசக்திகிரன் பரியோஜனா திட்டம் ( பெண் விவசாயிகள்



அதிகாரப்படுத்தும் திட்டம்) செயல்படுத்தப்படும். மாநிலத்தில் காணப்படும் விவசாயம் சார்ந்த அறிவுத் திறனையும், நிலைத்த சாகுபடி முறைகளையும் பயன்படுத்தி பெண்களின் பணிச்சுமையைக் குறைப்பதும், நச்சுக் கலக்காத இடு பொருளைப் பயன்படுத்தி மண் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதும், உள்ளூரிலேயே பெண்களுக்கு சத்தான உணவு வகைகள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

இத்திட்டமானது, பிற துறைகளுடனான ஒருங்கிணைப்புடனும், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது நல அமைப்புகளுடைய உதவி மற்றும் கூட்டாண்மையுடனும் நிறைவேற்றப்படும்.

**மகிளா கிசான் ஸசக்திகிரன் பரியோஜனா திட்டத்தில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்**

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | பயனாளிகள் | மதிப்பீடு ரூ கோடியில் |
|---|---|---|---|---|
| 1 | சேலம் | பழங்குடியின விவசாயப் பெண்களை அதிகாரப்படுத்துதல் | 4575 | 8.15 |
| 2 | தேனி | நல வாழ்வு விவசாயம் மற்றும் வாழ்வாதாரத் திட்டம் | 2946 | 6.99 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | திருநெல்வேலி | ஒருங்கிணைந்த இயற்கை விவசாயம் | 9111 | 8.80 |
| 4 | திருவண்ணாமலை | இயற்கை விவசாயத் திட்டம் | 12555 | 5.44 |
| 5 | வேலூர் | ஊரக அதிகாரப்படுத்தலுக்கான நிலைத்த விவசாயம் | 3327 | 5.13 |
| 6 | விழுப்புரம் | ஒருங்கிணைந்த நவ தானியம் சார்ந்த விவசாயம் | 900 | 6.56 |
| 7 | கடலூர் | நிலைத்த விவசாயத் திட்டம் | 7187 | 9.85 |
| 8 | கோயம்புத்தூர் | ஒருங்கிணைந்த விவசாய மேம்பாடு | 826 | 4.47 |
| 9 | விழுப்புரம் | ஊரகப் பெண்களுக்கான வாழ்வாதார திட்டம் | 932 | 5.83 |
| | **மொத்தம்** | | **42359** | **61.22** |

**iii) 2013–14 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள செயல்பாடுகள்.**

**2013–14** ஆம் ஆண்டில் இவ்வியக்கம் **170** வட்டாரங்களில் தீவிரமாகச் செயல்படுத்தப்படும். மீதமுள்ள



**95** வட்டாரங்கள் தீவிர செயல்பாட்டிற்கு உட்படுத்தப்படாத வட்டாரங்கள் ஆகும். தீவிர செயல்பாட்டில் உள்ள வட்டாரங்களில் முழுமையான அளவில் திட்டம் சார்ந்த பணியாளர்கள் இருப்பர். மேலும், சமூக மற்றும் நிதி உள்ளாக்கம், வாழ்வாதார நடவடிக்கைகள் போன்ற பிரிவுகளில் தீவிர கவனம் செலுத்தி இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**அ) தீவிர செயல்பாடுடைய வட்டாரங்களில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள்**

- தகவல், கல்வி மற்றும் தொடர்புப்பணிகள்
- அடிப்படை விவரக் கணக்கெடுப்பு
- பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கு பயிற்சி அளித்தல்
- இலக்கு மக்களைக் கண்டறிய மக்கள் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளுதல்
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் உருவாக்குதல் மற்றும் சமுதாய முதலீட்டு உதவி வழங்குதல்
- சமூக தணிக்கைக் குழுக்களை உருவாக்குதல்
- கிராம வளர்ச்சித் திட்ட அறிக்கை தயாரித்தல்
- சுய உதவிக் குழுக்களை அமைத்தல்
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மாற்றியமைத்தல்

- மற்றும் ஊக்க நிதி வழங்குதல்
- கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு மன்றங்களை உருவாக்குதல்
- இளைஞர்களின் திறன் மற்றும் கல்வித் தகுதிகள் தொடர்பான கணக்கெடுத்தல்
- அனைத்துக் குடும்பங்களுக்கும் நிதி உள்ளாக்க சேவைகள் மற்றும் நிதி மேலாண்மை தொடர்பான கல்வி வழங்குதல்
- சமூக வல்லுநர்கள் மற்றும் திட்ட பணியாளர்களுக்கு திறன் பயிற்சி

**ஆ) தீவிர செயல்பாட்டிற்கு உட்படுத்தப்படாத ( Non-intensive) வட்டாரங்களின் செயல்திட்டங்கள்**

2013–14 ஆம் ஆண்டில் 95 வட்டாரங்களில் மாநில ஊரக வாழ்வாதார இயக்க நடவடிக்கைகள் தீவிர செயல்பாட்டிற்கு உட்படுத்தாத நிலையில் மேற்கொள்ளப்படும். ஒரு தொகுப்பில் உள்ள கிராம ஊராட்சிகள் அனைத்தும் ஆதார கிராம ஊராட்சிகளாகக் கண்டறியப்பட்டு அவற்றில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

- சமூக மூலதன உருவாக்கம் (சமூக வல்லுநர்கள் மற்றும் சமுதாய வள பயிற்றுனர்கள்)



- அடிப்படைப் புள்ளி விவரங்கள் ஆய்வு
- மக்கள் நிலை ஆய்வு நடத்துதல் (PIP)
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தை உருவாக்குதல்

**இ). அனைத்து மாவட்டங்களிலுள்ள தீவிர செயல்பாடு மற்றும் தீவிர செயல்பாட்டிற்கு உட்படுத்தப்படாத (Intensive & Non-intensive) வட்டாரங்களில் மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்கள்;**

- திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு
- ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றிணைத்தல்
- வாழ்வாதாரத் தொகுப்புகள்
- நிதி உள்ளாக்கம்
- மதிப்பீடு மற்றும் கணிப்பாய்வு
- தகவல் மற்றும் ஆவணப்படுத்துதல்

**8.7.5. திட்ட வழிமுறைகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கத்தினை அடைய கீழ்கண்ட முக்கிய திட்ட செயல்முறைகள் பின்பற்றப்படவுள்ளது.

**i) சமூக உள்ளடக்கம் மற்றும் சமூக அணிதிரட்டல்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில், தனியாக வாழும் பெண்கள், பெண்களைத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள், நிலமற்றோர்,

ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடியினர், நாடோடித் தொழிலாளர்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகத்தினர் போன்ற நலிவுற்ற பிரிவினருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய தமிழ் நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மாறுபட்ட அணுகுமுறைகளை பயன்படுத்தி அடையாளம் காணப்பட்ட அனைத்துக் குடும்பங்களையும் ஒன்று திரட்டி அவர்களை நன்கு செயல்படக்கூடிய சுயமேலாண்மை நிறுவனங்களில் இணைக்கும். **மக்கள் நிலை ஆய்வு,** ஏழை மற்றும் நலிவுற்றோரைக் கண்டறிய ஒரு முக்கிய காரணியாக விளங்கும். பங்கேற்புடன் கூடிய ஊரக மதிப்பீட்டு முறை இவர்களுக்காகப் பயன்படுத்தப்படும். இம்முறை கீழ்க்கண்ட தொழில் உத்திகளை பின்பற்றி அமையும்.

1. சமூக வரைபடம்
2. பிரச்சனைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்துதல்.
3. பொருளாதார தர மதிப்பீடு

மேற்கண்ட அனைத்து மக்கள் பங்கேற்புத் திறனாய்வு உத்திகளும் இவ்வியக்கத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளின் அடிப்படையில் மிகவும் ஏழைக் குடும்பங்களைக் கண்டறியும் வகையில் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஆய்வு முறை, மாநிலத்தின் அனைத்து இரண்டாம் கட்ட மற்றும் மூன்றாம் கட்ட



வட்டாரங்களிலும் டிசம்பர் 2013–க்குள் முடித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அடையாளம் கண்டறியப்பட்ட ஒவ்வொரு ஏழைக் குடும்பத்தில் இருந்தும் குறைந்தபட்சம் ஒரு பெண்ணை சுய உதவிக் குழு இயக்கத்தில் குறிப்பிட்ட கால வரையறைக்குள் இணைப்பதுடன், சமூகத்திலுள்ள அனைத்து நலிவுற்றோரையும் இயக்கத்தில் கொண்டு வருவதை உறுதி செய்து கொள்ளும்.** வறுமைக் கோட்டின் கீழ் உள்ள ஏழைகள் பட்டியலிலுள்ள அனைத்து நபர்களையும் 100 சதவிகிதம் சேர்த்திடல் வேண்டும் என்ற இலக்கினைக் கருத்தில் கொள்வது மட்டுமல்லாது பயனாளிகளில் 50 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், 15 சதவிகிதம் சிறுபான்மையினர், 3 சதவிகிதம் மாற்றுத் திறனாளிகள் ஆகிய நலிவுற்றோர்கள் இருப்பதையும் உறுதி செய்யும்.

**ii) மக்கள் அமைப்புகளை உருவாக்குதல்**

நலிவுற்றோரை அதிகாரப்படுத்தும் பொருட்டு மக்கள் அமைப்புகளை உருவாக்குதல், இயக்கத்தின் மற்றொரு அணுகுமுறையாகும். அதன்படி அடையாளம் காணப்பட்ட ஏழை மற்றும் நலிவுற்றோரை உள்ளடக்கி கிராம சபைக்குப் பொறுப்புள்ள தன்னாட்சி மக்கள் அமைப்பான கிராம வறுமை ஒழிப்புச்சங்கம், ஊராட்சி மன்றத் தலைவரின் தலைமையில் கிராம அளவில் இவ்வியக்கத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முழுப் பொறுப்பு கொண்ட அமைப்பாகும்.

மேலும், இம்மக்கள் அமைப்புகள் கிராம சமூகத்திற்கும், இயக்கத்திற்கும் இடையே இணைப்பாகவும் செயல்படும். மாற்றத்தகாத கோட்பாடுகளை திட்ட செயலாக்கத்தில் முறையாக பின்பற்றப்படுவதை சமூக தணிக்கை குழு தொடர்ந்து கண்காணித்து குறிப்பிட்ட கால இடைவெளியில் கிராம சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். விடுபட்ட ஏழைகள் மற்றும் நலிவுற்றோரைக் கொண்டு சுய உதவிக்குழுக்கள் அமைப்பது தொடர்ந்து நடைபெறும்.

மேலும் சமூக பொருளாதார அதிகாரப்படுத்துதல் இலக்குகளை அடையும் வகையில் சுய உதவிக்குழுக்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும், தங்களது பிரச்சனைகளை வெளிக்கொணரவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஒரு பொது மேடையாக அமைகிறது.

தமிழ் நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், வட்டார மற்றும் மாவட்ட அளவிலான உயர்நிலைக் கூட்டமைப்புகளை உருவாக்கிடும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. இம் மக்கள் அமைப்புகளுக்கான திறன் வளர்ப்புத் தேவையை மாவட்ட கற்றல் மையம் மூலம் நிறைவு செய்யும். மேலும், இம்மையத்தின் மூலம் சமூகக் கருத்தாளர்கள் மற்றும் சமூக வல்லுநர்கள் போன்ற சமூக மூலதனத்தை பெரிய அளவில் உருவாக்கி வறுமை ஒழிப்பு அதிகாரப்படுத்துதலுக்கான முயற்சிகள் வலுப்படுத்தப்படும். இவ்வியக்கம் முதலீடு செய்யும் சமூக சுய உதவிக் குழு பயிற்றுனர், சமூக மாற்றுத்திறனாளி உதவியாளர், பழங்குடி



சமூக உதவியாளர் மற்றும் புத்தக பராமரிப்பாளர் மக்களமைப்புகளுக்கு தொடர்ந்து உதவுவர்.

**iii) நிதி உள்ளாக்கம்**

ஏழைக் குடும்பங்கள், அனைவரும் நிதி உள்ளாக்கத்தை அடைவதற்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் சமூகம் சார்ந்த அமைப்புகள் பயன்படுத்தப்படும் மேலும் வங்கி சேவையாளர்கள் எனும் சமூக வல்லுநர்கள் இப்பணிகளில் பங்கேற்பர்.

**8.7.6 2013–14ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு**

**2013–14ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் இவ்வியக்கத்திற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**8.8 தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC)**

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் ஒரு பதிவு பெற்ற சங்கமாகும். பயிற்சிக் கையேடுகள், வழிகாட்டி புத்தகங்கள் தயாரித்தல், திட்ட பணியாளர்கள், வங்கியாளர்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்குப் பயிற்சி அளித்தல், பயிற்றுநர்களுக்கான பயிற்சியாளர்களை உருவாக்குதல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் தயாரித்தல், பிற அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து திட்டங்கள்

செயல்படுத்துதல் ஆகியன இம்மையத்தின் முக்கியப் பணிகளாகும்.

இவ்வமைப்பு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் வகையில் மாநில ஆதார மையமாக செயல்படுகிறது.

**8.9 முற்றம்**

மகளிர் தொடர்பான தகவல்களை பருவ இதழ் வெளியீடுகள் மூலம் சுய உதவிக்குழு பெண்களிடையே பரப்பும் நோக்கத்துடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் முற்றம் என்ற பதிவு பெற்ற சங்கம் செயல்படுகிறது. மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் சாதனைகள் மற்றும் வெற்றிக் கதைகள், சுய உதவிக் குழுக்களுக்கான கடன் திட்டங்கள், பயிற்சிகள், விற்பனைக் கண்காட்சிகள் மற்றும் வேலை வாய்ப்பு முகாம்கள் பற்றிய தகவல்கள், பொது விழிப்புணர்வு , பொது அறிவு , மருத்துவக் குறிப்புகள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் உட்பட பெண்களுக்கு பயனுள்ள பல தகவல்களை உள்ளடக்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் வெளியிடப்படுகிறது.

தற்போது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழுக்கு 78,000 பேர் சந்தாதாரர்களாக உள்ளனர். சுமார் 15 லட்சம் மகளிர் இவ்விதழை பிரதி மாதமும் படித்து பயன் பெறுகின்றனர்.



**8.10 மகளிர் திட்டத்தில் 2012 – 13 ஆம் ஆண்டில் மேற்கொள்ளபட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலை**

- ஒரு கிராமம் ஒரு உற்பத்திப் பொருள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் 150 தொழில் தொகுப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. இதற்கென மாவட்டங்களுக்கு ரூ.10.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 32 மாவட்டங்களில் 119 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 2761 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று ரூ.151.18 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.
- மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கத்திற்காக மாநில அளவிலான வழங்கல் மற்றும் விற்பனைச்சங்கம் துவங்கப்பட்டு, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.
- மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக மதி பஜார் என்ற பெயரில் இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது.
- **நடப்பாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.3845.72 கோடி அளவில் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.**

- **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வணிகக் குறியீடு மற்றும் வணிகச் சின்னத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.**
- ஒரு குழுவிற்கு 10,000/– ரூபாய் வீதம் 5,785 நகர்புற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியமாக ரூ. 5.79 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- இளைஞர் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் திறன் இரசீது முறை ஓட்டுநர் பயிற்சி, சிறு வணிக உதவியாளர், மருத்துவ உதவியாளர், ஆடை வடிவமைப்பு, ஓட்டல் நிர்வாகம் ஆகிய பிரிவுகளுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது.

### 8.11. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலை

- முதல் கட்டமாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் 15 மாவட்டங்களில் உள்ள 2,323 கிராம ஊராட்சிகளில் 15.08.2012 அன்று நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

- 15 மாவட்டங்களில் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

- இயக்க செயல்பாடுகளுக்காக ரூ.67.50 கோடி நிதி மாவட்டங்களுக்கு விடுவிப்பு செய்யப்பட்டுள்ளது.



- தகவல் தொடர்பு விளம்பர செயல்பாடுகளுக்காக அனைத்து ஊராட்சிகளுக்கும் கிராம ஊராட்சி துவக்க நிதி ரூ.25,000 முதல் ரூ.45,000 வரை மக்கள் தொகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டது.

- ஊராட்சிப் பிரதிநிகள் மற்றும் துறை அலுவலர்களுக்கு வட்டாரஅளவில் பயிற்சி வழங்கப்பட்டது.

- அனைத்து மாவட்டங்களிலும் அடிப்படைத் தகவல் சேகரிப்பு பணி முடிவுற்றுள்ளது.

- தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகள் தீவிர செயல்பாடுகள் உள்ள வட்டாரங்களில் துவங்கப்பட்டுள்ளது.

- அரசு சாரா நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தொடர்பான பயிற்சிப்பட்டறை முடிவுற்றுள்ளது.

- பொருளாதார தொழில் தொகுப்புகள் கண்டறிய, முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

# 9. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்



9. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களை மேற்பார்வையிட சென்னையில் சுனாமி திட்ட செயலாக்க அலகு **01.08.2005** முதல் ஏற்படுத்தப்பட்டது.

சுனாமி திட்ட செயலாக்க அலகு மூலம் கடலோர மாவட்டங்களில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(I) சுனாமி அவசர கால உதவித் திட்டம் (Tsunami Emergency Assistance Project) ரூ.**292.50** கோடி நிதியில் வாழ்வாதார முன்னேற்றம் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) கடன் மற்றும் மான்யத்துடன் **2005**ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு **31.10.2009** அன்று நிறைவடைந்தது.

(II) இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டம் (Rajiv Gandhi Rehabilitation Package) ரூ.**716** கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு மானியத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் அடிப்படை வசதி ஏற்படுத்தித் தரும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(III) அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் (Emergency Tsunami Reconstruction Project) ரூ.670 கோடி மதிப்பீட்டில் உலக வங்கிக் கடனுதவியுடன் கடலோர சமுதாயத்தின் பாதிப்புகளை குறைக்கும் நோக்கத்துடன் (Vulnerability Reduction of Coastal Communities) எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்டுதல் மற்றும் வழிகாட்டுப் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களுடன் கூடுதலாக திருவாரூர் மாவட்டத்தில் அவசரகாலத்தில் எளிதாக தப்பிச் செல்லத்தக்க வழிகாட்டுப் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**I. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட சுனாமி அவசரகால உதவித் திட்டம் (TEAP)**

இத்திட்டம் ரூபாய் 292.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் கீழ்க்கண்ட இரண்டு உட்கூறுகளைக் கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

i) 2,70,308 பயனாளிகள் பயன்பெறும் வகையில் சுமார் ரூ.183.23 கோடி மதிப்பீட்டில் கடலோர குடியிருப்புகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரங்கள் ஏற்படுத்துதல்

ii) சேதமடைந்த உள்கட்டமைப்புகளை மீண்டும் உருவாக்க 821 உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் துப்புரவுப் பணிகள் ரூ. 96.27 கோடி மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**II. இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் (RGRP)**

இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ.716 கோடி மதிப்பீட்டில் 11 கடலோர மாவட்டங்களில் சுனாமி திட்ட செயலாக்க அலகு மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 0–200 மீட்டர் தொலைவு வரை அமைந்துள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் இத்திட்டத்தின் முக்கிய உட்கூறு ஆகும். இத்திட்டம் 2006 ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்தபோதிலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 1,102 வீடுகள் நிறைவு பெறாமல் இருந்தது. தற்போதைய அரசு இதை ஒரு சவாலாக ஏற்று செயல்பட்டதன் காரணமாக தேவையான வள ஆதாரங்களை ஏற்படுத்தி இவ்வீடுகளை முழுமையடையச் செய்ய உறுதியான நடவடிக்கையை மேற்கொண்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1069 வீடுகள்

கட்டிமுடிக்கப்பட்டு மீதமுள்ள 33 வீடுகள் 2013, மார்ச் 31–க்குள் முழுமையாகக் கட்டி முடிக்கப்படும்.

### III. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம் (ETRP)

சுனாமியால் கடலோரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும், எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக் கட்டிடவும் தமிழ்நாடு அரசு, உலக வங்கி நிதி உதவியுடன் அவசரகால சுனாமி மறுகட்டமைப்பு திட்டத்தை 2005ல் ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம் உலக வங்கி கடன் உதவியுடன் சுமார் ரூ.670 கோடி மதிப்பீட்டில் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் எனக் கண்டறியப்பட்ட வீடுகளை மீளக் கட்டித்தர உருவாக்கப்பட்டது,

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்
- சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை குறுகிய காலத்திற்குள் மீட்டெடுத்தல்
- வருங்காலங்களில் கடலோர சமுதாயத்தினருக்கு ஏற்படும் இயற்கை பாதிப்புகளான சூறாவளி, புயல், வெள்ளம் மற்றும் சுனாமி போன்றவற்றிலிருந்து ஏற்படும் இடர்களைக் குறைத்தல்



#### திட்டத்தின் உட்கூறுகள்

**i) பாதிப்பிற்குள்ளாகக் கூடிய வீடுகளை மீளக் கட்டுதல்**

எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் வருவாய்த் துறையினரால் அடையாளம் காணப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களின் மூலம் சரி பார்க்கப்பட்டு 15,056 வீடுகள் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் எனக் கண்டறியப்பட்டது.

இந்த வீடுகள் 11 கடற்கரை மாவட்டங்களிடையே 157 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டன. 157 தொகுப்புகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 14,349 வீடுகள் மறுகட்டமைப்புக்கு தகுதியுடையதாக தேர்வு செய்யப்பட்டு, இதில் முதல் கட்டமாக 5,413 வீடுகள் 61 தொகுப்புகளில் மே 2010லும் இரண்டாம் கட்டமாக, 8,936 வீடுகள் 96 தொகுப்புகளில் ஆகஸ்டு 2010ல் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மொத்த ஒப்பந்த மதிப்பு ரூ.543.42 கோடியாகும்.

மார்ச் 21, 2013 ஆம் தேதிய நிலவரப்படி, எடுக்கப்பட்ட 14,349 வீடுகளில் இதுவரை 11,925 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 961 வீடுகள் கூரைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையிலும், 325 வீடுகள் கூரை மட்ட நிலையிலும், 336 வீடுகள் ஜன்னல் மட்டம் நிறைவடைந்த நிலையிலும், 454 வீடுகள் ஜன்னல் மட்டம் நிலையிலும், 348 வீடுகள் அடித்தள நிலையிலும் உள்ளன. அனைத்து வீடுகளும் செப்டம்பர் 2013–க்குள் கட்டி முடிக்கப்படும்

தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இடமாற்றுத் தொகையாக ரூ.1000 வழங்கப்பட்டுள்ளது. மேலும் வாடகைத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.500–ம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாடகைத் தொகை அதிகபட்சமாக 18 மாதங்கள் வரை வழங்கப்படுகிறது.

**ii) அவசரகாலத்தில் வெளியேறுவதற்கான சாலைகள் மற்றும் வழிகாட்டும் பலகைகள் அமைத்தல்**

கடலோரப்பகுதிகளில் அவசர காலத்தில் எளிதாக வெளியேறித் தப்பித்துச் செல்லத் தேவையான வெளியேறும் சாலைகளையும், இச்சாலைகளின் வழியாக பாதுகாப்பான பகுதியினை சென்றடைய ஏதுவாக வழிகாட்டுப் பலகைகளோடு அமைத்துத் தருதல் ஆகிய பணியையும் இத்திட்டத்தின் கீழ் சுமார் ரூ.25 கோடி மதிப்பீட்டில் 45 கி.மீ நீளத்திற்கு அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் 31.03.2013 க்குள் முடிக்கப்பட உள்ளது.



# 10. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

**10. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்**

**திட்டப் பின்னணி**

கடந்த 2004–ம் ஆண்டு தமிழக கிழக்கு கடற்கரையோரப் பகுதியை தாக்கிய கொடிய ஆழிப் பேரலையால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்ததோடு, கடலோர வளங்களும் சேதமுற்றன. கடலோர சமுதாயத்தின் வாழ்வாதாரம் நிர்மூலமாக்கப்பட்டது. தமிழக அரசு மேற்கொண்ட பல்வேறு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் மக்கள் அதிர்ச்சியிலிருந்து மீண்டு வரவும், தேவையான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் பெருமளவில் உதவின. மேலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலைத்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் பொருட்டு, பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**திட்டத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்**

ஆறு கடலோார மாவட்டங்களில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் இழந்த வாழ்வாதாரத்தை மறுசீரமைத்து, அவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சமுதாய மக்களின் திறன் மேம்பாடு, இயற்கை வளங்களை திறம்பட நிர்வகித்தல் மற்றும் வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் ஆகியவை மூலம் இந்நோக்கம் நிறைவேறும்.



**திட்ட விவரங்கள்**

| | | |
|---|---|---|
| திட்ட மதிப்பீடு | : | ரூ.283.69 கோடி |
| திட்ட காலம் | : | 8 ஆண்டுகள் (2016 வரை) |
| திட்டப் பகுதி | : | 24 ஊராட்சி ஒன்றியங்கள் (109 ஊராட்சிகள்) |
| செயல்படுத்தப்படும் மாவட்டங்கள் | : | திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி |
| பயனடைவோர் | : | 1.55 இலட்சம் குடும்பங்களைச் சார்ந்த சுமார் 6 இலட்சம் பேர் |

**திட்டப் பயனாளிகள்**

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களில் வசிக்கும் கீழ்க்கண்ட பிரிவினர்:–

- வள்ளம், சிறுபடகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்
- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்
- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- பிற சிறு தொழில் செய்வோர் (உதாரணம்:–சங்கு, சிப்பி சேகரிப்போர்)

- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள்

இத்திட்டம் ஐந்து கூறுகளைக் கொண்டுள்ளது. அ) கடலோர வள ஆதார மேலாண்மை; ஆ) ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள்; இ) வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி; ஈ) சமுதாய அடிப்படையிலான கடலோர பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை ; உ) திட்ட மேலாண்மை.

**அ) கடலோர வள ஆதார மேலாண்மை**

**1. சமுதாய ஆதரவு**

அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் திட்டப்பகுதியில் 28 கூட்டு வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டு வள மையமும் 5 முதல் 7 வரையிலான கடலோர ஊராட்சிகளைக் கொண்டுள்ளது. கள அளவில் திட்டத்தை செயல்படுத்துவதில் கூட்டு வள மையங்கள் உதவி புரிகின்றன. ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், தலா ஒரு திட்ட ஒருங்கிணைப்பாளர் (Cluster Coordinator), ஒரு திட்ட செயலாக்குநர் (Cluster Facilitator) மற்றும் ஒரு வியாபார ஊக்குவிப்பவர் (Business Promoter) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**2. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல்**

சமுதாய உட்கட்டமைப்பு தேவைகளுக்கான நுண்திட்டங்கள் கூட்டு வள மைய பணியாளர்கள்



உதவியுடன் சமுதாய மக்களால் வடிவமைக்கப்படுகின்றன. இந்த நுண்திட்டங்கள் வாழ்வாதாரம், சுற்றுப்புற சூழல் மற்றும் பாலினம் சார்ந்த பிரச்சினைகளை பிரதிபலிக்கின்றன.

நுண்திட்டங்களை செயலாக்கிட திட்ட பங்களிப்பாக 90% நிதியும், சமுதாய பங்களிப்பாக 10% நிதியும் அளிக்கப்படுகிறது.

**3. மீன் வள மேலாண்மை**

கருத்துப் பட்டறைகள் வாயிலாக முக்கிய பிரச்சினைகள் கண்டறியப்படுகின்றன. இப்பிரச்சினைகளை தீர்வு செய்ய உதவியாக சிறப்பு நிறுவனங்களின் சேவை பயன்படுத்தப்படுகிறது. மேலும், பாதுகாப்பான மீன்பிடி வழிமுறைகளை ஊக்கப்படுத்துதல், சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவை பற்றி கருத்துப் பட்டறைகளும் விழிப்புணர்வு முகாம்கள் கிராம, மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

**ஆ) ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள்**

**1. சுய உதவிக் குழுக்களுக்கான கடனுதவி**

சுய உதவிக் குழுக்களின் செயல்திறன் அடிப்படையில் அவை அடிக்கடி தர மதிப்பீடு செய்யப்படுகின்றன. தரம் மேம்படுத்தப்பட்ட சுய உதவிக் குழுக்கள் குடியிருப்பு அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளாக இணைக்கப்படுகின்றன. தகுதியுள்ள சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவி பெற பரிந்துக்கப்படுகின்றது. சுய உதவிக் குழுக்களின்

செயல்பாடு குறித்த முழு விவரங்கள் நேரடியாக வங்கிகளுக்கு அளிக்கப்படுவதால் குறித்த நேரத்தில் கடனுதவி கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

**2. இடர் மேலாண்மை மற்றும் காப்பீடு**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் துயர் குறைப்பு நிதி நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இயற்கை பேரழிவின் விளைவால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய குறைந்த வட்டியில் இந்நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியில் 4/5 பங்கு திட்ட நிதியாகவும், 1/5 பங்கு பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் உள்ளது. தங்களுக்கு பொருத்தமான காப்பீட்டுத் திட்டங்களை சமுதாய மக்கள் தேர்வு செய்ய உதவிடும் வகையில் கருத்துப் பட்டறைகளும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. சமுதாய மக்களுக்கு பயனளிக்கும் வகையில் குறைந்த பிரிமியம் கொண்ட ஆயுள், சுகாதாரம், தனி நபர் விபத்து, மற்றும் சொத்து அடங்கிய ஏழு காப்பீட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இக் காப்பீட்டு திட்டங்களில் ஆயிரக்கணக்கான கடலோர மக்கள் இணைந்துள்ளனர். சிக்கல் ஏதும் இல்லாமல் இழப்பீட்டுத் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**3. புதிய தொழில் மேம்பாட்டிற்காக தொழில் முயற்சி மற்றும் தொழில் மூலதன நிதியை உருவாக்குதல் :–**

பொதுவாக, வங்கிகள் கடன்தரத் தயங்கும் புதிய மற்றும் புதுமையான பொருட்கள் தயாரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படும். தனி



நபர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் மீனவர் சங்கங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் வளர்ந்து வரும் இளம் தொழில் நிறுவனங்களுக்கு வங்கிக் கடனுடன் தேவைப்படும் கூடுதல் நிதியை தொழில் மூலதன நிதியின் மூலம் வழங்கப்படும்.

**இ. வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி**

**1. சுய உதவிக் குழுக்களுக்கான ஆதரவு**

வலுவற்ற சுய உதவிக் குழுக்கள் கணக்கெடுப்பு மூலம் கண்டறியப்பட்டு,அவற்றிற்கு திறன் வளர் பயிற்சிகள் வழங்கப்படுகின்றது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, அவற்றின் நிர்வாகிகளுக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**2. மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்குதல்**

தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்பின் (SIFFS) உதவியுடன் 50 மீன் விற்பனை சங்கங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டுமரம், வள்ளம் மற்றும் சிறு படகு மூலம் மீன்பிடிப்போர் மட்டுமே இவற்றில் உறுப்பினர் ஆகமுடியும். இச்சங்கங்களின் உறுப்பினர்கள் ஏற்கனவே அவர்கள் வாங்கிய கடன்களிலிருந்து மீட்க நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், படகு கட்டும் தளம், படகு இயந்திரம் பழுது நீக்கும் நிலையம் மற்றும் மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவை ஏற்படுத்துவது தொடர்பான முன்மொழிவுகள் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆறு கடலோர மாவட்டங்களிலும் சுகாதாரமான வகையில்

மீன்களை கையாளும் பொருட்டு மீன் இறங்கு தளங்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**3. நுண் தொழில் மேம்பாடு**

நுண் தொழில் மேம்பாட்டில் அனுபவம் வாய்ந்த அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பால் பண்ணை மற்றும் மாம்பழ உற்பத்தி ஆகியவற்றில் தொழில் தொகுதிகள் ஏற்படுத்த திட்ட மேலாண்மை அலகு முயன்று வருகிறது. இவை தவிர, கோழி வளர்ப்பு, காய்கறி மற்றும் காளான் வளர்ப்பு, கருவாடு தயாரித்தல், கயிறு தயாரித்தல் ஆகிய வழக்கமான தொழில் முயற்சிகளுக்கும் பரிட்சார்த்த முறையில் ஏற்படுத்தப்பட்ட தொழில்களான உணவகம், புகைப்படத் தொழில், மீன்வலை சரிசெய்தல் மற்றும் ஹாலோ பிளாக் தயாரித்தல் போன்ற தொழில்களுக்கும் வட்டியில்லா கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

**4. தொழிற் கல்வி பயிற்சி**

திட்டப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மூன்று மாதம் முதல் ஒரு வருடக் காலம் வரை பல பிரிவுகளில் தொழிற் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. பயிற்சிகளின் தரம், வேலைவாய்ப்பு வழங்குதலில் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தேர்வு செய்யப்படுகின்றன.



**ஈ. சமுதாய அடிப்படையிலான கடலோர பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை**

கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து (தகவல் உபகரணங்கள், உயிர் பாதுகாப்பிற்கான வழிமுறைகள் ஆகியவை) பயிற்சிகள் மற்றும் கருத்துப் பட்டறைகள் துறை சார்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களால் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. கடலோர பள்ளிக் குழந்தைகளுக்கு பேரிடர் மேலாண்மை குறித்த கல்வி அவசியமாதலால், அது தொடர்பாக பட்டறிவுப் பயணம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. துவக்க பள்ளிகளில் சுற்றுச் சூழல் கல்வி மற்றும் வள ஆதாரம் தொடர்பான கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை தொடர்பாக பள்ளி ஆசிரியர்களுக்கும் விளக்கமளிக்கப்படுகின்றது. கடலோரப் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மையில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் சிறந்து விளங்கும் பள்ளிகளுக்கு விருது வழங்குதல், நிதிக் கல்வி போன்றவை தொடர்பான கையேடுகள் தயாரித்து விநியோகித்தல் ஆகியவையும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

உ. திட்ட மேலாண்மை (Project Management) கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது

| அடிப்படை | அலகு | வழிகாட்டுதல் |
|---|---|---|
| மாநில அளவில் | திட்ட மேலாண்மை அலகு | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மை செயலாளர் அவர்களின் தலைமையில் திட்ட வழிகாட்டுக் குழு செயல்படும் |
| மாவட்ட அளவில் | மாவட்ட செயலாக்க அலுவலகம் | மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான திட்டத்தை செயல்படுத்தும் ஆலோசனைக் குழு |
| கிராம அளவில் | கிராம கூட்டுவள மேம்பாட்டு மையம் | ஊராட்சித் துறை நிறுவனங்கள்,அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் மரபு சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கிராம கூட்டு மேம்பாட்டு ஆலோசனைக் குழு |

**திட்ட நிதி ஒதுக்கீடு -நிறுவன வாரியாக :**

| வ. எண். | நிறுவனம் | தொகை (ரூ.கோடியில்) | **விழுக்காடு** |
|---|---|---|---|
| 1 | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியகத்தின் கடன் | 132.32 | 47 |
| 2 | தமிழக அரசு | 12.00 | 4 |
| 3 | வங்கி மற்றும் நுண்கடன் நிறுவனங்கள் | 100.61 | 35 |
| 4 | பயனாளிகளின் பங்களிப்பு | 38.76 | 14 |
| *மொத்த தொகை* | | 283.69 | 100 |



**திட்டக் கூறு வாரியாக:**

| வ. எண் | கூறுகள் | தொகை (ரூ.கோடியில்) | **விழுக்காடு** |
|---|---|---|---|
| 1. | கடலோர பகுதியில் வள ஆதார மேலாண்மை | 41.16 | 14.51 |
| 2. | ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் உபகரணங்கள் | 159.50 | 56.23 |
| 3. | வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் திறன் பயிற்சி அளித்தல் | 66.31 | 23.37 |
| 4. | சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | 1.80 | 0.63 |
| 5. | திட்ட மேலாண்மை | 14.92 | 5.26 |
| | மொத்தம் | 283.69 | 100 |

**திட்டக் கூறு வாரியான செலவினம் (2007-08 முதல் 28.02.2013 வரை)**

**(ரூ.இலட்சத்தில்)**

| வ எண் | திட்டக் கூறு | திட்ட ஒதுக் கீடு | 2012 – 13 வரை தமிழக அரசிலி ருந்து பெறப் பட்ட தொகை | செலவினத்தொகை | | 28.02.13 வரை மொத்த செலவின ம் | விழுக் காடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2007-08 முதல் 2011-12 வரை | 2012-13 (01.04.20 12 முதல் 28.02.20 13 வரை | | |
| I. | கடலோர வள ஆதார மேலாண்மை | 3851 | 3970 | 2267.73 | 741.72 | 3009.45 | 76 |
| II. | ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள | 983 | 1107 | 159.73 | 104.09 | 263.82 | 24 |
| III. | வேலைவாய்ப்பு களை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி | 6631 | 2356 | 620.10 | 466.71 | 1086.81 | 46 |
| IV. | சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | 180 | 177 | 128.40 | 6.11 | 134.51 | 76 |
| V. | திட்ட மேலாண்மை | 1592 | 1241 | 977.14 | 369.18 | 1346.31 | 108 |
| | **மொத்தம்** | **13237** | **8851** | **4153.10** | **1687.81** | **5840.90** | **66** |



**2012 – 13 ஆண்டிற்கு திட்டக் கூறு வாரியான செலவினம் (28.02.2013 வரை)**

**(ரூ.இலட்சத்தில்)**

| வ. எண் | திட்டக் கூறு | நிதி ஒதுக்கீடு | செலவினம் 01.04.2011 முதல் 28.02.2013 வரை |
|---|---|---|---|
| I. | கடலோர வள ஆதார மேலாண்மை | **250.00** | 741.72 |
| II. | ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள் | **97.00** | 104.09 |
| III. | வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன்வளர்ப்புப் பயிற்சி | **1433.00** | 466.71 |
| IV. | சமுதாயம் சார்ந்த கடல்பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | **11.00** | 6.11 |
| V. | திட்ட மேலாண்மை | **296.00** | 369.18 |
| **மொத்தம்** | | **2087.00** | **1687.81** |
| **சாதனை சதவீதத்தில்** | | | **81 %** |

**சாதனை (2012 – 2013 நிதியாண்டு வரை)**

- ரூ.24.48 கோடி மதிப்பீட்டில் 605 சமுதாய உட்கட்டமைப்பு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- 112 சமுதாய பரிமாற்றுப் பயணங்கள் முடிவடைந்துள்ளன.
- 33 மீன் விற்பனை சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன (நாகப்பட்டினம்–9, திருவள்ளூர்–8, கன்னியாகுமரி–10, கடலூர்–4, விழுப்புரம்–1 மற்றும் காஞ்சிபுரம்–1) 989 மீனவர்களை கடனிலிருந்து மீட்க கடன் நிவாரண நிதியாக ரூ.1.85 கோடி 23 மீன் விற்பனை சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 6566 பயனாளிகளுக்கு சமுதாய பங்களிப்புடன் கூடிய துயர் குறைப்பு நிதியாக ரூ.2.55 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.
- காப்பீட்டு கல்வி மற்றும் நிதி இடர்பாடு மேலாண்மை தொடர்பாக பயிற்றுநர் பயிற்சி மற்றும் சமுதாய மக்களுக்கான பயிற்சி 109 ஊராட்சிகளிலும் வழங்கப்பட்டது. 1,01,731 பேர் பல்வேறு காப்பீடு திட்டங்களில் இணைந்துள்ளனர்.
- 4,194 சுய உதவிக் குழுக்கள் ரூ.75.57 கோடி வங்கி கடன் பெற்றுள்ளன.



- 2,272 இளைஞர்களுக்கு தொழிற் கல்வி பயிற்சி ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது. தற்போது 1,105 இளைஞர்கள் தொழிற்கல்வி பயிற்சி பெற்று வருகின்றனர்.
- ரூ.4.47 கோடி திட்ட மதிப்பீட்டில் 142 நுண் தொழில்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 1,348 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒரு மீனவர்கள் சங்கக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 90,000 கடலோர பள்ளி மாணவர்களுக்கு வள ஆதார மேலாண்மை, சுற்றுச் சூழல், பேரிடர் மேலாண்மை, முதலுதவி குறித்த புத்தகங்கள் ரூ.20.23 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.
- செயற்கை பவளப்பாறைகள் அமைக்கும் பணிகள் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் முடிவடையும் நிலையில் உள்ளன. நாகப்பட்டினம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அனைத்து மக்களுக்கும் சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல் என்ற நோக்கத்தை எய்தும் பொருட்டு, திட்டப் பகுதிகளில் உள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினர் 25,000 பேருக்கு தனியார் மருத்துவமனைகள் மூலம் கட்டணமற்ற மருத்துவசேவை கிடைக்கும் வகையில் அவர்களை

மருத்துவக் காப்பீட்டின் கீழ் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

துயரிலிருந்து மக்களைக் காப்பது குறித்த தொலைநோக்கு அடிப்படையில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் 2500 மிகவும் ஏழை மக்களுக்கு ரூ.1 கோடி துயர் குறைப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடலோர பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு சுற்றுசூழல் பிரச்சினைகள், பேரிடர் மேலாண்மை மற்றும் அவசர கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில்,அனைத்து வரவு செலவு திட்டங்களையும் கணினிமயமாக்கும் பொருட்டு மென்பொருள் மற்றும் கணினிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இயற்கைச் சீற்றங்களால் எப்போதும் பாதிக்கப்படும் மீனவர்களை ஒருங்கிணைக்கும் பொருட்டு 15 மீனவ விற்பனை சங்கங்கள் தோற்றுவிக்கப்பட உள்ளன.



# 11. வரவு செலவுத் திட்டம் 2013–14

## 11. வரவு செலவுத் திட்டம் 2013–14

2013–14ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.12,410.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், எதிர்பார்க்கப்படும் வருவாய் செலவினம் ரூ.9,239.71 கோடி, மூலதனச் செலவினம் ரூ.3,170.40 கோடி மற்றும் அரசு ஊழியர்களுக்கு கடன் தொகை ரூ.0.15 கோடி ஆகும்.



## 12. முடிவுரை

## 12.முடிவுரை

தொலைநோக்குப் பார்வையுள்ள, ஆற்றல் மிக்க நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மத்திய, மாநில அரசுகளின் பல திட்டங்களை முனைப்பாகவும், முறையாகவும் செயல்படுத்தி, ஊரகப் பகுதிகளின் முழுமையான வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஊரகப் பகுதியிலுள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் அனைத்தும் கிடைப்பதை உறுதி செய்யும் “தாய்” திட்ட செயலாக்கம், மாநில அளவிலும் தேசிய அளவிலும், அனைத்து தரப்பினரின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளது. **திட்டமிடுதல் மற்றும் நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதற்காக, ‘குக்கிராமத்தை’ அடிப்படை அலகாகக் கொண்டு மாபெரும் திட்டத்தினை செயல்படுத்தும் ஒரே மாநிலம் தமிழ்நாடாகும்.** இந்த அரசு, பள்ளிக் கட்டடங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் சாலைகள் உள்ளிட்ட சமுதாய சொத்துக்களை பழுது பார்த்துப் பராமரிக்க மிகுந்த முக்கியத்துவம் வழங்கி அவற்றின் நிலைத்த தன்மையினையும், பொதுமக்களால் பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்கிறது. இந்த அரசு முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்



திட்டத்தை உறுதியுடனும், ஈடுபாட்டுடனும் செயல்படுத்தி, வீடில்லாத ஊரக ஏழை மக்களுக்கு பாதுகாப்பான இல்லம் கிடைப்பதை உறுதிப்படுத்தும் தனது பணியைத் தொடரும்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, இந்த அரசு மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த எடுத்த முயற்சிகளால் அனைத்து குக்கிராமங்களிலும் வேலைகள் கிடைப்பதை உறுதி செய்து, அதிக எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் பணிகளின் எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் ஒரு சிறந்த வழிகாட்டி நெறிமுறையினை வகுத்து நாட்டிலேயே முன்னோடியாக தமிழ்நாடு திகழ்கிறது. இது மத்திய அரசு, ஊடகங்கள் மற்றும் சமூக அக்கறையுள்ள பொது மக்கள் ஆகியோரின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. நாட்டிலுள்ள பிற மாநிலங்களும் இதனைப் பின்பற்றிட மத்திய அரசு பரிந்துரை செய்துள்ளது.**

**இத்துறை, தம் முழு முயற்சிகளையும் அனைத்து பங்கேற்பாளர்களுடன் ஒருங்கிணைந்து, மேலும் ஒருமுகப்படுத்தி, இந்தியாவிலேயே திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அற்ற மாநிலமாக தமிழ்நாடு அறிவிக்கப்படுவதை உறுதி செய்யும்.** இந்த அரசின் தொடர் முயற்சிகளால் நான்காண்டு இடைவெளிக்குப் பின்னர், **பிரதம மந்திரி கிராம சாலைத்திட்டத்தின் கீழ், 3095.77 கி.மீ.**

**நீளமுள்ள 1,343 சாலைப் பணிகளுக்கு ரூ.1,130.10 கோடி மதிப்பீட்டில்** அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த அரசு, துறையின் நிர்வாக இயந்திரத்தை வலுப்படுத்த இதுவரை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. இதே கொள்கை **2013–14** ஆம் ஆண்டிலும் தொடரும்.

தமிழ்நாட்டில், ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகளைச் சீரமைப்பதற்கும் அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவற்றில், PRIA Soft என்ற மென்பொருள் மூலம் ஒரு மாதிரி கணக்குப் பதிவியல் முறையை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் செயல்படுத்துவதும் அடங்கும்.

ஒரு பொறுப்புமிக்க அரசின் முறையான ஆதரவு கிடைக்கப்பெற்றால் ஏழை எளிய மக்கள், வறுமையிலிருந்து வெளிவர உள்ளார்ந்த உந்துதல் பெறுவார்கள் என்பதை புதுவாழ்வு திட்டம் வெற்றிக்கரமாகக் காண்பித்துள்ளது. இத்திட்டத்தின் பயனாளிகள், சீரிய முயற்சியால் நிலைத்த மற்றும் மாற்றத்துடன் கூடிய பயன்களைப் பெறுவதுடன் ஒவ்வொரு நிலையிலும் திட்டச் செயல்பாடுகள் தங்களது உடமைபோல கருதுகின்றனர். இத்திட்டம், ஏழை எளியோர் நலம் பேணும் தீவிர முயற்சிகளைத் தொடர்வதோடு தற்போதுள்ள நடவடிக்கைகளையும், வாழ்வாதார முயற்சிகளையும் மேலும் விரிவுபடுத்தும்.

**தற்போது செயல்பாட்டிலுள்ள பல்வேறு திட்டங்களின் கீழ் மகளிருக்குக் கிடைக்கப்பெறும் பயன்கள், தமிழ்நாடு**



**மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மேலும் வலுப்படுத்தப்படும்.** இவ்வியக்கத்தின் கீழ், பெண்கள் மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், வறுமை ஒழிப்பிற்கான நடவடிக்கைகள் துடிப்பான சமுதாய அமைப்புகளின் மூலம் மேற்கொள்ளப்படும்.

**தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையின் கீழ், அவர்களின் எண்ணப்படி ஊரகப் பகுதிகளில் வாழும் அடித்தட்டு மக்கள், மிகவும் நலிவுற்றோர் உள்ளிட்ட அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கோடு அவர்களின் ஒட்டுமொத்த மேம்பாட்டினை உறுதி செய்திட தனது முயற்சியினை முழு ஈடுபாட்டுடன் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனவினை நனவாக்கும் வகையில் இத்துறை அயராது பாடுபடும்.**

**கே.பி. முனுசாமி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி,
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்